



உள்ளே...

நெஞ்சோடு கலந்திடு உறவாலே...! 5

உன்னை நான் சந்தித்தேன் 132

*

# நெஞ்சோடு கலந்திடு உறவாலே..!

1



லதிகாவிற்கு, கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதைப் போல் இருந்தது. வீடு முழுக்க ஈரத்தினால் பளபளத்தன. உறவுகள் ஆளாளுக்கு ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டு இருந்தார்கள். வீடு முழுக்க ஆட்கள் இருந்தாலும் யாருமில்லாத அநாதையென தனித்து விடப் பட்டவளாய் உணர்ந்தாள் லதிகா.

அவளுக்கு நேர் எதிராய் மாட்டியிருந்த சுவரில் அம்மா உயிரோவியமாய் சிகப்பு வண்ண ரோஜாப் பூக்களுக்கு நடுவில் ஒற்றைக் கீற்றுப் புன்னகையுடன். அப்புகைப் படத்திற்கு முன் விளக்கோடு ஊதுபத்தியும் எரிந்து கொண்டிருந்தது. அந்த அனல் லதிகாவின் நெஞ்சிலும் கனன்று கொண்டிருந்தது.

எத்தனை சந்தோஷமாய் இருந்த வீடு இது. அம்மாவும், அவளுமாய் தோளோடு தோள் சாய்ந்து கொண்டு கைபிடித்து சிரித்த நாட்களின் சுகம்தான் எத்தனை? ஆனால் இன்று எல்லாமே உடைந்து போன நீர்க்குமிழியாய்!

கடவுளே தந்தையின் அரவணைப்பு இருக்க வேண்டிய நேரத்தில் அதையும் பறித்தாய்? அதன் பிறகு எனக்கென்று இருந்த ஒரே துணையான அம்மாவையும் பிரித்து விட்டாயே..?

இனி இந்த உலகில் நான் எப்படி வாழப் போகிறேன். அழுகை வெடித்தது. முழங்காலுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கினாள்.

வந்திருந்தவர்களுக்கு எல்லாம் தேநீரை விநியோகித்துக் கொண்டு இருந்த கோதை நாயகி தவிப்போடு இளையவளின் அருகில் வந்தாள். ''என்ன லதிகா இது எப்பவும் அழுது கிட்டேயிருந்தா எப்படிம்மா? தாய்ங்கிறது உன்னதமான உறவுதான். துயரமான விஷயம்தான். உனக்கு பெரிய இழப்புதான்டா. ஆனா அதையே நீ நினைச்சிக்கிட்டு இருந்தா என்னம்மா அர்த்தம்.''

அத்தைப் பேசப் பேச லதிகாவிடம் விசும்பல் மேலும் அதிகமாகியது. அத்தையின் மடியில் புதைந்து கொண்டாள்.

மாமா சந்திரசேகரும் அவளருகில் வந்தார். ''அத்தை சொல்றதும் சரிதானேம்மா! உன் அம்மா மஞ்சரிக்கு உன் முகம் கொஞ்சம் சுருங்கி இருந்தாலே தாங்காது. இப்படி நீ அழுதுகிட்டே இருந்தா அவ மனசு தாங்குமா? இறந்து போன ஒரு ஜீவன் அமைதியா நிம்மதியா இருக்க வேண்டாமா? ஏற்கனவே உயிரோட இருந்தப்போ அவ பட்ட வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல..

''உன் எதிர்காலம் சிறப்பா அமைவது மட்டும்தான் அவளுடைய ஆத்மா சாந்தியடைய உதவும்'' சந்திரசேகர் மஞ்சரிக்கு உடன் பிறந்த சகோதரர். சென்னையில் மிகுந்த செல்வாக்குடன் வாழும் மனிதர். சாதாரண இரும்புக் கடை



வைத்து தொழிலை துவங்கியவர் அவரின் நேர்மையாலும் உழைப்பாலும் இப்போது பெரும் அந்தஸ்தை எட்டியிருப் பவர்,

தங்கையின் மீதும், அவளின் மகளின் மீதும் மிகுந்த பாசம் கொண்டவரும் கூட. பாசம் மிகுந்த தங்கையின் இழப்பில் பெரிதும் கலங்கி, மஞ்சரியின் உடல் மீது விழுந்து அழுதது, நெஞ்சை உருக்குவதாகத்தான் இருந்தது. தாய்க்குப் பிறகு லதிகாவிற்கென்று இருக்கும் ஒரேயொரு உறவு அல்லவா?

அழுகையுடனேயே கூறினாள். ''மாமா நானும் அம்மாவும் என்றைக்குமே தாயும் மகளுமா பழகினது இல்லை. என்னை விட்டு ஐந்து விநாடி பிரியக் கூட விரும்பாத அம்மா இப்படி ஒரேயடியாய்..!''

''உங்கள் அன்பு நான் அறியாததா.''

''லதிகா மஞ்சரி அற்புதமான பெண். அவளின் இழப்பு ஈடு செய்ய முடியாததுதான். இனிமேல் அவளுடைய ஆசையை நிறைவேற்றுவதுதான் நம் கடமை. எழுந்து போய் முகம் கழுவி விட்டு அம்மா படத்திற்கு முன்பு இனி அழுவதில்லைன்னு உறுதி எடுத்துக்கிட்டு வா.. உன்னிடம் கொஞ்சம் பேசணும்..''

பீடிகையோடு மாமாவும், அத்தையும் நகரவும் சற்று நேரத்திற்கெல்லாம் முகம் கழுவியபடி தாயின் படத்திற்கு முன் வந்து நின்றாள். அம்மா உயிரோவியமாய் கண் முன் நிற்பது போல் ஒரு உணர்வு.

''லதும்மா அம்மா எங்கே போயிட்டேன். உருவம் இல்லாமல் சென்றாலும், நான் உன் உயிரோடு கலந்தவள் இல்லையா? உன் புன்னகையில், வெற்றியில், முயற்சியில் நான் உன்னுடனேயே இருப்பேன். நீ அழுதால் நான் உன்னை



விட்டுப் பிரிந்து விட்டேன் என்று அர்த்தம்.'' அம்மாவின் குரல் காதில் ஒலிப்பது போல் பிரமை இலேசாய் கண்ணைக் கரித்தது. விழி நீரை விரலினால் சுண்டினாள்.

இனியென் கண்ணீர் சிதறக் கூடாது எனும் தீர்மானத்தோடு மாமாவிடம் போய் நின்றாள். தோட்டத்தில் அத்தை மாமா வோடு, அவர்களின் ஒரே மகன் முரளியும் அமர்ந்திருந்தான். அவளை அருகே அமர்த்தினார் சந்திரசேகர்.

வீட்டின் பின்புறம் சிறிய இடமென்றாலும் வெறுமனே போட்டு வைக்காமல், தாயும் இவளும் போட்டு வைத்த தோட்டம். அம்மாவின் கைவண்ணத்தில் பூக்களும், காய்கறிகளும் பூத்து குலுங்கின. துளசி மாடம் கூட எதையோ இழந்து கதறுவது போல் தோன்றியது லதிகாவிற்கு!

தோட்டத்தில் முதன் முதலில் நட்டு வைத்த ரோஜாச் செடி தன் குழந்தையாய் ரோஜா ஒன்றை ஈன்றபோது, இவள் அடைந்த இன்பம் அதைக் கொண்டாட அம்மா இனிப்பு செய்ய குதூகலமாய் தோட்டத்தில் அமர்நது உண்டது.

இதோ இதே இடத்தில் ஓலைப் பாய் ஒன்றில் தாயின் மடியில் புதைந்தபடி புத்தகங்கள் வாசிப்பது என எல்லாம் நினைவு தூறலாய் மனதில்! தோட்டத்தில் மலரும் பூக்களையும், காய்கறிகளையும் அம்மா விற்பது இல்லை. அக்கம் பக்கத்து வீடுகளுக்கு கொடுத்து விடுவாள். எத்தனை நல்ல குணம் அவளிற்கு!

அக்கம் பக்கத்து வீட்டில் என்ன நல்லது கெட்டது நடந்தாலும், ஓடிப் போய் முதல் ஆளாய் நின்று உதவுவது அவள் குணமல்லவா. இத்தோட்டம் அன்னைப் பார்த்துப்



பார்த்து உருவாக்கியது அல்லவா? பூக்களைப் பார்க்கும் போது அன்னையின் புன்னகை முகம் நினைவிலாடியது.

''என்னம்மா..? நான் கேட்டதற்கு நீ இன்னமும் பதிலே சொல்லலையே?'' என்று மாமா உலுக்கிய பின்னர்தான் அவளிற்கு இயல்பே திரும்பியது.

''என்ன கேட்டீர்கள் மாமா?'' என்றாள் திருதிருவென்று விழித்தபடி.

''லதிகா நீ சின்னப் பெண். இத்தனை நாள் உனக்குப் பாதுகாப்பாய் மஞ்சரி இருந்தாள். அவளிற்கு பிறகு உனக்கு யாருமேயில்லையென்று நீ எண்ணி விடக் கூடாது. நானிருக்கேன். உனக்கென்று ஒரு குடும்பம் இருக்கிறது. இனிமேலும் நீ இங்கே தனியாக இருக்க வேண்டாம். எங்க கூடவே சென்னைக்கு கிளம்பி வந்திடு.''

மாமாவின் இந்த திடீர் முடிவில் ரொம்பவே ஆடித்தான் போனாள் லதிகா. அம்மாவுடன் வாழ்ந்த இந்த வீடு ஒரு நினைவுச் சின்னம் அல்லவா. இங்கே தரையில் படுத்தால் கூட தாயின் மடிச்சுகம் கிடைக்குமே. இதையெல்லாம் விட்டுவிட்டு சென்னைக்கு ஓடுவதா? வேண்டாம் என்று மனம் கெஞ்சியது.

''உங்களை மறுத்துப் பேசுவதற்கு மன்னிக்க வேண்டும் மாமா. நான் எங்கேயும் வரலை. இங்கே அம்மா வாழ்ந்த இடத்திலேயே இருந்திட்டுப் போறேன். அதுதான் எனக்குச் சந்தோஷம்.''

''லதிகா உணர்வுகளை ஒதுக்கி விட்டுட்டு எதார்த்தமா யோசிம்மா. நீ மலரத் துடிக்கும் புதுமலர். உன் வாழ்வு கருகிடக் கூடாது. மஞ்சரியோட நீ அதை முடிச்சிக்கிட முடியாதும்மா..''

''அம்மாவைத் தவிர்த்து எனக்குன்னு ஒரு வாழ்க்கையா?'' தவித்தாள் இளையவள்.

கோதை நாயகி மருமகளின் தலையை ஆதரவாய் தடவிக் கொடுத்தார். ''அண்ணியோட குணம் அப்படியே உன்கிட்டே இருக்கும்மா, உங்க அப்பா இறந்த பிறகு, யாருமில்லாத இடத்திலே இருக்க வேண்டாம். பேசாம எங்க கூட வந்து இருந்திடுங்கன்னு நாங்க எத்தனையோ தடவை எடுத்துச் சொல்லியும் அவங்க கேட்கலை.''

''அப்பவே, உங்களை தனியா விட்டுச் செல்ல எங்களுக்கு மனசில்லை, இப்போ அண்ணியும் இல்லாம உன்னைத் தனியா விட்டுப் போகமாட்டேம்மா..''

''உண்மைதான் லதி! இங்கேயே இருந்தா ஆன்ட்டியோட நினைப்பு உனக்கு வந்துகிட்டேயிருக்கும். இந்த கவலை யிலிருந்து வெளிவர இடமாற்றம் அவசியம்.''

மாமாவின் குடும்பத்தினர் பேச்சிலும் நியாயம் இருந்ததை உணர முடிந்தாலும், எதிர்காலம் என்று வரும்போது மனோவின் முகம் அவளையும் அறியாமல் கண் முன் வந்து போனது. இங்கேயே இருந்தால் என்றாவது ஒருநாள் அவன் வரமாட்டானா என்ற ஏக்கமும் வழிந்தது.

ஆனால் மாமா சொல்வதைப் போல அவளுக்கென்று இங்கே யார் இருக்கிறார்கள். வெற்றுக் கனவுகளை சுமந்து கொண்டு வெறும் கூடாய் வாழ்வதை விட, மாமாவிடம் சென்று விட்டால், சென்னையில் மனோவின் இருப்பிடம் பற்றி அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாகவும் இருக்குமே.

இந்த உலகிலேயே அவளால் நேசிக்கப்பட்ட உறவுகள் இரண்டு. ஒன்று தாய், முகம் அறியாத் தந்தையைக் காட்டிலும் தாய்தானே உயிராய் அவளைப் போற்றினாள். லதிகா பிறந்த



கொஞ்ச நாட்களில் தந்தை வாசுதேவன் விபத்து ஒன்றில் இறந்து போக அதன் பிறகு தாய்தான் எல்லாமே என்றாகிப் போனது.

கைப்பிடித்து எழுத சொல்லித் தந்து, பேசியபோது, சிரித்து, பூரித்து நடைபழகி இயல்பிலேயே தாயின் மேல் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒட்டுதல் இருக்கும். ஆனால் லதிகாவிற்கு சற்று அதிகம். ஏனென்றால், அம்மாவைப் போல் ஒரு சிறந்த ஸ்நேகிதி வேறு யாரும் இல்லையே!

இரண்டாவது மனோ, முதற் பார்வையிலேயே அவள் மனதைக் கொள்ளையடித்தவன். அவள் இதயத்தில் சிம்மாசனம் இட்டு அமர்ந்து கொண்டு இன்பக் கனவுகளை விதைத்தவன். ஆனால் அவன் இருக்கும் இடமும் இவள் அறிந்ததில்லையே.

எனவே வேறு வழியின்றி மாமாவுடன் வருவதற்கு ஒப்புதல் கூறினாள். அம்மாவின் காரியங்கள் எல்லாம் முடிந்து விட்டது. முன்பைப் போலெல்லாம் 30 நாட்கள், 16 நாட்கள் என்றிருக்காமல் மூன்றாம் நாளே எல்லாமும் முடித்தாகி விட்டது. மாமாவிற்கும் வேலை இருப்பதால் கிளம்பத் தயாராகி விட்டார்கள். லதிகாவின் பொருட்களும் எடுத்து வைக்கப்பட்டன.

அம்மா இருக்கும் போது ஒளியோடு இருந்த வீட்டைப் பூட்டிப் போட மனமில்லை. எனவே அவள் கேட்டுக் கொண்ட தன் பேரில் வீட்டைப் பூட்டாமல் நாள்தோறும் விளக்கு ஏற்றி வைக்கப் பக்கத்து வீட்டுப் பரிமளாவிடம் கூறி இருந்தாள். நாளைக் காலைப் பயணம். அதோடு பூஞ்சோலையை மறக்க வேண்டியதுதான். கூப்பிடும் தொலைவுதான். ஆறு மணி



நேரத்தில் வந்து விடலாம்தான். ஆனால் வாவென்று வரவேற்க யார் இருப்பார்கள்.

பசியில்லை என்று பொய் சொன்னால் சாதத்தை பிசைந்து ஊட்டி விடும் அம்மாயில்லையே! மடி மீது தலைசாய்த்து படுத்துக் கொள்ள ஆறுதலாய் தலைமுடியைக் கோதிவிட தாய் இல்லையே. வேதனை மேலும் துக்கத்தை அதிகப்படுத்தியது.

இனி விடியப் போகும் பகலில் தன் வாழ்வு மாறப் போகும் நிலை, சுதந்திரமாய் இன்பமயமாய் தாய்ப் பறவையின் சிறகிற்குள் வாழ்ந்த இடம் விட்டு வேற்றூர் செல்லப் போகிறேன். தாயுடன் சேர்ந்து ஆடும் ஊஞ்சலில் அமர்ந்தாள். தாயின் மடிச்சுகமும், அரவணைப்பின் சூட்டையும் பெற்றது போல் இருந்தது.

திருப்தியாய் எப்போது உறங்கினாளோ தெரியவில்லை. ஆனால் சம்பந்தமில்லாத கனவுகள் காட்சிகளாய் விரிந்தது. திடீரென்று மனோ தோன்றினான். அவள் அழுகிறாள், நானிருக்கிறேன் என்று இரு கைகளையும் நீட்டி அழைக்க, இவளும் அந்த கரங்களுக்குள் ஒண்டினாள். இருவரும் வெகு தூரம் நடக்கிறார்கள்.

காலையில் கோதை நாயகி காபியோடு வந்து எழுப்பும் போதுதான் விழிப்பு வந்தது.

''என்ன லதிகா? ஊஞ்சலிலேயே தூங்கிட்டே. அப்பவே எழுப்பலாமின்னு பார்த்தேன். ஆனா நீ அசந்து உன்னை மறந்து தூங்கிட்டு இருந்தே. சரி உன் தூக்கத்தைக் கலைக்க வேண்டாமின்னுதான் எழுப்பலை. போய் முகம் கழுவி விட்டு வந்து காபியைக் குடிம்மா..''



காபியை உறிஞ்சியபடியே, ஊஞ்சலையே வெறித்துப் பார்த்தாள். அது மஞ்சரி அமர்ந்து ஆடும் ஊஞ்சல். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் தலைக்கு குளித்துவிட்டு, ஊஞ்சலில் ஆடியபடியே தாய் தன் நீண்ட குழலை உலர்த்தும் அழகை எத்தனை முறை மனதிற்குள்ளேயே ரசித்து இருக்கிறாள்.

''அம்மா நீ ரொம்பவும் அழகும்மா..'' என்று விரல்களை நொடித்து திருஷ்டி கழித்து குறும்புடன் சிரிக்கவும்,

''நான் செய்ய வேண்டிய வேலையெல்லாம் நீ செய்யுறே?'' அம்மா வெட்கப்பட்டு, தலையில் செல்லமாய் தட்டியது இன்றும் பசுமையாய் கண்களில் நினைவுகளோடு குளித்து விட்டு கருநீல சல்வாரை அணிந்தாள்.

அத்தை சூடாய் தோசையும், புதினா சட்னியும் தயாரித்து இருந்தாள். சுவை அபாரம்தான் என்றாலும் லதிகாவிற்கு தொண்டையிலேயே நின்றது.

''உனக்கு வேண்டியதையெல்லாம் பேக் பண்ணிட்டியாம்மா..''

''ம்...'' சுரத்தில்லாமல் வந்து விழுந்தது பதில்.

''நடப்பது எல்லாம் நன்மைக்கேன்னு நினைம்மா..''

பக்கத்து வீட்டு பரிமளாவும், கமலா பாட்டியும் உள்ளே நுழைந்தனர். பாட்டி லதிகாவைக் கட்டிக் கொண்டாள். ''கண்ணு, உங்கம்மா உன்னை விட்டுட்டுப் போயிட்டாளேன்னு கவலைப்படாதே. நல்ல உறவுகள்கிட்டேதான் விட்டுட்டுப் போயிருக்கா. தெய்வமா இருந்து அவ உன்னை வாழ்த்துவாம்மா. எங்கிருந்தாலும் உன் குணத்திற்கு நீ நல்லா இருப்பேடீம்மா.''

லதிகா பாட்டியின் கால்களில் விழுந்தாள். "பரிமளா அக்கா! இது வெறும் வீடு மட்டுமில்லை. அம்மா வாழ்ந்த கோவில். அவங்களோட நினைவுச் சின்னம். நான் செத்தா கூட இந்த வீட்டைத்தான் சுற்றி வருவேன்னு அம்மா பலமுறை பேசியதுண்டு. இது பாழடையக் கூடாது. நாள் தவறாம ஒரு விளக்கு ஏத்திடுங்க. இந்தப் பூவும், காயும் அம்மாவுடைய உழைப்பு. தோட்டத்திற்கு தண்ணீ ஊற்றுங்கக்கா.."

இதையெல்லாம் நீ சொல்லணுமா. நான் பார்த்துக்கிறேன். நீ எங்களையெல்லாம் மறந்திடாதே. அப்பப்போ போன் பண்ணு."

"கட்டாயமா.." பழகிய உறவுகளிடம் இருந்து விடை பெற்றுக் கிளம்பினார்கள் அனைவரும். காரில் ஏறிய பிறகும் கூட மனம் அங்கேயே சுற்றி வந்தது. முரளி டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்தான்.

கண்களை அழுந்த மூடிக் கொண்டாள். மூடிய கண்களுக்கு அப்பால் மங்கலாய் மனோ தெரிந்தான்.

## 2



அவளுக்கு நன்றாய் நினைவிருந்தது. மனோவைச் சந்தித்த அன்றைய தினம், பூஞ்சோலையின் மிக முக்கியப் புள்ளிகளுள் ஒருவர் தனஞ்செயன், அவருடைய மகள் கண்மணியும், லதிகாவும் சிறு வயது முதலே நல்ல தோழிகள், வழக்கம் போல் தோழியைச் சந்திக்க கிளம்பிய தினம், கண்மணி கவலையோடு இருக்கவும் காரணம் என்னவென்று வினவினாள் லதிகா.



சென்னையில் தந்தை தனக்கு மாப்பிள்ளை பார்த்து இருப்பதாகவும், நல்ல வசதியான குடும்பம். புத்திசாலி, பெரிய கம்பெனியின் நிர்வாகி என்றும் கூறினாள்.

"அடிப்பாவி, இது நல்ல விஷயம்தானே, இதற்கு போய் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு இருக்கிறாயே?" என்றாள்.

"மாப்பிள்ளைக்கு ஏற்கனவே நிச்சயமாகி கல்யாணம் வரை போய் கடைசி நிமிஷத்திலே நின்று விட்டதாம். அதுக்கு சரியான காரணமும் தெரியலை. எனக்கென்னமோ இதிலே விருப்பம் இல்லை," கண்மணி கண்ணைக் கசக்கினாள்.

லதிகாவிற்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. தோழியின் கண்ணீர் மனதை கஷ்டப்படுத்த. "அப்பா அதையெல்லாம் விசாரிக்காமலா கல்யாணம் வரை ஏற்பாடு செய்திருப்பார். பேசாம நீ அப்பாகிட்டேயே இதைப் பற்றி பேசேன்.."

"சொல்லிப் பார்த்திட்டேன். ஆனா அவர் எதையுமே காதில் போட்டுக்கலை, லதி நீ எனக்கொரு உதவி செய்யுறீயா?"

"என்ன?"

"மாப்பிள்ளைகிட்டே எனக்கு இந்த கல்யாணத்திலே விருப்பம் இல்லைன்னு சொல்லிடேன்."

"நானா?" இவள் வியந்தோடிய போது கண்மணி தோழியின் கைகளைப் பற்றிக் கொண்டாள். "ஆமாம், லதி! எனக்காக நீ ஒருத்திதான் பேச முடியும். ப்ளீஸ் எனக்கு உன்னை விட்டால் வேறு யாருமில்லை."



"கண்மணி எனக்கென்னமோ நீ அவசரப்படறீயோன்னு தோணுது. அப்பா உனக்கு என்ன கெடுதலா செய்யப் போறார்? தப்பான முடிவு எடுத்து உன் வாழ்வை நீயே பாழாக்கிடாதே!"

"இல்லை! லதி இந்தக் கல்யாணத்தை நான் வேண்டான்னு சொல்றதுக்கு இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கு. நானும், ஆனந்தனும் நாலு வருஷமா லவ் பண்றோம். ஆனந்தனுக்கு சரியான வேலை இல்லாததால அப்பாகிட்டே பேச முடியலை. போன மாசம்தான் அவருக்கு வேலை கிடைச்சது. அப்பாகிட்டே வந்து பேசலான்னு நினைச்சப்போ இப்படி ஒரு வம்பு."

லதிகாவிற்கு வெகு ஆச்சரியமாய் இருந்தது. கண்மணி காதலித்தாள் என்று நம்பவே முடியவில்லை. அதுவும் அவர்கள் பண்ணையில் கணக்கராய் பணிபுரியும் பெரியவரின் மகன் ஆனந்த். இந்தக் காதல் நிறைவேறுமா? என்று பயந்தாள் லதிகா தோழியைக் காட்டிலும்.

"அடிப்பாவி நான் உன் நெருங்கிய தோழி. என்னிடம் கூட சொல்லவில்லையே.."

"ஸாரிடி! ஒரு நல்ல நிலைமைக்கு வரும் வரையில் யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்திருந்தோம். அதனால்தான், இப்போ கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரியாயிருக்கு. எனக்காக நீதான் மாப்பிள்ளையிடம் பேசணும்."

"அதெல்லாம் சரி கண்மணி, அப்படியே நான் பேசுவதாயிருந்தாலும் எப்படி மாப்பிள்ளை யாருன்னே தெரியாதே?"

"அவங்க நம்ம பண்ணை வீட்டுக்கு வருவதாய் அப்பா சொன்னார் அதனால.."



லதிகா ஒரு கணம் யோசித்தவள். "சரிடி நான் பேசறேன், நீ கவலைப்படாதேயென்று!" தோழிக்கு ஆறுதல் கூறினாள்.

"உன்னைத்தாண்டி நம்பியிருக்கேன்" கண்மணி கெஞ்சும் விழிகளை தோழியிடம் திருப்ப இவளோ தோளைத் தட்டிக் கொடுத்தாள்.

தோழியிடம் தைரியமாய் பேசி விட்டாளே தவிர, முன்பின் அறியாத ஒரு ஆடவனிடம் எப்படி பேசுவது என்று புரியவில்லை. பணக்கார இடம் என்று வேறு சொன்னாளே? முதலில் நாம் பேசுவதை காது கொடுத்து கேட்க வேண்டுமே? தவிரவும் இவளையும் காட்டிக் கொடுக்காமல் இருக்க வேண்டுமே? அவனுடன் வேறு யார் யார் இருப்பார்களோ? யோசித்தபடியே பண்ணை வீட்டினுள் நுழைந்தாள்.

மதிய நேரமாதலால் பணியாட்கள் யாரும் அங்கில்லை. அதுவே அவளுக்கு வசதியாய் போயிற்று. கதவு திறந்தே இருந்தது. மெல்ல அடியெடுத்து வைத்தாள். என்ன சொல்லி அழைப்பது; "ஸார்?" அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை. இதுயென்ன நான் எத்தனை தைரியமானவள்.

தலையை சிலிப்பியபடி "ஸார்.." என்று மறுபடியும் அழைத்தாள்.

"எஸ்.. என்ன வேண்டும்?" அவளின் பக்கவாட்டுக்கு அருகிலிருந்து கேட்கவும், திரும்பியவள் எதிரில் ஆஜானுபாகுவாய் நின்ற அவனைக் கண்டதும் ஒரு கணம் மெய்மறந்து போனாள்.

நெடுநெடுவென்று உயரமாய், மாநிறத்தில், வேல் போன்ற கண்களும், ரோஜா நிற உதடுகளும், சாய்வாய் சரிந்திருந்த கேசமும், அலட்சியமாய் அவன் நின்ற தோரணையும்,

உதடுகளில் ஒட்டியிருந்த மெல்லிய கோடாய் புன்னகையும், அவன் அருகில் வந்து இவள் முன் விரல் சொடுக்கிய நேரம்தான், வந்ததிலிருந்து வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்தது புரிந்தது.

சட்டென பார்வையைத் தழைத்துக் கொண்டவளிடம், ''யார் நீங்கள்? என்ன விஷயமாய் வந்தீர்கள்?'' என்று கேட்டான் அவன். மயிலிறகால் வருடுவது போல எத்தனை மென்மை யாய் இருந்தது அக்குரல். பேச முயற்சித்தும் நாக்கு ஒட்டிக் கொண்டது. வலுக்கட்டாயமாய், துணைக்கு அழைத்துக் கொண்டு வந்த தைரியம் ஓடிப் போய் ஒளிந்து கொண்டது.

அவன் ஒரு புன்னகையை உதிர்த்தபடியே, மிடறு விழுங்கிய அவளிடம் குளிர்ந்த தண்ணீரை நீட்டினான்.

வறண்ட நாக்கிற்கு தேவைப்பட வாங்கி மடமடவென்று குடித்தாள். குடித்த வேகத்தில் தண்ணீர் சிதறி மார்பை நனைத்தது.

''இப்ப சொல்லுங்க? யார் நீங்க?''

''என் பேர் லதிகா...''

''நல்ல பேருதான்.. இதைச் சொல்லத்தான் இத்தனைத் தயக்கமா?''

''இல்லை ஸார் நான் உங்களிடம் கொஞ்சம் பேசணும்..''

''என்னிடமா?'' அவன் புருவம் வில் போன்று மேலேறி வளைந்தது.

தன்னிடம் பேச வந்திருக்கும் அந்த சிறு பெண்ணைக் கூர்ந்து கவனித்தான் மனோரஞ்சன் என்னும் அப்புதியவன். பாவாடை



தாவணியில் இரட்டை ஜடையோடு அதிக ஒப்பனை யில்லாமல் கண்களில் தயக்கமும், காய்ந்த அதரங்களை அடிக்கடி ஈரப்படுத்தி எதிரே அமர்ந்திருக்கும் அவள் மனதில் பசை போட்டதினைப் போல் ஒட்டிக் கொண்டாள், அவள்.

சற்று நேரம் நிலவிய மௌனத்தை அவனே கலைத்தான், ''எதைப் பற்றி? என்னிடம் பேச வேண்டும்? அதற்கு முன் நான் யாரென்று தெரியுமா?'' என்று கேள்வியெழுப்பிட,

இம்முறை அவளிடம் மேலும் தர்ம சங்கடமான நிலை உண்டானது. மாப்பிள்ளை தவிர வேறு யாரிடமேனும் பேசினால், அவள் அல்லவா வம்பில் மாட்ட வேண்டி வரும். தவிரவும் பொத்திப் பொத்தி வைத்திருந்த தோழியின் காதலும் அல்லவா வெளியே வந்துவிடும். எனவே, தான் பேச வந்திருக்கும் நபர் இவன்தானா என்று தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது என்ற எண்ணம் வர, ''நீங்கள் தானே மிஸ்டர்..?'' கண்மணியிடம் பேர் கூட கேட்டு வைத்துக் கொள்ளாதது உரைத்தது. ''ச்சே..'' என்று தன்னையே நொந்து கொண்டாள்.

''மனோரஞ்சன்'' என்றான் அழுத்தமாய்.

''கண்மணியைப் பெண் பார்க்க...! அது விஷயமாய் பேச வேண்டும்..''

''தாங்கள் யாரோ..?''

''நான் அவளின் தோழி!''

''நல்லது.. என்ன விஷயம்?''

''வந்து.. வந்து... இந்தத் திருமணத்தில் கண்மணிக்கு விருப்பம் இல்லையாம்?''



''ஏனாம்?'' வெடுக்கென்று வந்தது அவன் கேள்வி. அவன் விழிகள் ஒருமுறை இடுங்கி சோர்ந்தது. முகத்தில் ஒரு கடினம், படர்ந்தது. லதிகாவிற்கு சங்கடமாய் போய் விட்டது.

''கண்மணி வேறு ஒருவரை விரும்புகிறாள்.''

''அதற்கு நானென்ன செய்ய வேண்டும். இருவருக்கும் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமா?''

''இல்லை, இத்திருமணத்தில் எனக்கு விருப்பம் இல்லை யென்று கண்மணியின் தந்தையிடம் நீங்கள் சொல்ல வேண்டும்.''

''ஏன்? என்னிடம் சொல்லியது போல் நீங்களே சொல்லி விடலாமே?''

''ஸார்..! பெண்களுடைய விருப்பத்தை யார் கேட்கிறார்கள். குறிப்பாக திருமண விஷயத்தில். அதனால்தான் உங்களின் உதவியைத் தேடி வந்திருக்கிறோம். இதில் உங்கள் நலமும் தானே அடங்கியிருக்கிறது..''

''என் நலமா?''

''விருப்பமில்லாத ஒரு பெண்ணை மணந்து கொண்டால் உங்கள் வாழ்வும் கெட்டுப் போகுமல்லவா?''

''மிஸ் லதிகா இதில் என் தவறு எங்கேனும் இருக்கிறதா சொல்லுங்கள். உங்கள் தோழியின் தந்தைதான் என்னை இங்கே வரச் சொல்லியிருக்கிறார். சரியானதொரு காரணம் இல்லாமல் நானெப்படி மறுத்துப் பேச இயலும். அவர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்?''



''ஸார் நீங்கள்... உங்களுடைய நிலையும் சங்கடம்தான். இருந்தாலும் தற்சமயம் எங்களுக்கு உங்களை விட்டால் உதவ வேறு யாரும் இல்லை. பாவம் கண்மணி நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும் ஸார் ப்ளீஸ்..''

''லதிகா நீங்கள் என்னைத் தப்பாக நினைக்கவில்லை யென்றால் நான் ஒன்று உங்களைக் கேட்கலாமா?''

''என்ன ஸார்?''

''எந்த நம்பிக்கையில் நான் உங்களுக்கு உதவுவேன் என்று வந்தீர்கள்?''

''ஸார் பிரச்சனை ஆரம்பித்து வைத்தாகி விட்டது. மூலையில் முடங்கிக் கிடப்பதை விட தீர்க்க முயல்வது உத்தமம் இல்லையா? முயற்சி செய்வதில் தவறில்லையே?''

''நல்ல எண்ணம்தான். ஆனால் நான் இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை என்றால்..?'' அக்கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்ற குழப்பம் லதிகாவை ஆட்கொண்டது.

''ஸார்...'' தவிப்பாய் வந்த வார்த்தைகளை ரசித்தான் மனோரஞ்சன்.

''நீங்கள் போகலாம்.'' அதற்கு மேல் எதுவும் பேச வேண்டியது இல்லை என்பது போல் எழுந்து கொண்டான்.

அவளோ விடாப்பிடியாய், ''நான் கண்மணிக்கு என்ன பதில் சொல்லட்டும்!?!..''

''சரியான விடாக்கண்டன்தான், கவலை வேண்டாம், இத்தனை அழகான பெண் வந்து உதவி கேட்கும் சமயம் நான் மறுக்க முடியாதே.''

''நன்றி ஸார்.. இன்னொரு விஷயம்...''

''என்ன?''

''நான் வந்து உங்களிடம் பேசியது பற்றி...''

''நிச்சயம் உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்.'' புன்னகைத்தான் மிகவும் மென்மையாய்.

அந்தப் புன்னகையும், பார்வையும் நெஞ்சைக் கொள்ளையடித்தது. வீட்டிற்கு வந்த பிறகும் அந்த பார்வை கண்களை விட்டு அகல மறுத்தது. உயிர் கதிர்களை ஊடுருவும் எத்தனை ஆழமான பார்வை. நினைக்கும் போதே சிலிர்த்தது.

திருமணம் வரை வந்து கல்யாணம் நின்று விட்டதாய் கண்மணி கூறினாளே, இவனை மறுக்க எந்தப் பெண்ணிற்கு மனம் வரும். அப்பழுக்கில்லாத முழுமையான ஆண்மகன். இவனிடம் என்ன குறையென்று ஒதுக்கி விட்டுப் போனாளோ?

3



ஏதேதோ நினைவுகளில் மூழ்கிய படியே டைரியை எடுத்தாள். தினமும் டைரி எழுதும் பழக்கமுண்டு அவளுக்கு.

உன் விழிகளும் முகமும் எத்தனை உணர்வுகளைச் சித்தரிக்கின்றன. காதில் உன் மென் குரல் கவிதையாய், இனிமையாய் அதில் எத்தனை ஆண்மைத்தனம். உதடுகளை விரிக்காமல் மெல்லிய கோடாய் ஒட்டிக் கொண்ட சிரிப்புதான் உன் அடையாளமோ!



வாய் மூடாமல் நான் பேசப் பேச அதை பார்வையால் விழுங்கி அளவோடு கையைக் கட்டிக் கொண்டு ரசித்தாயே அது யெத்தனை இன்பம். என் கண்களையேன் உன் இமைகளுக்குள் வைத்துப் பூட்டினாய். சாவி என்னிடம் இருந்தாலும் திறக்க மனமில்லை எனக்கு.

எல்லோருக்கும் கனவுகள் இருக்கும். என் கண்களிலும் உண்டு. விசித்திரமான எண்ணங்களுக்கு சொந்தக்காரி நான், விநாடிக் கொருதரம் என் உணர்வுகள் மாறும். அழுகையும், புன்னகையும் கலந்த கலவைதான் என் மனமும். நானும் யோசித்தேன். நீயெப்படி என்னை ஈர்த்தாய், அல்லது உன்னால் நானெப்படி ஈர்க்கப்பட்டேன் என்று!

உன்னுடன் பேசிய தருணங்களில் மனதிற்குள் பட்டாம் பூச்சிகள் சிறகடித்தது. ஒரு விநாடிதான் உன்னை நான் சந்தித்தேன். என்னுள் மெலிதான தாக்கத்தை நீ ஏற்படுத்தியது நிஜம். முதற் பார்வைக்கு இத்தனை சக்தி உண்டா?

தொலைபேசி அழைப்பு அவள் கவனத்தை ஈர்க்க டைரியை மூடிவிட்டு பேசினாள். கண்மணிதான் பேசினாள். உடனே வாயென்று. கிளம்பினாள். தாயிடம் கூறிவிட்டு, போனில் தோழி ஏதும் விவரமாகச் சொல்லாததால் என்னவோ, ஏதோவென்று பயபந்து ஒன்று உருண்டது. அது தோழியின் முகத்தைக் கண்டவுடன் முற்றிலும் மறைந்து போனது.

கண்மணியின் முகம் பூவாய் மலர்ந்து இருந்தது. இவளுக் குள்ளும் உற்சாகத்தைத் தந்தது. லதிகாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, ''ரொம்ப தேங்க்ஸ் லதி! மாப்பிள்ளை வந்து அப்பாவிடம் என்ன சொன்னாரோ? கல்யாணப் பேச்சும் அடியோடு நின்றுவிட்டது. நான் உனக்குத்தான் நன்றி சொல்லணும்.''



''வேறென்ன சொன்னாராம்?''

''தெரியலை? ஆனா போகும்போது என்னிடம் மெதுவாய் உன் தோழிக்கு நன்றியை சொல்லி விடுன்னார்.''

லதிகாவிற்கு சந்தோஷமாய் இருந்தது. சற்று நேரம் தோழியிடம் பேசினாலும், பேச்சில் மனம் லயிக்கவில்லை. சில நேரங்களில் தனிமை மிகவும் அவசியம். வரப்பிரசாதம் போல. அதுதான் அவளிற்கும் அப்போது தேவைப்பட்டது. எனவே வீட்டுக்குப் போவதை விடுத்து, அருகில் உள்ள தோப்பினுள் நுழைந்தாள்.

கால்கள் இலக்கின்றி நடந்தது. மனோவின் முகம் கண்களில் ஒட்டிக் கொண்டது. முதன் முதலாய் மனதில் பதிந்து போன அவனின் முகம் நேர்ப் பார்வையும், கம்பீரமும் சொற்களை அளந்து பேசும் விதமும் இத்தனை தூரம் அவளை யோசிக்க வைத்தவனாயிற்றே!

மறக்க முயன்றும் தோற்றவளாய், அவனை சந்தித்த அந்த விநாடியில் இருந்தே அவளை முழுவதுமாய் தன்னுடன் இழுத்துக் கொண்டவன் அல்லவா!

திடுமென ஒரு கரம் வலுகொண்டு அவளைப் பற்றி இழுத்தது. திகைத்துப் போய் திமிறியவள் எதன் மீதோ மோதி நின்றாள்.

''எங்கே கவனம் கண்களைத் திறந்தபடியே தூங்குகிறாயா யென்ன?'' தேனாய் பாய்ந்தது மனோரஞ்சனின் குரல்.

''நீங்களா?'' நடப்பது கனவா எனும் பாவனையில் விழிகளை விரித்து, இமைகளை கொட்டிப் பார்த்தாள்.



''ஏதேது? விட்டால் விழியிலேயே சிறைப்பிடித்து விடுவாய் போல்.. அப்பப்பா எத்தனை பெரிய கண்கள்.''

வெட்கத்துடன் அவன் பிடியில் இருந்து விலகினாள். ''நீங்க இங்கேயெப்படி?''

''ஒரு தேவதை தன்னையறியாமல் நடந்து ஆபத்தை நோக்கி அடியெடுத்து வைக்கிறாள்.. என்று ஒரு பட்சி வந்து சொல்லியது.''

''ஆபத்தா? இதென்ன விளையாட்டு?''

''விளையாட்டு இல்லேம்மா... உண்மைதான். இரண்டு நாள் முன்பு உங்கள் ஊரிற்கு வந்த எனக்கே இங்கே புதைகுழி உண்டென்று தெரியும். உனக்கென்ன மறந்து விட்டதா?''

உண்மைதான் இங்கு வலப்புறப் பாதையில் புதைகுழி இருப்பது அவளும் அறிந்ததே. ஆனால் அந்த வழியாகவா வந்து இருக்கிறாள். இவன் மட்டும் வரவில்லையென்றால் என்னவாகியிருக்கும்...? நினைக்கும் போதே உடல் நடுங்கியது.

அதை உணர்ந்தவன் போல், ''அதான் நான் வந்து விட்டேனே. அதுசரி அப்படியென்ன மெய்மறக்க வைக்கும் ஞாபகமோ?''

அது வந்து..! ஞாபகமே உங்களைப் பற்றித்தான் என்று சொன்னால் தன்னைப் பற்றித் தவறாக எண்ணி விட மாட்டானா? ஒரேயொரு முறை சந்தித்த ஒருவனிடம் மனதைப் பறிகொடுத்து விட்டதைச் சொன்னால் சிரிக்க மாட்டானா?

''என்ன மறுபடியும் கனவா?'' அவள் முகத்திற்கு எதிரே சொடுக்கு போட்டான்.

"ஒண்ணுமில்லை.. நன்றி!"

"எதற்கு?"

"என்னையும் என் தோழியையும் காப்பாற்றியதற்கு.."

"ஓஹோ... அதற்குள் விஷயம் தெரிந்து விட்டதா? தந்தியை விட வேகம்தான்."

லதிகா சிரித்தாள்.

அவள் சிரிப்பை தலைசாய்த்து ரசித்தவன். "கவலையின்றி சிரிக்க ஆண்டவன் சிலருக்கு மட்டும் சலுகை தந்து விடுகிறான்" என்றான்.

அவள் புரியாமல் நோக்கவும், மௌனமாய் இருவரும் இணைந்து நடந்தார்கள். ஆள் அரவமற்ற இடத்தில் முதல் நாள் சந்தித்த ஒருவனுடன் நடப்பது அவளுக்கு சற்றே வித்தியாசப்பட்டாலும், மனதிற்கு இனிமையான அந்த நிகழ்வு அவளுக்குத் தேவையாய் இருந்தது.

"நான் இன்று ஊர் திரும்பலாம் என்று இருக்கிறேன்."

"ஏன் இத்தனை சீக்கிரம்?"

"பின்னே வந்த வேலைதான் இல்லையென்று ஆகி விட்டதே. இனி இங்கேயிருந்து என்ன பயன்?" அவன் குரலில் சிறு கசப்பு தென்பட்டது போல் தோன்றியது லதிகாவிற்கு.

"என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் மனம் புண்பட நானும் ஒரு காரணம் இல்லையா... அதனால்தான்."

"உன் தோழி கூறியதை நீ அப்படியே என்னிடம் வந்து சொன்னாய்? இதில் உன் தவறு என்ன?"



'அதுதானே. கண்மணிக்காக தூதுதானே போனாள். இவள் மன்னிப்பு கேட்கத் தேவையில்லைதான். இருந்தாலும் கல்யாணம் பற்றிய எதிர்பார்ப்போடு வந்தவனை ஏமாற்றி யதில் அவளுக்கும் பங்குண்டுதானே?'

"கல்யாணம் பற்றிய எதிர்பார்ப்போடு வந்திருப்பீர்கள்! அதை இல்லையென்று முதலில் உணர்த்தியவள் நான் தானே?" என்று இழுத்தாள்.

அவன் சத்தம் போட்டு சிரித்தான். வெண்நிற பற்கள் பளீரிட, தலை சாய்த்து அவன் குலுங்கிச் சிரிக்கவும் முன்பிருந்த முடிக் கற்றைகள் காற்றோடு உறவாடியதை இமைக்காமல் ரசித்தாள் லதிகா.

"உண்மையைச் சொல்லப் போனால் எனக்கும் இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை, என் அத்தையின் வற்புறுத்தல் தாளாமல்தான் இங்கு வந்தேன். எப்படி பெண்ணிடம் சொல்வது என்று மண்டையை உடைத்துக் கொண்டிருக்கும் போதுதான் நீ வந்தாய்.."

"ஏன் விருப்பம் இல்லை?"

"ஏற்கனவே நடந்த கசப்பான அனுபவம்தான் காரணம்..." ஒரு பெருமூச்சை வெளியிட்டது அவன் குரல். "உன்னிடம் சொல்வதற்கென்ன? உன்னை என்னால் அந்நியமாய் கருதத் தோன்றவில்லை.

"பார்த்தவுடனேயே உன்னிடம் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது உண்மை. மிகவும் நெருக்கமான இணையை சந்தித்தது போல். கவிதாவும் நானும் கல்லூரியில் படித்தவர்கள். எங்களுக்குள் நல்ல நட்பு உண்டு. இருவரும் சிறு வயது முதலே



பழகியதால்தான் எங்கள் இரண்டு குடும்பத்திற்கும் நல்ல பரிச்சயம் இருந்தது.

"பெரியோர்கள் பார்த்து நிச்சயம் செய்தார்கள். திருமணத் திற்கு பத்து நாட்களுக்கு முன்பு, அமெரிக்காவில் படிக்கும் போதே விண்ணப்பித்து இருந்த வேலை இருவருக்கும் கிடைத்தது. கவிதாவிற்கு மிகவும் சந்தோஷம். அவளின் கனவே ஹைடெக் வாழ்வுதான். ஆனால், எங்கள் வீட்டில் யாருக்கும் நான் அயல்நாடு போவதில் விருப்பம் இல்லை. முக்கியமாய் தாத்தாவிற்கு. உன் மாமனும் திருமணம் செய்து கொண்டு தனியே இப்போது இல்லாமலே போய்விட்டான்.

"நீதான் இந்த வீட்டிற்கு ஒரே ஆண் வாரிசு. நீயும் போய்விட்டால் என்னால் தாங்க முடியாது ரஞ்சன்.. என்று கண்ணீர் விட்டார். அவருக்காக நான் வேலையை விட முடிவு செய்து கவிதாவிடம் பேசினேன்.

"அவளுக்கு அது பிடிக்கவில்லை. என்னுடன் சண்டை போட்டாள். அவள் வீட்டு மனிதர்களோ, இன்றைக்கோ, நாளைக்கோ இறக்கப் போகும் முதியவருக்காக உங்கள் எதிர்காலத்தை ஏன் பாழாக்க வேண்டும் என்ற ரீதியில் பேசினார்கள். ஆனால் நான் என் முடிவில் உறுதியாய் நின்றதோடு, கவிதாவிடம் இறுதியாய் கேட்டேன்.

"உனக்கு நான் வேணுமா இல்லை அமெரிக்க வேலை வேணுமாயென்று?

"வேலைதான்! நீ வேண்டாம் என்று பளிச்சென்று பதில் வந்தது.



"அத்தோடு என் திருமணமும் நின்றது. இது நடந்து இரண்டு வருடங்கள் ஆகி விட்டது. ஆனால் வடுக்கள் மறைய வில்லை."

"கவிதாவை நீங்கள் நேசித்தீர்களா மனோ..?" பெயரைச் சுருக்கி அழைத்து விட்டு, "ஸாரி.. நான் அப்படி...".

"அழைக்கலாம். எனக்கு நெருங்கியவர்கள் அப்படி அழைப்பதுதான் வழக்கம். லது... காதல் வேறு, எண்ணம் வேறு. இவள்தான் தனக்கு இணையென்று எல்லோரும் அறிந்த பின் என்னைத் தூக்கியெறிந்தவள், நான் எத்தனை பேர் முன்பு கூனிக் குறுகி நின்றேன் தெரியுமா?"

"அறிந்தவர்கள் அறியாதவர்கள் கூட இவனுக்கென்ன குறையோ என்கிற ரீதியில்தான் பேசினார்கள். அதுதான் கஷ்டமாய் இருந்தது லது.." அவன் அப்படி பெயரைச் சுருக்கி அழைத்த விதம் மிகவும் பிடித்திருந்தது.

"அதன் பிறகு திருமணமே வேண்டாம் என்று இருந்தேன். என் அத்தையின் தொந்தரவு தாளாமல்தான் உன் தோழியைப் பார்க்க வந்தேன். வந்த இடத்தில் உன் அறிமுகமும் கிடைத்தது."

"பெண்கள் எல்லோரும் எளிதில் மனம் மாறி விடு கிறார்கள். கசப்பாய் வெளிவந்தது அவன் பதில். அதில் வெறுப்பும் இழையோடி இருந்தது. சரி நேரமாகிறது லது... வெகு தூரம் நடந்து விட்டோம். உன்னை வீட்டில் விட்டு விடட்டுமா.."

"வேண்டாம் நீங்கள் கிளம்புங்கள்..." தவிப்பான பார்வை யோடு அவள் சொல்லவும், அவனும் தலையசைத்து அடுத்த முறை பூஞ்சோலை வரும் வாய்ப்பிருந்தால் நிச்சயம் உன்னை

சந்திப்பேன் லது... வருகிறேன்'' மனோரஞ்சன் விலகி நடந்தான்.

''மனோ... பார்த்து..''

புன்னகையுடன் விடைபெற்று போகும் அவனையே இமைக்காமல் பார்த்தாள். அவனும் ஓரிரு முறை இவளைத் திரும்பிப் பார்த்துதான் சென்றான். அத்தனை இயல்பாய் பேசிய அவனிடம் தன் மனதில் உள்ளதைக் கொட்டி இருக்கலாமோ?'' என்ற நினைப்பை சட்டென்று உதறினாள்.

பெண்கள் அவசர புத்தி கொண்டவர்கள் என்று பேசுபவனிடம், முதல் நாள் கண்ட உன்மேல் எனக்கு காதல் பிறந்து விட்டது என்று கூறுவது அபத்தமாய் இராதா? வண்டியின் புகை கண்ணை விட்டு மறைந்த போது இமை மூடாமல் பார்த்துக் கொண்டே இருந்தாள். நெஞ்சம் முழுக்க நிறைந்து விட்ட மனோவை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தாலும் அதைவிட முட்டாள்தனமே இல்லையென்று மனதை அடக்கினாள்.

முன்பின் அறியா ஒருவனிடம் எப்படி இத்தனை ஈர்ப்பு சாத்தியப்படும் அவனின் கவலைக்கு ஆறுதலாய் பேசிவிட துடிக்கிறதே என் மனம். யாரிடமும் அவள் இத்தனை சலனப்பட்டது இல்லையே? அவனிற்குள்ளும் இதே கலக்கம் இருக்குமோ? என்னை நெருக்கமாய் நினைக்காமல் இருந்திருந்தால் அவன் அந்தரங்கத்தைப் பற்றி கூறியிருப்பானா?

ஒருவேளை எண்ணியது நடக்கவில்லையே என்ற வேதனையில் தன் கடந்த காலம் பற்றி அவன் கூறியிருக்கலாம். அதைக் கொண்டு என் மீது அன்பு கொண்டவன் என்று நினைப்பது முட்டாள்தனமல்லவா?



ஆனால், இக் கல்யாணம் நின்றது நீதான் என்னை காப்பாற்றினாய் என்ற ரீதியில் பேசினானே, உள் மனம் சாதகமாய் வாதிட மூளை அதை எதிர்த்தது. ஏற்கனவே ஒரு திருமணத்தில் தோற்று இருப்பவன் மறுபடியும் தெரிந்தே தவறான முடிவு எடுப்பானா? அதுவும் மணப்பெண் இன்னொருவனை விரும்புகிறவள் என்று தெரிந்தும், மனசாட்சியே வாதியாகவும், பிரதிவாதியாகவும் மாறி மாறி வாதாடத் திகைத்துதான் போனாள்.

மனோவைச் சந்தித்த அந்தத் தருணங்களை அனுதினமும் எண்ணியெண்ணி இன்பக் கடலில் நீந்தியவளுக்கு, தாயின் திடீர் மறைவு நடுக்கடலில் தள்ளி விட்டாற் போல் இருந்தது.

மதியம் வரை உணவு ஊட்டி விட்டு மகளை மடியில் படுக்க வைத்துக் கொஞ்சிக் கொண்டு இருந்த அன்னையின் முடிவு இன்னும் இரண்டு மணி நேரத்தில்தான் என்ற நிலையை மட்டும் முன்னரே அறிந்திருந்தால் தன் உயிரைத் தந்தேனும் தாயைக் காப்பாற்றியிருப்பாளே!

மாரடைப்பு வரும் வயதா அவளிற்கு! மாமா கூறியதைப் போல் தாயின் மனதில் அப்படியென்ன தீர்க்க முடியாத வேதனை இருந்திருக்கும். நினைவுகளிலேயே பிரயாணம் கரைந்து போயிருந்தது.

## 4



ஆறு மணி நேரப் பயணம். அலுங்காமல் ஏ.ஸி. காரில்தான் என்றாலும் உடலும் மனமும் ஒரு சேர சோர்ந்து போயிருந்ததால் மிகுந்த களைப்போடு தெரிந்தாள் லதிகா.



அவளுக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் லதிகாவின் பொருட்கள் பணியாட்களின் மூலம் சேர்ப்பிக்கப்பட்டது.

''நீ குளிச்சிட்டு ரெஸ்ட் எடு லதிகா. நான் சாப்பாடு கொண்டு வந்திட்டு எழுப்பறேன்'' என்று அத்தை நகரவும், இளையவள் அந்த அறையை சுற்றி பார்வையை ஓட விட்டாள். அந்த அறையின் வனப்பு கவரும் விதமாய் இருந்தது. பூஞ்சோலையில் தன் மொத்த வீட்டையும் இந்த ஒரு அறை அடக்கியிருந்தது.

தரை முழுவதும் மார்பிள்ஸ் பதிக்கப்பட்டு, வண்ணமாய் விலையுயர்ந்த திரைச் சீலைகளும், வழுவழுப்பான சோபாக்களும், கண்ணைப் பறிக்கும் விளக்குகளும், என்று குட்டி சொர்க்கம் போலிருந்தது. பகட்டும், பணக்காரத்தனமும் பொங்கி வழிந்தது என்றே கூறலாம்.

ஒருமுறை இந்த வீட்டு கிரகப் பிரவேசத்தின் போது இங்கு வந்த அம்மா இரண்டு நாள் கூட தாக்குப் பிடிக்காமல் திரும்பி வரவும், ''என்னம்மாயிது! அண்ணன் வீட்டுக்குப் போனா அட்லீஸ்ட் ஒரு வாரமாவது இருந்திட்டு வருவேன்னு பார்த்தேன். ஆனா, போன ரெண்டாவது நாளே வந்திட்டியே?''

''பணமும், பகட்டும் மட்டும் வாழ்க்கை இல்லை லதிகா, கட்டாந்தரையில் படுத்துறங்கும் இன்பம் கூட பட்டு மெத்தையில் இல்லை. எனக்கு அதெல்லாம் ஒத்து வரலை லதும்மா'' அம்மா கூறியது நினைவில் ஆடியது. ஒரு நீள பெருமூச்சோடு குளித்துவிட்டு வந்தாள்.

பெட்டியில் இருந்து துணிமணிகளை எடுத்து அடுக்கினாள். புத்தகங்களை வரிசைப்படுத்தினாள். அம்மாவின் புகைப்



படத்தை மாட்டி அழகு பார்த்தாள். தாயின் புன்னகை முகம் மனதிற்கு தெம்பளித்தது.

பால்கனியில் நின்று தோட்டத்தை வெறித்தாள். மாமரத்தில் இரண்டு கிளிகள் ஒன்றையொன்று கொஞ்சிக் கொண்டிருந்தன. அவளையும் அறியாமல் மனோவின் நினைவு வந்தது.

டைரியை எடுத்துப் பார்த்தாள். மனோ எங்கிருக்கிறீர்கள்? விலகல் நெருக்கத்தை அதிகரிக்க உதவுமென்பது எத்தனை உண்மை. உன் அருகாமைக்கு மனம் ஏங்குகிறது. அன்பின் வெளிப்பாடுதானே காதல். அப்படியானால் இதற்கு அதுதான் அர்த்தமா?

எவ்வளவு முயன்றாலும், உன் நினைவுகளில் நீந்தாமல் என்னால் இருக்க முடியவில்லையே! காதுக்குள் நாதமாய் ரீங்காரமிடும் உன் குரல் நரம்புகளில் ஓடி ஒருவித குளிரைத் தோற்றுவிக்கிறது. அதைப் போக்க வழி தெரியாமல் தவிக்கிறேன் நான்! ஒரு விநாடி உன்னைக் காணாமல் போனாலும், மனம் முழுக்க படபடப்புடன் கூடிய பயபந்து உருளுகிறதே.. மனோ.. என் மனோ... என் மனங்கவர்ந்தவனே!

ஏங்கிக் கிடக்கும் கண்கள் உன் அழகியத் திருமுகம் காணத் துடிக்கிறதே! உன் உதடுகள் எனக்காய் உரைத்த வார்த்தைகள் எண்ணிக்கையில் அடங்கிவிடும். ஆனால் எண்ண முடியா மௌன பாஷைகளில் மூடிக் கிடக்கும் இதழ்களுக்குள் புதைந்து கிடந்தாலும் உன் செய்கைகள் வெளிப்படுத்துகின்றன.

அத்தை உணவருந்த அழைக்கவும் டைரியை மூடி விட்டு எழுந்தாள். திரும்பிப் பார்ப்பதற்குள் ஒரு வாரம் ஓடி விட்டு இருந்தது. அன்றைய தினம் முரளி அவளை வெளியே

அழைத்து வந்திருந்தான். முதலில் அவள் மறுத்துதான் பார்த்தாள்.

ஆனால் மாமாவோ "ஒரு கவலையென்றதும் உடனே நத்தையாய் கூட்டிற்குள் சுருண்டு விடக் கூடாதும்மா. வாழ்க்கையில் அனுபவிக்க இன்னமும் எத்தனையோ இருக்கிறது. அதையெல்லாம் விடுத்து, இப்படி மூலை யிலேயே முடங்கி இருக்கலாமா?" என்று பலவாறு பேசி வற்புறுத்தி முரளியுடன் அவளை அனுப்பி வைத்தார் சந்திரசேகர்.

முரளியுடன் அமர்ந்து வந்தாலும் மனதிற்குள் ஏதோவொரு சின்ன நெருடல் இருந்து கொண்டேதான் இருந்தது. இடது கண் வேறு துடித்து என்னவோ நடைபெறப் போகிறது என்பதை உரைத்தது.

"என்ன லதி? இன்னமும் ஆன்ட்டி இறந்ததையே நினைச்சு பீல் பண்ணுறீயா?"

"நத்திங் முரளி. எத்தனை முயன்றாலும் பழைய நினைவுகளை மறக்க முடியவில்லை."

"மறக்கப் பழகிக் கொள்ள வேண்டும் லதி! வாழ்வது ஒருமுறைதான். அதில் இளமை சில காலம்தான். அதை பயனுள்ள முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும்."

"இழப்புகளையே தொடர்ந்து சந்தித்து, இருக்கும் எனக்கு இதிலெல்லாம் ஆர்வம் இல்லை முரளி."

"தப்பு லதி! உன்னுடைய பவர் தெரியாமல் நீ பேசிகிட்டு இருக்கே. உன் கண்கள் அபரிமிதமான அழகு தெரியுமா? உன் கண்களை உற்றுப் பார்த்தால் எந்த ரகசியமும் வெளியே



வந்துவிடும். அந்த அளவிற்கு யுவர் ஐஸ் இஸ் வெரி பவர்புல். நான் கூட உன்னிடம் ஒரு ரகசியம் சொல்லட்டுமா."

"தங்கமலை ரகசியமா?"

"இல்லை. தங்க மகனின் ரகசியம். காதல் ரகசியம்."

"காதலா? உனக்கா?"

"ஏன்? நான் காதலிக்கக் கூடாது என்று இந்திய அரசாங்கம் சட்டம் ஏதும் போட்டு இருக்கிறதா?"

"அதில்லை முரளி..?"

மேற்கொண்டு பேசும் முன் முரளியின் செல்போன் சிணுங்கியது.

"ஒரு நிமிடம் லதி!" என்று கண்களால் கெஞ்சிவிட்டு செல்போனை உயிர்ப்பித்தான்.

"ஹலோ, ஷாலு டியர் எங்கே இருக்கே?"

"....."

"ஸாரிம்மா நான் இன்னைக்கு ரொம்பவும் பிஸி ஒரு முக்கியமானவங்களோட வெளியே போறேன். நாளைக்கு மீட் பண்ணலாமே."

"...."

"யாரா? என் அத்தை மகள், ரொம்பவும் அழகு."

"...."

"பொறாமையா? கோபப்படாதேயேன் ப்ளீஸ். என் செல்லமில்லை." அடுத்த முனை வைக்கப்படவும், ச்சே...



இந்த பொம்பிளைங்களுக்கு எல்லாம் கொஞ்சம்கூட பொறுமையே இல்லைப்பா" என்று அலுத்துக் கொண்ட முரளியை வியப்பாய் பார்த்தாள்.

"ஏய்! என்ன அப்படி பாக்குறே? என்னடா இவன் யார் கிட்டே இப்படி வழியறான்னு தானே? வேறயென்ன செய்யறது? லவ் பண்ணித் தொலைச்சிட்டேனே."

"முரளி நீ லவ் பண்றியா? இது, மாமாவுக்குத் தெரியுமா?"

"சரியாப் போச்சு. அப்பாகிட்டே சொல்லிட்டு எந்தப் பிள்ளையாவது காதலிப்பானா? உனக்குயேன் மூளையிப்படி போகுது?"

பேசியபடியே அந்தப் பெரியத் துணிக் கடையின் முன்பு வண்டியை நிறுத்தினான்.

"முரளி இங்கேயெதற்கு?"

"உனக்கு நல்லதா டிரஸ் எடுக்கச் சொல்லி அப்பா பணம் தந்து அனுப்பி இருக்கார்."

"எனக்கா? வேண்டாமே?"

"வேணுமே? என் அழகு அத்தை மகளே முரண்டு பண்ணாம சமர்த்தா வந்தீன்னா சரி இல்லேன்னா உன்னை அப்படியே தூக்கிட்டுப் போயிடுவேன். எப்படி வசதி?"

"இரு இரு உன் ஷாலுவிடம் சொல்றேன்" விரல் நீட்டி எச்சரித்தபடியே குலுங்கிச் சிரித்தாள்.

"ஏன் இந்தப் பொழப்பு, சும்மாவே ஷாலு கரண்ட் மாதிரி. நீ மட்டும் பத்த வைச்சே எரிச்சிடுவா சரி வா போகலாம்."



கேலியும், கிண்டல் பேச்சுக்களுமாய் முரளியும், லதிகாவும் இணைந்து நடந்தனர். மனம் வெகுநாளைக்குப் பிறகு இலகுவானாற் போல் இருந்தது.

கண்ணாடி மாளிகைக்குள் நுழைந்தாற் போல் பளபளப்பாய் இருந்தது கடை. அழகான ஆடைகள் ஷோ செய்யப்பட்டு இருந்தது. ஏஸியின் சில்லிப்பு உடலைத் தழுவி, சிப்பந்தி ஒருவர் அருகில் வந்தார்.

"என்ன பார்க்கணும் ஸார்?"

"பேன்ஸி ஸாரி.."

"இடது பக்கம் வாருங்கள்" இருவரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

ஜரிகை வேலைப்பாடுகளோடு, மணிகளும் கலந்து மின்னிய ஹேண்ட் ஒர்க் ஸாரியும், அடர் நீலத்திலும், சந்தன நிறத்தில் காப்பர் மணிகள் டிஸைன் செய்த இரண்டு புடவைகளை தேர்ந்தெடுத்தான் முரளி. இரண்டுமே கிட்டத்தட்ட மூவாயிரத் தைத் தொட்டது.

"எனக்கு எதுக்கு முரளி இத்தனை விலையுயர்வாய்?"

"நீயென்ன பூஞ்சோலையிலா இருக்கிறாய்? சாயம் போன துணிகளை உடுத்த. இது சென்னை. இங்கே ஆள்பாதி ஆடை பாதி அம்மணி, நீ வாயை மூடிக்கிட்டு அமைதியா இரு" என்று சொல்லிவிட்டு சில ஆர்கண்டி சேலையும், பருத்தி உடை களோடு இரண்டு சல்வார்களும் எடுத்த பின்னர்தான் முரளி விடுத்தான்.

"வெரிகுட் முரளி நீ கூட நல்லா செலக்ட் பண்றே."

''தேங்க்ஸ் யுவர் கமெண்ட்ஸ். இதே ஹேப்பி மூடோட வந்து எனக்கு கொஞ்சம் ட்ரஸ் செல்க்ட் பண்ணேன்.''

''ஷ்யூர்...'' ஆவலோடு அவளும் நடந்தாள். ஜென்ஸ் கலெக்‌ஷனுக்குப் போனார்கள்.

''லதி இந்த ப்ரவுன் ஷர்ட் எப்படியிருக்கு?''

''முரளி உனக்கு புல் ஸ்லீவ்ஸ்தான் நல்லா இருக்கும் இந்தக் க்ரே. பிங்க் எல்லாம் நல்லா இருக்கு.''

''இங்கேயே இரு. நான் ட்ரையல் பார்த்துவிட்டு வரேன்'' என்று அவன் ஓடவும், இவள் அடுத்த சட்டைகளைக் கலைத்துக் கொண்டு இருந்தாள். ''எனக்கெல்லாம் ட்ரஸ் செலக்ட் பண்ணி தரக் கூடாதா?'' என்ற குரலில் ஈர்க்கப் பட்டவள், ஒரு கணம் சுவாசிக்கவும் மறந்துதான் போனாள்.

''நீங்களா..? மனோ... இங்கே எப்படி?''

''எதிர்பாராமல் கண்டதால் வந்த மலைப்பா? இல்லை தொந்தரவு தந்து விட்டேன் என்ற நினைப்பா?'' அவன் குரலில் இருந்த ஏளனம் பார்வையிலும் தொனித்தது.

''மனோ, நீங்கள் கேட்டது எனக்குப் புரியவில்லை?'' என்றாள்.

''பெண்கள் மனம் அடிக்கடி மாறும் என்பதை நீயும் உண்மையாக்கி விட்டாய் லதிகா...'' வந்தவன் உன் மாமாவின் மகன்தானே.''

''முரளியை உங்களுக்குத் தெரியுமா'' ஆச்சரியமாய் விழிகளை விரித்தாள்.



''நீ அவனுடன் இப்படி ஜோடி போட்டுக் கொண்டு ஊர் சுற்றுவது எனக்கு அறவே பிடிக்கவில்லை.''

இவன் என்ன சொல்கிறான். முரளியுடன் வெளியே வந்ததை தவறு என்கிறானோ? சுற்றுவது அதுயிதன்று பேசுகிறானே? வெகு நாள் கழித்து கண்ட அவனிடம் இத்தனை கோபக் கணைகளை அவள் எதிர்பார்க்கவில்லை. அப்படியென்ன பெரிய தவறு செய்துவிட்டேன் நான். ஊர் பேர் அறியா எவனோ ஒருவன் அல்லவே முரளி.

எத்தனை நாள் இவனைக் காண வேண்டுமென்று ஆவலோடு இருந்திருப்பாள். தாயினை இழந்து வேதனையில் அவள் புழுவாய் துடிக்கும் போது வராதவன் இன்றுயென்னவோ வந்து உரிமை அதுயிதுவென்று பேசுகிறானே. என்றெழுந்த கோபத்தில், ''நான் யாருடனும் வருவேன்! அது என் இஷ்டம்! இதை கேட்க உங்களுக்கு..!''

''என்ன உரிமையிருக்கிறது? என்று கேட்கிறாயா? அதை கூடிய விரைவில் நிருபிப்பேன்'' அவன் கோபமாய் சென்று விட்டான்.

லதிகாவிற்கு தான் சுற்று அதிகப்படியாகப் பேசிவிட்டோமோ என்று தோன்றியது. தன் இழப்புகள், வேதனைகள், தவிப்புகள் என என்னவெல்லாம் பேச வேண்டும் என்று கற்பனை செய்து வைத்திருந்தாள். ஆனால், எல்லாம் தலைகீழ் ஆகிவிட்டதே?

ஆனால் மனோ பேசியது மட்டும் சரியா? முதல் முறை சந்தித்தபோது அவன் பேச்சில் இருந்த மென்மையும், அன்பும் இப்போது எங்கே? ஏனிந்த தேவையில்லாத கோபம்?



மேற்கொண்டு யோசிக்க முடியாதபடி முரளி வந்து விடவே வேறு வழியின்றி அங்கிருந்து கிளம்பினாள்.

அதன் பிறகு முரளி பேசிய எந்த வார்த்தையும் லதிகாவின் காதில் விழவில்லை. அவன் பேசப் பேச இவள் ஒப்புக்காகத் தலையசைத்தாள். அதே காம்ப்ளக்ஸில் உள்ள ஓட்டலில் உணவருந்தினார்கள். பிறகு ''பீச்சிற்குப் போவோமா?'' என்றான்.

''வேண்டாம். முரளி எனக்குத் தலைவலிக்கிற மாதிரி இருக்கு. வீட்டுக்குப் போவோம்'' என்று மறுத்தாள்.

''சரி உன் விருப்பம்'' அவன் காரை வீட்டிற்குத் திருப்பினான்? வழியெல்லாம் மனோவின் கோபமான விழிகளும் பேச்சும்தான் மாறி மாறி வந்தது.

## 5



**கா**ம்பௌண்டிற்குள் கார் நுழையும் போதே. வெள்ளை நிற ஜிப்சி நின்று இருந்தது. வாயிலை அடைத்தபடி காரை விட்டு இறங்கியவள் இது மனோவின் வண்டியல்லவா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, வீட்டினுள் இருந்து வெளியேறிய மனோவைக் கண்டதும் கால்கள் தரையோடு ஒட்டிக் கொண்டது போல் நின்று விட்டாள் லதிகா.

இதையேதும் அறியாத முரளியோ, ''ஏய் ஏன் இங்கேயே நின்னுட்டே..?'' என்று கூறி லதிகாவின் கைப்பற்றி இழுத்துக் கொண்டு போக மனோவின் எரிக்கும் பார்வையைக் காண



முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள் லதிகா. பின்னால் ஜிப்சியின் வேகம் மிகவும் சீற்றமாய் இருக்க, இவன் ஏன் இங்கு வந்தான்? என்ற கேள்வி குழப்ப உள்ளே நுழையவும் மாமாவின் பேச்சுக்கள் காதில் விழுந்தன அரைகுறையாய்!

''என்ன திமிர் அவனுக்கு? அவனுக்கு உரிமையாமே? இத்தனை வருடங்களாக எங்கே போனார்கள்? இரண்டு பெண்களையும் அநாதையாய் இருக்கவிட்டு... இப்போ வந்து உரிமை கொண்டாடுகிறானோ?''

''சரி விடுங்க... பசங்க வர்றாங்க... இந்தப் பேச்சை இத்தோடு விடுங்க'' அத்தை மடக்கவும், மாமாவும் உடனே இயல்பானார்.

ஆனால் மாமாயேன் மனோவைத் திட்ட வேண்டும். நான் வரவும் பேச்சை நிறுத்துகிறார்கள் என்றால், நான் அறியக் கூடாதுயென்று நினைக்கிறார்களோ, அப்படியிருந்தும் அதைப் பற்றியே திரும்பக் கேட்டால் நன்றாய் இராதே என்று எண்ணினாலும், அவள் மனம் கவர்ந்தவனைப் பற்றிய விஷயம் இல்லையா? எனவே அதை அறிந்து கொள்ளும் ஆவல் அதிகரித்தது.

முரளியிடம் கேட்டால் தெரியுமா? என்ற யோசனையில் இருக்கும் போதே, வாங்கி வந்த அத்தனைப் பொருட்களையும் கடைப் பரப்பினான் முரளி. ''பாருங்கம்மா உங்க பையனுடைய செலக்‌ஷனை என்று பெருமையாய் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான்.

''இரண்டு பேரும் சாப்பிட்டீங்களா? இல்லையா? லதிகா ரொம்பவும் சோர்ந்து போய் தெரியறாளே?''

''அதெல்லாம் பரோட்டா செட் ஒன்றை விழுங்கி விட்டுத்தான் வந்தோம். அவளுக்குத் தலைவலிக்கிறதாம். அதான் டல்லா இருக்கா? ஆனா இப்போ ஒரு விஷயத்தைப் பார்த்தால் அவள் தலைவலியெல்லாம் பறந்து விடும்.''

''என்னடா அது?''

''சஸ்பென்ஸ்!''

''லதிகா நீ மட்டும் இங்கே வாயேன்..'' ஏறக்குறைய அவளை இழுத்துக் கொண்டு தோட்டத்தில் எதிர்புறம் இருந்த லானைக் காட்டினான். பார்த்தவளின் புன்னகையில் உதடுகள் ஒட்டிக் கொண்டன. ''முரளி இது.. இது... அம்மாவின் ஊஞ்சல்தானே? இதுயெப்படி இங்கே?''

''அன்று வீட்டிலிருந்து கிளம்பும் போது, இந்த ஊஞ்சலை விட்டு வர நீ ரொம்பவும் யோசித்தாய். சரி, கவலையாய் இருக்கும் உனக்கு ஆறுதல் தருமே என்றுதான்.''

''தேங்க்ஸ் முரளி உண்மையைச் சொல்லப் போனால் நீ இத்தனை வாங்கித் தந்தபோது இல்லாத சந்தோஷம் இப்போது இந்த ஊஞ்சலைத் தந்தபோது இழந்த என் நிம்மதியை மீட்டுத் தந்தது போல் இருக்கிறது முரளி.''

''இந்தப் புன்னகையைக் காண வேண்டும் என்றுதான் நான் ஆசைப்பட்டேன். இது எப்போதும் உன்னுடையதாகவே இருக்க வேண்டும் லதி! சரி வீட்டில் கொஞ்சம் சமாளி. நான் போய் ஷாலுவைப் பார்த்துவிட்டு வருகிறேன். ஏற்கனவே கோபமாய் இருப்பாள்.''

சரியென்று தலையசைத்தாள். ஊஞ்சலில் அமர்ந்தாள். முரளி சிறு வயது முதலே பழக்கம் என்பதால் சகோதரப் பாசத்துடன்



பிணைக்கப்பட்ட ஒரு நட்புணர்வு அவன் மேல் உண்டாயிருந்தது. அதனால்தான் அவனுடன் பழகும்போது மாமா மகன் என்ற எண்ணத்தைக் காட்டிலும் நல்ல நண்பன் எனும் உணர்வே மேலோங்கியது.

அப்படிப்பட்ட ஒருவனுடன் பேசுவதை முரளி தப்பாய் எண்ணி விட்டானே என்று மனம் வலித்தது.

மனோ எத்தனை ஆசைகள், கனவுகள், காற்றென பின்புறம் உரசி சட்டென கடந்து எதிர் சாரியில் ஏகாந்தமாய் உன் சிரிப்பு அன்றைய தினமே உன்னை என் இமைகளுக்குள் சுருட்டிக் கொண்டேனே. யார் புறமும் திரும்பாத என்னுள் சிறு தாக்கம் உண்டானது அன்று முதல்தானே மனோ.

மனோ உதடுகள் விலகாத உன் புன்னகையை நான் நேசிக்கிறேன். காட்சிகள் அனைத்தும் களவு போகின்றன. என் திரையில் உன்னைத் தவிர வேறு யாரும் தெரிவது இல்லை. கொஞ்சம் தளர்ந்த சாய்ந்த நடையும், புன்னகையை வீசியபடி தலையைக் குலுக்கி அலட்சியமாய் நடக்கும் உன் நடையும், என் கனவு நண்பனை, ரகசிய ஸ்நேகிதனை அந்தக் கற்பனை உருவத்தை நீ நிஜமாக்கினாய். இப்போதும் உன்னோடு கற்பனைக்குள் பேசி மகிழ்கிறேன். கண்களை மூடிக் கொண்டு கனவில் கைகோர்த்து நடக்கிறேன்.

உன் இதயப் பூட்டைத் திறக்க சாவியை வெளியில் தேடுகிறேன். நானே அறியாமல், மயக்கப்பட்ட மனமோ மனோ உன் மடியினைத் தேடி, விழிகளில் தேங்கியிருக்கும் கண்ணீர் சொல்லுமே என் அன்பை, உன் காலடிச் சுவடுகளைத் தேடித் தேடி என் கன்னப் பாதையில் கண்ணீர் சுவடுகள்.



மெழுகு வர்த்தியென உருகுகிறேன். உன் நினைவுதனில் சாலையில் ஓடும் வாகனங்களில் கூட உன் வாகனச் சப்தம் தனியாய் காதில் ஒலிக்கிறதே! அதிகாலைக் குயில்கள் திருப்பள்ளி எழுச்சி பாடிய போதும் ரசிக்காத மனம் உன் குரல் கேட்டதும் திடுக்கிட்டு விழிக்கிறேன். அருகில் நீ இல்லாததை அப்போதுதான் உணர்கிறேன். படுக்கையில் இருந்து எழ மனமின்றி வெற்றுக் கூடாய் கண்களை மூடிக் கொள்கிறேன்!

நினைவுத் திரையில் நீ! புன்னகையுடன் என் உயிரை ஊடுருவும் பார்வையுடன் இன்பத்தின் கண்களைத் திறந்து என் விழிக்குள் இருந்து உன் பிம்பம் வெளிவரா வண்ணம் பாதுகாத்து எழுகிறேன். நேற்றைய நிஜத்தின் தாக்கம் இன்றைய நினைவில், மூடிய இதழ்களின் வரிகள் கூறத் துடிக்கின்ற உன் பெயரினை ஐ லவ் யூ மனோ உருகினாள் லதிகா.

மாலை மங்கிய நேரம். புத்தகங்கள் சிறந்த நண்பன் அதைப் போல மனிதனின் வாழ்வினைப் படிக்க வேறுயெதுவும் இல்லை. சிறந்த நண்பன் என்று அவற்றைக் கூறுவது நூற்றுக்கு நூறு நிஜம். தலைசிறந்த எழுத்தாளரான ரமணிச்சந்திரன் எழுதிய 'உயிராய் இருக்க வருவாயா?' என்ற நாவலைப் புரட்டிக் கொண்டு இருந்தாள். ஒவ்வொரு பக்கத்தைப் புரட்டும் போதும் மனோவின் நினைவு நெஞ்சை வாட்டியது.

''என்ன லதிகா ஏதாவது முக்கியமா படிச்சிகிட்டு இருக்கியா?'' மாமாவின் குரல்தான் அவளைக் கலைத்தது.

''இல்லே மாமா கதைப் புத்தகம் தான். எனக்கும் நேரம் போக வேண்டும் இல்லையா? வீட்டிலேயே நேரத்தைப் போக்க வெறுப்பாய் உள்ளது என்னை வேறுயெங்காவது வேலைக்கு சேர்த்து விடுகிறீர்களா?''



''நல்லாயிருக்கும்மா? நீ இப்படி பேசுவது தெரிந்தால் மனோரஞ்சன் என்னுடன் சண்டைக்கே வந்து விடுவான்.''

''அது யார் மர்மா மனோரஞ்சன்?'' என்று தெரியாதபடியே கேட்டாள்.

''இந்தக் கேள்விக்கு ஒரு வரியில் பதில் சொல்லிவிட முடியாது லதிம்மா. அதற்குப் பின்னால் பெரிய வரலாறே இருக்கிறது.''

''மாமா..!''

''இத்தனை நாளா உங்க அம்மா கூட இதைச் சொல்லி யிருக்க மாட்டே காரணம் உனக்கு அப்போ வயசும், பக்குவமும் ஏற்படலை. தவிரவும் மனோரஞ்சனின் குடும்பத் தினாலே உனக்கு ஏதும் பாதிப்பு வராதுன்னு அவ நினைச்சு இருக்கலாம்.

''சிறு வயதிலேயே எங்களுடைய தந்தை இறந்து விட்டார். அதனால குடும்பத்தைக் காப்பாற்ற நான் அந்தப் பாரத்தை என் தோளில் சுமந்தேன். நல்ல சாப்பாடு கிடையாது, துணிமணி கிடையாது. அந்த அளவிற்கு வறுமையில் வாடினோம்.

''நான் வேலை செய்த வீட்டு பெரியம்மாவிற்கு உடல் நலமில்லாமல் போய்விட அப்போ மஞ்சரிதான் போய் கவனித்துக் கொண்டாள். அப்போதான் அந்த பெரியவரின் மகன் வாசுதேவனுக்கும், மஞ்சரிக்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. ஏற்கனவே வாசுதேவனுக்காக அங்கு ஒரு பெண் வளர்ந்து வர, மஞ்சரியும் வாசுதேவனும் யாரும் அறியா வண்ணம் திருமணம் செய்து கொண்டனர். எனக்கே இது பெரிய அதிர்ச்சிதான்.

"சப்தம் போட்டுக் கூட பேசத் தெரியாத என் தங்கையா இப்படி நடந்து கொண்டாள் என்று! ஆனால் இவர்கள் இருவரும் பூஞ்சோலையில் வாழ்ந்து வந்தனர் என்ற விவரமே நீ பிறந்த பிறகுதான் எனக்கேத் தெரியும். ஆனால் ஒரு குழந்தை பிறந்த பிறகும் கூட பெரிய வீட்டில் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

"அதற்குக் காரணம் வாசுதேவனுக்கு என்று நிச்சயித்த பெண்தான் காரணம். இன்னொரு விஷயம் இன்று வரையில் அவள் திருமணமே செய்யாமல் வாழ்ந்து வருகிறாளாம்!

"நாளாக நாளாகப் பெரியவர்களின் கோபம் மறையத் துவங்கியிருந்த அந்தக் காலக் கட்டத்தில்தான், உன் தந்தை இறந்து போனது. அப்போ உனக்கு நான்கு வயதுதான் இருக்கும். அந்த நேரம்தான் பெரிய வீட்டு மனிதர்கள் வந்து கதிரேசனுக்கு சேர வேண்டிய சொத்துக்களை மஞ்சரியிடம் தர வந்தார்கள். ஆனால் அவ அதையெல்லாம் வாங்க மறுத்துவிட்டாள். உறவுகளோடுதான் நானும் அவரும் வாழ விரும்பினோம். அவரே போன பிறகு இது எனக்குத் தேவையில்லைன்னு மஞ்சரி மறுத்து விட்டாள்.

"பெண் பிள்ளை வைத்திருக்கிறாய். அவளுக்காகவாவது என்று உன்னையும் காரணம் காட்டி பேச்சு எழுந்தது. ஆனால் மஞ்சரி எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. அதே மாதிரி தனிமையில் இருக்க வேண்டாம்மா என்னோடு வந்துவிடு என்று நான் அழைத்தும் கூட.

"வேண்டாண்ணா, அவர் இருந்த இந்த இடம் மட்டும்தான் எனக்கு ஆறுதல் அதை நான் யாருக்காகவும், விட்டுத்தர மாட்டேன்" என்று கூறி விட்டாள்."



கேட்கக் கேட்க தாயின் மேல் உள்ள அன்பும் மதிப்பும் இன்னும் அதிகமாகிப் போனது லதிகாவிற்கு!

"உன் தாயின் இறப்பிற்குப் பிறகு, மறுபடியும் உன்னை உரிமை கொண்டாடிக் கொண்டு வந்திருக்கிறது அந்தக் குடும்பம்."

"என்னையா?"

"ஆமாம்.."

"யார்..? மாமா.."

"மனோரஞ்சன் நீ கூட நேற்று பார்த்து இருப்பாயே. நீயும் முரளியும் வரும்போது உங்களைக் கடந்து சென்றானே..!"

"அவர்யேன் என்னிடம் உரிமை கொண்டாட வேண்டும்?"

"உன் தந்தை வாசுதேவனுடைய ஒரே தங்கை கல்யாணியின் மகன்தான் இந்த மனோரஞ்சன். உனக்கு அத்தான் முறை வரும்."

"மனம் கும்மாளமிட்டது, மனோ.. என் மனோ.. எனக்கு அத்தானா..!" நினைப்பே தித்தித்தது. கூடவே அவனை அத்தான் என்று அழைக்கும்படியும் அவன் அதே மனோ கரமான புன்னகையை வீசுவது போலவும் கற்பனையில் சுழண்டாள்.

"அவர் அதைத்தான் நேற்று பேசினாரா என்று கேள்வி யெழுப்பினாள்.

"உன் தந்தைக்கு முறைப் பெண் என்றேனே அவள் பெயர் ஷைலஜா மனோரஞ்சனுக்கு சகலமும் அவள்தான். தாயும் தந்தையும் இழந்த பிறகு நம் வீட்டுப் பெண் அநாதையாய்



இருக்கக் கூடாதென்றும் போய் அழைத்து வாயென்றும் சொல்லியனுப்பினாளாம். உடனே அத்தையின் ஆணையை நிறைவேற்ற இவன் இங்கே வந்து விட்டான். நான் முடியாது என்று அனுப்பி விட்டேன் லதிம்மா."

## 6



மாமாவின் கோபத்திற்கான காரணத்தை ஒருவாறு ஊகிக்க முடிந்தது. லதிகா வினால், இன்று இத்தனை உரிமையாய் பேசுபவர்கள் அவளுக்கு நினைவு தெரிந்த வரையில் வந்து பார்க்கவேயில்லையே, தவிரவும். அம்மாவின் இறப்பிற்குக் கூட இவர்கள் வரவில்லையே என்று தனக்குத் தோன்றிய சந்தேகத்தை மாமாவிடம் கேட்கவே செய்தாள் லதிகா.

"அம்மாவுடைய இறுதிச் சடங்கிற்குக் கூட வராமல் இன்றுயேன் உரிமை கொண்டாட வேண்டும்?" என்று கேட்க,

"இல்லேம்மா.. மனோரஞ்சனும் அவளும் வீட்டிற்குத்தான் வரவில்லையே தவிர, இடுகாட்டிற்கு வந்து செய்ய வேண்டிய சடங்குகளை எல்லாம் செய்தார்கள்" என்று மாமாவின் பதில் அவளுக்கு புதிய செய்தியாய் இருந்தது.

தான் துன்பத்தில் துவண்டிருந்த நேரத்தில் அருகில் இருந்தும் ஆறுதல் படுத்த அவன் வரவில்லையே என்று மனம் வருந்தினாலும், அவன் சூழ்நிலையென்னவோ என்று நினைத்துக் கொண்டாள். எனவே இதையேன் நீங்க என்னிடம் முன்பே சொல்லலை மாமா என்று அவள் கேட்கத் தவற வில்லை.



"அப்போது நீ இருந்த மனநிலையில் உன்னிடம் எதைக் கூறியிருந்தாலும் நீ புரிந்து கொண்டு இருந்திருக்க மாட்டாய் என்றுதானம்மா."

அவளும் அவர் சொல்வதை ஆமோதிப்பதாய் தலையசைத்தார். உண்மைதான் அன்றைய நிலையில் அவள் எதையும் உணர முடியாமல் கற் சிலையாய்த்தான் கிடந்தாள்.

"லதிம்மா! எனக்கும் முன்பைப் போல தொழிலில் கவனம் செலுத்த இயலவில்லை. இப்போ ஒரு பெரிய பிராஜெக்டில் அளவுக்கதிகமாய் கடன் வாங்கி இன்வெஸ்ட் பண்ணி யிருக்கேன். இப்போது என்னுடைய ஒரே ஆசை உனக்கும் முரளிக்கும் திருமணம் செய்து கண் குளிரப் பார்ப்பதுதான்" என்று மாமா அடுத்த குண்டைத் தூக்கி வீசவும் சர்வ நிச்சயமாய் அதிர்ந்துதான் போனாள் லதிகா.

"அய்யய்யோ..! மாமா நானும் முரளியும் அந்த எண்ணத் தில் பழகவில்லை. நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். இன்னும் சொல்லப் போனால், சிறு வயது முதலே ஒன்றாகப் பேசிப் பழகி விளையாடி எங்களிருவருக்கும் இடையில் வெறும் சகோதரப் பாசம்தான் ஊடுருவி இருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை.

"இதற்கெல்லாம் மேலாக முரளி ஷாலினி என்ற பெண்ணை விரும்புகிறான்" என்று உண்மையைப் போட்டு உடைத்தாள்.

"நீயென்னம்மா சொல்றே?"

"உண்மைதான் மாமா. முரளிக்கும் எனக்கும் திருமணம் என்ற பேச்சை தயவு செய்து விட்டுவிடுங்கள். தவிரவும், அம்மாவின் இழப்பில் இருந்தே நான் இன்னும் மீளவில்லை.

அதற்குள் திருமணம் என்ற பெரிய இக்கட்டில் என்னை மாட்டி வைக்க வேண்டாம்.''

அவரால் மேற்கொண்டு ஏதும் பேச முடியவில்லை. லதிகா எழுந்து வந்து அவருடைய கையைப் பற்றினாள். ''எனக்காக நீங்கள் எதுவும் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.''

''நிஜம்தான் லதிம்மா... என் தங்கை மஞ்சரிக்கு எவ்வளவோ செய்ய வேண்டும் என்று நான் நினைத்திருந் தேன். இளமையில் வறுமை இடம் தரவில்லை. ஆனால் அதன் பின்னர் மஞ்சரி ஏற்கவில்லை. அவள் என்னிடம் கேட்டுக் கொண்டதெல்லாம் என் மகளைப் பத்திரமாக பார்த்துக் கொள் என்றுதான். அதை நான் கட்டாயம் காப்பாற்றுவேன். உனக்கு என்ன வேண்டுமென்றாலும் என்னிடம் தயங்காமல் கேள்.''

''மாமா, முரளியின் ஆசைப்படி ஷாலினி, முரளியோட கல்யாணம் கூடிய விரைவில் நடக்க வேண்டும். அதுதான் நீங்க எனக்கு செய்யும் உதவி.''

''பிறர் நலம் போற்றும் வகையில் மஞ்சரியையும் மிஞ்சி விட்டாய் அம்மா. நிச்சயம் இந்தத் திருமணம் நடக்கும். அதுவும் உனக்காக'' என்றவர் மறுபடியும் தீவிரமான யோசனையில் இறங்கிட, என்னவென்று அக்கறையாய் வினவினாள்.

''இல்லை, உன் தந்தைக்குப் பிறகு சொத்துக்கள் எல்லாம் உன் பெயரில் மாறியிருப்பதாக கேள்வி. அதை விட்டுத்தர மனமின்றி மனோரஞ்சன் அத்தனை பேசினான். நான் வேறு உன்னை முரளிக்கு மணமுடிக்கப் போகிறேன். அதுதான் உனக்கும் விருப்பம் என்பதுபோல் கூறி விட்டேன். அதுதான் யோசனையாய் இருக்கிறது.''



மனோவின் கோபப் பார்வைக்கு காரணம் இப்போது தெளிவாய் புரிந்து விட்டது லதிகாவிற்கு! கடையில் என்னை முரளியுடன் கண்டதும், வீட்டில் மாமாவும் அதையே உறுதி செய்ததும் மனோவின் கோபத்திற்கு காரணம் என்று உணர்ந்தாள்.

அவள் இன்னொருவனுக்கு சொந்தம் என்ற எண்ணமே அவனால் தாங்க இயலவில்லையென்றால் தான் எத்தனை கொடுத்து வைத்தவள். சொத்திற்காக மனோ பேசினான் என்று மாமா கூறியதை அவள் ஏற்கத் தயாராய் இல்லை. அவள் மனோவைப் பற்றி அவளுக்குத் தெரியாதா?

நாளைக்கு முரளிக்கும், ஷாலுவிற்கும் நடக்கப் போகும் திருமணத்தினால் அவன் கணிப்பு தவறானதென்று கட்டாயம் உணருவான் என்று எதிர்பார்த்தாள்.

அத்தோடு மனோரஞ்சனை சந்திக்கும் எண்ணமும் ஆவலும் மேலோங்கின. ஆனால் அது நடக்கும் சமயம் அவள் மனோவை வெறுப்பாள் என்று அப்போது லதிகா அறிந்திருக்க நியாயமில்லையே.

சந்திரசேகர் சொன்னது போல வெகு வேகமாகவே திருமண ஏற்பாடுகளை கவனித்தார். முரளி இவளுக்கு குறைந்தது ஆயிரம் முறையேனும் நன்றி சொல்லியிருப்பான். முரளி, ஷாலுவின் திருமணம் நிச்சயம் செய்த அன்று, இரவு மண்டபமே கலகலப்பாய் இருந்தது. முரளி, ஷாலுவும் மணமக்கள் கோலத்தில் உலகத்தையே வென்று விட்டு விட்ட மகிழ்வில் இருந்தார்கள்.

வந்திருந்த அத்தனை உறவுகளும் மணமக்களை வாழ்த்தி போட்டோவிற்கு போஸ் கொடுக்க சிறுவர்கள் ஒலித்த



பாடல்களுக்கு ஏற்ப நடனம் ஆடிட சில பெரியவர்கள் அதை ரசிக்க இடமே உற்சாக மழையை தூவிக் கொண்டு இருந்தது.

கோதை நாயகியும் சந்திரசேகரும் கூட மகிழ்வின் சாயலில் இருந்தாலும், அனைத்து வேலைகளிலும் ஓடியாடிடும் தங்கை மகளைக் காண நெஞ்சு நெகிழ்ந்துதான் போயிருந்தது அவருக்கு.

இது அத்தனைக்கும் சொந்தமாக வேண்டியவள் வேலை யாளைப் போல கடவுளே சீக்கிரமே இவளுக்கும் ஒரு நல்ல இடத்தைப் பார்த்து அமைக்க வேண்டும் என்ற யோசனை யோடே வாயிலைப் பார்த்தவரின் பார்வை சற்று இருண்டு பின் மீண்டது.

க்ரே கலரில் புல் சூட்டில் வெகு கம்பீரமாய் பார்ப்போர் கவரும் வண்ணம் உள்ளே நுழைந்தான் மனோரஞ்சன்.

வந்தவர்களை வரவேற்றுக் குளிர்பானம் தந்து கொண்டு இருந்த லதிகாவை அவன் நெருங்கவும், அவள் நெஞ்சு துடிப்பது அவருக்கே கேட்டது. நெடிய காலை நீட்டி அவன் நடந்த லாவகமும், அலட்சியமாய் நோக்கி புன்னகையை வீசிய விதமும் கொள்ளையடித்தது.

அவள் நீட்டிய குளிர் பானத்தை எடுக்காமலேயே, விழிகளில் முழுவதுமாய் அளந்தான். ஆகாய நீல வண்ண புடவையில் ஆங்காங்கே சமிக்கியும், மணியும் ஓடிய வேலைப்பாடுகள் கண்ணைப் பறித்தன. ''வெகு பொருத்தம் தான் உன் அலங்காரம்'' காதருகில் கிசுகிசுப்பாய் கூறியதைக் கேட்டதும் முகம் முழுவதும் குப்பென்று சிவந்தது.

நேராய் சந்திரசேகரிடம் சென்றான். ''என்ன ஸார்? மகனின் திருமணமும் முடிந்து விட்டது. இனியென்ன லதிகாவை



என்னிடம் ஒப்படைத்து விடலாமே?'' அவர் அவனை முறைக்கவும் இவனோ சிரித்தான். முரளியை வாழ்த்தி சிறிய பரிசொன்றையும் அளித்தான். முதல் வரிசையில் அமர்ந்த படியே லதிகாவின் மேல் நிலைத்தான்.

லதிகாவின் வேல் விழிகளும் அவ்வப்போது திருட்டுத் தனமாய் அவன்புறம் சென்று பின் மீண்டது. நிச்சயதார்த்தம் நல்லபடியாய் நடந்தேறியது.

எல்லாம் முடிந்து தனக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் அணிந்திருந்த உடையை களைய செல்லும் நேரம் சிறுமி ஒருத்தி வந்து ''அக்கா இந்தப் பேப்பரை ஒரு அண்ணன் உன்னிடம் தரச் சொன்னார்..'' என்று ஒரு துண்டு காகிதத்தை நீட்டியது.

யார் என்ன என்று கேட்பதற்குள் அந்தச் சிறுமி ஓடிவிட, இவள் அந்தக் காகிதத்தைப் பார்த்தாள். ''திருமணம் நிற்காமல் நடை பெறவேண்டுமென்று விரும்பினால் கார் பார்க்கிங் வரவும்'' மனோரஞ்சன் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

லதிகாவிற்கு வியப்பாய் இருந்தது. இது மனோவின் கையெழுத்துதானா? அப்படியே இருந்தாலும் இந்த திருமணத்தை நிறுத்த அவன் ஏன் விரும்ப வேண்டும். மாமாவிடம் சொல்லுவோமா என்ற எண்ணத்தை உடனேயே ஒதுக்கினாள். ஏற்கனவே மாமாவிற்கு மனோவின் மேல் நல்ல அபிப்பிராயம் இல்லை. இதை வேறு காண்பித்தால் தேவையில்லாத பிரச்சனைதான் வரும் என்ற நினைப்பில் தனியாகவே சென்றாள்.

சொன்னாற் போலவே கார் பார்க்கிங்கில் வெள்ளை நிற ஜிப்சியின் மீது ஒய்யாரமாய் சாய்ந்து நின்றவனின் கம்பீரம்,

விழிகள் படபடக்க அருகில் வந்தாள். ''நீங்க..! நீங்கதான் லெட்டர்..''

''ஆமாம்.. நான்தான், என்னுடன் வா உன் கூட பேசணும்.''

''மாமா தேடுவாங்களே, சொல்லிவிட்டு வரட்டுமா, வார்த்தையை முடிக்கும் முன்னரே..?''

''யாரிடமும் அனுமதி கேட்க வேண்டியதில்லை. உன்னை அழைத்துப் போக எனக்கு உரிமையிருக்கிறது'' என்று அவள் புஜத்தை அழுந்தப் பற்றி வண்டியில் ஏற்ற...

அழுந்தப் பற்றிய இடம் வலித்தது. அப்பப்பா எத்தனை முரட்டுத்தனம். ஆனால் வலியிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்தது. வண்டி சீராய் சாலையில் ஓடிக் கொண்டிருக்க, இருள் கவ்விய சாலையில் அவன் வண்டியை இலாவகமாய் ஓட்டிய விதம் லதிகாவை கவர்ந்தது. அவன் முகம் இறுக்கமாய் இருந்தது கலக்கத்தை ஏற்படுத்தினாலும், தன் மனம் கவர்ந்த நாயகனுடன் அருகருகே அமர்ந்து பயணம் செய்வது இன்பமாய் இருந்தபோதும், இந்நேரம் தன்னைக் காணாமல் அங்கே மண்டபத்தில் எல்லோரும் கவலைப்படுவார்களே என்ற வேதனை ஒருபுறம் மனதை அரித்தது.

7



ஒரு வழியாக நீண்ட பயணம் முடிவுற்றது. அவுட் ஹவுஸ் போன்ற தோற்றமளித்த அந்த வீட்டின் முன் காரை நிறுத்தியவன், ''வா!'' என்றான் ஒற்றைச் சொல்லாய். அவள் தயங்கவே மீண்டும் கையைப் பற்ற முயல ''நானே வருகிறேன்'' என்றாள்.



அவன் முன்னால் நடக்க சுற்றிலும் பார்த்தபடியே அவனைத் தொடர்ந்தாள். இரவு நேரம் எனில் எதையும் கூர்ந்து கவனிக்க முடியவில்லை. ஆனாலும் அகால வேளையில் ஆள் நடமாட்டம் இல்லாத நிலையில் ஆடவன் ஒருவன் அதுவும்... இவனுடன் தனித்து வருவது நல்லதென்று படவில்லை அவளுக்கு!

இருப்பினும் மனோ வரம்பு மீறுபவன் அல்ல என்ற நினைப்பில் அமைதி காத்தாள்.

''உட்கார்'' என்று சோபாவைக் காட்டினான். மறு பேச்சின்றி அமர்ந்தாள். ''ஸாரி! வேளை கெட்ட வேளையில் வந்து இருக்கிறோம். அதனால் உன்னை உபசரிக்க முடியாது. மன்னித்துக் கொள்..'' அவள் அருகில் அமர்ந்தான் மனோரஞ்சன்.

''உன்னிடம் நான் சில முக்கியமான விஷயம் பற்றி பேச வேண்டும்.''

'என்ன விஷயம்?' என்று கேள்வியெழுப்பது போல் பார்த்தாள்.

''எல்லாம் நம் திருமண விஷயம் தான்..'' அமைதியாய் அழுத்தமாய் அவன் கூறியதைக் கேட்டதும் திகைப்பின் உச்சியில் இருந்தாள் லதிகா.

''என்ன பேயறைஞ்ச மாதிரி பாக்குறே? நானென்ன அத்தனை மோசமாகவா இருக்கிறேன். நம்முடைய திருமணத்தினால் நம் இருவருக்குமே ஆதாயம் உண்டு.

''உன் தந்தை இந்த வீட்டை விட்டு ஓடிப் போனாலும், அவருக்கு உண்டான சொத்தை அளிப்பதில் யாரும்



தவறவில்லை. அவருடைய எஸ்டேட்டையும் சேர்த்து, அப்பாதான் கவனித்து வந்தார். தாத்தாவின் உயில்படி சொத்துக்களில் மாமாவின் பாகம் அவருக்குப் பிறகு உன்னைச் சேரும். அதைப் பாதுகாக்க வேண்டிய உரிமை மட்டும்தான் எங்களுடையது. இப்போது எஸ்டேட் தொழிலாளிகளின் தேவைக்காக உன் பெயரில் உள்ள இடமும் தேவைப் படுகிறது. அதை விற்க நீ கையெழுத்து இட வேண்டும். அதற்குத்தான் இந்தத் திருமணம்...''

''இதற்கு திருமணம் ஏன்? இப்போது பத்திரத்தை தாருங்கள். கையெழுத்துப் போட்டுத் தருகிறேன்.''

''அது செல்லாது லதிகா. உன் பெயரில் உள்ள சொத்தை விற்க வேண்டுமெனில் உனக்கு மணமாகி இருக்க வேண்டும். அப்போதுதான் அது செல்லும். இப்போது புரிகிறதா. நான்யேன் திருமணம் செய்வேன் என்று சொன்னேன் என்று.''

''திருமணம் என்பது விளையாட்டு அல்ல. நீங்கள் சொன்னவுடன் சரியென்று தலையாட்டி உங்கள் முன் மண்டியிட்டு அமர, என் விருப்பம் என்பது ஒரு பொருட்டாகவே உங்களுக்குத் தோன்றவில்லையா?''

''அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. தவிரவும் நான் ஒன்றும் அன்னக் காவடி இல்லையே. உனக்கு சமமான அழகும், அறிவும் கொண்டவன்'' கர்வமான அவன் பேச்சில் அடிபட்டாள் லதிகா.

மனம், அன்பு இதையெல்லாம் அடியோடு மறந்தது போலல்லவா இவன் பேசுகிறான். இரு மனங்களின் ஒற்றுமையும், புரிதலும் தானே திருமண பந்தம். வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய அதை இப்படி மேம்போக்



காகவும், பணம் அடைய வேண்டியதொரு கருவியாகவும் நினைக்கிறானே!

இவன்பால் எத்தனை அன்பும், காதலும் கொண்டிருந்தாள் அவள். ஆனால் இவனோ பணமும் பகட்டும் மட்டுமே பிரதானம் என்ற கணக்கில் பேசுகிறானே. ஏன் மனோ என்னவாயிற்று உங்களுக்கு? மனதிற்குள் அரற்றினாள் லதிகா.

''சொல்லு லதிகா உனக்கு நான் அளிக்கும் அவகாசம் அதிகம் இல்லை'' அவன் பதில் லதிகாவிற்கு கோபமூட்டியது.

''நான் அதற்கு ஒப்புக் கொள்ள முடியாது என்று சொன்னால்..!''

மனோரஞ்சன் வாய்விட்டுச் சிரித்தான்.

''ஐ'ம் ஸாரி என் மாமா மகளே உன்னிடம் நான் அனுமதி கேட்கவில்லை. கல்யாணப் பெண் என்ற முறையில் உனக்குத் தகவல் சொன்னேன் அவ்வளவே. கூடிய விரைவில் நம் திருமணம் நடைபெற வேண்டும். அதற்குப் பிறகு ஆறு மாதங்கள் சந்தோஷமாய் நாம் இல்லறத்தை நடத்துவதை உணர்ந்த பிறகுதான் அந்த சொத்து நம் கைக்குக் கிடைக்கும். இதுவே தாமதம் என்று நான் நினைக்கிறேன்.''

''எனக்கு எந்த சொத்தும் தேவையில்லை.''

''எனக்கு வேண்டுமே, அதற்கு வழி உன்னை மணம் புரிவது.''

லதிகாவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. மாமா சொல்லும்போது கூட அவள் ஏற்கவில்லை. இன்று அவள் மனோவின் வாயாலேயே கேட்டு விட்டாளே. எனக்கு பணம்தான் முக்கியம் என்று! மனம் எரிமலையாய் குமுறியது.

அந்த சீற்றலிலேயே ''நான் மறுத்தால்...?''

''உன் மாமா கம்பியெண்ண வேண்டியிருக்கும். அதற்கு சம்மதமென்றால் எனக்கெந்த ஆட்சேபணையும் இல்லைம்மா..''

''என்ன உளறுகிறீர்கள்?''

''உளறலைம்மா... இதைப் படித்துப் பார் உனக்கே புரியும்..'' அவன் தன்னிடம் நீட்டிய பத்திரத்தைப் படித்தாள்.

மாமா தன் கிறுக்கலான கையெழுத்தில் தன் சொத்துக்களை அடமானம் வைத்துக் கொள்ள ஒப்புதல் தெரிவித்தும், அப்படி கட்ட முடியாத பட்சத்தில் அவற்றை ஏலம் எடுத்துக் கொள்ள உரிமையும். மற்ற சட்ட நடவடிக்கைகளுக்கும் ஒப்புக் கொள்கிறேன் என்று கையெழுத்து இட்டுக் கொள்கிறேன் என எழுதியிருக்க...

மனோரஞ்சன் வாய் திறந்தான். ''உன் மாமா ஒரு பெரிய புராஜெக்டில் லாக் ஆகியிருக்கிறார். அதனால் தன் சொத்தின் பெரும்பகுதியை அடமானமாய் வைத்து இருக்கிறார். அது இலாபமாய் முடிந்தால் அதனால் அவர் அடையப் போகும் பலன்கள் ஏராளம்.''

''ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை. ஆறு மாதங்களாக, வட்டியோ இன்னபிற சிக்கல்களையோ அவர் எழுதியுள்ள கண்டிஷனில் இருப்பது போல் தீர்த்துக் கொள்ள முன்வரவில்லை.''

''இதனால் நான் அவர் மேல் கேஸ் போட முடியும் தெரியுமா? என் பங்குகள் அதிகமாக உள்ள பைனான்ஸ் கம்பெனியில்தான் அவர் கடன் பெற்று இருக்கிறார். அப்படி



கேஸ் போட்டால் இப்போது சம்பந்தம் செய்திருக்கும் இடத்திலும் அவர் மதிப்பு குறையும். தவிரவும் நிச்சயம் ஆறு மாதமேனும் ஜெயில் தண்டனையும் அனுபவிக்க வேண்டி வரும். இப்போது சொல் நான் நடவடிக்கை எடுக்கட்டுமா?''

''வேண்டாம்..'' அவள் குரல் நடுக்கத்துடன் வெளிவந்தது.

''நீ எனக்கு மனைவியாகப் போகும் பட்சத்தில் இந்த இக்கட்டில் இருந்து அவரைக் காப்பாற்ற நான் தயார். இப்போது சொல், நீ சரியென்று தலையசைத்தால் நம் இருவருக்குமே லாபம். வீண் வம்பு பிடித்தாய் என்றால் உன் மாமாவின் குடும்பமும் பாதிக்கப்படும். நானும் வலுக்கட்டாய மாய் உன்னைச் சேர வேண்டி வரும்.''

''எப்படி...?'' யோசிக்கவே நடுங்கும் அளவிற்கு சொற் களை வீசினான் மனோரஞ்சன்.

''இங்கிருந்து நீ செல்லும்போது எனக்குரியவளாய் ஆகியிருப்பாய், முழுமையாய்.''

ஓங்கி நடு மண்டையில் அடித்தாற் போல் இருந்தது. லதிகாவிற்கு. என்ன பேசிவிட்டான் அவன். மயிலிறகினால் வருடுவது போல் மென்மையாய் நடந்து கொண்ட மனோ எங்கே? கடுமையாய் அன்பின் சுவடேயில்லாமல் லாப நஷ்டக் கணக்குப் பார்க்கும் இவன் எங்கே?

அந்த அன்பான உருவத்தைத்தானே இவள் நேசித்தாள். இவன் இத்தனை பேசி இராமல் வெறுமனே, லது.. நான் உன்னை விரும்புகிறேன். என்னை மணந்து கொள் என்று கட்டளை இட்டு இருந்தால் கூட காலம் முழுவதும் அவன்



காலடியிலேயே விழுந்து கிடப்பாளே, ஆனால் பணம் என்ற சாத்தானை அடைய அல்லவா அவளைத் துணைக்குக் கூப்பிடுகிறான்.

முடியாதென்றால் மாமாவின் குடும்பமே அல்லவா கஷ்டப்பட வேண்டும். இத்தனை கொடூரமாய் யோசனையாய் யோசிப்பவன் நிச்சயமாய் செய்வான். மாமாவை கேஸ் போட்டு ஜெயிலில் தள்ளுவான்.

அவளுக்கு ஆதரவாய், அனுசரணையாய் நடந்து கொண்ட மாமாவின் குடும்பத்திற்கு தீங்கிழைப்பது போலல்லவா ஆகிவிடும். உள்ளங்கையில் வைத்து மலர் போல அவளைத் தாங்கும் அந்த உறவுகளுக்கு அவள் பொருட்டு தீங்கு வர விடலாமா அதுயெத்தனை பிசகு.

அதற்காக இவனுக்குப் பணிந்தால் வெறும் பணத்தை மட்டுமே குறிக்கோளாய் கொண்ட அடிக்கடி நிறம் மாறும் இவனிடம் தன்னை எப்படி அர்ப்பணிக்க முடியும். குழம்பித் தவித்தாள் அவள். கணவன் என்ற உறவில் அவன் நடந்து கொண்டால், இத்தனை தூரம் பேசியபிறகு, மனோவின் மீது உண்மையான அன்பு பிறக்குமா?

தாம்பத்தியமே அன்பென்னும் கல் கொண்டு எழுப்பப்பட வேண்டிய மாளிகை அல்லவா, நிச்சயம் மனோவுடன் இவளுக்கு இனிமையானதொரு வாழ்க்கை அமையப் போவது இல்லை. இறுதியில் அவன் விருப்பத்திற்கு சம்மதம் தெரிவிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றுணர்ந்தவள், ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாய் அவனை நேருக்கு நேராய்ப் பார்த்தான்.



''நான் உங்களைத் திருமணம் செய்து கொள்ளும் பட்சத்தில் மாமாவின் குடும்பத்தை நீங்கள் தொந்தரவு செய்ய மாட்டீர்களே?''

''நிச்சயமாய்! என் தாய் மீது ஆணை.''

''சரி என்னைக் கொண்டு போய் மண்டபத்தில் விட்டு விடுங்கள்.''

''எதற்காக?''

''நான்தான் ஒப்புதல் தெரிவித்து விட்டேனே?''

''அதை நான் எப்படி நம்புவது? என்றான் ஏளனமாய்!''

''இதென்ன கேள்வி? பத்திரமா எழுதித் தர முடியும்.''

''பத்திரம் வேண்டாம்... முதன் முதலில் என்னைப் பார்த்தபோது, கண்களால் ஒப்புதல் தெரிவித்தாயே அதைப் போல்..!''

''மன்னித்து விடுங்கள் மிஸ்டர் மனோரஞ்சன். அது அன்பை மட்டுமே யாசித்து பேசிய நெஞ்சம் அதற்கும் இப்போது இங்கே பேசும் உங்களுக்கும் ஆயிரம் வித்தியாசங்கள் உண்டு. பிடிக்கவில்லையென்றாலும் கடனேயென்று சில விஷயங்களை ஏற்றுக் கொள்வதில்லையா? அதைப் போல்தான் உங்களுடன் நடக்கப் போகும் திருமணமும். தயவு செய்து மனதொருமித்த அன்பை என்னிடம் எதிர்பார்க்காதீர்கள்.''

அவன் முகம் மீண்டும் கடினமுற்றது.

''மாமாவுடைய பிரச்சனை எப்போது தீரும்?''

''நம் திருமணம் முடிந்த மறுநாளே. ஆனால் என் காரியம் முடியும் வரை..''

"நானும் உடன்படுகிறேன். எனக்கு நிறம் மாறத் தெரியாது. பேச்சும், செயலும் ஒரே மாதிரிதான் இருக்கும்."

"சொன்ன சொல்லைக் காப்பாற்றுவாய் என்று நான் நம்புகிறேன். நாளை மண்டபத்தில் உன் மாமாவின் முன் நாமும் மணமக்களாக நிற்க வேண்டும்."

"இது அநியாயம்?"

"உன் தந்தை செய்தாரே அது? என் அத்தை எத்தனை கனவுகளோடு இருந்திருப்பார்கள். அதையெல்லாம் விடுத்து உன் அன்னையை கல்யாணம் செய்து கொண்டாரே. அப்போது அவரின் மனம் என்ன பாடுபட்டு இருக்கும்."

"முறைக்காதே! இப்போது முடிவெடுக்கும் முழு உரிமையும் எனக்கு மட்டும்தான். அதை உணர்ந்து கொண்டு நடந்து செல்."

அவள் தொய்வாய் அமர்ந்து சோபாவில் சரிந்து விட்டாள். மனோரஞ்சன் அந்த அறையின் மூலையில் இருந்த கப்போர்டைத் திறந்து அட்டை பெட்டிகளைக் கொண்டு வந்து பரப்பினான். "அது முகூர்த்தப் புடவை லது.."

லதிகா விலுக்கென்று நிமிர்ந்தாள். இத்தனை பேசிய போது மறந்தும் கூட அவள் பெயரை சுருக்கி அழைக்கவில்லை. இப்போது அவன் குரலில் கூட சற்று குழைவு ஏற்பட்டது போல தோன்றியது, லதிகாவிற்கு. அவளின் முகத்திற்கு நேரே நீட்டிய புடவை. இளம் பச்சை வர்ணத்தில் ரோஜா வண்ணம் பூக்களை கொத்துக் கொத்தாய் அடுக்கி வைத்தது போல் கையளவு சரிகையுடன் கற்கள் வேலைப்பாடு கொண்ட பட்டுப்



புடவை விலை கண்டிப்பாக பத்தாயிரத்தைத் தொடும் என்று தோன்றியது அவளிற்கு!

பிறகு நகைகளை காட்டினான். அடுக்கடுக்காய் வளையல்கள், நெக்லஸ் செட் கற்கள் பதித்த நகைகள் என எல்லாவற்றையும் அவள் முன் கொட்டினான்.

எல்லாம் திட்டம் போட்டே செய்திருக்கிறான். இதையே அவன் உள்ளார்ந்த அன்போடும், காதலோடும் அளித்திருந்தால், அது யெத்தினை இன்பமாய் இருந்திருக்கும். எத்தனை அடக்கியும் முகம் தன் கவலையைக் காட்டிக் கொடுத்து விட்டது.

"இதெல்லாம் நம் திருமணத்திற்காக நான் வாங்கியவை. பிடித்திருக்கிறதா என்று பார் லது...!"

வெறித்து அவனைப் பார்த்தாள். எதில் விருப்பம் தேவையோ அதை கேட்கவில்லை. இதைப் போய் கேட்கிறானே என்ற நினைப்பில் மௌனமாய் வெறித்தவளிடம்,

"சரி நேரமாகி விட்டது பார் நீ தூங்கு. காலையில் தாலி கட்டும் போது தூங்கி வழியப் போகிறாய்" என்று புன்னகையுடன் சொல்லிவிட்டு, "குட்நைட் டியர்" என்றான். இவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள, வெளியே கதவை அவன் தாளிடும் சப்தம் கேட்டது.

லதிகாவிற்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. இவன் முன் அழக் கூடாது எத்தனையோ எதிர்பார்ப்புகளை சுமந்திருந்த மனம் சிந்திக்க திராணியற்றுப் போய் இருந்தது. முதல் அடி மனோரஞ்சனின் மாற்றம். அவனிடம் இருந்து இப்படியொரு மாறுபட்ட முகத்தை அவள் எதிர்பார்க்கவில்லை. அதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.



ஆயிரமாயிரம் ஆசைக் கனவுகளை மனதில் விதைத்தவன் அது பயிராகும்போது வெந்நீர் ஊற்றி விட்டானே என்று!

மற்றொரு புறம் நாளை திருமணத்தில் மனோரஞ்சனும் இவளுமாய் சேர்ந்து கணவன் மனைவியாய் நின்றால் மாமாவின் மனம் எத்தனை பாடுபடும். தாயை இழந்த வேதனையை மாற்றிய கோதைநாயகிதான் இவளைப் பற்றி என்ன நினைப்பாள். அம்மாவைப் போலவே இவளும் சென்று விட்டாள் என்று எண்ண மாட்டார்களா?

விடியும் பகல் விடியாமலே இருந்து விட்டால் இந்த தர்ம சங்கடமான நிலையில் இருந்து அவள் தப்பிக்க முடியும் அல்லவா? ஆனால் இது நடக்கும் காரியமா. புலிக் குகைக்குள் வந்து அகப்பட்டாகி விட்டது. இனி இவன் கடித்து குதறாமல் விடப் போவது இல்லை. பேசாமல் தற்கொலை செய்து கொள்ளலாமா? அந்த எண்ணம் வந்த மறு விநாடியே தலையைக் குலுக்கினாள்.

ச்சீ! நான் என்ன கோழையா? அதுவுமில்லாமல் நிமிடத்திற்கு நிமிடம் நிறம் மாறும் பச்சோந்தி குணம் கொண்ட மனோவைப் போன்ற ஆட்களே வாழும் போது நான் வாழ்வதற்கென்ன? யோசனையிலேயே திடீரென்று கதவு திறக்கும் சப்தம் கேட்க, அதற்குள் விடிந்து விட்டதா என்று வியப்பாய் நோக்கினாள்.

மனோரஞ்சன்தான். "ஸாரிம்மா... ஏற்கனவே திருமண வேலைகளில் அலைந்திருப்பாய். இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த அதிர்வும் சேர்ந்து ரொம்பவும் சோர்ந்ததுபோல் தெரிகிறாய். இந்தப் பழச்சாறை குடி கொஞ்சம் தெம்பு வந்தாற் போல் இருக்கும்."



அவன் முன்பிருந்த டீபாயின் மேல் வைத்தான்.


மனோவின் முன்பு அதை கீழே கொட்டி விடலாமா என்று யோசித்தாள்.

"கற்பனை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த இரவு நேரத்தில் இதை விட்டால் வேறு உணவு இல்லை எனவே பாழாக்காமல் குடி" என்றான்.

நாம் நினைத்தது இவனுக்கு எப்படித் தெரியும் எம காதகன்தான் என்று எண்ணியவளின் வயிறும் பசிப்பதை உணர்த்தியது. மண்டபத்தில் சுமார் ஏழு மணியளவில் ஒரு காபி மட்டும், பருகியது நினைவுக்கு வர எடுத்து பருகினாள். பானத்தின் சுவையில் ஒரு துளி கூட வீணாக்காமல், குடித்து டீபாயில் டம்ளரை வைக்கவும், எந்த அருகையும் இல்லாமல் அந்த டம்ளரை மனோ எடுத்துப் போவதையும் பார்த்தாள். இரண்டாவது முறை செல்லும்போது அவன் கதவை மறக்காமல் தாழிட்டே சென்றான்.

"காலையில் விரைவில் தயாராகி விடு லது.. நேரம் தாழ்த்தாதே. நீ எத்தனை விரைவில் என்னவள் ஆகிறாயோ அத்தனை விரைவாய் உன் மாமா காப்பாற்றப்படுவார்."

8



பதைபதைக்கும் அந்த இரவு இனிதாய் விடிந்தது. மனதைப் போட்டு அழுத்திய சுமைகளை தளர்த்த குளிர்ந்த நீரில் குளித்தால் தேவலாம் போலிருக்க, குளித்தாள். மனதின் அலுப்பு தீரும் வரை.

டவலைச் சுற்றியபடி வெளியே வந்தவளை, கல்யாணப் புடவைதான் எதிர்

கொண்டது எடுத்து உடுத்தவும் மனமின்றி, மறுக்கவும் மனமின்றி தவித்தாள். எப்படி வந்திருந்தாலும் அவளுடைய மனோ அவளிற்கு அளித்த முதற் பரிசு அல்லவா?

அவன் மனதில் ஆயிரம் இருப்பினும் அவள் நேசித்தது நிஜம்தானே.

மனோவை உயிராய் நேசித்தது உண்மையே. அந்தக் கண்களில் கட்டுண்டு அவனிடமே தன்னை தஞ்சமென ஒப்படைக்கக் காத்திருந்தது நிஜம். ஆனால் இதற்கெல்லாம் நேர்மாறாய் மனோரஞ்சன் நடந்து கொண்டதும், இன்னமும் அவளால் நம்பத்தான் முடியவில்லை.

பெருமூச்சோடு அதை எடுத்து உடுத்தினாள். அம்மாவின் நினைவு வந்தது. பார்த்தியாம்மா உன் பொண்ணோட நிலைமையை. சில காலம் வாழ்ந்தாலும், மனதொத்த அன்பான வாழ்வை நீ வாழ்ந்தாய். ஆனால் என் நிலைமை, கணவன் உண்மையான நேசம் கொண்டவன்தானா என்று அறியாமலே மாலை சூடப் போகும் நிலை.

வாழ்க்கைப் புத்தகம் வெகு விசித்திரமான பக்கங்களைக் கொண்டது. ஒவ்வொரு அத்தியாயம் ஒன்றோடு ஒன்று மாறுபட்டேதான் இருக்கிறது.

புடவைக்கு மாறி நகைகளை அணிந்து கொண்டாள். கண்ணாடியில் தன் உருவத்தைக் கண்டாள். அழகு கூடித் தெரிந்தது. ஆள் பாதி ஆடை பாதியென்பதை மறுக்க இயவில்லை. இன்று என் திருமண நாள். ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் நிகழும் திருநாள் அல்லவா. இவளும் எத்தனை ஏக்கங்களை சுமந்திருப்பாள். ஆனால் எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி விட்டானே! ஷாலினி கூட



இந்த திருமண உடைகளை அணியும்போது எத்தனை உற்சாகமாய் இருந்தாள்.

ஆனால் எனக்கு மட்டும் ஏனிந்த நிலை. மனதில் கனவுகளோடும், தாலி கட்டப் போகும் வருங்கால கணவரின் நினைவுகளை நெஞ்சில் மையமாய் சுமந்து, ஆனால் எதுவுமேயன்றி இத்தனை வெறுப்போடு கட்ட வைத்து விட்டானே என்ற குமுறலோடும், வெறுப்போடும் அறையை விட்டு வெளியே வந்தாள்.

அங்கு அளவிற்கு முன்பாகவே நின்றவனைக் கண்டதும் கண்களை திருப்பவே இயலவில்லை அவளால். அவனும் தலை முதல் கால் வரை பார்வையால் அளந்தான்.

''ரொம்ப அழகாய் இருக்கிறாய் லது நீ... வானவில்லைப் போல ஜொலிக்கிறாய். ஆனால் ஒரே ஒரு குறைதான்...'' அவள் மோவாயை மெல்ல பிடித்து நிமிர்த்தினான்.

''ஒரு சிறு புன்னகை மட்டுமிருந்தால் தேவதைதான்'' வெகு அருகில் அவளை ஒட்டி நின்றான் மனோரஞ்சன். இத்தனை அருகில் அவனைக் காணவும் இவள் கட்டுப்பாட்டை இழந்தாள்.

எத்தனை அழகான கம்பீரமானவன் என்று காதல் மனம் புலம்ப ஆரம்பித்தது. இனியும் இவனருகில் இருந்தால் மனோவின் முன் தான் அவமானப்பட நேரும் என்பதால், அவன் கையைத் தட்டி விட்டு விலகி நடந்தாள். விழிகள் கண்ணீரைக் கொட்டத் தயாராயின.

மனோரஞ்சன் மறுபடியும் அதே அழுத்தமான குரலில் கேட்டான். ''கிளம்புவோமா அங்கே எல்லாம் தயார் நிலையில் இருக்கிறது.''



''எங்கே?'' என்று கேட்க நா எழவில்லை. அமைதியாய் அவனைப் பின்தொடர்ந்தாள்.

**ம**ண்டபத்தில்!

கையைப் பிசைந்தபடி கவலையோடு முரளியின் முன் நின்று கொண்டிருந்தார் சந்திரசேகர்.

''என்னப்பா சொல்றீங்க? லதிகாவைக் காணோமா?''

''ஆமா முரளி நேற்று இரவு விருந்தெல்லாம் முடிந்த பிறகு உறங்கப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். இப்போ காலையில் இருந்து ஆளே காணோம். நானும் எல்லா இடமும் பார்த்துவிட்டேன். நேரம் ஆக ஆக எனக்கென்னவோ பயமா இருக்கிறதடா..''

''அவ எங்கேப்பா போயிருக்கப் போறா? இங்கே யாரைத் தெரியும். நான் மறுபடியும் மண்டபத்தில் ஒரு பார்வை பார்க்கிறேன்.''

''அதுதான்டா எனக்கும் பயமாயிருக்கு முரளி. சரி முகூர்த்தத்திற்கு நேரமாகுது நீ போய் மணமேடையில் உட்கார். நான் பார்த்துக் கொள்கிறேன்.''

மணமேடையில் மாப்பிள்ளைக்கு உண்டான அத்தனை வேலைகளையும் செய்தபடியே வாசலையும், தந்தையும் பார்த்துக் கொண்டே இருந்தான். சரியாய், முரளி, ஷாலினியின் கழுத்தில் தாலியைக் கட்டவும் வாசலில் வெள்ளை நிற ஜிப்சி வந்து நிற்கவும் சந்திரசேகரிடம் மாற்றம். இவனெங்கே இங்கே வேலை கெட்ட வேளையில்? வந்து லதிகாவை எங்கே என்று கேட்டால் என்ன பதில் சொல்வது என்று யோசித்தார். மனோரஞ்சன் கீழே இறங்கினான். பட்டு வேட்டி சட்டையில்



கழுத்தில் மாலையுடன் அடுத்து அவர் கண்ட காட்சியில் கண்கள் தெறித்து கீழே விழுந்து விடும் போல் இருந்தது. மனோரஞ்சனும், லதிகாவும் மணமக்களாய் மாலையும் கழுத்துமாய் வந்து நின்றது.

''என்ன லதிம்மா இது?'' மௌனத்தை உடைத்து அவர் கேட்கவும்,

இவளிற்கு முன் மனோரஞ்சன் தான் பேசினான்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் மிஸ்டர் சந்திரசேகர். பூஞ்சோலையிலேயே எனக்கும் லதிகாவிற்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. அந்த நட்பு நாளடைவில் காதலாய் மாறி விட்டது. வேறு வழியின்றி இந்த அவசரத் திருமணம் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது. அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். லதிகாவை ஒன்றும் சொல்ல வேண்டாம்..'' மனோரஞ்சன் பேசப் பேச சந்திரசேகர் மட்டுமல்ல லதிகாவும் மற்றவருமே வாய் பிளந்து போய்தான் கேட்டார்கள். என்ன அழகாக பொய் பேசுகிறான் இவன்.

அப்படியிருந்தும் சந்திரசேகர் அடக்க மாட்டாமல் மருமகளிடம் கேட்டார். ''நான் இவரைத்தான் விரும்புகிறேன்னு நீ சொல்லியிருந்தா, நானும், வேறு யாரும் மறுக்கப் போகிறோமாயென்ன? அப்படி நடந்திருந்தால், இந்தக் கல்யாணத்தை விமரிசையாய் நடத்தியிருக்கலாமே? இப்படி யாருமில்லாத அநாதையா நீயே செய்ய என்னம்மா நெருக்கடி. உனக்கு இந்த மாமா மேலே நம்பிக்கையில்லையா?''

''மாமா.. நான்..'' அவளால் எதுவும் பேச முடியவில்லை. மாறாக மாமாவைக் கட்டிக் கொண்டு கதற வேண்டும் போல்

இருந்தது. நீங்கள் சொன்னது உண்மைதான். நான்தான் ஏமாந்து விட்டேன் என்று புலம்ப வேண்டும் போல் இருந்தது.

''உங்கம்மாதான் என்னை நம்பாம இருந்திட்டா. அதையே நீயும் செய்திட்டியேம்மா..'' லதிகா முழுவதும் உடைந்து போய் கேவிக் கேவி அழுதாள்.

கோதை நாயகிதான் நடுவில் வந்தாள்.

''சரி விடுங்க. கல்யாணக் கோலத்தில் இருக்கிற பொண்ணு கண் கலங்கக் கூடாது. சரியோ தப்போ அவ வாழ்க்கையை அவளே தீர்மானிச்சிட்டா. பெரியவங்களா இருந்து அவங்களை ஆசீர்வாதம் செய்யறதுதான் நல்லது.''

''இப்ப என்ன சேர வேண்டிய இடத்திலேதான் அவ சேர்ந்து இருக்கா. தம்பி இரண்டு பேரும் உட்காருங்க, முறைப்படி..''

''இல்லேம்மா, நீங்களாவது எங்களைப் புரிஞ்சுக்கிட்டீங் களே நன்றிம்மா, எங்க வீட்டு மனிதர்களிடமும் இந்த திருமணத்தைப் பற்றியும் சொல்லணும்.''

''நாங்க யாராவது ஒருத்தரும் கூட வருகிறோம்.''

''இல்லைம்மா, உங்களுக்கும், வேலையிருக்கும். அதைக் கவனியுங்கள். நான் வீட்டில் பேசிவிட்டு உங்களுக்குத் தகவல் தெரிவிக்கிறேன். இப்போது கூட லதிகாவைக் காணாமல் தேடுவீங்களேயென்றுதான் அழைத்து வந்தேன். எங்களை ஆசீர்வாதம் செய்யுங்கள்..'' மனைவியும் இவனுமாய் காலில் விழுந்து பணிந்தபோது பெரியவர்களுக்கு மறுக்க மனமில்லை. அட்சதை தூவி வாழ்த்தினார்கள். மீண்டும் ஒருமுறை நன்றியுரைத்து முரளிக்கு வாழ்த்து சொல்லிவிட்டு லதிகாவின் தோளைப் பற்றி அழைத்துச் சென்றான் மனோரஞ்சன்.



ஏதும் பேசாமல் கண்களில் வழியும் நீரோடு கணவனுடன் நடந்தாள் லதிகா.

வெள்ளை நிற ஜிப்சி பறந்தது. வழி நெடுகிலும் அழுத படியே வந்தாள். சில நிமிடங்கள் அவள் அழட்டும் என்று அமைதி காத்தவன், பின் மெல்ல தொண்டையைக் கனைத் தான்.

''லது ப்ளீஸ்மா.. கண்ட்ரோல் யுவர் செல்ப். இது காதல் திருமணம் என்று எல்லோரையும் நம்ப வைத்திருக்கிறேன். நீ இப்படி அழுது வடிந்த முகத்தோடு வந்தால் என்ன நினைப் பார்கள். கூடுமானவரையில் முகத்தை சற்று சந்தோஷமாய் வைத்து இருக்கலாமே!

''எல்லாம் எதிர்பாராமல் நடந்ததால் கோபம் உன் மனதில் இருக்கும் என்பதை நானறிவேன். கோபத்தை ஒதுக்கிவிட்டு, யோசி லது. இந்த திருமணம் நடக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

''இனி உன் மனம் சங்கடப்படும் வகையில் ஏதும் நடக்காது யென்று நான் உறுதி கூறுகிறேன். தயவு செய்து கண்ணைத் துடைத்து விட்டு நான் இனி சொல்பவற்றைக் கேளேன்.''

அழுகையினால் எந்த நன்மையும் அவளுக்கு விளையப் போவதில்லை என்று ஏற்கனவே ஊகித்ததுதான். என்றாலும், தாயின் பிரிவு, மாமாவிடம் கெட்ட பெயர் எல்லாவற்றிற்கும் மேலாக அவளின் மனோ மனம் மாறியது அடுத்தடுத்த தொடர் அடிகளால் தவித்துதான் போனாள். அதன் காரணமாய் சுய பச்சாதாபம் பெருகி கண்ணீரைத் தருவித்து இருந்தது.



ஆனால் மனோவின் முன்பு அழுதுயிருக்கக் கூடாது. இவன் கண்களில் தான் பலவீனமானவளாக தெரியக் கூடாது என்ற நினைப்பில் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''வெரிகுட், லது நீ சாதாரண பெண் இல்லை. அதை முதலில் உணர்ந்து கொள். வீட்டில் என் பெற்றோர்கள் அதாவது உன் தந்தையின் தங்கை கல்யாணி, அப்பா தேவநேசன், அடுத்தது ஷைலு அத்தை மூன்றே பேர் பழகவும் பேசவும் இனிமை யானவர்கள்.''

''அதான் இத்தனை நாளாகியும் அண்ணன் மகளைக் காண வந்தார்களா?''

''லது... அம்மாவிற்கும் ஆசைதான். ஆனால் தாத்தா எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. ஏற்கனவே மாமா வினால் ஏற்பட்ட கசப்பு தன்னால் நிகழக் கூடாது என்பதில் வெகு கவனமாய் இருந்தார்கள். உன் தாயும் உன்னைப் பார்க்க எங்களை அனுமதிக்கவில்லை.''

''இதென்ன புதுக்கதை.''

''கதையில்லை. மாமாவின் இறப்பிற்கு பிறகு உன்னையும் அத்தையையும் எங்களோடு வந்து இருக்கச் சொல்லி கேட்டோம். ஆனால் அவங்க அதை மறுத்திட்டாங்க. உண்மையிலேயே அப்போதான் மஞ்சரி அத்தையின் மேல் எங்க எல்லோருக்கும் மதிப்பு வந்தது.''

''அன்பின் காரணமாக நாங்க அடிக்கடி வந்து பார்த்ததை அத்தை தவறா புரிஞ்சிக்கிட்டாங்க.''

''தவறாகவா?''



''ம்... உன்னை அவர்களிடம் இருந்து பிரித்து விடுவோம் என்று! நம் உறவு மறைமுகமாய் இருந்தது. அதுவும் ஒரு காரணம்.''

''வீடு நெருங்கிக் கொண்டிருந்தது. சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும் லது...! அம்மா அப்பாவைக் கூட சமாளித்து விடலாம். ஆனால் ஷைலு அத்தை ரொம்பவும் ஷார்ப். முகத்தை வைத்தே கண்டுபிடித்து விடுவார்கள். அவர்கள் முன் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்'' என்று கூறியபடியே பெரிய இரும்பு கேட்டைத் திறந்து ஜிப்சியை நுழைத்தான்.

## 9



மாமாவின் வீட்டைவிடவும் இரு மடங்கு பெரியதாய் இருந்தது பங்களா. எழில் பூத்துக் குலுங்கியது. சுற்றிலும் இயற்கை அன்னை தன் பிள்ளைகளை வளர விட்டிருந்தாள். இதே பிறிதொரு சூழலாய் இருந்திருந்தால், அதையெல் லாம் ஒன்று விடாமல் ரசித்திருப்பாள்.

ஆனால் இப்போதைய மனநிலையில், எதையும் சரியாய்ப் பார்க்கக் கூட மனம் வரவில்லை.

தவிப்போடும், திகைப்போடும் இறங்கினாள் லதிகா. அவள் கையை வெகு சுவாதீனமாகப் பற்றியவன் எதிர்ப்பட்ட பணியாள் ஒருவனிடம் சைகை செய்ததுமே புரிந்தது போல் உள்ளே ஓடினான்.

''நாம் திருமணக் கோலத்தில் வந்திருப்பது பற்றி?''

"தொலைபேசியில் தகவல் கூறி விட்டேன்."

"ஒப்புக் கொண்டார்களா?" வியப்பாய் கேட்டாள்.

"மகன் எந்தச் சூழ்நிலையிலும் தவறான முடிவுகளை எடுக்க மாட்டான் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு" என்றான் கர்வமாய்!

சில நிமிட அவகாசத்திற்குப் பிறகு, ஒரு அழகான பெண்மணி இருவருக்கும் ஆரத்தி எடுத்து நெற்றியில் பொட்டிட்டு புன்னகையுடன் அனுப்பி வைக்கவும்,

"வலது கால் எடுத்து வைத்து வா" என்றான் கணவன்.

"எல்லாம் முறைப்படிதான் செய்தீர்களா?" என்று கேட்டாள் வெடுக்கென்று. மனோரஞ்சன் மேற்கொண்டு பேச முயலும் நேரம் அப்பாவும் அம்மாவும் வருவது தெரிந்தது. பார்வையாலேயே மனைவியை அடக்கினான்.

எதிர்ப்பட்ட பெரியவர்கள் இருவரும் மலர்ந்த புன்னகையோடு அவனை அணைத்துக் கொண்டனர். அந்தப் பெண்மணி லதிகாவை வாஞ்சையோடு தடவிக் கொடுத்தாள். "இன்றுதான் உன் காலடி பட இந்த வீடு கொடுத்து வைத்திருக்கிறது. நான் கல்யாணி உன் அத்தை இவர் உன் மாமா, எத்தனை நெருங்கிய உறவு நம்முடையது."

"இப்படி நானே அறிமுகப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது. அப்படியே மஞ்சரி அண்ணியைக் கொண்டு இருக்கிறாள்."

"இரு கல்யாணி! அவங்க இரண்டு பேரும் முதல்ல பால் பழம் சாப்பிடட்டும்."



"பூஜையறையில் விளக்கேற்றும் வரையில் உன் பாசத்தை அடக்கி வை மாமா" கிண்டல் அடித்தார்.

"முதல்ல நீங்க இரண்டு பேரும் அவங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க" ஷைலஜா கூறிட,

"மணமக்கள் இருவரும் காலில் விழுந்து வணங்கினார்கள்."

"ஷைலஜா கால்லேயும் விழு" அத்தை கல்யாணி கூறவும்,

ஷைலஜா மறுத்தாள். "வேண்டாம் ரஞ்சன்! என்னோட வாழ்த்துக்கள் உங்களுக்கு எப்பவுமே உண்டு."

"லதிகா நான் உன் சொந்த அத்தை ஷைலு சித்தி முறை, இது உன் வீடு மாதிரி. ரஞ்சன் உன்னை விரும்பறேன். லதுவைத் தான் கல்யாணம் செய்துப்பேன்னு சொன்னதும் எனக்கு சந்தோஷம் பிடிபடலை. என்னை விட்டு விலகிப் போன உறவு இப்போ உன் ரூபத்திலே வந்திருக்கு."

"இனியெல்லாமே உன் பொறுப்புதான்" அத்தை சாவிக் கொத்தை அவள் கையில் திணித்தாள், "விளக்கேற்றும்மா."

மணிகள் அசைந்தாடிட பூஜையறைக் கதவுகள் திறக்கவும், சாமி படங்களுக்கு நடுவில் தாய்தந்தையின் படமும் வைக்கப்பட்டு இருந்தது. லதிகாவின் மனம் நெகிழ்ந்து போனது ஒரு கணம்.

விளக்கேற்றி விட்டு கையெடுத்து மனதார கும்பிட்டாள். "இறைவா எத்தனையோ இடர்களைத் தந்தாலும் நல்ல உறவுகளோடு என்னைச் சேர்த்து விட்டாய்! என் மனோவையும் பழையபடி அன்போடு மாற்றி என்னிடம் தந்துவிடு!"



"வா லதிகா முதல்ல டிரஸ் மாத்திட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ. அதுக்குள்ளே சாப்பாடு தயாராயிடும். அப்புறம் வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம்."

மெலிதான சில்க் ஸாரி ஒன்றை எடுத்துத் தர ஏதும் பேசாமல் வாங்கிக் கட்டிக் கொண்டாள். "ரஞ்சன் முதலில் சொன்ன போது கூட நான் நம்பவில்லை. வாசுவிற்கு இத்தனை அழகான பெண்ணாயென்று. நீ அப்படியே மஞ்சரியையே சார்ந்து இருக்கிறாய்."

தாய் தந்தையின் பெயரை வெகு சாவதானமாய் உரைத்த ஷைலஜாவை வியப்பாய் நோக்கினாள் லதிகா.

"என்னம்மா? அப்படிப் பாக்குறே?"

"அம்மாவை உங்களுக்கு?"

"நல்லாத் தெரியும் வாசு. எனக்கு முறைப் பையன். மஞ்சரி எனக்குத் தோழி."

"அப்படியானால் அப்பாவிற்கென்று நிச்சயிக்கப்பட்ட பெண் நீங்கள்தானா?"

"ஆமாம்!"

"லதிகா, அவளின் கையைப் பற்றிக் கொண்டாள். மன்னித்து விடுங்கள் அம்மா, உங்கள் வாழ்வு பறிபோக..!"

ஷைலஜா இளையவளின் வாயைத் பொத்தினாள். "இதென்ன பேச்சு எனக்கு எந்த கோபமோ, வருத்தமோ இல்லை பெண்ணே! வாசுவும் நானும் சிறு வயதில் இருந்தே ஒன்றாக வளர்ந்தவர்கள்தான். நான்தான் அவனை விரும்பினேனே தவிர அவனின் தேடல் முழுமையடைந்தது மஞ்சரியிடம் தான் போலும். மனசு விசித்திரமானது லதிகா.



அருகேயே இருந்த என் மேல் வராத ஈர்ப்பு சில தினங்களில் மஞ்சரியிடம் ஏற்பட்டது அதிசயம்தானே! இதை விதியென்று தானே சொல்ல வேண்டும்."

"ஆனால், இதுவரையில் நீங்கள் திருமணமே செய்து கொள்ளவில்லை என்று அவர் சொன்னாரே!"

"அதற்குள் எல்லாவற்றையும் உளறி விட்டானா. பயல் ரொம்பத்தான் மயங்கிப் போய் இருக்கிறான் உன்னிடம். லதிம்மா எனக்கு எந்த வருத்தமும், இல்லை. சிறு வயதிலேயே வாசுவின் மேல் நான் காதலை வளர்த்துக் கொண்டதாலோ என்னவோ, அதை மறக்க என்னால் இயலவில்லை. நாங்கள் பழகிய தருணங்கள் இன்று வரை என் மனதில் நீங்காமல் இருக்கிறது. அதனால் இன்னொரு வாழ்வை ஏற்க மனமில்லை."

"பழைய் கதையெல்லாம் இப்போ எதற்கும்மா. நீ ரெஸ்ட் எடு. நான் சாப்பாடு தயாரானதும் கூப்பிடறேன்."

"நானும் உங்களுக்கு உதவி செய்யுறேனே?"

"இங்கே அதற்கெல்லாம் வேலையாட்கள் இருக்கிறார்கள்." அவள் கன்னத்தில் தட்டி விட்டுச் சென்றாள்.

லதிகாவிற்கு ஷைலஜாவை மிகவும் பிடித்துப் போனது. எத்தனை இனிமையான குணம் கொண்டவள். அப்படியே தாயின் நினைவு அவளோடு பொருந்துவதை உணர்ந்தாள். அம்மா இந்த நல்ல உறவுகளோடு நீயேன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவில்லை.

ஷைலஜா கூறியதுபோல, மனித மனம் விசித்திரமானது தான். மனோ மாறவில்லையா? இவள்தான் முதற் பார்வை

யிலேயே மனோவின் பால் விழுந்து விடவில்லையா? உடை மாற்றி விட்டு கீழேயிறங்கி வந்தாள்.

உணவு பரிமாறினார்கள். "நல்லா சாப்பிடு லதிம்மா. இப்படி பூஞ்சையா உடம்பு இருந்தா நாளைக்கு ஒரு பிள்ளையைத் தாங்கும் அளவு சத்து வேண்டாமா?"கல்யாணி உரிமையாய் அதட்டிட,

"போதும் அத்தை" திணறினாள் லதிகா.

"கல்யாணி போடற சாப்பாடு பாரேன் லதிகா நீயும் அவளை மாதிரியே ஆயிடுவே. என்ன ரஞ்சன்தான் கொஞ்சம் கஷ்டப்படுவான்" அரட்டையும் சிரிப்புமாய் சாப்பாடு உள்ளே இறங்கியது. இது ஒரு புது அனுபவமாய்த்தான் இருந்தது.

வீட்டில் தாயும் அவளும் மட்டும்தான் உண்ணுவார்கள். மாமா வீட்டிலும் தனித்தனியாய் தான் உணவு அருந்து வார்கள். ஆனால் இங்கே குடும்பமாய் ஒன்றாய் ஒருவருக் கொருவர் சீண்டிக் கொண்டு இன்பமாய், காலையில் இருந்த மனக் கவலைக் கூட கொஞ்சம் குறைந்து தான் போயிருந்தது.

அவளை எத்தனை சுலபமாய் அவர்களில் ஒருத்தியாய் ஏற்றுக் கொண்டார்கள். எல்லாம் இன்பமாய்த்தான் சென்று கொண்டு இருந்தது. மனோவின் பார்வையை அவள் சந்திக்கும் வரை, விழிகளை ஊடுருவி உயிரைப் பருகும் பார்வை. தோட்டத்தில் அவன் பிடியில் கிடந்தபோது, அவளை நோக்கிய அதே பார்வை, ரொம்பவே தவித்துதான் போனாள் லதிகா.

வீடு முழுக்க சுற்றிப் பார்த்தார்கள். குறை சொல்ல முடியாத இடம், யாரையும் வியந்து நோக்க வைக்கும் கம்பீரம்



பணக்காரக் களை குவிந்திருந்தது. தந்தை தங்கியிருந்த அறையைக் காட்டினாள் ஷைலஜா.

சுவர் முழுவதும் புகைப்படங்கள் இடம் பிடித்து இருந்தன. தந்தை இளம்பிராய படங்களும் மனோவின் குழந்தைப் படமும். கூடவே ஒரு ஓரமாய் நீலமும் பச்சையும் சேர்ந்த பாவாடையில் பெண் குழந்தையின் புகைப்படம் இது அவள் படமல்லவா.

அந்தப் புகைப்படத்தை அம்மாவும் மாட்டி வைத்திருப் பார்களே என்ற யோசனையில் இருந்தவளை ஷைலஜா கலைத்தாள்.

"என்ன லதிம்மா இந்த போட்டோ எப்படி வந்ததுன்னு பாக்குறீயோ? ஒருமுறை உங்கள் வீட்டிற்கு வரும்போது, ரஞ்சன் இதை யாரும் அறியா வண்ணம் கொண்டு வந்து விட்டான்" என்றாள் ஷைலஜா.

லதிகாவிற்கு வெட்கமாய் இருந்தது. ஹாலிற்கு வரவும், மாமாவும் அத்தையோடு மனோ பேசிக் கொண்டு இருந்ததைக் கண்டாள்.

"என்ன அண்ணா ரஞ்சன் சொல்றான்?" ஷைலஜா கேள்வி கேட்க,

"இல்லேம்மா! இவன் நமக்கு ஒரே பிள்ளை. அதனால கிராண்டா ஒரு ரிஷப்ஷன் வைச்சிடலான்னு சொல்றேன். வேண்டாங்கறான்."

"ஏன் ரஞ்சன்? அப்பா ஆசைப்படறாரே?"

"இல்லே அத்தை. எனக்கு ரிஷப்ஷனில் விருப்பம் இல்லை. திருமணம் 'நடந்ததை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும்



என்றால் பேசாமல் பேப்பரில் விளம்பரம் தந்து விட லாமே?"

"தப்பு ரஞ்சன், திருமணம் விளையாட்டு இல்லை. இது வாழ்வின் அதி முக்கியமான வைபவம். கஷ்டப்படுகிறவர்கள் கூட திருமண வாழ்வை விமரிசையாய் நடத்தும்போது நாம் ஏன் நிறுத்தணும். இந்த விஷயத்தில் நீ மறுப்பேதும் சொல்லக் கூடாது." ஷைலஜாவின் பேச்சில் வேறு வழியின்றி தலை யசைத்தான் மனோரஞ்சன்.

10



இரவு நேரம். நெருங்க நெருங்க மனதில் ஒரு பயப்பந்து உருள ஆரம்பித்து இருந்தது, லதிகாவிற்கு. மெல்லிய வெண் ணிறப்பட்டு அதற்கேற்றாற் போல் முத்து மணியும், வளையல்களும் கூடவே நெருக்கமாய் பின்னிய கூந்தலில் மல்லிகைச் சரம் ஆடியது.

அலங்காரம் முடிந்தவுடன் விரல்களை வழித்து நெட்டி முறித்தாள் கல்யாணி. "அம்மாடி என் மருமகள்தான் எத்தனை அழகு." பால் செம்பினையும் கையில் கொடுத்து மருமகளை வாழ்த்தியனுப்பினார்.

"லதிகா ரஞ்சன் ரொம்ப நல்லவன். நினைச்சதை அடைந்தே தீரணுங்கிற பிடிவாதம் அவனுக்குண்டு. மற்றபடி யார் மனமும் நோகக் கூடாது என்பதில் ரொம்பவும் கவனமாய் இருப்பவன்." பெரியவள் பேசப் பேச லதிகாவிற்கு 'பாவம் இந்தத் தாய் மகனைப் பற்றி என்னென்ன வெல்லாம் உயர்வாய் எண்ணிக் கொண்டு இருக்கிறாள்.



இந்த திருமணமே அவன் பணம் சம்பாதிப்பதற்காக நடந்த ஒப்பந்தம் என்று அறிந்தால்', மனோ இந்தக் குடும்பத்தையே தன் கைக்குள் வைத்திருக்கிறான். வெகு சாமார்த்தியசாலிதான்.

ஷைலஜாவும், கல்யாணியும் சேர்ந்து அந்த அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். அதுவரையில் கடைபிடித்து வந்த தைரியம் ஒரு முழு ஆண் மகனுடன் தனித்திருக்கும் அந்த நிலையை எண்ணித் தவித்தது. மனம் கவர்ந்தவனின் அருகில் சகல உரிமைகள் இருந்தும், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி அவன் அமர்ந்திருப்பதாய் பட்டது லதிகாவிற்கு!

அறை மெலிதாய் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. இருவரிடையேயும் கனத்த மௌனம் நிலவி இருந்தது. பால் செம்பினை அவனிடம் தந்து ஆசீர்வாதம் பெறச் சொன் னார்கள். ஏனோ அவளுக்கு எதிலும் விரும்பவில்லை.

இதே மனோ காதலோடு அவளை அணுகியிருந்தால், எத்தனை இனிமையாய் அமைந்திருக்கும் இந்த இரவு, நினைக்கவே சிலிர்ப்பாய் இருந்தது.

ஆனால் ஒரு சிலர் தங்களும் தங்களைச் சார்ந்தவர்களின் வாழ்க்கையையும் சேர்த்து நரகமாக்கி விடுகிறார்கள் என்பது உண்மைதான். மனோவும் அப்படித்தானே ஆக்கி விட்டான்.

"இங்கே உட்காரவெல்லாம் என் அனுமதி தேவை யில்லை." கணவனின் சீண்டலில் சிந்தனையில் இருந்து விடுபட்டவள் அவன் புன்னகையை வரவேற்காமல் தலைகுனிந்து கொண்டாள்.

"என்னை முதல் முதல் 'சந்தித்த போது வாய் மூடாமல் பேசினாயே லது. இப்போது ஏன் மௌனியாய் இருக்கிறாய்?"

''உங்களிடம் பேச என்ன இருக்கிறது?''

''ஆயிரம் இருக்கிறது. நான் உன் கணவன் இல்லையா?''

''அது ஒப்பந்தத்தால் உண்டான உறவுதானே?''

''ஒப்பந்தம் என்றாலும் திருமணம் உண்மைதானே.''

''வீண் பேச்சு எதற்கு? நீங்கள் கூறியது போல் உங்களுக்கு மனைவியாகி விட்டேன். இனி மாமாவை ஒன்றும் செய்ய மாட்டீர்கள் அல்லவா?''

அதுவரை அவன் முகத்தில் இருந்த இலகுத் தன்மை அகன்று தாடை இறுகியது. பீரோவைத் திறந்து வழுவழுப்பான பைலை எடுத்துக் காண்பித்தான். ''இதோ உன் மாமாவுடைய சொத்தை திருப்பித் தந்ததற்கான ஆதாரம் போதுமா?''

லதிகா அவனை நம்பாமல் பைலைப் படித்துப் பார்த்தாள்.

''லதிகா, நீ கேட்டாற் போல் நான் நடந்து கொண்டேன். இனி என் விருப்பப்படி நடக்க உடன்படுவாய் தானே!''

புதிராய் இருந்த கணவனின் பேச்சில் சற்றுத் திணறித்தான் போனாள் லதிகா. தாலி கட்டியாகி விட்டது. இனி கணவனுக்கு உரிய உரிமையை எடுத்துக் கொள்ளப் போகிறேன் என்று மறைமுகமாக கேட்கிறானோ? என்னவானாலும் சரி இதற்கு மட்டும் ஒப்புக் கொள்ளவே முடியாது. அவள் எண்ணத்தின் போக்கைப் புரிந்து கொண்டாற் போல்,

''இன்னும் ஆறு மாதத்திற்குள் அந்த எஸ்டேட்டில் வேலையைத் துவங்க வேண்டும். அதற்கு நாம் அன்னி



யோன்யமான கணவன் மனைவியாய் வாழ வேண்டும். அதுவரையில் நீ என் காதல் மனைவியாய் நடிக்க வேண்டும்.''

''நடிப்பா?'' அவள் சொல் கூர்வாளாய் நடு நெஞ்சில் கத்தியை செருகுவது போல் இருந்தது. ''அது உங்கள் அளவிற்கு எனக்கு வராது'' என்றாள்.

''லதிகா இந்த வீட்டைப் பொறுத்தவரையில் நாமிருவரும் காதல் மணம் புரிந்தவர்கள். அதனால் அந்த அளவு ஈடுபாட்டோடு நீயும் என்னுடன் பேசிப் பழக வேண்டும். வாக்கு கொடுத்து இருக்கிறாய். மாற மாட்டாய் என்று நம்புகிறேன். ஏனெனில் உனக்குத்தான் நிறம் மாறும் பழக்க மில்லையே'' என்றான் குத்தலாய்.

''இந்தத் தண்டனை ஆறுமாதங்கள் வரைக்கும் தானே'' என்று கேட்டவளை வெகுவாய் ஊன்றிப் பார்த்தான். ''ஏன் அதற்குள் நான் போரடித்து விடுவேனா லதிகா?'' என்றான் எதிர் கேள்வியாய்!

''ச்சீ... பேச்சைப் பாரு! நல்ல விதமாகவே உங்களுக்குப் பேசத் தெரியாதா?''

''நீ பேசியது மட்டும் சரியா? திருமணமான முறை வேண்டுமானால் ஒப்பந்தமாய் இருக்கலாம். ஆனால் நம் திருமணம் உண்மையானது. பெரியோர்களும் ஏற்றுக் கொண்டது. அது பிரிய நான் என்றுமே சம்மதிக்க மாட்டேன்.''

''எனக்கென்று தனி அபிப்பிராயமே இருக்கக் கூடாதா?''

''இருக்கலாம். ஆனால் மற்ற விஷயத்தைப் போல் இதில் நீ மூக்கை நுழைக்கக் கூடாது.''



'மற்றவர்களுக்காகத்தான் திருமணம் செய்தேன் என்று எந்தக் கணவனும் மனைவியிடம் உரைத்திருக்க மாட்டான். இவன்தான் வித்தியாசமான பிறவியாயிற்றே!'

எப்படியாகியும் திருமணம் உண்மையானது, என்ற கணவனின் வார்த்தை மனதிற்கு சற்று ஆறுதலைத் தந்தது. .

''என்ன கனவில் என்னுடன் சண்டை போடுகிறாயா?''

''நான்யேன் கனவில் சண்டையிடணும். நேரிலேயே சண்டையிடுவேன். நான் ஒன்றும் கோழையில்லை. வரவேற்பு வேண்டாமென்று அடுத்தவர்களை சந்திக்கப் பயந்தது நீங்கள்தான்.''

''ஓஹோ..! லதிகா வரவேற்பு வேண்டாமென்று நான் சொன்னதன் காரணம் நீ அறிவாயா? குறுகிய காலத்திற்குள் ளாகவே உன் வாழ்வில் பலமாற்றங்கள். நிகழ்ச்சி என்றால் பலதரப்பட்ட மனிதர்களும் வருவார்கள். நாக்குகள் நன்மை யர்கவும், தீமையாகவும் சுழலும். அதையெல்லாம் தாங்கிக் கொள்ள உங்களுக்குத் தெம்பு வேண்டுமே!''

''தவிரவும், காதலாகி கசிந்துருகி மணம் புரிந்து கொண் டோம் என்று புருடா விட்டிருக்கிறேன். நீ பாட்டுக்கு அருகே நின்று கொண்டு முகத்தைத் தூக்கி வைத்திருந்தால் என் நிலை என்னாவது? இதையெல்லாம் ஊகித்துத்தான் வேண்டாம் என்றேன். சரி நீ உறங்கு'' மனோரஞ்சன் எழுந்து பால்கனியின் பக்கம் சென்று விட்டான்.

மனோவின் பேச்சு பாதி புரிந்தது போலவும், பாதி புரியாதது போலவும் இருந்தது. அவன் முதுகையே வெறித்த வள், கையில் இருந்த பைலைப் பார்த்தாள். காலையில் இதைக்



கொண்டு போய் மாமாவிடம் கொடுத்துவிட்டு, தான் அவசரமாக மணம் புரிந்து கொண்டதன் சூழலை அவருக்கு விளக்க வேண்டும். இரண்டு தினங்கள் கண் விழித்த எரிச்சலும், களைப்பும் சேர்ந்து அப்படியே உறங்கித்தான் போனாள்.

அவள் நினைவுகள் விழித்து இருந்திருந்தால் அன்றைய இரவு முழுவதும் மனோரஞ்சன் அவளின் உறக்கத்தை ரசித்ததை அவள் உணர்ந்திருப்பாள்.

அதிகாலை பனித் தூறலில், நனைந்து கொண்டிருந்த வானத்தை போர்வையாய் மாறி மூடியது மேகங்கள்.

''ஏய் ரஞ்சன் என்னயிது? என்றும் இல்லாத திருநாளாய் அடுப்படியில் வந்து என்ன உருட்டிக் கொண்டு இருக்கிறாய்.''

''காபி போடறேன் அத்தை.''

''யாருக்கு?''

''லதுவிற்குத்தான்!''

''அடப்பாவி கல்யாணமாகி முழுசா ஒரு நாள் கூட முடியலை. அதுக்குள்ளே பொண்டாட்டிக்கு இந்த வேலை யெல்லாம் செய்யுறியா?''

''போங்க அத்தை'' அவன் வெட்கத்துடன் நகரவும், ஷைலஜா மன நிறைவோடு புன்னகைத்தாள்.

''என்னம்மா மகாராணி எழுந்து விட்டாயா? பரவாயில்லை நான்தான் கண்ணே மணியே என்று கொஞ்சி எழுப்ப வேண்டும் என்று நினைத்தேன். நல்லவேளை நீயே எழுந்து விட்டாய். இந்தா காபி.''

''எனக்கு வேண்டாம்..''

''நானே போட்டு எடுத்து வந்தேன். அதற்காகவாவது...'' அவன் கண்களில் கெஞ்சல் மறுப்பேச்சின்றி விலக்காமல் வாங்கி அருந்தினாள்.

''எப்படியிருக்கு?''

''எதற்கு இந்த திடீர் கரிசனம் என் மேல்? யாரை கவிழ்க்க இந்த நாடகம்..''

''புத்திசாலிதான் நீயும், நாமிருவரும். காதலித்து மணம் புரிந்தவர்கள் அதற்கு ஏற்றபடி நடக்க வேண்டாமா? அதற்காகத்தான் இந்த நடவடிக்கையெல்லாம். இதற்கு நீயும் கட்டாயம் ஒத்துப் போக வேண்டும். அப்போதுதான் நம் காரியம் தங்குதடையின்றி நடக்கும். இதற்கெல்லாம் நீ ஏற்கனவே ஒப்புக் கொண்டு இருக்கிறாய்.''

''இனிமேலாவது நான் மாமாவைப் போய் பார்க்கலாமில்லையா?''

''எதற்கு?''

''இதென்ன கேள்வி? ஏற்கனவே அவரிடம் சொல்லாமல் திருமணம் செய்து கொண்டேன். அதற்காக என்னை அவர்கள் எத்தனை தவறாய் எண்ணியிருப்பார்கள். முதலில் அந்த தவறான எண்ணத்தைக் களைய வேண்டாமா?''

''அதற்கு நம் திருமணத்திற்கு முன் செய்த ஒப்பந்தத்தைப் பற்றி சொல்லப் போகிறாயா? இப்போதுதான் உன்னைப் புத்திசாலியென்றேன். அதற்குள் அதை தவறுயென்று நிரூபிப்பது போல் பேசுகிறாயே? இந்த விஷயத்தை நீ



உளறினால் நாம் இத்தனை யுக்திகள் மேற்கொண்டது உபயோகமின்றிப் போய்விடாதா?''

''ஆமாம்! ஆனால் மாமா என்னை தவறாக நினைத்திருப்பார். அதுதான் கவலையாய் உள்ளது. நான் உங்களுக்கு என்ன கொடுமை செய்தேன்? ஒவ்வொரு விநாடியும் குற்ற உணர்வுடன் வாழும்படி என்னைச் செய்து விட்டீர்களே?''

''லது...! எனக்கு என் குடும்பம் மிகவும் முக்கியம். அத்தோடு இந்த சொத்தும் நம் எஸ்டேட் நிலத்திற்காகத்தான் உன்னை மணம் புரிந்தேன். ஆனால் இதை நீ தண்டனையாய் நினைப்பாயானால் இது உனக்கு ஆயுள் பூராவும் உண்டு. அதாவது என் ஆயுள் முடியும் வரையிலும்..!''

அவன் அந்த வார்த்தையை உபயோகித்ததும் தன்னையும் அறியாமல் அவன் வாயைப் பொத்தினாள். ''மனோயென்ன பேச்சு இது'' வென்று? அந்த ஒரு விநாடி அவனின் இலகுவான பார்வையில், பழைய மனோவாய்த் தெரிந்தான்.

மனைவியின் அந்த நிலை ''மனதை சங்கடமாக்க மெல்ல அவளை அணைத்துக் கொண்டான். ''ஸாரி லது! இனி உன் மனம் புண்படும்படி பேசமாட்டேன். உன் மாமா உன்னைப் புரிந்து கொள்வார். நாமிருவரும் முதலில் நல்ல நண்பர் களாய்ப் பழகுவோம். அதன் பிறகு நம் உறவு தோன்றினால் சிக்கல் இராது.''

ஆறுதலான அந்த அணைப்பினை ரசித்துக் கொண்டிருந்த நேரம், ஷைலஜாவின் குரல் கலைத்தது. அவசரமாய் பிரிந்தார்கள்.



''ஸாரி ரஞ்சன், தடங்கலுக்கு வருத்தம்தான். லதிகாவின் வீட்டில் இருந்து அவள் மாமாவும், முரளியும் வந்து இருக்கிறார்கள். சீக்கிரம் வாருங்கள்'' என்று நகர்ந்தாள்.

''பார் லது.. உன் மாமாவிடம் எதையும் உளறி விடாதே. உன் முகம் கூட எதையும் காட்டிடக் கூடாது. நினைவில் வைத்துக் கொள். நான் முன்னால் போகிறேன். நீ பின்னால் வா!''

## 11



**க**ணவனின் அணைப்பில் நெகிழ்ந்து போயிருந்த மனம் அடுத்து அவன் பேசிய வார்த்தைகளில் இறுகிப் போனது. குடும்பமும் சொத்தும் முக்கியமாம். அதன் நடுவில் நீயும் என்று ஒரு வார்த்தை சேர்த்து இருந்தால் எத்தனை சந்தோஷப் பட்டு போய் இருப்பாள். அதை விடுத்து பேசும்போது கூட அவள் சந்தோஷப்பட்டு விடக் கூடாது என்று யோசித்துப் பேசுவானோ..?

யோசனைகளைப் புறந்தள்ளிவிட்டு கீழே விரைந்தாள். புது மணப்பெண் அல்லவா? புன்னகை இருப்பது அவசிய மாயிற்றே கஷ்டப்பட்டு புன்னகைக்க முயன்றாள்.

தயங்கித் தயங்கி வந்தவளை மனோரஞ்சன் கரம் பற்றி அழைத்து வந்து தன் அருகில் அமர்த்திக் கொண்டான்.

மாமா கவலையோடு அவளை எதிர் கொண்டார் ''என்ன லதிம்மா இப்படி பண்ணிட்டே? எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா நானே இதை விமரிசையாய் செய்திருப்பேனே! உங்கம்மாதான் என்னை ஏமாத்திட்டான்னா நீயும்...



ஏம்மா உனக்கு இந்த மாமா மேல நம்பிக்கையில்லையா?'' சந்திரசேகரனின் கேள்விக்கு அவளால் பதிலே பேச முடியாமல் போனது.

மனோதான் பேசினான். ''மன்னித்து விடுங்கள். இதில் லதுவின் தவறு எதுவும் இல்லை. லது என் மாமாவின் மகள் என்று நான் அறியும் முன்னரே எங்களுக்குள் காதல் அரும்பி விட்டது. ஆனால் உறவுகளுக்குள் சில சிக்கல்கள் இருந்ததி னால், நான் ஏதும் பேசாமல் இருந்தேன்...

''எங்கள் காதலை வெளிப்படையாய் சொல்லி யாரையும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்த விருப்பமில்லை. மறைமுகமாய் உங்களிடம் கேட்டுப் பார்த்தேன்.''

''உண்மைதான். லதிம்மாவிற்கு விருப்பம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.''

''நீங்க?''

''இல்லை ரஞ்சன் லதிம்மா எனக்கு மகள் மாதிரிதான். அவளுக்கு செய்ய வேண்டிய அனைத்தும்..!''

''வேண்டாம் எனக்கு என் மனைவி மட்டும் போதும். அவள் மூலம் வரும் எந்த சொத்தும் தேவையில்லை'' என்ற கணவனை புதிதாய் பார்ப்பது போல் பார்த்தாள் லதிகா.

சிறு உணவு உபசரணைக்குப் பிறகு, முரளி வாய் திறந்தான். ''லதி! என்கிட்டே எதையும் மறைச்சது இல்லை. ஆனால் இதைப்பற்றி என்னிடம் கூட மூச்சு விடாமல் இருந்திருக் கிறாள். எப்படி இவள் வாயைக் கட்டிப் போட்டீர்கள். அந்த ரகசியத்தைச் சொன்னால் ஷாலுவிடம் பிரசிட் பண்ண வசதியாய் இருக்கும்.''

''தாராளமாய்! ரொம்பவும் தாங்க முடியாமல் பேசினால் வாயடைக்க என்னிடம் நல்ல வழிமுறை இருக்கு. ஆனால் முரளி பெரியவர்கள் எல்லாம் கூட இருப்பதால், அப்புறமாய் சொல்கிறேன். என்ன லதும்மா சொல்லலாம்தானே!''

'எப்படியெல்லாம் பேசுகிறான். அப்பப்பா பெரிய ஆள்தான். எல்லோரையும் அவன் பேச்சுக்கு தலையாட்ட வைத்து விடுகிறானே ' இவளும் வேறு வழியின்றி அசடு வழிய சிரித்து வைத்தாள்.

''நம்ம லதிகாவிற்கும், மனோவிற்கும் வர்ற 18ந் தேதி ஒரு சின்ன வரவேற்பு வைக்கலாம் என்று இருக்கிறேன். முறைப்படி வீட்டுக்கும் வந்து அழைப்போம். நீங்க அவசியம் வரணும்'' மனோவின் தந்தை கூறிட மாமாவும் முரளியும் விடை பெற்றார்கள்.

வீட்டுப் பெரியவர்களிடமும் பேசிய பிறகு, மாமாவின் முகத்தில் சற்றே திருப்தி ஏற்பட்டது. இருப்பினும் யாரும் அறியா வண்ணம் மருமகளை அழைத்து தனியாய் கேட்கவே செய்தார். ''ஏம்மா, நீயும் மனோரஞ்சனும் மனதொருமித்த மணம்தான் புரிந்து கொண்டீர்களா? இல்லை உன்னை மிரட்டியேதும்..?''

''அய்யய்யோ அவர் சொன்னது அத்தனையும் உண்மை மாமா, நான் உங்களிடம் சொல்லாததற்கு நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள்..''

''பரவாயில்லைம்மா! உன் வாழ்க்கை நல்லாயிருந்தா அதுவே எனக்குப் போதும். அப்படியொனக்கு ஏதாவது பிரச்சனையென்றால் நான் இருக்கிறேன் மறந்து விடாதேம்மா.''



''ஒரு நிமிடம் இதையும் வாங்கிக் கொண்டு செல்லுங்கள்.''

என்னவோ என்று எண்ணி வாங்கியவருக்கு வியப்பு தொற்றிக் கொண்டது. ''தம்பி இந்த கடனெல்லாம்.. உங்களுக்கு ஏன்?''

''இது என் மனைவியின் ஆசை! அவளை தாங்கிய குடும்பம் தரையிறங்கிட கூடாது இல்லையா? இத்தனை நாளாய் என் கண்மணியை பராமரித்ததற்கு பரிசு. லதுவின் பேச்சை மீற முடியாதே. ஏனெனில் இனியென்னை ஆளப் போகிறவள் அவள்தானே!'' பேசிவிட்டு லதிகாவை இழுத்து தோளோடு சேர்த்துக் கொண்டான் மனோரஞ்சன்.

சந்திரசேகரின் மனம் நெகிழ்ந்தது.

''லதிகா ஒரு நல்ல இடத்தில் சேர்ந்து விட்டாள் என்ற உண்மை புரிந்து விட்டது. வருகிறோம்'' என்று கிளம்பி னார்கள்.

எல்லாமே இயல்பாய் சென்றது. அடுத்து வந்த நான்கு நாட்களும்! வீட்டில் பெரியவர்களை சமாளிப்பதுதான் மிகவும் சிரமமாய் இருந்தது லதிகாவிற்கு! கூடுமானவரை மனோ அருகிலேயேதான் இருந்தான்.

அவன் அருகாமை இனித்தாலும், சில நேரங்களில் மனோவின் பேச்சும், பார்வையுமே அவளுக்கு தவிப்பாய் இருந்தது. ஒவ்வொரு விநாடியும் அவளை அருகேயே நிறுத்திக் கொண்டாலும், இறுதியில் நடிப்பு என்று கூறி எல்லாவற்றையும் மறக்கடிக்க வைத்தான்.

ஒரு மாலை நேரத்தில் வீட்டுத் தோட்டத்தில் பூத்திருந்த நித்ய மல்லிகையை மருமகளின் தலையில் சூடி விட்டு அழகு



பார்த்த கல்யாணி, மகனின் சிறு வயது பற்றிய குறும்புகளை கூறவும், மனோரஞ்சன் உள்ளே நுழையவும்,

பேச்சு அத்தோடு நின்று போனது. ஆனால் மனோ அவளைப் பார்த்த பார்வை, ''ஏனம்மா லது ஏதாவது அழகிப் போட்டியில் கலந்துக்கப் போறாளா?'' சீண்டினான்.

''ஏண்டா? எம் மருமக முன்னாடி யாரும் நிக்க முடியாது. அதேசமயம் உங்க இரண்டு பேருக்கும் சொல்றேன். சீக்கிரமா குட்டி லதிகாவோ, ரஞ்சனோ இந்த வீட்டில் விளையாடணும் சொல்லிட்டேன்'' தாய் நகரவும்.

பேயறைந்தாற் போல் இருந்த லதிகாவைக் கண்டு சத்தமாய் நகைத்தான் மனோரஞ்சன்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''அம்மா சொல்லியதை எண்ணிப் பார்த்தேன். ஒருவேளை அது நடந்தால் உனக்குப் பிள்ளையார் வேஷம் பொருத்த மாய்த்தான் இருக்கும்'' என்று அவன் சொன்ன தோரணையில் அவளுக்குமே அந்தக் கற்பனையில் சிரிப்புதான் பொத்துக் கொண்டு வந்தது.

அவள் கலகலவென்று நகைப்பதையே கண்டவன் ''ரொம்ப நாள் கழித்து சிரிக்கிறாய் லது!'' என்றான் மிருதுவாய்.

அதே குரல் காற்றென உரசியது எக்குரலில் அவள் மயங்கி னாளோ அதே குரல்.

''விளையாட்டு போதும் சாப்பிட வாருங்கள்'' முகம் சிவப்பதை மறைக்க முன்னால் நடந்தாள். இவனை நேரில் காணும் வரை எடுத்துக் கொண்ட வைராக்கியங்கள் எல்லாம்



மனோவைக் கண்டதும் பனியாய் உருகி விடுகிறதே! ஏன்? நீரு பூத்த நெருப்பாய் அவன் மேலுள்ள காதல் இன்னும் உள்ளே இருக்கிறதா? ஆனால் நீங்கள் மாறி விட்டீர்களே?'' அவள் பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தி நகர்த்திடவும்,

மனோரஞ்சன் விடாமல் தொடர்ந்தான். ''உன் கவலைக்கு நான் மாற்று மருந்து தரட்டுமா? இப்படி உட்கார்.'' ஒரு பழுப்பு நிற காகிதத்தை அவள் முன் விரித்தான். ''இது நம்ம எஸ்டேட். தொழிலாளிகளுடைய நலனிற்காக நான் கட்டும் பில்டிங்ஸ்.

''எப்படி பிளான் எல்லாம் நல்லா இருக்கா?''

''நீங்க இன்ஜினியர் படிச்சி இருக்கீங்களா?''

''சத்தமா கேட்காதே யாராவது சிரிக்கப் போறாங்க. பி.எஸ்சி கோல்ட் மெடலிஸ்ட் ஆக்கும். நம் கம்பெனி பெயர் 'மனோ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' இப்போதுதான் ஒரு கவர்ன் மெண்ட் பில்டிங் முடித்தேன். அடுத்தது சொந்த வேலை.''

''நம்ம எஸ்டேட்டில் மொத்தம் 300 குடும்பங்கள் வாழ் கிறது. நகரத்தை விட்டு சற்று தள்ளி இருப்பதால் சில அத்தியா வசியமான தேவைகளுக்கு அவர்கள் சிரமப்படுகிறார்கள். அதனால் அங்கேயே லைப்ரரி, ஆஸ்பிட்டல், ஸ்கூல், விளையாட்டு மைதானம் என்று கட்ட நினைத்தேன். அதற்கு உன் பெயரில் உள்ள நிலமும் தேவை.''

மறுபடியும் சுற்றி வளைத்து அவன் சொத்து பற்றி பேசவும் இவள் முகம் சுளித்தாள். ஆனால் அவனோ, கட்டுமான பணிகள் ஏறத்தாழ முடிவடையும் நிலையில் உள்ளது. இன்னும் மூன்று மாதத்திற்குள் திறப்புவிழா செய்திடலாம்.''

"அன்றுதான் உன்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன். இன்னொரு உதவி லது... இதில் இதுவரை ஆன செலவுகள், வவுச்சர் எல்லாம் இருக்கு. இதை அப்படியே டேலியில் ஏற்றி சீடியாய் தந்திடு. முடியும்தானே உனக்கொன்றும் தொந்தரவு இல்லையே.."

"எனக்கும் பொழுதே போகவில்லை. இந்த வேலையும் தேவைதான். மனதை ஒரு முகப்படுத்த உதவுமே."

"உனக்கு கம்ப்யூட்டர் இயக்கும் பழக்கம் உண்டா?"

"அம்மா படிப்பிற்கு எந்த குறையும் வைக்கவில்லை. "சரி நான் உங்களுக்கு சாப்பிட ஏதாவது எடுத்து வருகிறேன்" லதிகா படியிறங்கிடவும் மனோரஞ்சன் இரவு உடைக்கு மாறினான்.

12



பகல் பொழுதில் ஏதாவது ஒரு வேலையைக் காரணம் காட்டி மனோ வெளியே சென்று வந்தபோதிலும், மற்ற நேரங்களில் லதிகாவின் அருகிலேயே இருந்தான். யாரும் சந்தேகப்படக் கூடாதாம். நெருங்கி நின்றாலும் மனதளவில் அவன் விலகியிருப்பதாகவேப் பட்டது.

ஆனால் இரவு, முழு நீளமாய் அதில் என்ன சொல்லி தப்பிக்க முடியும். தனித்தனி அறையில் படுக்க இயலாது. மற்றவர்களுக்கு சந்தேகம் வருமே. எனவே ஒரே படுக்கை ஒரே அறையென்றாகிப் போனாலும், மனோரஞ்சன் வெகு கண்ணியமாய் இருந்தான்.



உறங்கும் சமயம் கூட அவனிடம் ஒரு எச்சரிக்கை உணர்வு இருப்பதாய் அவளிற்குத் தோன்றும். இத்தனை கண்ணியமாய் நடப்பவனா அன்று அத்தனை கீழ்த்தரமாய் பேசினான்.

அன்றைய இரவு உணவின் போது, மனோ பேசியதில் அவன் ஒரு கைதேர்ந்த நடிகன் என்பதை உணர்ந்தாள். ஒருவர் மட்டுமே பரிமாறும் வழக்கம் அங்கு எப்போதும் இல்லை. அனைவருமே அமர்ந்துகொண்டு வேண்டுமானதை எடுத்து உண்பது வழக்கம்.

ஷைலஜாதான் முதலில் பேச்சை ஆரம்பித்தாள். "ரஞ்சன், நீயும், லதியும் காதலித்துத்தான் மணம் புரிந்தீர்களா? என்று எனக்கு சந்தேகமாய் இருக்கிறது" ஷைலஜாவின் பேச்சில் லதிகாவிற்கு வாயில் வைத்த உணவை துப்பவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்தபடி கணவனைப் பார்த்தாள்.

அவனோ வெகு கூலாக பதில் சொன்னான்."ஏன் அத்தை அந்த சந்தேகம் உங்களுக்கு?"

"இல்லை, உங்கள் இரண்டு பேர் முகத்தில் எந்த மலர்ச்சியும் இல்லை. லதிகா எதையோ இழந்தது போல இருக்கிறாள். நீயானால் கல்யாணமான மறுநாளே அலுவலகத்திற்கு போய்விட்டாய். புதிதாய் கல்யாணமானவங்க எப்படி எல்லாம் இருக்கணும்?"

"அத்தை நாங்க கல்லூரிக் காதலர்களாயென்ன? எங்களுடையது திட்டமிட்ட வாழ்வு. திருமணம் திடீர் என்று நடந்து விட்டதால் என் வேலையை ஒதுக்க முடியவில்லை. அந்த கவர்ன்மெண்ட் பில்டிங் ஒர்க் இப்போதான் முடிஞ்சிருக்கு. லதுவிற்குக் கூட இதில் கொஞ்சம் வருத்தம்தான். என்ன செய்ய? உத்யோகம் புருஷலட்சணம் இல்லையா?



"அதுவும் அடுத்த பத்து நாட்கள் தொடர்ந்து நான் ஆபீஸில் இருக்கப் போவதில்லையே? எனவே முக்கியமான அலுவல்களையெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது."

"ஏன்? ஊருக்கு எங்கேயும் போகிறாயா ரஞ்சீ?"

"ஊருக்கு இல்லை ஹனிமூன்..!" சொல்லிவிட்டு அடிக்கண்ணால் லதிகாவைப் பார்த்தான். அவள் திருதிருவென்று விழிக்கவும், "என்ன லது? நேற்றே உன்னிடம் சொன்னேனே நீ சொல்லவில்லை.." வாய்க்குள் சிரிப்பை மென்றபடியே அவள் தடுமாற்றத்தினை ரசித்தான்.

"வாவ்.. எங்கே போறீங்க?"

"மகாபலிபுரம்.."

"என்ன ரஞ்சீ? நம்மகிட்டே என்ன பணமாயில்லை. ஹனிமூன் போவதென்று முடிவு செய்த பிறகு வேறு எங்காவது நல்ல இடங்களுக்கு போக வேண்டியதுதானே அதை விடுத்து..!"

"இல்லே அத்தை, மகாபலிபுரம் பக்கம்தான் நம்ம எஸ்டேட்டில் சைட் ஒர்க் நடக்குது. அதையும் பார்த்தால் போலிருக்கும். அதுவும் இல்லாமல் நம்ம ஊரிலேயே காணக் கிடைக்காத அற்புதங்கள் கொட்டி கிடக்கிறது. லதுவுக்கும் அதுதான் விருப்பம், அதாவது என் வேலையெப்படியிருக்கும் நேரிலேயே பார்க்கப் போகிறாளாம்..."

"ஒத்துப் போனால் சந்தோஷம்தான்... அப்புறம் ரஞ்சன் வர்ற புதன்கிழமை ரிஷப்சன் வைக்கலாம்னு இருக்கோம். நீங்க எப்போ ஹனிமூன் கிளம்பறீங்க?"



"வியாழன் மாலை. ரிஷப்ஷன் அதுயிதுன்னு ரொம்பவும் ஆடம்பரம் வேண்டாம். நம்ம தோட்டத்திலேயே பங்ஷன் வைத்துவிடலாம். கேட்டரிங் ஆளிடம் சொல்லி அரேஞ்மெண்ட்ஸ் எல்லாம் பண்ணிடறேன். நீங்க எதற்கும் அலைய வேண்டாம். மஞ்சரி அத்தை பிரிந்த சோகத்தில் இருந்து லதிகா இப்போதுதான் மெல்ல மெல்ல வெளியே வந்து இருக்கிறாள். அதனால் கூட்டம் சேர்க்க வேண்டாம். மிகவும் முக்கியமானவர்களை மட்டும் அழையுங்கள்" மனோவின் எந்தப் பேச்சிற்கும் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

இவர்களின் இந்தப் போக்குதான் நினைத்ததை முடித்தே தீர வேண்டுமென்ற கர்வத்தை இவனுக்குத் தந்திருக்க வேண்டும். இவளிடம் சின்ன அபிப்பிராயம் கூட கேட்க வில்லை. அந்த ஆதங்கத்தை அறைக்குள் அவனிடம் கொட்டவே செய்தாள்.

கதவைத் தாளிட்டு விட்டு படுக்கையின் இடதுபுறம் அமர்ந்தவனிடம், "நீங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று சூடாகவே கேட்டாள்.

"சொன்னால் நீ நம்புவாயா?" என்று எதிர் கேள்வி கேட்டான்.

"ஹனிமூன் எல்லாம் நமக்கு அவசியம்தானா?"

"ஏன்? நாம் கணவன் மனைவியில்லையா?"

"அது ஒப்பந்தத்தால் வந்த உறவு!"

"ஒப்பந்தம் என்றாலும் உண்மையான திருமணம் தானே அது. முறைப்படி தாலி கட்டித்தானே மணந்தேன்?"

"உங்கள் கணக்குப்படி இன்னும் ஐந்து மாதத்திற்கு என் உதவி தேவை. அதன் பிறகு நான்.. நான் யாரோ தானே?"

மனோரஞ்சன் அவளருகில் அமர்ந்து அவள் கரங்களை தன்னுடன் இணைத்துக் கொண்டான். "எத்தனை சுயநலம் உனக்கு லது? யார் உன்னிடம் அப்படி சொன்னார்கள். நான் என்றுமே உனக்கு என்னிடமிருந்து விலக்கு தரப் போவ தில்லையே? இத்திருமணத்தினால் நம்ம குடும்பமே மகிழ்வில் இருக்கிறதே."

"குடும்பம் மட்டும்தானே?" முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"நானும்தான் லது. நம் திருமணம் எப்படி நடந்து இருந்தாலும், உண்மையானது. நான் உன் கணவன். நீ என் மனைவி. அது என்றுமே மாறாது. இயல்பாய் இரு. இந்த பத்து நாள் தனிமை கூட நாம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளத்தான் புரிந்ததா?"

அதே குழைவான குரல் காதோரம் மோதியது. 'இன்னிலை நீடித்தால் மனம் அவன்பால் சாயக் கூடும். முழுமையான அன்பு புரியாதவரை மனதில் எந்த சலனத்திற்கும் இடம் தரவே கூடாது. என் பலவீனம் மனோ அறிந்து விடக் கூடாது. நான் மனோவின் மேல் கொண்ட அன்பு உண்மையானது. என் காதலும் நிஜமானது. அதில் எந்த மாற்றமும் இல்லை. பொறுமையென்னும் சாவி கொண்டுதான் மனோவின் இதயப் பூட்டைத் திறக்க வேண்டும்.'

அவள் யோசித்துக் கொண்டு இருக்க, அவன், "லது இன்றைய கசப்பை மறக்க முயற்சிப்போம். நீ தூங்கு எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு.." அவள் கன்னத்தில் தட்டி விட்டு நகர்ந்தான் மனோரஞ்சன். இவளோ டைரியை எழுதினாள். வெறும் பார்வைகள் இந்த பரிமாற்றம்தானே நம்முள் நடந்து கொண்டே இருக்கிறது.



அதில்தான் எத்தனை அர்த்தப் பொலிவுகள். மலையென இறுகியிருந்த மனதை உன் பார்வை உளி கொண்டு அணுஅணுவாய் குடைந்து என் அனுமதியின்றியே உன் பிம்பத்தை செதுக்கிக் கொண்டாயே!

என்னைக் காட்டிலும் நீயல்லவா என்னுள் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறாய். தேடலில்தான் வழி பிறக்கிறது. ஆனால் உனக்குள் தேடல் வரும் நேரம் வலியல்லவா பிறக்கிறது. உனக்காக நான் சேகரிக்கும் கண்ணீர் கூட முத்துக்களாய் கன்னத்தில்...

மங்கிய நிலவொளியில் மஞ்சள் நிற வெயிலென நீ அந்தப் பார்வையின் அனல் தாக்கினாலும் அந்த வெப்பத்திற்கு மீண்டும் மனம் ஏங்குகிறது. நீ அறியா நேரம் திருட்டுத்தனமாய் உனையென் கண்கள் சந்திக்கின்றன. உன் அசைவுகளை இமைக்காமல் ரசித்து என் இதயப் பெட்டிக்குள் நிரப்பி வைத்துக் கொண்டு மூட முயல்கிறேன். முடியாமல் நீர்குமிழியெனப் பொங்கிப் பொங்கி வழிகிறது உன் நினைவு.

என் அருகில் மெல்ல உரசியும் உரசாமலும் நீ செல்ல என்னையும் அறியாமல் நான் பார்க்க, காதலோடும் போதை யோடும் வீசிய புன்னகையில் அந்த ரகசியமான அந்தரங்க புன்னகை ஆயிரம் பட்டாம் பூச்சிகளாய் சிறகடிக்கிறது.

என் இதயம் விநாடிக்கு ஒருமுறை துடிக்கும் ஒவ்வொரு துடிப்பிலும் நீ இருக்கிறாய். அதுயேன் உனக்குப் புரியாமல் போகிறது.

என்னுள் எரியும் நெருப்பாய் உன் நினைவுகள். ஒரு நாளின் உதயம், ஒரு பூவின் மலர்ச்சி. முதல் காதல் முதல் முத்தம்



இவற்றெல்லாம் போல் உன் முதற் பார்வையும் என்னால் மறக்க முடியாதது.

மனோரஞ்சன் கூறியது போலவே பெரிய வீட்டுத் தோட்டத்திலேயே ரிசப்ஷன் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நெருங்கிய உறவுகளுக்கு மட்டுமே அழைப்பு விடுத்திருந்த போதிலும் கூட்டம் வழிந்தது. அத்தனைக் கண்களும் இவர்கள் இருவரையும் மொய்த்தது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் ஒளிரும் விளக்குகளுக்கு நடுவில் இருவரும் இருந்தனர். அரக்கு நிற சேலையில் ஒவ்வொரு சிறு கட்டங்களிலும் ப்ரவுன் நிற பூக்கள் அணிவித்து நின்றது. அதற்கு சேர்ந்தாற்போல் நகைகளும், அலங்காரமும் என நட்சத்திரமாய் மின்னினாள் லதிகா.

அருகில் மனோரஞ்சன் அவனும் அழகில் சளைத்தவன் அல்லவே. வெள்ளையும் ப்ரவுன் நிற குர்தாவும் நெடுநெடு வென்ற அவன் உயரத்திற்கு பாந்தமாய் இருந்தது.

உறவினர்களைக் கண்டு அவன் ஒவ்வொரு முறையும் புன்னகைக்கும் போதும் அந்த கம்பீர அழகினைக் கண்டு இவள்தான் மிகவும் தவித்துப் போனாள்.

நாம் இவனுக்குப் பொருத்தமா? என்ற கேள்வியும் எழ மேடைக்கு அருகிலேயே சிலரின் குரல் "பொண்ணும் பிள்ளையும் வெகு பொருத்தம். ஒருவருக்காக ஒருவர் பிறந்தாற் போல் இருக்கிறது." அதுவே பலரது கருத்தாகவும் அமைந்திட இவளுள்ளம் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது.

நீட்டப்பட்ட அன்பளிப்புகளை பெற்றுக் கொண்டவாறே, எல்லோரையும் அறிமுகம் செய்து வைத்தான் மனோரஞ்சன்.



பெரியவர்கள் வரவேற்பில் முனைப்பாய் இருக்க, முரளியும் ஷைலுவும் வந்து "லதி உலகத்திலேயே மேட்சிங்கான ஜோடி நானும் ஷாலுவும்தான்னு நினைச்சு இருந்தேன். ஆனா இப்போ தப்போன்னு தோணுது" முரளி சோகமாய் சொல்லிட,

"ஏன்? முரளி வேணுன்னா இரண்டு அடி அடிச்சிடு. இப்படி கலாய்க்கணுமாயென்ன? போ இப்பவே ஷாலு முறைக் கிறாங்க. வீட்டுக்குப் போனதும் பூரிக்கட்டை உடையப் போகுது பாரேன்.." சிரிப்புடனே கூறிட, அந்த குலுங்கிய சிரிப்பில் வெகு இளமையாய், மன்மதனோ இவனென்று வியக்கும் அளவிற்கு அழகு. ஆனால் அந்தச் சிரிப்பு அடுத்து மேடையில் ஏறிய அந்த அதிரூபச் சுந்தரியைக் கண்டதும் மறைந்துதான் போனது.

கண்ணைப் பறிக்கும் சேலை கையில்லாத சோளியில் அவள் செழுமை பளிச்சிட்டது. அதிகமான ஒப்பனையில் முகம் சிவந்து இருந்தாலும் இவள் சிம்பிளாக வந்திருந்தாலே அழகாய் இருந்திருப்பாள் என்று தோன்றியது லதிகாவிற்கு.

நேராய் மனோவிடம் வந்து வலுக்கட்டாயமாய் கையைப் பற்றிக் கொண்டவள், "வெரி வெரி ஹேப்பி ரிட்டன்ஸ் ரஞ்சி! நீ அழைக்கவில்லையென்றாலும் நானே வந்து விட்டேன் பார்த்தியா?"

மனோவின் முகம் சுரத்தில்லாமல் இருந்தாலும் அவள் புறமிருந்து கைகளை விலக்காமல் இருந்தான்.

"என்ன ரஞ்சி ரொம்பவே திகைச்சுப் போயிட்டே? என்னை உன் ஒய்ப்புக்கு அறிமுகப்படுத்தி வைக்கமாட்டியா?"

மனோ மனைவியின் புறம் திரும்பினான்! "லது இது கவிதா என்னோடு படித்தவள்.."

"இந்த அறிமுகம் மட்டுமே போதுமா ரஞ்சி.." குழைந்தாள் கவிதா. "ரஞ்சியும், நானும்தான் கல்யாணம் செய்து கொள்வ தாய் இருந்தது. ஆனால் சில காரணங்களால் அது தட்டிப் போய்விட்டது. ஆனால் இப்போது அவனை விட்டு வைத்தது தவறோயென்று தோன்றுகிறது."

லதிகா ஒட்டிக் கொண்ட புன்னகையுடன் விழிகளை கணவனிடம் திருப்பினாள். அவன் பார்வை கவிதா மேலேயே நிலைத்தது. இவளுக்கு திக்கென்றது. இதுயென்ன? ஏக்கமா? கோபமா? புரியாமல் தவித்தாள் லதிகா.

இவளின் மனம் புரியாமல் மறுபடியும் மனோவிடம் சென்றாள் கவிதா. "ஏன் ரஞ்சீ? எனக்கு மட்டும் அழைப்பு விடுக்கவில்லை. நான் கஷ்டப்படுவேன் என்றா?"

"அதெல்லாம் இல்லை கவி..! உன்னிடம் சொல்வதற்கு என்ன? இது திடீரென்று ஏற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி. அப்பா தான் எல்லோரையும் அழைத்தார் அதனால்தான்.."

"பரவாயில்லை ரஞ்சீ. தெரியாதவர்களைத்தான் அழைக்க வேண்டும். நீயென்னை மறக்காமல் இருந்தால் போதும். எனிவே! கங்கிராட்ஸ்". அவன் கையைப் பற்றி குலுக்கி முத்தம் பதித்தாள். அதுவரை சுகமாய் இருந்த வரவேற்பு நெருப்பு பட்டாற் போல் தகதகவென்று எரிந்தது.

எத்தனை கொஞ்சல், குலாவல் லஜ்ஜையில்லாமல் அத்தனை பேர் இருக்கும் இடத்தில் அருகில் மனைவியிருக்கிறாளே என்ற நினைப்பில்லாமல் கைப்பற்றி முத்தமிடுகிறாளே! இவரும் சிரித்துக் கொண்டு இருக்கிறாரேயென்று மனம் துடித்தது.

திடீரென்று மனைவியின் முகம் சுருங்கியதைக் கவனித்த வன், "என்னம்மா?" அக்கறையாய் விசாரித்தான்.



"இலேசாய் தலைவலி அவ்வளவுதான்.."

"கவிதாதானே அந்தத் தலைவலி?"

"இல்லையில்லை. கணவனின் நெருங்கிய தோழி அவளைப் போய் நான் தவறாகப் பேசுவேனா?" மனோ ரஞ்சன் அடுத்துப் பேச வாயெடுக்குமுன் யாரோ ஒருவர் அன்பளிப்புடன் மேடையேறவும், இவர்களின் பேச்சு நின்றது. கவிதா தூரத்தில் நின்று இவளை முறைப்பது போல் தோன்றியது லதிகாவிற்கு!

13



மகாபலிபுரம் ரிஸட்டுக்கு வந்து மூன்று நாட்கள் ஓடிவிட்டு இருந்தது. ரிசப்ஷன் முடிந்த மறுநாளே கிளம்பி வந்து விட்டார்கள். ஆள் அரவமற்ற தனியிடம்: சுற்றிலும் தோட்டமும் கண்ணைத் தொடும் தூரத்தில் கடலும். ஈரக் காற்றும் என அவ்விடம் வெகுவாய் பிடித்துப் போனது லதிகாவிற்கு!

கொண்டு வந்த பொருட்களை எல்லாம் கணவனும் மனைவியுமாகவே ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். "லது... இங்கே வேலையாட்கள் யாருமில்லை. நீ தனியாய் மேனேஜ் பண்ணிக்கொள்வாய் இல்லையா? இல்லை யாரையாவது துணைக்கு அழைக்க வேண்டுமெயென்று?" வந்த முதல்நாள் கேட்ட மனோவிடம்,

"வேண்டாம். மனோ தனிமை எனக்குப் பழக்கப்பட்டது தான்..."



"நன்றி!"

"எதற்கு?"

"மனோவென்று அழைத்ததற்கு! லது எனக்கு இங்கே சைட்டில் கொஞ்சம் வேலையிருக்கு. அதன் பிறகு... உன்னை அவுட்டிங் கூட்டிட்டுப் போகிறேன்.."

இவள் வெறுமனே தலையை மட்டும் அசைத்து வைத்தாள்.

அவன் சொன்னாற்போல் மூன்று நாட்களுக்கு பேசக் கூட நேரமில்லாமல் தான் போனது. அவனும் இன்றி தனிமை இவளை வாட்டி வதைத்தது. தேவையில்லாத சிந்தனைகள் மனதை அலைக்கழித்தன.

உணவும் கூடுமான வரையில் அவன் வெளியே வாங்கி வந்து விடுவான். மதிய நேரம் வெறும் பாலும், பிரட்டும், பழமும் சாப்பிடுவாள். ஆனால் மூன்றாம் நாள், "நானே சமைக்கிறேன், இங்கே அதற்குண்டான எல்லா வசதியும் இருக்கிறது" என்றவளிடம்,

"உனக்கு சிரமமில்லை என்றால் எனக்கு ஆட்சேபணை யில்லை. எந்த மோசமான உணவையும் சாப்பிட நான் தயார்."

"நானென்ன விருந்தா சமைக்கப் போகிறேன். இரண்டு பேருக்குத்தானே? தவிரவும், குமட்டும் அளவிற்கு சாப்பாடு அத்தனை மோசமாகவும் இருக்காது."

"களைப்பாய் இருக்கிறது லது.. டீ தர்றியா? நான் குளித்து விட்டு வருகிறேன்."

ப்ரிஜ்ஜில் இருந்து பாலையெடுத்துக் காய்ச்சினாள். தேநீரைக் கலந்து இஞ்சியைப் பொடித்து சாறெடுத்து சூடான இஞ்சி தேநீர்



தயாரானது. உருளைக் கிழங்கு, வாழைக்காய் நீளவாக்கில் நைசாய் நறுக்கி கடலை மாவோடு சேர்த்து பஜ்ஜி தயாரித்தாள்.

"லது?" கணவனின் குரலில் அழைப்பு இவளுள் கிளர்ச்சி பிறந்தது. தேநீரோடு பஜ்ஜியும் வைத்து நீட்டினாள்.

"ருசி ரொம்பவும் அருமை லது. நீ சாப்பிடலையா?" என்றான் தட்டை காலியாக்கிவிட்டு.

"உங்களுக்கு பிடிக்குமோ, பிடிக்காதோ என்று கம்மி யாகத்தான் செய்தேன். நீங்கள் சரியான சாப்பாட்டு ராமன் என்பது இப்போதுதானே தெரிகிறது" இலகுவாய் சிரித்தாள்.

அவனுக்கும் சிரிப்பு வந்தது. "கணவன் சாப்பிடுகிறதைப் பார்த்து மனைவி கண் வைக்கக் கூடாது. இந்தா பாதியிருக்கு சாப்பிடு.." என்றவன் கடித்த எச்சிலை அவள் வாயில் திணித்தான். அமிர்தமாய் இனித்தது.

"மூன்று நாட்களாக வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிறாய். ரொம்பவும் கஷ்டப்படுத்தி விட்டேனா. வாயேன் லது சின்னதா ஒரு வாக் போயிட்டு வருவோம்."

பீச்சோரம் இருவரும் மணலில் கால் புதைய நடந்தார்கள். "இங்குள்ள சிற்பங்கள் எல்லாம் வெகு அழகு லது. இன்று இருட்டி விட்டது. நாளை வந்து பார்ப்போம். மூன்று நாட்கள் எப்படி பொழுதைக் கழித்தாய்? தூங்கினாயா?"

"இல்லை பகல் நேரம் தூங்கிப் பழக்கம் இல்லை."

"அதுதான் உடல் கொடி போல் இருக்கிறது. சில பெண்கள் ரெஸ்ட் எடுக்கிறேன் பேர்வழியென்று கன்னாபின்னாவென்று உறங்கி விடுவார்கள்."

''எல்லாப் பெண்களைப் பற்றியும் நல்ல அறிமுகமோ?''

''பார்த்தாயா? என்னையே வாருகிறாயே?'' சிரித்தான். இருவரும் பழச்சாறு அருந்தினார்கள். ''முன்னமே கேட்க வேண்டுமென்று நினைத்தேன். உன் தோழி கண்மணி எப்படி யிருக்கிறாள்?''

''அவளுக்கும், ஆனந்தனுக்கும் திருமணம் முடிந்து விட்டது. நீங்கள் வரவில்லையே?''

''அழைப்பு வந்தது. நான் டெல்லியில் ஒரு செமினார் விஷயமாய் போய் இருந்தேன்.''

''அம்மாவின் இறப்பிற்குப் பிறகு அவளை பார்க்கவே யில்லை. எப்போதாவது ஊருக்கு போன் பண்ணுவதோடு சரி.''

''ஒருநாள் நாம் பூஞ்சோலைக்குப் போவோம் லது. நாமிருவரும் மணம் புரிந்துக் கொண்டோம் என்று உன் தோழிக்கு தெரிவிக்க வேண்டும்.''

பூஞ்சோலைப் பற்றிய பேச்சு வந்ததும், தாயின் நினைவில் மௌனமானாள் லதிகா.

''என்ன லது? அத்தையோட நினைப்பு வந்திட்டதா?''

''ம்.. எனக்கென்று இந்த உலகில் இருந்த ஒரே ஜீவன் கையில் வைத்து எனைத் தாங்கிய உறவு பிரிந்தபோது நான் எத்தனை வேதனையில் துவண்டேன் தெரியுமா?''

''ஸாரிம்மா..! அப்போது அருகிலிருந்தும் உன்னைத் தேற்ற என்னால் முடியவில்லை. நானும் ஷைலு அத்தையும் அங்கு வந்திருந்தோம். ஆனால், அதற்குள் எல்லோரும் இடுகாட் டிற்கு வந்திருந்தார்கள். வாசலில் தலைவிரி கோலமாய் அழுது



கொண்டிருந்த உன்னைப் பார்த்தேன். நீ அத்தையின் பெண் என்பதைப் புரிந்து கொண்டேன். ஆனால் நேரில் சந்திக்க இயலவில்லை.''

''உன் மாமா மிகவும் தடங்கல் செய்தார். உன் தாய்க்கு நான் செய்ய வேண்டிய நியாயமான காரியங்களைக் கூட தடுத்தார். துக்க வீட்டில் சச்சரவு வேண்டாம் என்று கூறி ஷைலு அத்தை அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்.''

''லது... இந்த வீட்டு மாடியில் இருந்து பார்த்தாள். கடலும், கலங்கரை விளக்கின் ஒளியில் அது மின்னுவதையும் காண அத்தனை அழகாய் இருக்கும். ரொம்ப தூரம் நடந்து விட்டோம். போவோமா?'' என்றான்.

''ம்..'' என்றாள் ஒற்றைச் சொல்லாய்..''

வீட்டிற்குத் திரும்பியதும் பரோட்டாவும் குருமாவும் தயாரித்தாள். ஒருவரையொருவர் சீண்டிக் கொண்டு பேசிய தில் நேரம் கழிந்ததே தெரியாமல் இருந்தது.

இரவு நேரம் பௌர்ணமிப் பெண்ணின் முழு ஆக்ரமிப் பிற்குள் சிக்கிக் கொண்டு இருந்தான் வானக் காதலன். நிலவின் பேரொளியில் வெட்கப்பட்டு மேகங்கள் ஒளிந்து கொள்ள அதே அளவு அழகோடு அருகில் நடந்து வந்த மனைவியை இமைக்காமல் கண்டான் மனோரஞ்சன்.

''லது..'' மெல்ல அழைத்தான்.

''ம்..'' வார்த்தைகள் வெளிவர வில்லை. கண்கள் மட்டும் அசைந்தது.

''ஏதாவது... பேசேன்..'' என்றான்.



''என்ன பேச..?''

''இந்த நிலவும் அழகும் மனதை கொள்ளையடிக்கிறது. இல்லையா?''

மெல்லிய முனகலாய் ''ம்..''

''லது.. நிலவைப் போலவே நீயும் அழகுதான்'' அவள் விரல்களைத் தன்னோடு கோர்த்துக் கொள்ள இவள் வெட்கத் தால் சிவந்தாள். மெல்ல விரல்களைப் பிரித்துக் கொண்டு அறைக்குள் ஓடவும்.

''லது.. ஏன்? நான் தொடக் கூடாதா?'' அவள் அவஸ்தை யில் நெளிய முத்துக்கள் கோர்த்த மாலையொன்றை அவள் கழுத்தில் அணிவித்து பின்னங்கழுத்தருகில் சூடான மூச்சுக் காற்றுப் பதிய மெல்ல முத்தம் பதித்தான். அந்த அன்பான வருடலில் சிலிர்த்துப் போனாள் லதிகா. ''மனோ, நீங்கள் உண்மையிலேயே என்னை நேசிக்கிறீர்களா..?''

''இன்னும் உன் சந்தேகம் தீரவில்லையா? இத்தனை நாட்கள் கழித்து இதை நீ கேட்பதே தவறு.''

லதிகா கணவனின் மார்பினில் ஒண்டினாள். அந்த இளஞ்சூடான கதகதப்பிற்குத்தான் அவள் இத்தனை நாட்கள் ஏங்கியிருந்தாள். இதயத்தின் ஓசை வெகு துல்லியமாய் காதில் கேட்டது. மனோரஞ்சன் மனைவியை மேலும் இறுக்கினான்.

''லது..'' வாய் மட்டும் மூடாமல் முனகிக் கொண்டே யிருந்தது. கண்களுக்குள் எதையோ தேட, ''லது'' என்றழைத் தான் அழுத்தமாய். ஆழமாய் உயிர் வரை கொண்டு சென்ற அந்தக் குரலில் மேலும் துவண்டாள் மனோவின் கரங்களில்!



அவளிடம் மறுப்பேதும் இல்லை என்றதும் முழுமையாய் மனைவியை ஆக்ரமித்தான் மனோரஞ்சன்.

## 14



விடியல் பொழுது இனிதே துவங்கியது. தன்னை அணைத்துக் கொண்டு உறங்கும் கணவனை ஆசையும் வெட்கமுமாய் கண்டாள். அவன் உறக்கம் கலைந்து விடாமல் சர்வ ஜாக்கிரதையாய் எழுந்தாள்.

உடல் முழுவதும் மனோவின் வாசனை. குளிர்ந்த நீர் உடலின் ஒவ்வொரு பாகங்களிலும் தழுவும் சமயம் நேற்று உணர்ந்த கலவியின்பம் கண் முன் தோன்றியது. வெகு அருகில் மனோவின் முகம் தோன்றி கூச்சமூட்டியது. குளித்து முடித்து நீல நிற புடவைக்கு மாறினாள்.

காபியைத் தயாரித்து மனோவின் முகத்தை எப்படிப் பார்ப்பது என்ற ஏக்கம் மனதளவில் தோன்றி மறையும் நேரம் மனோரஞ்சன் வந்து பின்புறமாய் அணைத்தான். ''லதும்மா..'' என்ற அழைப்புடன்.

''விடுங்க.. மனோ..'' வெட்கத்தில் அவள் முகம் குங்குமமாய் சிவந்தது.

''ஏன்... பிடிக்கலையா?''

''மனோ ப்ளீஸ்... நான் டிபன் செய்யணும்..''

''வேணாம்.. வெளியே போய் சாப்பிடலாம்..'' அதற்குள் தொலைபேசி அழைத்தது. ச்சே... அலுப்புடன் நகர்ந்தான் மனோரஞ்சன்.

பேசிவிட்டு வந்தவனின் முகம் இறுகியிருந்தாற் போல் தெரிந்தது. "லது... சைட்டில் ஏதோ பிரச்சனையாம். நான் போய் பார்த்து விட்டு வருகிறேன். லாயர் வருவார். வந்தால் வெயிட் பண்ணச் சொல்லு." அவன் அடுத்த ஐந்தே நிமிடங்களில் கிளம்பியும் விட்டான்.

"டிபன் சாப்பிடவேயில்லையே?"

"எனக்கும் சேர்த்து நீயே சாப்பிடு டியர்!" அவன் கிளம்பியதும் வீட்டிற்கும் மாமாவிற்கும் போன் செய்து பேசினாள். பின்பு நேரத்தை கழுத்தைப் பிடித்து தள்ளுவது போல் வெறுப்பாய் இருந்தது. வாசலில் அழைப்பொலி கேட்டதும் மனோதான் வந்து விட்டானோ என்று ஆவலோடு கதவைத் திறந்தவள் கவிதாவைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"என்ன லதிகா வீட்டுக்கு வந்தவளை வாயென்று கூட அழைக்க மாட்டாயா? இதுவே ரஞ்சியாய் இருந்தால் நான் வந்ததைக் கொண்டாடுவான்."

"ஸாரி நான் உங்களை எதிர்பார்க்கலை வாங்க" ஒதுங்கி வழிவிட்டாள்.

சிகப்பு நிறத்தில் ஸ்லீவ்லெஸ் சல்வாரில் வந்த அவளைக் கண்டதுமே ஏதோ அபாயம் கூடவே வந்ததையுணர்ந்தாள் லதிகா.

சோபாவில் அமர்ந்தவள் சுற்றிலும் பார்வையை ஓட விட்டாள். "ரஞ்சி இல்லையா?"

"இல்லே வெளியே போயிருக்கார். என்ன சாப்பிடறீங்க?"

"எதுவும் வேண்டாம். நீங்கள் இங்கு வருவது பற்றி ரஞ்சி எனக்கு முன்பே தெரிவித்து இருந்தார். அவர் இப்போது இங்கு



இல்லாததும் நல்லதிற்குத்தான். நானே உன்னிடம் தனியாக பேச வேண்டும் என்றுதான் நினைத்து இருந்தேன். நல்ல வேளையாய் அந்த சந்தர்ப்பம் தானாகவே அமைந்து விட்டது. நானும் ரஞ்சியும் படிக்கும்போதே காதலித்தோம். மணமேடை வரை நெருங்கிய எங்கள் திருமணம் ரஞ்சியின் தாத்தாவால் நின்று போனது.

"அதன் பிறகு, நான் பாரினில் இருந்து வந்தவுடன், ரஞ்சியைச் சந்தித்தேன். உயிலில் உன்னைத் திருமணம் செய்தால்தான் சொத்துக்கள் என்று எழுதியிருந்ததாகவும், இறக்கும் தறுவாயில் சத்தியம் வாங்கிக் கொண்டதாகவும் அதனால் வேறு வழியின்றி உன்னைக் கல்யாணம் பண்ணிக் கிட்டாராம்..

"பூஞ்சோலையில் உன்னைச் சந்தித்தது வரை அனைத்தை யுமே என்னிடம் ஒன்று விடாமல் சொல்லியிருந்தார். நீயும் அவரும் விருப்பமின்றி மணந்து கொண்டது வரை.."

லதிகாவிற்கு பெரும் அவமானமாய் இருந்தது. அந்தரங்கம் என்று யாரும் அறியாமல் பொத்தி பொத்தி வைத்த அத்தனை விஷயங்களையும் இவளிடம் மட்டும் சொல்லி இருக்கிறாரே. இது என்ன நியாயம். இதைவிடவும் வேகமான அம்பாய் இருந்தது அவள் அடுத்து கூறிய விஷயம்.

"ரஞ்சனும், நானும் இன்னும் அதே நேசத்துடனும், அன்புடனும்தான் இருக்கிறோம். எங்களை வாழ்வில் இணைய விடாமல் தடுக்கும் மிக முக்கியமான தடை நீதான் லதிகா. அதனால்தான் உன்னை விட்டு பிரிந்து வரும்படி ரஞ்சியிடம் கேட்டிருந்தேன்.



"நீயே கூடுமானவரையில் அவரை விட்டுப் பிரிந்து விடுவாய் என்று சொன்னார். இருந்தாலும் எங்களின் விருப்பம் அறிந்து கொண்டால் சீக்கிரமாய் அது நடக்கலாம் இல்லையா? தவிரவும் நாங்களிருவரும் நீண்ட நாள் காத்து இருந்து விட்டோம் லதிகா."

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? நான் அவரை விட்டு பிரிந்து செல்ல வேண்டுமா? ஆனால் அவர் என் கணவர் என்பதை மறக்க வேண்டாம் கவிதா.."

"அது ஒப்பந்த உறவுதானே... ஏதோ சந்தர்ப்ப வசத்தினால், அவர் உன்னை நெருங்கி இருந்தாலும் அதுவும் என்னை மனதில் கொண்டுதான் ஏதோ உணர்வுகளின் வடிகாலாய் நினைத்திருக்கலாம். நீயும் வாழாமல் எங்களையும் வாழ விடாமல் நந்தியாய் நிற்காதே! அதற்கு நஷ்ட ஈடும் ரஞ்சி தந்து விடுவார்.

"சரி ரஞ்சி! வந்தால் நான் வந்தேன் என்று சொல்" அவள் ஹீல்ஸ் சப்திக்க நடந்து சென்றாள்.

'கவிதா சொல்வதெல்லாம் உண்மையா? தாத்தாவின் உயில்படி சொத்து தனக்கு வேண்டும் என்ற ஒப்பந்தத்தில் தான் திருமணம் நடந்தது. அதை மனோவும் ஒப்புக் கொண்டு இருந்தான். தவிரவும் இவர்கள் இருவருக்குமே தெரிந்திருந்த விஷயங்கள் மூணாவது நபரான கவிதாவிற்கு எப்படித் தெரியும்? மனோ சொல்லாமல்.

இருவருக்கும் நெருக்கம் உண்டு என்கிற பட்சத்தில் என்னையேன் வலுக்கட்டாயமாய் மணக்க வேண்டும். இந்த அழகில் நேற்று மனோவிடம் மனைவியாய் முழுமையாய் தன்னை இழந்து விட்டாளே!



ஆனால் அவன் பேச்சிலும், கண்களிலும் முக்கியமாய் மனோவின் தொடுதலிலும் உண்மை இருந்ததே. மனம் குழம்பியது. அடிக்கடி மாறும் மனோவிடம் இந்த மாற்றம் தோன்றுவது இயல்புதானே! அழுகைப் பொத்துக் கொண்டு வந்தது. உலகில் எல்லோரும் இன்புற்று இருக்க தான் மட்டும் சோகத்தில் மூழ்கியிருப்பது போல்பட்டது.

எல்லாக் கவலையும் நீங்கி, அவனிடம் முழுமையாய், தன்னையே தந்த பின், புத்தி கூர்மையானது. அப்படித் தவறேனும் நடந்திருந்தால், அதற்கான நஷ்ட ஈடும் தரத் தயாராய் இருப்பதாய் கவிதா கூறினாளே! அப்படியானால் மனோ அத்தனை கேவலமாகவா என்னை நினைத்து விட்டீர்கள். அழுகை குமுறியது.

எத்தனை நேரம் அப்படியே இருந்தாளோ தெரியவில்லை, மனோரஞ்சன் வந்து உலுக்கியதும்தான் நினைவு வந்தது.

"ஏய்! லது என்னடாயிது? லைட்டைக் கூடப் போடாமல்.. இருட்டில்.." தலைகுப்புற அவள் இருந்த நிலையினைக் கண்டதும், "என்னம்மா உடம்புக்கு ஏதும் செய்கிறதா? டாக்டரிடம் போவோமா?" கனிவுடன் விசாரித்தான். அழுதழுது வீங்கி சிவந்து போயிருந்த முகம் அவனைக் கலக்கமடையச் செய்தது.

"என்னடாம்மா... அத்தை ஞாபகம் வந்திட்டதா?" மார்போடு அணைத்துக் கொண்டு முதுகை வருடினான். வருடல் இதமாக இருந்தாலும், அதில் அதற்கு மேல் ஒட்டிக் கொண்டு இருக்க மனம் வரவில்லை. கவிதா கண் முன் வந்து நின்றாள்.

"இன்று கவிதா வந்திருந்தாள்."

''அது எனக்குத் தெரியும்.''

''ஓஹோ.. முன்னமே சொல்லி விட்டுத்தான் இங்கே வந்தாளோ... அப்போ பேசியதையும் அறிந்திருப்பீர்களே?''

''என்ன பேசினாள்? லாயரிடம் டாக்குமெண்ட் கேட்டிருந்தேன். இவள்தான் கொண்டு வந்து தந்தாள்.''

''எத்தனை அழகாய் நடிக்கிறீர்கள். மனோ, செய்யும் செயல் அத்தனைக்கும் சூத்திரதாரி நீங்கள்தானே? ஏதும் அறியாதது போல் நடிப்பது ஏன்?''

''கவிதா உங்களைப் பற்றியெல்லாம் சொல்லிவிட்டாள்..''

''என்ன பேசுகிறாய் நீ?''

''உண்மையை பேசுகிறேன். கசக்கத்தான் செய்யும். இனியும் உங்களிடம் பொம்மையாய் ஆடத் தயாராய் இல்லை.''

''லது..!'' அவன் அருகில் வந்து அவளின் தோளைப் பற்ற முயன்றான்.

''தொடாதீர்கள்! அடிக்கடி குணம் மாறும் உங்களுடன் வாழ என்னால் முடியாது. இனி என் பொருட்டு உங்கள் சந்தோஷத்தை இழக்க வேண்டாம். எந்தப் பத்திரமானாலும் சரி, இப்போதே தாருங்கள், கையெழுத்துப் போட்டுத் தந்து விடுகிறேன்...'' அழுகையினூடே சொல்லிவிட்டு அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

மனோ நிலைகுலைந்துபோனான். நேற்றைய இரவின் இனிமையில் தன்னையே மறந்து போனவன் மனைவியின் இந்தத் திடீர் மாற்றம் தாள முடியாமல் போனது. கவிதாவிற்கும் எனக்கும் இடையில் எதுவுமில்லை என்பதை நான் எப்படி இவளுக்குப் புரிய வைக்கப் போகிறேன்.



இரண்டு கைகளாலும் தலையை அழுந்தப் பற்றிக் கொண்டான். இதற்கெல்லாம் காரணம் கவிதாதானே. என்னிடம் பேசி பிரயோஜனம் இல்லையென்று நேரடியாய் லதிகாவிடம் வந்து அளந்து விட்டாள் போலும். இந்த முட்டாளும் எல்லாவற்றையும் நம்பி இருக்கிறாள்.

எவ்வளவோ யோசனைகளோடு எப்போது உறங்கினான் என்றே தெரியாது. ஆனால் அதிகாலையில் விழிப்பு வந்து விட, தான் சோபாவிலேயே உறங்கியிருப்பதை உணர்ந்தவன் தன் மேல் போர்வை மூடியிருப்பதை புரிந்து முதற் காரியமாய் அறைக்குள் ஓடினான்.

அங்கே லதிகாவைக் காணவில்லை என்றதும், புருவம் முடிச்சிட்டது. எங்கே போய் இருப்பாள்? மனதின் உறுத்தலோடு குளியலறை சமையலறை என எல்லாயிடமும் தேடினான். இறுதியில் டீபாயின் மேலிருந்த டைரி அவன் கவனத்தை ஈர்த்தது.

புரட்டினான். சில காதல் வரிகளோடு அவனை சந்தித்த சம்பவங்களை எழுதியிருந்தாள். கடைசியில்....

*அன்புள்ள என் மனோவிற்கு,*

*என்று முதன் முதலாய் உங்களைச் சந்தித்தேனோ அன்றே உங்களில் விழுந்து விட்டேன். முதற் பார்வையிலேயே என் மனதைக் கொள்ளையடித்து விட்டீர்கள். என் காதலை அன்பை சொல்ல நான் எத்தனையோ நாள் காத்திருந்தேன். புன்னகையிலும், ஒரு விழிப்பார்வையிலும் என் மௌனப் பெட்டகம் மூடியேயிருந்தது.*



*சந்தித்த முதல் நாளே காதல் சாத்தியமா? என்று நானும் யோசித்தேன். என் சுய நினைவினை முந்திக் கொண்டு உங்கள் விழிகள் அதை உண்மையென்றது. தாயை இழந்து கதறிய சமயம் கூட உங்கள் ஆறுதலுக்கு மனம் ஏங்கியது.*

*ஆனால் சென்னையில் முரளியுடன் உங்களைச் சந்தித்தபோது நான் எத்தனை மகிழ்ந்தேன் தெரியுமா? எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் எனக்கு அத்தான் என்றதும் நான் அடைந்த இன்பத்திற்கு அளவேயில்லை. மனோ..! ஆனால் ஆசைகளால் கட்டிய கோபுரம் இடிந்து விழுந்தது. சொத்திற்காக உன்னை திருமணம் செய்கிறேன் என்றீர்களே!*

*அன்று ரொம்பவும் இடிந்து போனேன். முரளியின் திருமணத்திற்குப் பின் உங்களிடம் வந்து என் அன்பைச் சொல்ல வேண்டுமென்று நினைத்து இருந்தேன். ஆனால் உங்கள் மனதில் என் மேல் ஒரு துளி கூட காதல் இல்லையென்பதை உணர்ந்தேன். அந்த விநாடியே இறந்து விட்டேன் நான்!*

*இப்போது கவிதா வந்து இன்னும் உங்கள் இருவருக்கும் நெருக்கம் இருப்பதாயும், என்னால்தான் உங்களின் இன்ப வாழ்வு தடைப்பட்டு இருப்பதாகவும் கூறினாள். இனியென்னால் உங்களுக்கு எந்தத் தடையும் இராது மனோ! நீங்கள் தாராளமாக கவிதாவை மணந்து கொள்ளலாம்...*



*நீங்கள் கொண்டு வந்திருக்கும் வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்திட்டு இருக்கிறேன். உங்களுக்கு வேண்டியதை பூர்த்தி செய்து கொள்ளவும். என் வாக்கை காப்பாற்றி விட் டேன். இனியென்னைத் தேட மாட்டீர்கள் என்று நம்புகிறேன். நான் போகிறேன்.. மனோ! உங்களை விட்டு வெகு தொலைவில். நீங்கள் கவிதாவோடு சந்தோஷமாய் இருங்கள். உங்கள் நினைவுகளோடு உயிருள்ளவரை வாழ்ந்திட என்னால் முடியும்!*

*மீண்டும் சில நாட்கள் உங்களோடு வாழ கிடைத்த சந்தர்ப்பத்திற்கு நன்றி.*

*உங்களது லது..''*

என்று முடித்திருந்தாள். மனோரஞ்சன் யோசிக்கவும் மறந்து போய் அமர்ந்து விட்டான்.

15



**சொ**குசு பேருந்தில் அமர்ந்திருந்த லதிகா திருப்போரூரை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தாள். நேற்று பூஞ்சோலைக்கு போன் பேசியபோது பரிமளாக்கா கண்மணியும் அவள் கணவனும் திருப்போரூரில் இருப்பதாய் கூறிட, இப்போது அவள் இருக்கும் இடமும் மனோ அறியக் கூடாது என்பதற்காக கண்மணியிடம் சொல்வதென்று தீர்மானித்தாள்.

கோவிலின் முன் பேருந்து நிறுத்தப்பட்டது. சலனப்பட்ட மனதுடன் கோவிலுள் நுழைந்தாள். சிலர் பொங்கலிட்டுக் கொண்டு இருந்தார்கள். லதிகா முருகனை மனமுறுக வேண்டினாள்.

தியான மண்டபம் அருகில் இருந்த மரத்தடியில் அமர்ந்து, கண்களை மூடிட மூடிய கண்களுக்குள் மனோவின் புன்னகை முகம்.

கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேற முயன்ற நேரம் மனம் பாறையாய் கனத்துத்தான் போயிருந்தது. ஆனால் தன்னை சுமையாய் நினைக்கும் மனோவிடம் இருக்கக் கூடாது என்ற வைராக்கியத்துடன்தானே கிளம்பி வந்தாள்.

தாயின் அரவணைப்பில் இருந்த வரையில் எத்தனை மன நிம்மதியாய் இருந்தாள். ஆனால் இன்று தனிமைச் சுவர் எழுப்பி தாம்பத்தியம் நடக்கிறது. அவள் மனோவை இன்னொருத்தி சொந்தம் கொண்டாடுகிறாள். எத்தனை பெரிய வேதனையிது!

காதருகில் கிசுகிசுப்பாய் இரண்டு பேச்சுக் குரல்கள். அதில் தன் பெயர் அடிபடவும் கூர்மையாய் கவனித்தாள்.

''என்ன கவி சொல்றே? அந்த லதிகாவைப் போய் பார்த்தியா?''

''ஆமாம். லாயர் அங்கிள் டாக்குமெண்ட் தருவதற்காக மனோரஞ்சனின் காட்டேஜ்ஜுக்குப் போவதாய் சொன்னார் அப்போதுதான் ரஞ்சன் மகாபலிபுரம் வந்திருப்பது தெரிந்தது எதிர்பார்த்தபடியே லதிகா தனியாகத்தான் இருந்தாள்.



''சாதாரணமாய் பேச்சுக் கொடுத்து, நானும் ரஞ்சனும் இன்னமும் பழகுவதாகவும், நீதான் அதற்குத் தடையாய் இருக்கிறாய் என்றும் நீ பிரிந்து போய்விடு என்று..''

''ஒரு நிமிடம் ஏன் கவி? மனோரஞ்சனை வேண்டாமென்று தூக்கியெறிந்தவள் நீ பிறகு அவன் யார் கூட வாழ்ந்தால் உனக்கென்ன வந்தது? நாம்தான் மணம் புரியப் போகிறோமே அப்புறம் அவனெதுக்கு?''

''என்ன தீபக் இப்படி கேட்டுட்டே? ரஞ்சன் ஒரு திமிங்கிலம். ஏதோ வெளிநாட்டு மோகத்துல அவனை நான் உதறிட்டேன். அமெரிக்கா லைப் எனக்கு ரொம்பவே அலுத்து விட்டது. திரும்பி இந்தியா வந்து பார்த்தால் ரஞ்சனின் வளர்ச்சி என்னை பிரமிக்க வைத்தது.

''சரி பழைய உறவைப் புதுப்பிக்கலான்னு அவன்கிட்டே மறுபடியும் கல்யாணத்தைப் பத்தி பேசினேன். ஆனா லதிகாவைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக எடுத்தெறிந்து பேசி விட்டான். நீயே சொல் அவளுக்கு நான் எந்த விதத்தில் குறைந்து போய்விட்டேன். எத்தனையோ பேர் என் விழி அசைவிற்காய் காத்திருக்க இந்த ரஞ்சன் என்னை உதாசீனப்படுத்தி விட்டதை என்னால் தாங்க முடியவில்லை. பழிவாங்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்தபோது அதைவிட்டு வைக்கலாமா பயன்படுத்தி விட்டேன். இனிமேல் ரஞ்சன் தலைகீழாய் நின்றாலும் லதிகா திரும்பிப் பார்க்க மாட்டாள்.''

''இதனால் உனக்கென்ன லாபம்?''

''ஏன் இல்லாமல்..? என்னை ஒதுக்கிய மனோவின் வாழ்வையே தலைகீழாக்கி விட்டேனே... இது போதாதா? எல்லாவற்றிலும் வெற்றி பெற்றவன் என்ற கர்வம் அவனுக்கு உண்டு. இப்போது வாழ்வில் அடிபட்டு விட்டானே?



இதைவிடவா அவனுக்கு தோல்வி வேண்டும்..'' குரூரமாய் சிரித்தாள் கவிதா. தொடர்ந்து அவர்கள் கிளம்புவதும் புரிந்தது.

கல்லாய் சமைந்து இருந்தாள் லதிகா. ச்சீ ஒரு மூணாவது மனுஷியின் பொய்யை நம்பி நான் எத்தனை பெரிய தவறு செய்து மனோவைத் தவறாய்ப் பேசி விட்டேனே. உடனேயே அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற உத்வேகம் எழுந்தது.

கவிதா கூறிய விஷயம் பொய்யாய் இருந்தாலும், தாத்தாவின் உயில்படி சொத்துக்காகத்தானே தன்னை மணந்து கொண்டான். ஆனால், கவிதாவிடம் என்னை விரும்புவதாய் வேறு சொல்லியிருக்கிறாரே! அது.. சாதகமாய் பேசியது மனசாட்சி. மனதின் இன்னொரு மூலை அதை மறுத்தது. கவிதாவிடம் இருந்து தப்பிக்க தன்னைப் பயன்படுத்திட இருக்கலாமே மனோ.. இதையெல்லாம் செய்பவன்தானே!

மாமாவின் குடும்பத்தைக் காரணம் காட்டி என்னைக் கல்யாணம் செய்வானேன். காதல் இருந்தால் நேரடியாக சொல்லி இருக்கலாமே? எப்படிப் பார்த்தாலும் மனோவின் மனம் புரியாத புதிராகத்தான் இருந்தது.

மறுபடியும் இறைவனை வணங்கி விட்டு வெளியே நடந்தாள். உனக்கு என்ன தேவையென்றாலும் நான் ஒருவன் இருக்கிறேன் என்று மாமா சொல்லியது நினைவிற்கு வந்தது.

மனோவைப் பற்றிய முழு விவரங்களையும் கூறினால் ஒழிய மாமா நம்ப மாட்டார். அவள் மனோவைப் பற்றி அவளே பிறரிடம் குறை கூறுவதா?

அவன் மனம் எப்படியோ? இவள் உண்மையாகத்தானே நேசித்தாள். அதை மறைக்க மனம் வராதே? யாரிடமாவது



மனம் விட்டுப் பேசினால் தேவலாம் போல் இருந்தது. கண்மணியிடம், தான் இந்த பாரங்களை இறக்க முடியும்.. மனதிற்குள் நினைவு வர கிளம்பியே விட்டாள்.

அத்தனை இரவு வேளையில் கண்மணி லதிகாவை எதிர் பார்க்கவில்லை என்பதை மேலேறிய புருவம் உணர்த்தியது.

''என்னடியிது! இந்த நேரத்தில் வந்திருக்கே?'' விளக்கை ஒளிர விட்டவள், லதிகாவின் கழுத்தில் மின்னிய தாலிச் சரடும், நெற்றி வகிட்டுக் குங்குமமும் குழப்பத்தை ஏற்படுத்தியது. ''லதி! உனக்கு கல்யாணம் ஆயிடுச்சா? என்கிட்ட கூட சொல்லாமலே யாருடி அவரு?''

''பொறுமையா இரு கண்மணி! அவங்க முகமே சரியில்லை முதல்ல சாப்பிட்டாங்களான்னு கேட்டு பரிமாறு. அப்புறமா பேசிக்கிட்டே இரு..'' ஆனந்தன் கண்மணியின் கணவன் உண்மையான பரிவோடு கூற இவள் கண்கள் அவனை நன்றியோடு நோக்கின.

''வா லதி! முதல்ல கை கால் கழுவிட்டு சாப்பிடு. அப்புறமா மீதியைப் பேசலாம்..'' சாதத்தைக் கண்டவுடன்தான் நேற்று காலையில் சாப்பிட்ட தோசையைத் தவிர வயிற்றுக்கு ஒன்றும் போடவில்லை என்று உணர்த்தியது. மனதிற்கும், வயிற்றுக்கும்தான் எத்தனை ஒற்றுமை.

இரண்டு கவளம் உண்டிருப்பாள். முதல் நாள் கணவனோடு சீண்டலும் கேலியுமாய் உணவருந்தியது, நெஞ்சுக்குள் முள்ளாய் குத்தியது. சாப்பிடப் பிடிக்கலை. இந்நேரம் மனோயென்ன செய்து கொண்டிருப்பீர்கள்..!

என்னைக் காணவில்லை என்று துடிப்பீர்களா? இல்லை, தான் நினைத்த மாதிரியே சொத்து சேர்ந்து விட்டது என்று

சந்தோஷப்படுவீர்களா? என யோசித்தவளை கண்மணி உலுக்கினாள்.

"என்ன லதி? பாதி சாப்பாட்டிலேயே எழுந்திட்டே. பேசாம எதையோ பறிகொடுத்தவ மாதிரி உட்கார்ந்திட்டு இருக்கே! என்னடி ஆச்சு?" ஆறுதலான இணை கிடைத்துவிட்ட நிம்மதியில் நடந்த அத்தனையையும் கூறிவிட்டாள் லதிகா.

"அப்போ உன் கணவர் என்னை பெண் பார்க்க வந்த மனோரஞ்சன்தானா?"

"ஆமாம்.. அவர்தான்!"

ரொம்பவும் பெரிய முட்டாள்தனம் செய்து விட்டாய் லதி!"

"கண்மணி அப்போ நான் எடுத்த முடிவு தப்புங்கிறீயா?"

"கண்டிப்பா.. எங்க கல்யாணம் முடிந்த ஒரு வாரத்திலே அதாவது நாங்க ஊட்டிக்கு கிளம்பிக் கொண்டு இருந்த சமயம் என் பேருக்கு ஒரு கடிதம். வந்தது எழுதியது யாருன்னு தெரியுமா?"

"யாரு?"

"மனோரஞ்சன்.."

"அவரா?"

"ஆமாம். ஆனா ஊருக்கு கிளம்பற அவசரத்திலே கல்யாணத்திற்கு வந்த வாழ்த்தா இருக்குமின்னு நான் அதைப் பிரிச்சுப் படிக்கலை. ஒரு வாரம் கழிச்சுப் பார்த்தப்போ லேட் பண்ணிட்டேனோன்னு ஒரு குற்ற உணர்ச்சியே வந்திட்டது.."

"அப்படியென்ன எழுதியிருந்தார்?"



"அதை என் வாயாலே சொல்றதை விட நீயே படி. அப்போதான் புரியும்.. ஒரு நிமிஷம் இரு..." உள்ளே சென்ற கண்மணி ஒரு வழுவழுப்பான பேப்பரை அவள் முன் நீட்டினாள். அதில் மனோவின் அழகான கையெழுத்து.

*"அன்பு சகோதரி கண்மணிக்கு, நலமறிய ஆவல். திருமணச் செய்தி கேட்டறிந்தேன். மகிழ்ச்சி. தங்கள் மனம் போல் நடந்தேறிய திருமணத்திற்கு நானும் ஒரு காரணம். அந்த உரிமையில் நான் உங்களிடம் ஒரு கோரிக்கை வைக்கப் போகிறேன். உங்கள் தோழியை முதற் பார்வையிலேயே எனக்குப் பிடித்து விட்டது.*

*என் எதிர்கால இணையும் அவள்தான் என்று நான் முடிவெடுத்து விட்டேன். ஆனால் அதை நேரிடையாக லதிகாவின் முன் சொல்ல முடியவில்லை. காரணம் அவள் மனதில் வேறு யாராவது இருப்பார்களோ என்ற எண்ணம் எனக்கு உண்டானது.*

*அதனால்தான் இந்த விஷயத்தில் லதிகாவின் மனமறிந்து கூறினால் சந்தோஷம். உதவுவீர்கள் என்று நம்புகிறேன்..*

*மனோரஞ்சன்."*

"இப்போ சொல்லுடி? மனோ உன்னை விரும்பியது உண்மைதானே. தானாக உன்னை விரும்பி வந்தவரை இப்படி உதாசீனப்படுத்தி விட்டு வந்திருக்கிறாயே? இதை நான் என்னவென்று சொல்வது?"

"இந்தக் கடிதத்தை நான் முன்னமே தந்து இருக்க வேண்டும். நான் ஊட்டியிலிருந்து திரும்பி வந்த சமயம் நீ அம்மாவை



இழந்திட்டு மாமா வீட்டோடு போய் விட்டாயென்ற செய்திதான் எனக்குக் கிடைத்தது. இவருக்கும் வேலை அதிகமாய் இருந்ததால், என்னால் அங்கு வர முடியவில்லை. நீ என்னடாவென்றால்..!"

"கண்மணி சொல்றது உண்மைதாங்க. உங்க கணவரை நீங்க புரிந்து கொள்ளவில்லை. எல்லா பெண்களுமே அப்படித்தான். ஆண்களின் பரிசுத்தமான அன்பை புரிஞ்சுக்காம எதையாவது ஏடாகூடமா செய்து உங்க வாழ்க்கையை நீங்களே குளறுபடியாக்கிட்டீங்க?"

ஆனந்தனின் பேச்சில் உண்மை சுட்டது. தவறு முழுக்க தன்னுடையதுதானோ என்ற எண்ணம் எழுந்தாலும், உயிலைக் காரணம் காட்டி ஏன் மணக்க வேண்டும் என்ற கேள்வியும் கூடவே எழுந்தது.

மனம் ஒரு குரங்கு என்று சும்மாவா சொன்னார்கள். அது தன் இஷ்டம் போல ஓடித் திரிகிறது. சில சமயம் தலைகீழாய் குட்டிக் கரணமும் போடுகிறது என்பது உண்மைதான்.

லதிகாவின் மனம் கணவனின்பால் சாயத் துவங்கியது. மனோ எல்லோரும் கூறுவது போல் நான்தான் தவறு செய்து விட்டேனா? அழுகையோடேயே இரவைக் கழித்தாள்.

## 16



**வி**டியற்காலை. கதவு திறக்கக் கூட அவகாசம் தராமல் அவள் இருந்த அறைக் கதவு படபடவென தட்டப்பட்டது. கதவைத் திறந்தாள். எதிரே மனோரஞ்சன். நம்ப முடியாமல் இமைகளை கொட்டிப் பார்த்தாள்.



தலை கலைந்து கசங்கிய உடையுடன் ஆனால் பார்வை மட்டும் கூர்வேலாய்! அவளைக் குத்திக் குற்றம் சாட்டியது.

அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தவன், கதவைச் சாத்தி தாளிட்டான்.

"என்ன பைத்தியக்காரத்தனம் லது இது? என்னை விட்டு ஒரேடியாய் பிரிந்து போய்விட உன்னால் முடியுமா? எதையும் யோசித்தே பார்க்க மாட்டாயா? ஒரு முழு பகல் உன்னைக் காணாமல் நான் எத்தனை தவித்துப் போனேன் தெரியுமா?"

அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த துக்கமும் கண்ணீரும் அணை தாண்டியது. "மனோ.." என்னும் ஏக்கக் குரலோடு கணவனைக் கட்டிக் கொண்டாள் லதிகா. விம்மியவளை மெல்லமாய் வருடியவன், அவளைப் பிரிந்து நேருக்கு நேராய் எதிரில் நிறுத்தி கேட்டான்: "ஏன் இப்படிச் செய்தே லது?" என்று.

"கவிதா வந்து.."

"அவள் ஆயிரம் சொன்னாலும், இந்த நாற்பது நாட்களில் நான் உன் மேல் கொண்ட அன்புதனை ஒரு விநாடியில் கூடவா உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதுவும் நாமிருவரும் இரண்டற கலந்த பிறகும்..!"

"அந்த கலப்பு கூட அவளை நினைத்துத்தான் என்றும் சந்தர்ப்ப வசத்தால் நடந்தது. அதற்கு ஈடாகத்தான் ஏதும் மனோ தரத் தயார் என்றாள். நீங்கள் சொல்லாமல் நமக்குள் நடந்த விஷயம் அவளுக்கு எப்படி தெரியும் என்று நான் நினைத்தேன்.."

''மக்கு.. காதலித்து மணம் புரிந்தவர்கள் கலவியடைய மாட்டார்களா? நீ குழம்பிய குட்டையென்று நினைத்து மேலும் கலக்கி விட்டிருக்கிறாள். நீயும் ஏதோ போல தலையாட்டி இருக்கிறாய்..''

''ஆனால் உயில் விஷயம்?''

''அவளுடைய மாமாதான் நம் கம்பெனி லாயர். அவர் மூலம் எதையாவது தெரிந்து வைத்திருப்பாள். அவள் பேச்சை விடு. உன்னைக் காணாமல் எப்படியெல்லாம் தவித்தேன் தெரியுமா? அவசரமாய் தவறான முடிவேதும் எடுத்து விட்டாயோ என்று! கடற்கரையில் கூட ஆட்களை விட்டு தேடச் சொல்லி.. அப்படியேதும் நடந்திருந்தால், நானும் இருந்திருக்க மாட்டேன் லது!''

''என்ன பேச்சு இது? விடுங்கள் ஆமாம் நான் இங்கே யிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எல்லாம் உன் தோழியின் உபயம்தான். கண்மணிதான் எனக்குத் தகவல் தெரிவித்தாள். அதன் பிறகு கண நேரம் கூட காத்திருக்காமல் நான் இங்கே வந்துவிட்டேன்..''

''நீங்கள் என் மேல் கொண்ட காதலையும் கண்மணிதான் கூறினாள்..''

''யாராவது சொன்னால்தான் உனக்குப் புரியும் போல. சொந்த புத்தியே இல்லையோ. அழகை வாரியிறைத்த கடவுள் உனக்கு மூளையையும் அழகிற்காகவே படைத்து விட்டான் போலும்.''



அவள் விளையாட்டாய் முறைக்கவும்,

''பின்னேயென்ன?''

''நீங்கள் மட்டும் என்னவாம்? முதல் நாள் அன்பொழுக பேசினால் மறுநாள் உயிலைப் பற்றி பேசுவீர்கள். என்னை மணந்ததே கட்டாயம் என்பதே போல் பேசும் போது, அடிக்கடி மனம் மாறியதைப் போல் உணர்ந்தேன். முதன் முறை பார்த்தவுடனேயே காதல் பிறந்ததைப் பற்றி பேசினால் ஒப்புக் கொள்வீர்களா? அதுவும் பெண்களைப் பற்றிய தவறான மதிப்பீட்டில்..!''

''எல்லாப் பெண்களையும் சொல்ல வில்லையே? கவிதா மாதிரி கண்ணாடிக் கல் இருக்கும் இடத்தில் உன்னைப் போல் வைரமும் இருக்கிறதே!''

''அப்பப்பா குளிருகிறது!'' அவள் போலி பாவனையில் சிணுங்கவும்,

''வா..! நான் உன் குளிரைப் போக்குகிறேன்'' என்று அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

''முதற் பார்வையிலேயே என் மேல் காதல் கொண்டேன் என்று எழுதி இருந்தீர்கள், பிறகு ஏன் சொத்திற்காக மட்டுமே மணப்பதாய் கூறினீர்கள். அந்த சொற்களில் நான் எத்தனை அடிபட்டு போய் இருப்பேன். என்னமோ நான் முக்கியம் இல்லாததைப் போல் பேசினீர்களே?''

''இல்லேம்மா, முதன் முதலில் உன்னைச் சந்தித்து விட்டு வந்ததுமே என்னால் எந்த வேலையிலும் முழுமையாய் ஈடுபடவே முடியவில்லை. சரியாய் ஏழு நாட்கள் கழித்து நான்



பூஞ்சோலைக்கு வந்தேன். அங்கே நாம் சந்தித்த இடத்தில் காத்திருந்தேன்...

''இதோ என் உள் மனம் சொல்லியது, நீ வருவாய் என்று. நீயும் வந்தாய். ஆனால் முரளியோடு! யாரோ ஒருவனுடன் உன்னைக் கண்டதும் என் மனம் ரொம்பவே வலித்தது லதும்மா..

''அங்கிருந்தவர்களும் முரளியைத்தான் நீ கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாய் என்று பேசிக் கொண்டார்கள். பிறகு மஞ்சரி அத்தையின் இறப்பிலும், நான் விலகி நின்று உன்னைக் கண்ட போது முரளியின் அருகில்தான் இருந்தாய்! பிறகு உன்னைக் கடையில் சந்தித்தேன். அப்போதும்..''

''அந்நியனுடன் பேசினால் என்ன மனோ, என் மனம் முழுக்க நீங்கள்தானே இருந்தீர்கள்?''

''நீ உன் மனதை திறந்து காட்டவேயில்லையே. விழிகளால் தானே பேசினாய். அது புரிந்த போதும் நிச்சயப்படுத்த முடியவில்லையே? மணமான பிறகும் கூட நீ அடிக்கடி விடுதலை பற்றிதானே பேசினாய்..''

''அது உங்களுக்கு என்மேல் அன்பில்லையென்று!''

''இப்போதாவது புரிந்ததா?''

''புரிந்தது. ஆனால் நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் இன்னும் பதில் சொல்லவில்லையே?''

''உன்னை மணம் புரிவது பற்றி உன் மாமாவிடம் பேச வந்தேன். ஆனால் அவர் என்னவென்றால் முரளிக்கும்,



உனக்கும் திருமணம் செய்யப் போவதாய் என்னிடம் சொன்னார். அதில் உனக்கும் விருப்பம் உள்ளது போல் பேசினார். அன்று கடையில் நீயும் முரளிக்கு ஆதரவாகப் பேசினாயா? அதான் நீ தானாக கிடைக்க மாட்டாய் என்று முடிவு செய்தேன்.

''நம்ம எஸ்டேட் தொழிலாளிகளுக்காக நம்ம லைப்ரரி, ஆஸ்பிட்டல், ஸ்கூல் இதர வசதிகள் செய்ய உன் பெயரில் தாத்தா எழுதி வைத்த இடமும் இருக்க உன்னை மண முடிப்பவனுக்கு அது போகும் என்று எழுதியிருந்தார். உன் மாமாவும் கடன் தொல்லையில் இருந்தார்.

''ஒரு நெருக்கடியை உருவாக்கினால் வேறு வழியில்லாமல் நீயென்னை மணப்பாய். அதன் பிறகு என் அன்பைப் புரிய வைக்கலாம் என்று இருந்தேன். எல்லாம் கூடி வரும் நேரம் அம்மணி கோபித்துக் கொண்டு இங்கே வந்து உட்கார்ந்து இருக்கிறாய்.''

''ஸாரி மனோ..! நீங்கள் எனக்கில்லை என்று கவிதா சொன்னதும் உலகமே வெறுத்து விட்டது. தவிரவும், அங்கே கவிதா இன்னொருத்தனோடு என்னிடம் உங்களைப் பழிவாங்கவே பொய் சொன்னதாய் கேட்டதும் இன்னமும் உடைந்து போய்விட்டேன்.''

''அதுதான் உண்மை புரிந்ததே பிறகும், ஏன் என்னை விட்டு ஓடினாய்?''

''அதான் சொன்னேனே. நீங்கள் அடிக்கடி மாறுவதாய் என் மனதிற்குப் பட்டது என்று! ஏன் மனோ கவிதா மறுபடியும் மணக்கக் கேட்டாளா?''

"ம்.. இந்தியா வந்த சில நாட்களில் அவள் என்னை வந்து சந்தித்தாள். நான் உங்களை தவற விட்டுவிட்டேன். திருமணம் செய்வோம் என்று! தான் நினைத்ததை அடைய அவள் எந்த எல்லைக்கும் போகக் கூடியவள். அதனால்தான் உடனேயே உன்னை மணமுடித்தேன். அந்தக் கோபத்தில் வந்து கோள் மூட்டியிருக்கிறாள். நீயும் நம்பி விட்டாய். இப்போதாவது சந்தேகம் தீர்ந்து விட்டதா? இல்லை இன்னும் விளக்கம் தேவையா?"

"போதும்.. இனி கனவிலும் உங்களை விட்டு பிரிய மாட்டேன் மனோ.."

"நானும்தான் லது.. எஸ்டேட்டில் கட்டிட வேலை அத்தனையும் முடிந்து விட்டது. எல்லாத்திற்கும் உன் பெயர்தான் சூட்டியிருக்கிறேன். அங்கு ஒரு மகாராணி போல் நீ வலம் வருவாய் பாரேன்.."

"அப்போது இங்கு...?" அவள் சுட்டு விரல் கொண்டு மனோவின் இதயத்தைத் தொட்டுக் காட்டினாள்.

"இங்கே எப்பவுமே நீதான் ராணி!" இறுக்கமாய் மனைவியை அணைத்தான்.

"அய்யோ மனோ வெளியே கண்மணியும், ஆனந்தனும் இருக்கிறார்கள். நாம் இங்கே இப்படி என்ன நினைப்பார்களோ?"

"சுமார் இரண்டு மணி நேரங்கள் என்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று கண்மணியிடம் உத்தரவு போட்டு



இருக்கிறேன். அவர்கள் இங்கீதம் தெரிந்தவர்கள். அதுவும் காதல் தம்பதிகளாயிற்றே. நம் உணர்வு கட்டாயம் புரியும்."

"இனியும் உன்னை விட்டு ஒரு கணமும் நான் பிரியப் போவதில்லை. நீ என் நெஞ்சோடு கலந்தவள் இல்லையா?" முதன் முதலில் பார்த்த அதே உயிரை ஊடுருவும் பார்வை யுடன் மனோ கேட்கவும் காதலோடு, அவளின் மனோவுடைய மார்பில் இணைந்தாள் லதிகா.

காற்றுக்கு கை கால் முளைத்தது போல் இருவரின் மனமும் விண்ணை நோக்கி பறந்தது. உடல்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சங்கமித்து ஆறுதலாய் காதல் பசையில் ஒட்டி உறவாடின!



# உன்னை நான் சந்தித்தேன்



1

**சா**ருமதி, வயது 22. மாநிறத்திற்கும் சற்று கூடுதலான நிறம். திராட்சைக் கண்கள். உப்பலாய் கன்னங்கள். உதட்டுச் சாயம் போடாமலே சிவந்திருக்கும் உதடுகள் என, சாலையோரம் செல்பவர்கள் கூட ஒரு முறை திரும்பிப் பார்க்கும் அழகு. புதிய பாடல் ஒன்றை முணுமுணுத்தபடியே அலுவலகத்திற்கு கிளம்பிக் கொண்டிருந்தாள்.

நீல நிற சல்வாரின் துப்பட்டாவை பின் செய்து கொண்டிருந்தாள். நேரம் 7.45 இன்னும் அரை மணி நேரம் கழித்து கிளம்பினால்கூட சரியான நேரத்திற்கு அலுவலகம் சென்று விடலாம்.

நெய் தோசையின் வாசம் ஹாலைக் கடந்து மணத்தது. இவள் வெளியே வரவும், அம்மா கஸ்தூரி தோசையோடு, கார



சட்னியையும் வைத்துத் தர, சோபாவில் வாகாய் அமர்ந்து கொண்டு டி.வி.யை ஆன் பண்ணினாள்.

காலை மலர், காலை வணக்கம் என வித விதமாய் நிகழ்ச்சிகள் ஓடிக் கொண்டிருக்க, சன் மியூசிக்கில் ஐஸ்வர்யா ராய் தன் காணாமல் போன கவிதைக்காய் பாட வால்யூமைக் கூட்டினாள்.

பாடலின் ஒவ்வொரு வரியும் நெஞ்சைத் தொட்டது.

"என்ன சாரு ஆபீஸ் கிளம்பலையா? நீ பாட்டுக்கு டி.வி. பாக்குறே?"

"டயம் இருக்கும்மா. தோசை சூப்பர், மதியத்துக்கு என்ன தயார் பண்ணியிருக்கீங்க?"

"புளி சாதமும், எண்ணெய் கத்திரிக்காய் பொரியலும், கூடவே வடகமும் பொரித்து வைத்து இருக்கிறேன்."

"நல்ல மெனுதான்!" இவள் கையைக் கழுவி விட்டு எழவும், அம்மா ஏதோ சொல்ல வருவதும் புரிந்தது.

"என்னம்மா டல்லா இருக்கீங்க?"

"அக்கா போன் பண்ணினா!"

"என்னவாம்? எப்போ கிளம்பறாளாம்?"

"அத்தைக்கு உடம்புக்கு சுகமில்லையாம். அதனால வர முடியாதுன்னு சொன்னா!"

"இது எப்பவும் நடக்கிற விஷயம்தானே. அக்கா ஊருக்கு கிளம்பறான்னா போதும் உடனே அத்தைக்கு உடம்பு

சரியில்லாம போயிடுமே? அக்கா வந்திட்டா அங்கே வேலை செய்ய ஆள் இல்லாம போயிடும் இல்லையா?''

''என்னடி செய்யறது? வாக்கப்பட்டது பெரிய குடும்பம். அங்கே நல்ல பெயர் வாங்கணுமே?''

''மாடா உழைச்சா மட்டும் அவளுக்கு என்ன சிலை வைக்கப் போறாங்களாமா? இவளோட கிறுக்குத்தனத்தைப் பயன்படுத்திக்கிட்டு நல்லா மிளகாய் அரைக்கிறாங்க..''

''குடும்பமின்னா எல்லாம்தாண்டி இருக்கும். நீ சின்னப் பொண்ணு. உனக்கென்ன தெரியும். எல்லாம் அவளோட விதி.''

''விதியில்லை அப்பா செய்த சதி! ஒரே தங்கை வந்து ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட்டதும் தாளமாட்டாம அக்காவை ஒரு பொம்மையைப் போல எண்ணி தாரை வார்த்திட்டார். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திருந்தா அவளும் படிப்பு முடிச்சு தன் சொந்தக் கால்ல நின்னுருப்பா. இப்போ பாரு அஞ்சுக்கும் பத்துக்கும் அவ அவங்க கையை எதிர்பார்க்க வேண்டியிருக்கு. இந்த நிலைமைக்கு அப்பாதான் முழுக் காரணமும்..''

மகள் சொல்வதிலும் உண்மை இருப்பதாய் பட்டது. கஸ்தூரிக்கு. ''சாரும்மா நாளைக்கு உனக்கு கல்யாணம் ஆனா நீயெப்படி இருக்கப் போறேன்னு பார்ப்போம்!''

''கண்டிப்பா நான் கூட்டுக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட மாட்டேன்..'' உறுதியுடன் சொல்லிவிட்டு போகும் மகளை கவலையோடு கண்டார் கஸ்தூரி.



கணவர் மணிவாசகத்தின் ஒன்றுவிட்ட தங்கை வசந்தாவிற்குத்தான் தன் பெரிய பெண் வெண்மதியைக் கொடுத்தது. வெண்மதி அப்போது பி.எஸ்சி இரண்டாம் வருடம் படித்துக் கொண்டு இருந்தாள்.

அந்த வருடம் வீட்டிற்கு வந்த வசந்தா பெரும் குறை பட்டியலோடுதான் வந்தாள். தமக்கையின் மேல் தீராத பாசம் கொண்டிருந்த மணிவாசகமும் உடல் நலமில்லாத தங்கையிடம் பரிவுடன் நடப்பதாய் எண்ணிக் கொண்டு செய்ததுதான் வெண்மதியின் திருமணம்.

''அண்ணா வர வர எனக்கும் உடம்பு முடியலை. பெண்கள் இருந்த வரை கஷ்டம் தெரியலை. அவங்க கல்யாணம் பண்ணிக்கிட்டு போனதும், என்னால முடியலை. எனக்கு ஏதாவது நடக்கிறதுக்குள்ளே மூத்தவனுக்கு கல்யாணத்தைப் பண்ணிடணும். வெண்மதியை மூர்த்திக்குத் தந்திடேன். நீ நகை கூட உன் விருப்பப்படி செய். ஆனா கல்யாணத்தை சீக்கிரமா முடிச்சிடலாமே..'' தங்கையின் விருப்பத்திற்கு இணங்கி தலையாட்டி விட்டார் மணிவாசகம்.

அமைதியான சுபாவம் கொண்ட வெண்மதி தன்னுடைய ஆசையை வெளிக்காட்ட முடியாமல் படிப்பையும் பாதியிலேயே நிறுத்த வேண்டியதாகிப் போனது.

வசந்தாவிற்கு மூன்று மகன்கள், இரண்டு பெண்கள். பெரிய கூட்டுக் குடும்பம். அதில் மூத்த மருமகளாய் வாழ்க்கைப் பட்டாள் வெண்மதி. இதோ 6 வருடங்கள் முடியப் போகிறது. ஆனாலும் மதியின் கடமைகள் தீர்ந்தபாடில்லை. இயந்திரத் தனமான வாழ்வு அலுத்து விடாமல் இருப்பதற்குத்தானே உறவுகள். ஆனால் அதுவே சுமையாகிப் போனால்..!



அப்படித்தான் ஒருமுறை சாருவும், கஸ்தூரியும் வெண்மதியின் வீட்டிற்கு சென்றபோது சேர்ந்தாற்போல் நந்து நிமிடங்கள் கூட பேச முடியவில்லை. ஒன்று மாற்றி ஒன்று ஏதாவது வேலை வந்து கொண்டேயிருந்தது. புகுந்த வீட்டு மனிதர்களுக்கு தேவையான அனைத்தையும் மனம் கோணாமல் பம்பரமாய் சுழன்று செய்து கொண்டிருந்தாள் வெண்மதி.

தன் வேலையைக் கூட சரியாய் செய்யத் தெரியாத அக்கா இங்கே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்வதையும் மற்றவர்கள் ஜாலியாய் அமர்ந்திருப்பதையும் அவளால் தாங்க முடியவில்லை. அக்காவை கூப்பிட்டு தனியாக கேட்டதற்கு, சப்பான ஒரு புன்னகை மட்டுமே பதிலாய் கிடைத்தது.

அதன் பிறகு தந்தையின் இறப்பிற்கு வந்தவள் மற்றவர்கள் போல் வந்த ஏழாவது நாளிலேயே கிளம்பிட சாருவிற்கு கழுத்து மட்டும் ஏக்கம்தான். அடிப்படை உணர்வுகளைக் கூட வெளியிட முடியாமல் அப்படியென்ன உறவோவென்று

ஆண்டுக்கு நான்கு முறை என்று இருந்த அக்காவின் வருகை இரண்டு முறையாக குறைந்து நாளடைவில் அதுவும் இல்லை என்றாகிப் போனது. இத்தனைக்கும் அவர்கள் குடும்பம் வாழ்வது திருச்சியில்தான். அத்தானுக்கு கவர்ன்மெண்ட் உத்யோகம். மாதம் 18,000 ரூபாய் சம்பளம் வரும் வாத்தியார் தொழில்.

வெண்மதிக்கு இரண்டு குழந்தைகள். அத்தானின் சம்பளப் பணம் முழுவதும் வீட்டுச் செலவிற்கே போய்விடுவதால் குழந்தைகள் விரும்புவதைக் கூட வாங்கித்தர இயலாமல்



போய்விடும். அவ்வப்போது தங்கையிடம் போனில் பேசும் சமயம், சாருவிற்கே கோபம் பொங்கும்.

அடிப்படை ஆசைகளைக் கூட அடைய முடியவில்லையென்றால், என்ன மணவாழ்வு இந்த பெண்களுக்கு திருமணம்தான் பிறவிப் பயன் என்பதுபோல பேச்சு வேறு.

அக்காவிற்கு நிறைய படிக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் அப்பாவிடம் அது நிராசையாகிப் போனது. திருமணம் முடித்து செல்லும் போது கூட பள்ளியில் இறுதியாண்டு மாணவியான சாருவிடம் "என்னாலதான் படிக்க முடியாம போயிட்டது. நீயாவது நல்லா படிடா" என்று மூத்தவள் கண் கலங்கி கூறியது இன்னும் சாருமதியின் காதுகளில் ஒலித்தது. அக்கா எத்தனை கனவுகளோடு இருந்தாள்.

சிறகடிக்க வேண்டிய வயதில் குடும்ப பாரத்தை சுமத்தி அவள் வாழ்வை வீணடித்து விட்டார்களே என்ற வேதனை அவளிற்கு! ஆபீஸில் வேலை ஓடவில்லை. அக்காவிடம் பேசினால் என்ன? என்ற எண்ணத்தை செயலாக்கினாள்.

"ஹலோ..?"

"அக்கா நான் சாருமதி பேசறேன்.."

"ஏய்! சாரு எப்படியிருக்கே?"

"ம்... நலம்தான். ஏங்கா ஒரு போனாவது பண்ணக் கூடாதா ஒரு தங்கச்சி இருக்காங்கிற நெனைப்பே இல்லையா உனக்கு.."

"எங்கேடி நேரம் ஒழியுது. வேலை சரியா இருக்கு. ஆமா அம்மா எப்படியிருக்காங்க?"

''நீ ஊருக்கு வரலைன்னு சொன்னதும் அவங்க ரொம்பவும் அப்செட். ஏன் வரலைக்கா? பிள்ளைங்க எப்படி இருக்காங்க...? வருஷத்துக்கு ஒருமுறை வர்றே. அதுவும் தள்ளிப் போனா பாவம் மனசு வருத்தப்படாதா அவங்களுக்கு?''

''அத்தைக்கு சுகர் ரைஸ் ஆயிடுச்சு சாரு அதான் வர முடியலை, பிள்ளைகள் தான் ரொம்பவும் ஏமாந்து போய்ட்டாங்க. அம்மாவையாவது வந்து ஒரு நடை பார்த்திட்டு போகச் சொல்லேன்.''

''சரி சொல்றேன் அத்தான் எப்படியிருக்கார்?''

''ம்... சாரு அடுப்பில் குக்கர் சத்தம் போடுது. நான் அப்புறம் பேசவா?'' பதிலுக்குக் காத்திராமல் போனை வைத்து விட்டாள் வெண்மதி.

அக்காவை எண்ணி சாருவால் கவலைப்படத்தான் முடிந்தது. இப்படி ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை செய்து கொண்டு இருந்தால் அவள் உடல் நலம் என்னாவது என்ற யோசனையில் இருந்தவளுக்கு மேலாளரிடமிருந்து அழைப்பு வந்தது.

அனுமதி கேட்டு பின், அறைக்குள் நுழைந்தாள். ''குட்மார்னிங் ஸார்.''

''ஸிட்டவுன் சாருமதி. ப்ரசாத் அண்ட் சன்ஸ் கம்பெனியோட அக்கௌண்ட்ஸ் எல்லாம் டேலி பண்ணி சிஸ்டமில் ஃபீட் பண்ணிட்டீங்களா?''

''யெஸ் ஸார்..''

''நம்ம ஆபீஸ் பாய் மணிகிட்டே சீ.டி.யும் பைலையும் கொடுத்து டெலிவர் பண்ண சொல்லுங்க. செக் ரெடியா



இருப்பதா போன் பண்ணாங்க. அப்படியே அதையும் கலெக்ட் பண்ணிட்டு வரட்டும்.''

இவள் தலையசைத்தாள்.

''சாரு காவ்யா கார்மெண்ட்ஸ் தான் நமக்கு அடுத்த ஆர்டர். ஆனா அவங்க ஆபீஸுக்கே போய் ஒர்க் பண்ணி தரணுமாம். நான் உன்னைத்தான் சஜஸ் பண்ணியிருக்கேன். காவ்யா கார்மெண்ட்ஸ் அடையாறில் இருக்கு நீ போறீயாம்மா.''

''கண்டிப்பா ஸார்.''

''நாளையில் இருந்து நீங்க போக வேண்டியிருக்கும்'' ஒப்புக் கொண்டு விட்டு தன் டேபிளுக்குத் திரும்பினாள்.

ஏனோ மனம் சற்று கனத்தாற்போல் இருந்தது. தனிமையாய் இருந்தால் நன்றாக இருக்கும் போல் தோன்ற பீச்சிற்கு வண்டியை ஓட்டினாள்.

2



**மா**லை நேரமாதலால் கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது. பலரும் தங்கள் வியாபாரத்தில் வெகு மும்முரமாய் இருக்க, ஆள் அரவமற்ற ஒரு படகிற்கு அருகில் அமர்ந்தாள்.

தூரத்தில் அலைகள் கன்னிப் பெண்ணைப் போல் கரையை எட்டிப் பார்த்து விட்டு கொலுசு மணியாய் சிணுங்கியபடி, ஓடி வந்தது. பேரிரைச்சலோடு துள்ளி வந்தாலும் எத்தனை அழகு. படகின் பின்புறம் இருந்து எழுந்த பேச்சுக் குரல் கவனத்தை ஈர்த்தது.



''ஏன் சுதா டல்லாயிருக்கே? ஏதாவது சாப்பிடறியா?''

''ஒண்ணும் வேண்டாங்க.''

''ஏய் இப்போ என்ன கேட்டுட்டுன்னே அழுவுறே?''

''பின்னே என்ன அத்தை நின்னா குத்தம் உக்காந்தா குத்தமின்னு எந்நேரமும் குறை சொல்லிகிட்டே இருக்காங்க. மனசுக்கு ரொம்பவும் ரணமாயிருக்கு.''

''கவலைப்படாதே சுதா இதே உங்க அம்மாவா இருந்தா பொறுத்துப் போக மாட்டியா?''

''உங்களுக்கு என்ன நீங்க சுலபமா சொல்லிட்டீங்க? வீட்லே அவங்க கூடவே இருக்கிறது எனக்குத்தானே தெரியும். அய்யா ஆபீஸ் போய்யிட்டா நைட்டுதான் வர்றீங்க?''

''ப்ளீஸ் சுதா ஆபீஸில் ஏகப்பட்ட டென்ஷன் ரிலாக்ஸா இருக்கணுமின்னுதானே இங்கே வந்தோம். இங்கேயும் வந்து இதையே பேசணுமா?''

இந்த சம்பாஷணைகளைக் கேட்ட சாருவிற்கு மனதில் சொல்லொண்ணா கோபம் எழுந்தது. உணர்வுகள், உயிர், உழைப்பு என சகலமும் தனக்கென அர்ப்பணித்த மனைவியின் துன்பத்தை காது கொடுத்துக் கூட கேட்க விரும்பாத ஆண் சமுதாயம். இவர்களுக்கு மட்டும்தான் டென்ஷன் இருக்குமா? பெண்கள் எல்லோரும் உணர்ச்சியற்ற பிண்டங்களா? கோபமாய் அவனைப் பார்த்து நான்கு கேள்வி கேட்க வேண்டுமென்ற உந்துதல் எழ, ஆவேசமாய் வேகமாய் எழுந்து திரும்பியவளின் மீது எதிர் சாரியிலிருந்து ஏதோவொன்று



மேல் மோதிட, நிலை தடுமாறி கீழே விழப் போனவளை வலுவான கரம் ஒன்று தாங்கியது.

தாங்கியவனின் தோள்கள் இவள் உடலில் உரசிட, குறும்பு நிறைந்த அந்த முகமும், கண்களும் இவளிடம் எதையோ கேட்டது போல், தோன்றிட, இருக்கும் சூழ்நிலை உணர்ந்து ''ப்ளீஸ்'' என்று விலகினாள்.

''ஐயம் ஸாரி மேடம்., தவறு என்னுடையது இல்லை. தயவு செய்து திட்டாதீங்க. நானும் அஜய்யும் விளையாடிட்டு இருந்தோம். நீங்க எதிர்பாரா விதமா க்ராஸ் பண்ணினதால இந்த தவறு நடந்து விட்டது. ஐயம் ஸாரி!'' என்றான்.

''இட்ஸ் ஓ.கே..'' சாருமதிக்கு அவன் மேல் கோபப்படத் தோன்றவில்லை; உண்மையில் தவறு அவளிடம்தான். ஏதோ வேகத்தில் எழுந்தவள் எதிரே வந்தவனை அவள் கவனிக்கத் தவறிவிட்டாள். தவறு தன் மீது இருந்தும் பணிவாய் மன்னிப்பு கேட்ட அவன் குணம் பிடித்தது.

''ஐயம் தரணி! மேடமோட பெயர் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' அவன் கேட்கவும் சாருமதி உஷாரானாள்.

''என் பெயர் உங்களுக்கு எதுக்கு மிஸ்டர்?''

''என்ன கேள்வி மேடம் இது? பேர் எதுக்கு கூப்பிடத்தானே. நாளைக்கு உங்களை எங்காவது பார்க்கும்போது, ஏய்னு! கூப்பிட்டா நல்லாயிருக்காது இல்லையா?''

''நீங்க ஏன் ஸார் என்னைக் கூப்பிடணும்?''

''ஏன் மேடம் கோபப்படறீங்க? அழகான பெண்கள் இத்தனை கோபப்படக் கூடாது.''

''ஷட்டப் யுவர் நான்சென்ஸ்'' வெடித்தாள் சாருமதி. சாரு ஒன்றும் முடி டைப் இல்லையென்றாலும், ஏற்கனவே கோப மான மன நிலையில் அந்த இளைஞனின் குறும்புத்தனமான பேச்சை ரசிக்க முடியவில்லை. எனவே மேற்கொண்டு கோபமாகவே, ''முன்பின் அறியா யாரிடமும் பிரண்ட்ஷிப் வைத்துக் கொள்ளும் ஆள் நானில்லை'' என்றாள்.

இளைஞன் வேறு எதுவோ பேச வாயெடுக்கும் முன்னே ''சித்தப்பா இங்கே என்ன அரட்டை?'' என்று கேட்டபடியே அரைக்கால் சட்டையணிந்த சிறுவன் அவன் விலாவில் இடித்தான். அந்த சிறுவனின் முகத்திலும் பெரியவனின் சாயல் இருந்தது.

''இருடா இப்ப என்ன அவசரம். முக்கியமான ஒரு விஷயம் பேசிகிட்டு இருக்கேன்.''

சிறுவனின் பார்வை இவளின் மேல் விழுந்தது. ''யார் சித்தப்பா இந்த ஆன்ட்டி? ரொம்ப அழகாயிருக்காங்க...''

''எல்லாம் நமக்கு வேண்டிய ஆன்ட்டிதான்'' என்றான் அடிக் கண்களால் சாருவைப் பார்த்து.

இவளுக்கு மறுபடியும் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. இவளும் பதிலுக்கு சிறுவனிடம், ''தம்பி, உன் சித்தப்பாவிற்கு மறை கழன்று இருக்கிறது. வீட்டிற்குப் போனதும் எலுமிச்சைத் தேய்ச்சு விடு'' சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தாள்.



ஏனோ அவளின் மனம் நாலடி தூரம் சென்றதும் திரும்பிப் பார்க்கச் சொல்ல மெல்லத் திரும்பினாள். அதே நேரம் தரணி அவளைப் பார்த்து கையசைக்க மெல்லிய குறுகுறுப்பு ஓடியது இதயத்தில்!

**வி**டியல் தன் வெளிச்சப் பூக்களை தூவி விட தோட்டத்திற்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தாள் நளினி. அப்போதே குளித்து விட்டு வந்திருந்த கூந்தலில் ஈரம் கொட்டியது. பளிச்சென்ற முகத்தில் குங்குமம் மின்னிட பால் குக்கரின் விசிலுக்கு மதிப்பு கொடுத்து அங்கிருந்து நகர்ந்தவள் அடுத்த சில நிமிடங்களில் பில்டர் காபியோடு ஹாலுக்கு வந்தாள்.

அதேநேரம் தேவியம்மாளும் கற்பூர ஆரத்தியுடன் பூஜையறையிலிருந்து வெளிப்பட, ''அத்தே காபி'' என்றாள்.

''இதோ வந்திடறேன்'' என்றவர் குங்குமத்தை தானும் இட்டு நளினிக்கும் இட்டார். ''அசோக்கும் தரணியும் காபி சாப்பிட்டாங்களா?''

''காபி சாப்பிட்டுட்டு குளிக்கப் போயாச்சு அத்தை. மாமா வாக்கிங் போயிருக்கார், நித்யா படிச்சிகிட்டு இருக்கா.''

தேவி காபியைப் பருகியவள், ''என்னம்மா நளினியிது? இத்தனை ஈரம் சொட்ட சொட்ட தலையை நல்லா உலர்த்த வேண்டாமா?'' என்று செல்லமான கோபத்தோடு டவலை எடுத்து தலையை துவட்டினார் தேவி.

''அப்பா என்ன கண் கொள்ளா காட்சியிது? அங்காங்கே மாமியாரும், மருமகளும் குடுமிப்பிடி சண்டை போட்டுகிட்டு



இருக்காங்க, ஆனா நம்ம வீட்லே ஒத்துமை ரொம்பவே நெகிழுதே?''

''நீயேண்ணா கண் வைக்கிறே?'' காபி கோப்பையோடு வெளியே வந்த நித்யா ப்ளூ கலர் நைட்டியில் இருந்தாள்.

''அண்ணன் சொல்றதிலே தப்பே இல்லை நித்தி. நானும் எத்தனையோ பேரைப் பார்த்திட்டேன். நம்ம வீடு மாதிரி ஒத்துமையான மாமியார் மருமகள் யாருமே இல்லை. திருவாளர் திருமதி மாதிரி, மாமியார் மருமகள், பொருத்தம் வைத்தால் அம்மாவிற்கும் அண்ணிக்கும்தான் முதல் பரிசு.''

''ஆஹா... கிண்டல் போதுமே..''

''அதுசரி அண்ணி, இன்னிக்கு என்ன டிபன்?''

''நெய் தோசை, வடை, காரசட்னி..''

''வாவ்.. கேட்கும் போதே எச்சில் ஊறுதே..''

''அண்ணி எனக்கு இன்னைக்கு வளையல் பின்னல் போட்டு விடுறீங்களா? எங்க காலேஜில சின்ன பார்ட்டியிருக்கு..''

நளினி தலையசைக்க, ''உன் காலேஜில படிப்பைத் தவிர மத்த எல்லாம் நடக்குது போல!'' தரணி நித்யாவைச் சீண்ட,

''பாருங்க அண்ணி தரணியை? சின்னண்ணா நானொன்றும் உன்னை மாதிரி பி.காம். படிச்சிட்டு ஒரே ஆபீஸ் ஸீட்டை தேய்க்கப் போறவள் இல்லையாக்கும். நான் பைன் ஆர்ட் காலேஜ் ஸ்டுடண்ட். எல்லாவற்றிலும் ரசனையிருக்கும்.''

''என்ன ரசனையோ படிப்பில் கோட்டை விட்டுடாதே..''



''ஆஹா, அட்வைஸுக்கு நன்றி'' இவர்கள் வாயடித்துக் கொண்டிருக்கும் போதே நளினி டேபிளின் மேல் உணவு வகைகளைக் கொண்டு வந்து அடுக்கினாள்.

''என்ன நித்யா நீ? பாவம் அண்ணியே எல்லா வேலை களையும் தனியா செய்யுறா? நீ ஏதாவது ஹெல்ப் பண்ணலாம் இல்லையா?'' தேவி மகளைக் கடிந்து கொள்ள, நாத்தனாரின், உதவிக்கு வந்தாள் நளினி.

''அத்தே! நித்தி இன்னும் சின்ன பொண்ணுதானே. என்னை மாதிரி வரும்போது சுதாரிப்பா. இப்போ லைப்பை என்ஜாய் பண்ணட்டுமே!'' சொன்ன அண்ணியை கட்டிக் கொண்டாள் நித்யா.

''நீ இவளுக்கு ரொம்பவே செல்லம் கொடுக்கிறே?''

பேசியபடியே பரிமாறினார்கள். தேவி, கணேசன் தம்பதிகளுக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உண்டு. ரிடையர்டு ஸ்கூல் டீச்சரான கணேசன் தன் குடும்பத்தினருக்கு சொத்து சேர்த்து வைத்து இருக்கிறாரோ இல்லையோ, நல்ல பண்புகளோடு வளர்த்து இருக்கிறார்.

அசோக் மூத்தமகன். அவனுக்கு திருமணமாகி ஐந்து வருடங்கள் ஆகிறது. மருமகள் நளினி மகளாய் மாறி வந்ததில் அவருக்கு ஏக சந்தோஷம்.

அவர்களின் அன்பிற்கு ஆதாரமாய் அஜய் துறுதுறுவென்ற அவன் கண்களும், பேச்சும் யாரையும் கவர்ந்து விடும். தற்சமயம் கணேசனின் பொழுது போக்கு அஜய்தான். அவன்

செய்யும் குறும்புத்தனங்களில் மயங்குவதுதான் அவரின் பகுதி நேர வேலை.

இரண்டாவது மகன் தரணி கார்மெண்ட்ஸ் கம்பெனி ஒன்றில் மேனேஜராய் பணிபுரிபவன்.

நித்யா கடைக்குட்டி. இறுதியாண்டு பள்ளிப்படிப்பை முடித்து விட்டு கல்லூரியில் முதலாம் ஆண்டு படிப்பவள். சிட்டுக் குருவியென சுற்றித் திரியும் அவர்களின் செல்லக் குழந்தை. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அன்பிலும் பண்பிலும் வாழும் குடும்பம் அவர்களுடையது.

வீட்டுக்கு மருமகள் வந்து விட்டால் குடும்பத்தைக் குலைத்து விடுவாள் என்ற கேள்விகளுக்கு எல்லாம் பெரிதாய் ஆச்சரியக் குறியிட்டவள் நளினி. ஒருமுறை கூட முகம் சுணங்கியதே இல்லை. சொல்லப் போனால் அவள் வந்த பிறகுதான் அந்தக் குடும்பத்திற்கே சந்தோஷம் ஒட்டுமொத்த மாய் பூத்தது எனலாம்.

தேவிக்கும் தன் குடும்பம் இதேபோல் என்றும் சிதறாமல் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்ற நினைப்பு வேறாய் ஊன்றிப் போனதால் தேவி அதற்கு எந்த பாதிப்பும் வராதிருக்க மிகவும் முனைப்போடு இருந்தாள். கடவுளின் அனுக்கிரகமும் தன் குடும்பத்தினருக்கு என்றும் இருக்குமென நம்பினாள். அது கூடிய விரைவில் குலையப் போவதைப் பாவம் அவள் அறிந்திருக்கவில்லை.

சூடான நெய் தோசையை வைத்து விட்டு சட்னியால் அதைக் குளிப்பாட்டினாள். அவன் வாய்க்கு கொண்டு போன



நேரம், "ஏன் தரணி நேத்து பீச்சிலே யாரோ ஒரு ஆன்ட்டியைப் பார்த்ததா அஜய் சொன்னானே?"

"அது தெரிஞ்சவங்க அண்ணி.."

"நிஜமாவா? இல்லே ஏதாவது வலையிலே விழுந்திட்டியா?"

"போங்கண்ணி, என் கூட படிச்ச பொண்ணு திடீர்னு பார்த்ததாலே பேசினேன்..."

"என்னவோ சொல்றே, நம்பிட்டேன். அப்படியெதுவா யிருந்தாலும் என்கிட்ட மட்டும் சொல்லிடு.."

"கண்டிப்பா..!" குறுகுறுத்தக் கண்களுடன் அவள் கேட்க, அஜய்யை இழுத்துக் கொண்டு ஓடினான் தரணி.

3



**கா**வ்யா கார்மெண்ட்ஸ். சுற்றிலும் குரோட்டன்ஸ்களை அரணாய் கொண்டு, நடுவில் பூத்திருந்தது. கண்ணாடித் தடுப்புகளைத் தாண்டி லிப்டில் கால் பதித்து இரண்டாவது தளத்தை அடைந்தாள் சாருமதி.

லிப்டில் இருந்து வெளியேறி ரிஷப்ஷனை அடைந்தவள் அந்த சுடிதார் பெண்ணிடம், "மேடம் எம்.டி.யைப் பார்க்கணும்" என்றாள்.



"நீங்க யாருன்னு சொல்லுங்க? என்ன விஷயமா மேடமைப் பார்க்கணும்" எனும் மிருதுவான ஆங்கிலக் கேள்விக்கு.

"நான் ஆடிட்டர் ஆபீஸில் இருந்து வர்றேன்."

"ஓ..யூ.. ஆர் மிஸ். சாருமதி."

"யெஸ்..."

"மேடம் உங்களுக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருக் காங்க. நேரா போய் லெப்ட்ல திரும்புங்க, 4வது கேபின்."

"தேங்க்யூ.." சிறிய தலையசைப்போடு புன்னகையும் சேர விடைபெற்ற சாருமதி பார்வை சுழற்றினாள். பெண்கள் ஆண்கள் என இருவேறு பிரிவினர் தம்தம் வேலையில் ஈடுபட்டு இருந்தனர். மிஷின்களின் இரைச்சலைத் தாண்டி நடந்தபோது, சர்ட், மிடியின் மாடல்ஸ் எல்லாம் கட்டிங் பேப்பராவும், மெட்டீரியலாகவும் மாட்டப்பட்டு இருந்தது.

காவ்யா என்ற பிளாட்டின எழுத்துக்களை நெஞ்சில் சுமந்திருந்த கதவை நாசூக்காக மூன்று விரல்களால் தட்டி, "மே ஐ கமீன் மேம்" என்றாள்.

"யெஸ்" இனிமையும் கம்பீரமும் கலந்து ஒலித்தது அக்குரல். "வெல்கம் மிஸ் சாருமதி ஐ ஆம் வெயிட்டிங் ஃபார் யூ. ப்ளீஸ் பீ சீட்டட்" சேரை காண்பித்தாள்.

"ஐ'ம் ஸாரி மேடம்."

"நோ நோ யூ ஆர் நாட் கெட்டிங் லேட்."



"தேங்க்யூ" தன் உடலை அந்த இருக்கையில் சரிந்தபடியே கூறினாள் சாருமதி.

காவ்யா பச்சை நிற சவுத் காட்டனில் இருந்தாள். அவள் கம்பீரம் பரவசப்படுத்தியது.

"உங்க வேலையைப் பற்றி உங்க எம்.டி. சொல்லியிருப் பாருன்னு நினைக்கிறேன். ஆர் யூ இன்ட்ரஸ்டு இன் திஸ் ஜாப்."

"இட்ஸ் மை டியூட்டி மேடம்..."

"நோ..நோ.. எதையும் கடமைக்காக செய்யறதை விட மனமுவந்து ஐ மீன் ரியல் சேட்டிஸ்பைடா-ஆ செய்யணு மின்னு நினைக்கிறவ நான்."

"ஐ நோ யுவர் அட்டென்ஷன் மேம் இன்பேக்ட் உங்ககிட்டே ஒரு ஷார்ட் பீரியட் ஒர்க் பண்றதை நான் ரொம்ப பெருமையா நினைக்கிறேன்..."

காவ்யா புருவம் உயர்த்திப் பார்த்தாள்.

"இரண்டு வருஷத்திற்கு முன்பு ஆர்ட்ஸ் காலேஜ் கல்ச்சுரலில் கெஸ்ட்டா வந்திருக்கீங்களே. அப்பவே நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்.."

"ஓ...!"

"உங்க பெண்ணுரிமை பத்தின பேச்சும், வாழ்க்கையில் நீங்க எடுத்த ரிஸ்கையும் கேட்டுட்டு நான் உங்களை என்னோட ரோல் மாடலா நினைச்சேன். அப்பேர்ப்பட்ட ஒருத்தருடைய கன்சர்னில் பணிபுரியறதை நான் பெருமையா நினைக்கிறேன், மேடம்."

''நன்றி சாருமதி!'' பெண்கள் நினைத்தால் சோதனையும், சாதனையா மாற்றிடலாம். சாருமதி எல்லா பெண்களுக்குமே தன்னம்பிக்கையும், தனித்திறமையும் உண்டு. ஆனால் அது வெளிப்படுவது சில பேரிடம்தான். அந்த வகையில் பெண்கள் இப்போது எவ்வளவோ முன்னேறி விட்டார்கள். வெல் மிஸ் சாருமதி எங்க கம்பெனி மேனேஜர் மிஸ்டர் தரணிதான் ஸாப்ட்வேர் ப்ரோகிராம்'' பண்றார்.

''அவர் உங்களை கைட் பண்ணுவார். உங்க வருகையை நான் இன்பார்ம் பண்ணிட்டேன். மூணாவது கேபின் அவருடையது. நீங்கப் போய் பார்க்கலாம். ஆல் தி பெஸ்ட்'' என்று கை குலுக்கினாள்.

மீண்டும் ஒரு நன்றியை உரைத்து விட்டு விலகிய சாருமதி காவ்யாவின் கம்பீரமான தோற்றத்தினையும், பழகும் இனிமையும் எண்ணி வியந்தபடியே நடந்தாள்.

காவ்யா தன் வளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் இருந்த நேரம் காலேஜ் கல்சுரல் நிகழ்விற்கு வந்திருந்தாள். மேடையில் பேசும்போது தன்னுடைய வாழ்வில் தான் அடைந்த சோதனைகளையும் கூறினாள்.

திருமணமான புதிதில் பல பெண்களைப் போலவே தித்திக்கும் கனவுகளோடு இருந்த காவ்யா கல்யாண வாழ்வில் திருப்தி அடையாமல் கடைசியாய் விலக்கும் பெற்று பெரும் ரணத்தோடு தான் வெளியே வந்தாள். அந்த கசப்பைப் போக்க தொழிலில் கால் ஊன்றினாள். அதை உணர்வு பூர்வமாய் மேடையில் கூறியபோதே சாருமதி திகைத்தாள். காவ்யாவின் மேல் தன்னையும் அறியாமல் ஒரு மதிப்பு பூத்தது அந்நேரமே!



அத்தனை துயரங்களிலும் மனம் தளராமல் விடாமுயற்சி யுடன் நடந்து கொண்ட காவ்யாவை மானசீகமாக தன் குருவாகவே பாவித்துக் கொண்டாள். அத்தனை பெரிய பெண்ணின் கீழ்தான் பணிபுரியும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக் கொண்டாள்.

மூன்றாவது கேபினுள் தான் அடையப் போகும் அதிர்வை அப்போது அவள் உணரவில்லை. ஆனால் அறிந்தபோது இன்பமாய் இருந்த நினைவு திகைப்பைத் தந்தது.

மனம் குதிரையைப் போன்றது எண்ணங்களுக்கு கடிவாளம் இடாமல் போனால் கட்டவிழ்ந்து தறிகெட்டு ஓடும். அப்படித்தான் சாருமதியின் மனமும். எண்ணச் சிறகுகளை விரித்துக் கொண்டு பறவையாய் சிறகடித்துப் பறந்து கொண்டு இருந்தது. அன்றைய தினம் காலையில் நடந்த சம்பவம் மனதில் நிழலாட மொட்டை மாடி நிலவொளியில் உடலை நனைத்தபடியே அசை போட்டாள்.

காவ்யாவின் அறையிலிருந்து வெளியே வந்தவள் மூன்றாவது கேபின் அறையைத் திறந்து அனுமதி கேட்டு உள்ளே நுழைந்தாள். அங்கு நின்ற வாலிபனைக் கண்டதும், விழிகள் ஆச்சரிய வீட்டிற்குள் குடிபுகுந்தன.

அன்று கடற்கரையில் சந்தித்த அதே வாலிபன் எதிர்பாராத சந்திப்பினால் அவனுமே திகைத்துதான் போய் இருந்தான். ஆனாலும் உடனேயே சுதாரித்து 'ஐ'ம் தரணி. மேனேஜர் ஆப் காவ்யா கார்மெண்ட்ஸ் என்று புன்னகையுடன் கையை நீட்டவும்.



இத்தனை நேரம் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டி ருந்ததை எண்ணி முகம் சிவந்தவளாய் ''ஐ'ம் சாருமதி'' என்று கரம் குவித்தாள்.

''மேடம், நீங்க வர்றதா இப்பதான் இன்பார்ம் பண்ணாங்க. எனிவே, வெல்கம் மிஸ். உட்காருங்க'' அவன் நேரடியாக விஷயத்திற்கு வந்தான். அதன் பிறகும் அவளை முன்பே சந்தித்து துடுக்குத்தனமாய் பேசியதை சற்றும் நினைவு கூர்ந்தானில்லை. புதிதாய் பார்த்த நபரிடம் பேசுவதைப் போல் பேசினான்.

''காவ்யா கார்மெண்ட்ஸ் ஆரம்பத்தில் இருந்தே கஷ்டப்பட்டு இத்தனை தூரம் முன்னுக்கு வந்ததற்கு காரணம் காவ்யா மேடமுடைய தன்னம்பிக்கையும், தைரியமும்தான். இங்கே எல்லா விதமான ஆர்டர்ஸும் எடுக்கப்படும். ஆனா டிரான்ஸ் ஆக்ஷன்ஸ் எல்லாம் எழுத்து மூலமாகத்தான். நான்கு வருடங்களா ப்ரோசீட் பண்ணியிருக்காங்க.''

''நான் இங்கே ஜாயின் பண்ணி ஒரு வருடம்தான் ஆகிறது. நான் ப்ரோகிராம் பீட் பண்ணிட்டேன். இன்வாய்ஸ், வவுச்சர், பேபண்ட்ஸ் டிசைன்ஸ், லெட்டர்ஸ் எல்லாமே கம்ப்யூட்ட ரைஸ்டு பண்ணனும். உங்களுக்கு கம்ப்யூட்டரில் நல்ல திறமையிருந்தால் எனக்கொரு தலைவலி விட்டது.''

''இதுதான் உங்க சீட். பர்ஸ்ட் இயர் தகவல் இருக்கு. அதை காப்பி செய்திடுங்க..''

''ஏதாவது ஹெல்ப் வேணுன்னா கேளுங்க.'' பேசிவிட்டு ஆல் தி பெஸ்ட் என்பதோடு பேச்சை முடித்துக் கொண்டான். அதன்பிறகு இரண்டொரு முறை பார்த்து சிரித்ததோடு சரி.



இவளும் மற்றவற்றை ஒதுக்கி விட்டு வேலையை கவனித்தாள்.

''மிஸ் சாருமதி. நீங்க மதிய உணவு கொண்டு வந்திருக் கீங்களா? இல்லை கேண்டீனில் இருந்து கொண்டுவரச் சொல்லட்டுமா?''

''இல்லை ஸார் கொண்டு வந்து இருக்கிறேன்.''

''அப்போ கொஞ்சம் சாப்பிட்ட பிறகு வேலையை கவனிப்போம்'' என்றான். அதன் பிறகுதான் வியப்பு அவளை மேலும் ஆட்கொண்டது. அவன் தன்னுடைய கேரியருடன் அவள் முன் அமர்ந்து கொண்டான் தரணி.

''என்ன சாப்பாடு சாருமதி. சாம்பார் வாசனை மூக்கைத் துளைக்குது. அவள் அனுமதி இல்லாமலே ஒரு கவளம் சோற்றை எடுத்து உண்டான். கூடவே வெண்டை பொரியலும் ருசி பார்த்தான். ''வெகு அற்புதம். நீங்கதான் வீட்டில் சமையலா?''

''இல்லை எங்கம்மா!''

''வெகு அற்புதம்!''

அப்படியே தன் காரியரில் இருந்த காரக் குழம்பையும் கேரட் பொரியலையும் அவளுக்கு எடுத்து பாக்ஸின் மூடியில் வைத்தான்.

''இல்லை பரவாயில்லை.''

"சாப்பாட்டை ஷேர் பண்றது தப்பில்லையே! தவிரவும் எங்கண்ணி பிரமாதமாக சமைப்பாங்க..." அவள் ஏதும் பேசவில்லை. அமைதியாய் சாப்பிட்டாள்.

"மிஸ் சாருமதி.."

அவன் அழைப்பிற்கு நிமிர்ந்தவளின் முகம் நோக்கி. "சாப்பாடு நல்லாயிருக்கா?" அவன் எதையோ மென்று முழுங்குவது நன்றாகவே புரிந்தது. "ம்..!" என்ற ஒற்றைச் சொல்லை மட்டும் பதிலாய் உரைத்தாள்.

உணவிற்குப் பின்னரும் வேலை தொடர்ந்தது. இருவருக்கும் பேசக் கூட நேரமின்றி வேலை தொடர்ந்தது. கணிப் பொறியில் சாருமதியின் கைவிரல்கள் விளையாடும்போது, கூடவே வளையல் ஒலியை ரசித்தபடியே இருந்தான் தரணி.

மூன்று வருடக் கணக்குகளை கம்ப்யூட்டரில் ஸ்டோர் செய்வது அத்தனை சுலபமான காரியம் இல்லையே? தொழிலில் தரணி காட்டும் சிரத்தையும், அக்கறையும், சந்தேகங்களைத் தீர்க்கும் விதமும் தன்னையும் அறியாமல் அவன் மீது மரியாதையை ஏற்படுத்தியது சாருமதிக்கு.

நேரம் ஐந்தரையைக் காட்ட விரல்களுக்கு சொடுக்கு போட்டு நிமிர்ந்தாள். "ஓ.கே. மிஸ் சாருமதி மீதியை நாளைக்குப் பார்த்துக்கலாம். விண்டோஸ் விட்டு வெளியே வந்திடுங்க. ஷட்டவுன் பண்ண வேண்டாம். நாளை சந்திக்கலாம்" என்றான் புன்னகையுடன்.

அவள் தன் கைப் பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். கடற்கரையில் சந்தித்தபோது இருந்த குறும்புத்தனம்



முற்றிலும் தரணியிடம் காணாமல் போயிருந்தது வியப்பைத் தந்தது. ஏமாற்றம் அவள் முகத்தில் பல சிந்தனை கோடுகளை ஏற்படுத்த,

அதைக் கலைக்கும் விதமாய் தரணி பேசினான். "சாருமதி நாளைக்கு ஆபீஸ் வருவீங்களா?"

"ஏன்?" என்றாள் புருவம் சுருக்கி.

"அன்னைக்கு பீச்சிலே ஏதோ விளையாட்டா பேசினேன். நீங்களும் கோபப்பட்டுட்டீங்க... இன்று காலையில் என்னைப் பார்த்ததும் உங்க முகத்தில் ஏற்பட்ட உணர்ச்சியை நான் பார்த்தேன். நான் ஏதாவது தவறாக பேசியிருந்தால் என்னை மன்னிச்சிடுங்க ப்ளீஸ்!"

"ஸாரி ஸார். அன்னைக்கு என்னோட மூட் சரியில்லை. அதான் நான் டென்ஷனாயிட்டேன்."

"ஸார் வேண்டாம். தரணி போதும்."

"ஒகே தரணி.."

"வெல் இப்போ நீங்க சகஜமாயிட்டீங்க? இதையே அட்வாண்ட்டேஜா எடுத்துக்கிட்டு நான் ஒண்ணு சொல்லவா? யூ ஆர் வெரி ஸ்மார்ட்" என்றான்.

மறுபடியும் வெடுக்கென்ற பார்வையை வீசவும், "அச்சச்சோ திரும்பவும் கோபமா?" என்றான்.

"ஸார்.."



"ப்ளீஸ் கால் மீ தரணி. ஏதோ தங்களுடைய திருவாயினால் என் பேர் வெளிவந்தால் அடியேன் திருப்தி அடைவேன்."

அவன் கூறிய பாவனையில் சாருமதி சிரித்தே விட்டாள்.

"அப்பா இப்பத்தான் பெயருக்குப் பொருத்தமாய்தான் முகம் மலர்ந்து இருக்கு. சரி நாளைக்கு சந்திப்போமா?"

புன்னகையுடன் கைப்பையை எடுத்துக் கொண்டு வெளியேறியவள் போகும் முன் அவனைப் பார்த்து ஒரு முறை சிரித்து விட்டுப் போனாள்.



4

தரணிக்கு அன்றைய தினம் வெகு சந்தோஷமாய் இருந்தது. அன்றைய தினம் சாருவை முதன் முதலாய் சந்தித்தபோதே அவன் நெஞ்சுக் கூட்டிற்குள் சிறைப்பட்டு விட்டாள். அவளின் கோபம் வெளிப்படும் சமயம் வெண் பட்டு போன்ற குழைவான கன்னக் கதுப்புகள் சிவந்தது. அந்தி மாலையின் ஒளியில் நட்சத்திர மீன்களாய் மின்னிய விழிகள்.

அலைபாயும் கூந்தலை வெகு இலாவகமாய் ஒதுக்கிய விதமும் அவனை அவள் வசப்படுத்தின. இலக்கியங்களில் அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்பது போல முதற் பார்வையில் காதல் சாத்தியமா என்றெண்ணும் போது வேடிக்கையாய் சிரித்து இருக்கிறான் பலமுறை.



ஆனால், தன் வாழ்விலும் அதுபோல் நடக்குமென்று அவன் கனவிலும் நினைத்தானில்லை. சாருமதியைப் போல் ஒரு பெண்ணைக் கண்டால், அது சாத்தியமெனவேப் பட்டது. அந்தளவிற்கு ஒரே பார்வையில் அவனைக் கவர்ந்து விட்டாள், அவள்.

இன்றைய தினம் எதிர்பாராத விதமாய் அலுவலகத்திலேயே பார்ப்போம் என்று கனவிலே கூட நினைக்கவில்லை. அவளின் கனிவான பேச்சும், வேலையில் காட்டும் கவனமும், அவள் மேல் தனி மதிப்பைத்தான் தந்தன.

காலணிகளை வாசலில் காவலுக்கு நிறுத்தி விட்டு, உள்ளே நுழைந்தவளின் காதில் பலப்பல குரல்கள் மோதின.

"சரிம்மா, அழாதே இதெல்லாம் நடப்பது சகஜம்தானே. அம்மா அப்பா சொல்றா மாதிரி கேளு.." கூடவே அம்மாவின் சமாதானப்படுத்தும் குரல். அங்கு ஒரு புதிய சூழ்நிலை நிலவியது. பக்கத்து வீட்டு ராதிகா அழுத கண்களும் வீங்கிய முகமுமாய் இருந்தாள். ஆங்காங்கே காயங்களோடு பார்க்கவே பாவமாய் இருந்தது.

ஐம்பது வயது மதிக்கத்தக்க தம்பதிகள், ராதிகாவின் பெற்றோராய் இருக்கும் என்று தோன்றியது.

"என்னம்மா நடந்தது?" பேச்சை ஓரமாய் வைத்துவிட்டு தாயிடம் கேட்டாள்.

"எல்லாம் வழக்கமா நடக்கிறதுதான் சாரு. ராதிகாவோட புருஷனும், அவனோட அம்மாவும் சேர்ந்து இந்தப் பெண்ணோட சண்டை போட்டு அடிச்சுத் தெருவிலே தள்ளிட்டாங்க.

சாரும்மா பார்க்க ரொம்ப பாவமாய் இருந்தது. அப்புறம் நான்தான் வீட்டுக்கு கூட்டிட்டு வந்து மாத்துத் துணி கொடுத்து அவங்க அம்மாவுக்கு போன் பண்ணினேன்."

"என்ன அநியாயம் இது? நீங்க அவங்களை ஏதும் கேக்கலையா?"

"இல்லேம்மா... இன்னைக்குப் போய் சண்டை போட்டுட்டு வந்திடலாம் ஆனா நாளைக்கு என் பொண்ணு இந்த வீட்லே வந்து வாழணுமே... அதனாலதான்..."

"நீங்க இப்படி பயந்துகிட்டே இருக்கிறதாலதான் பிள்ளையைப் பெத்தவங்க எல்லாம் தலையிலே கொம்பு முளைச்சவங்க மாதிரி நடந்துக்கிறாங்க.."

"சாரு நீ சும்மாயிரு இது அவங்க குடும்ப விஷயம்.."

"வீட்டுக்குள்ளே நடக்கிற வரைக்கும்தான் அது குடும்ப விஷயம் வீதிக்கு வந்திட்டா?"

"அம்மா உன் கோபமும், ஆத்திரமும் நியாயமானதுதான். ஆனா கல்யாணமான ஒரு பெண் நிரந்தரமா தாய் வீட்டிலேயே தங்கிட்டா.. அதனால ஏற்படற விளைவுகள் சாதாரண மானவை இல்லைம்மா."

"இதெல்லாம் புரிஞ்சுக்க உனக்கு வயசு பத்தாது." ராதிகாவின் தந்தை பேச்சு இவளை இன்னும் எரிச்சலூட்டி யது.

"வயசுலே பெரியவர் நீங்களே இப்படி பேசினாயெப்படி? ராதிகா நீயே சொல்லு நீ படிச்ச பொண்ணு. உன் புருஷன்



இல்லாம உன்னால சுயமா வாழவே முடியாதா? சுயமரியாதை யும், விட்டுட்டு அடி உதை தாங்கிட்டு வாழணுமா?"

அந்த ராதிகா, கண்களைத் துடைத்தாள். சாருவைப் பார்த்து "நீ சொல்றது உண்மைதான் சாரு. ஆனா இந்த சமுதாயம் பெண்களை அற்ப ஜீவனாத்தான் பாக்குது. அதிலே சுய மரியாதைக்கெல்லாம் இடமில்லை."

இளையவளுக்கு எரிச்சலாய் வந்தது. என்ன பெண் இவள், கொஞ்சம் கூட சூடு சுரணையில்லாமல், மாட்டை அடிக்கிற மாதிரி அடிச்சிருக்கான். அப்போ கூட, இந்த மாதிரி பெண்கள் இருப்பதால்தான் ஆண்களுக்கு கொழுப்பு ஏறிக்கிட்டே போகுது. அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

அம்மா சமாதானப்படுத்துவதும், அவர்கள் விடைபெறும் ஒலியும் கேட்டது.

"சாரும்மா..." தலையைப் பிடித்துக் கொண்டிருந்தவளிடம் சாப்பிடாம வந்திட்டியே? சாயந்திரம் காபி கூட தரலை. வா சூடா மிளகு ரசம் இருக்கு... சிப்ஸ் பொறிச்சிருக்கேன்.."

"வேண்டாம்மா எனக்கு பசியில்லை."

கஸ்தூரி ஆதரவாய் மகளின் தலையை வருடினார். "சாரும்மா... புருஷன் பொண்டாட்டி சண்டையெல்லாம் சின்னப் பிள்ளைங்க சண்டை மாதிரி பொழுது போனா போயிடும்."



"ஏம்மா? தாலின்னு ஒரு கயிறைக் கட்டிட்டா அவன் இஷ்டப்படியெல்லாம் ஆடணுமா? இது எந்த ஊரு நியாயம்?"

"இல்லேடா, நாட்டு நடப்புன்னு ஒண்ணு இருக்குல்லே, இது காலங்காலமா நடக்குதே, நிர்வாணமான ஊர்லே கோவணம் கட்டறவன் கூட முட்டாள்தான் விடு..!"

"எனக்கு மனசே ஆறலைம்மா? கல்யாணமான நாள்ல இருந்து அவனுடைய தேவைகளை மட்டும் மனசிலே வைச்சிகிட்டு வாழணுமா? இது எந்த வகையிலே நியாயம்?"

"சாரு வாழ்க்கை எப்பவும் நேராவே இருக்காது. நெளிவு, சுளிவு எதிலும் உண்டு."

"அம்மா ஆயிரம்தான் சமாதானம் கூறினாலும் சாருவின் மனம் கேட்கவில்லை. இந்த உலகத்தின் இலக்குகள் அவை விதித்துள்ள சட்டங்கள் மீது வெறுப்பும் சேர்ந்து கொள்ள நிச்சயம் இதை உடைத்தே தீர வேண்டும் என்ற வேகம் பிறந்தது."

நாட்கள் சிறகடித்துப் பறந்தன. பருவக் காற்று சில்லென்று முகத்தில் தோன்றி சாருவின் முடிக்கற்றைகளை கலைத்து சில்மிஷம் செய்து கொண்டிருக்க, ஆப்பிள் ஜூஸைப் பருகியபடியே நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள்.

தரணி எங்கே போனீர்கள்? இத்தனை நேரமா? ஏக்கப் பெருமூச்சுகள் அந்த இடத்தையே வெப்பத்தில் நனைத்தன. சாருவிற்கே வியப்பாய்தான் இருந்தது. கல்லூரியில் படிக்கும் போது காதல் எனும் பெயரைக் கேட்டாலே காத தூரம் ஓடுபவள்.



அப்போதெல்லாம் எத்தனை பேர் அவளின் திருவிழி தரிசனத்திற்கு காத்திருந்தார்கள். யாரிடமும் மனதைப் பறிகொடுக்காமல் இருந்தவள் இன்று ஒரு விநாடிப் பார்வையிலேயே தரணியிடம் சிறைபட்டுப் போனதை அவளால் உணராமல் இருக்க முடியவில்லை.

அலை அலையாய் புரளும் சுருள் கேசமும், சிவந்த இதழ்களும், கண்களில் வழியும் காதலும், கண்ணியமான பேச்சும், எந்த விஷயம் தரணியிடம் ஈர்ப்பை ஏற்படுத்தியது.

"என்ன மேடம் தீவிர யோசனையா? நான் வந்தது கூடத் தெரியாமல்?" நீல ஜீன்ஸ், பிங்க் நிற டீ சர்ட்டுடன் இளமை யாய் வந்து நின்ற தரணியிடம் பொய்க் கோபம் காட்டினாள்.

"ஸாரி டியர், கொஞ்சம் லேட்டாயிடுச்சு."

"லவ்வுக்கு சிக்னல் விழற வரைக்கும் நீங்க சுத்திட்டு வர்றீங்க? அதுக்குப் பிறகு எங்களை தொங்கல்ல விடறீங்களே!"

"இங்கே பாருடா செல்லம்! இன்னைக்கு நான் லேட்டா வந்ததுக்குக் காரணம் என்னன்னு சொன்னா நீ வானத்துக்கும், பூமிக்கும் குதிப்பே?"

"அப்படியென்ன விஷயம் சொல்லப் போறீங்க?"

"நம்ம மேட்டரை எங்கண்ணி கிட்டே ஓப்பன் பண்ணிட்டேன். கூடிய சீக்கிரமே எங்க வீட்டுலே பர்மிஷன் கிடைச்சிடும்."

"அப்படியா?"

''ஆமாம், நீயும் சீக்கிரம் உங்க அம்மாகிட்டே பேசிடேன்.''

''ஏன்?''

''ஏனா? கண்ணுக்கு முன்னால் அழகான பெண்ணை வைச்சிகிட்டு எத்தனை நாள் வெறும் டாவு மட்டும் அடிக்கிறது?''

''ஏய்?'' சாருமதி அவன் புஜத்தில் குத்தினாள்.

''நம்ம கல்யாணத்தைப் பற்றி நான் எத்தனை கனவுகளை கண்டு இருக்கிறேன் தெரியுமா சாரு?''

''தரணி உங்களை முதன் முதலா பார்த்த அன்னைக்கே என் மனசிலே பதிஞ்சுட்டீங்க. அந்த இனிய நினைவுகளை உணர்ந்து இத்தனை சீக்கிரத்தில் கல்யாணம் பத்தி பேசணுமா?''

தரணி வாய் விட்டுச் சிரித்தான். ''எனக்கு தெரிஞ்சு பெண்கள்தான் கல்யாணத்திற்கு அவசரப்படுவாங்க. ஆனா இங்கே எல்லாமே தலைகீழா இருக்கு.''

''லைப்பை என்ஜாய் பண்ணத் தெரியணும் தரணி. என்னைப் பொறுத்தவரையில் கல்யாணங்கிறது ஒரு அடிமைச் சங்கிலி, காதலன் கணவனா மாறும் போது ஆண்கள் ரொம்பவே மாறிப் போயிடுறீங்களே?''

''நீ சொல்ற வர்றது எனக்கு புரியலை சாரு.''

''காதலுக்கு வேணுன்னா கண் இல்லாம போகலாம். ஆனா கல்யாணத்திற்கு? சின்ன குறை கூட பூதாகரமா தெரியும் அளவுக்கு எக்ஸ்ரே கண் இருக்கு. இப்போ பெரும்பாலான



கல்யாண பந்தம் முறியக் காரணமே சுற்றியிருக்கிற உறவுகள்தான். அவர்களால தம்பதியரின் நெருக்கம் குறையுங்கிறது என் அபிப்பிராயம்.''

தரணி மேற்கொண்டு ஏதோ பேச வரவும், பேரர் தடையாய் வர அவர்களின் சம்பாஷணைகள் அத்தோடு முடிந்தன.

5



இரவு சமையலை முடித்து கழுவி சுத்தம் செய்து வெளியே வந்தாள் நளினி. வீடு வெறிச்சென்று இருந்தது. அஜய் ட்யூசன் முடித்துவிட்டு எட்டரைக் குத்தான் வருவான். மற்றவர்கள் வர ஒன்பது மணியாகிவிடும்.

அனைவரும் அலுவலகம் சென்று விட்டால் வீட்டில் அவளும், தேவியம்மாள், மட்டும்தான். அத்தையும் ஏதோ ஜாதகம் பார்க்கப் போவதாய் சென்றுவிட, நளினி மட்டும் தனியாய்! டிவியை ஆன் பண்ணிட, சீரியல்கள் ஓடிக் கொண்டு இருந்தது.

சேனலை மாற்றியவள் வாசலில் அத்தையின் தலை தெரியவும், புன்னகைத்தாள். ஆனால் தேவியின் முகம் சுத்தமாய் வெளுத்துப் போய் இருந்தது. ''என்னத்தை முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு, ஜோசியர் ஏதாவது...?''

''வேலையெல்லாம் முடிஞ்சிட்டதா நளினி..''

''ம்..''



''அஜய் ட்யூசனில் இருந்து எட்டு மணிக்கு மேல்தானே வருவான்.''

''ஆமாம் அத்தை.''

''நாம கோவிலுக்குப் போயிட்டு வரும்போது கூட்டிட்டு வரலாமா?''

அத்தை ஏதோ முக்கியமாய் சொல்லப் போகிறாள் என்றெண்ணி இவளும் மேற்கொண்டு ஏதும் பேசாமல் வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

பிரகாரத்தை சுற்றி விட்டு சற்று நேரம் அமர்ந்து இருக்க, ''என்ன அத்தை ஏன் கவலையா இருக்கீங்க?''

''நேத்து ராத்திரி எனக்கு ஒரு கெட்ட கனவு வந்தது. அதிலிருந்து மனசே சரியில்லை. அதனாலதான் ஜோசியரைப் போய் பார்த்திட்டு வந்தேன். நான் பயந்தபடியே நம்ம குடும்பத்திலே ஏதோ பிரச்சனை வரப் போகுதாம். அதனால நம்ம குடும்பமே பிரிய வாய்ப்பிருக்குன்னு சொல்லிட்டாரு'' சொல்லும் போதே தேவியின் கண்களில் நீர் துளிர்த்தது.

நளினி ஆதரவாய் அவரின் விரல்களைப் பற்றினாள். ''ஜோசியர் என்ன கடவுளா அவர் சொன்னதெல்லாம் உடனே பலிக்கிறதுக்கு?''

''இல்லைம்மா! என்ன கஷ்டம் வந்தாலும், நம்ம குடும்பத்தோட ஒற்றுமை குலையக் கூடாதுன்னு நான் வேண்டாத கடவுள் இல்லை. அதே மாதிரி குத்து விளக்கா நீ வந்து சேர்ந்திட்டே! ஆனா வேறெயென்ன பிரச்சனை வருமோ தெரியலையே?''



''கடவுள் கிருபையில் நமக்கு எந்தக் குறையும் வராது அத்தை. ஜோசியர் ஒரு நம்பிக்கை அவ்வளவுதான். அதையே நம்பி மனசு கவலைப்படக் கூடாது.''

''நம்ம குடும்பம் பிரியப் போகுதுங்கிற நினைப்பையே என்னால தாங்க முடியலையே. அப்படி மட்டும் ஏதாவது நடந்ததுன்னா நான் உயிரோடவே இருக்க மாட்டேன்.''

''அத்தே ப்ளீஸ்! கடவுள் நமக்கு எந்தக் கஷ்டத்தையும் தர மாட்டான். நல்லதையே நினைப்போம். நல்லதே நடக்கும். நானே உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி பேசணும்.''

''என்னம்மா?''

''நம்ம தரணி, சாருமதின்னு ஒரு பொண்ணை விரும்பறானாம். ரொம்பவும் நல்ல பொண்ணாம். படிச்ச பொண்ணு. அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். ஓரளவு வசதியான குடும்பம். அக்காவை திருச்சியில் உறவுலேயே தந்திருக்காங்களாம்..''

''ஓஹோ..''

''பொண்ணு வசதியா இல்லாட்டியும் பரவாயில்லை. நல்ல குணமிருந்தா போதுமே! கோவில்ல வைச்சு நல்ல விஷயம் சொல்லி இருக்க... மாமாகிட்டேயும் கலந்து பேசி ஒரு முடிவெடுப்போம். நேரமாகுது. அஜய் காத்துக்கிட்டு இருப்பான்... வா போகலாம்.''

''அம்மா பசிக்குது சாப்பாடு தயாரா?''

''தரணி இப்படி வந்து உக்காரேன். உங்கிட்டே கொஞ்சம் பேசணும்.''

''என்னப்பா?''

''ஒரு நல்ல சம்பந்தம் வந்திருக்கு. உனக்கு பொண்ணைப் பிடிச்சிருந்தா கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம்.''

''எனக்கு இப்போ என்னப்பா அவசரம்?''

''என்ன நளினி, நீ சொன்னதைப் போல தரணிகிட்டே ஒண்ணும் வேகமே இல்லை. அப்போ இன்னும் இரண்டு வருஷம் போகட்டுமே..'' தரணி விழிக்க.

''அம்மா, மகனின் காது மடல்களை திருகினாள். ''டேய் படவா, உங்கண்ணி எல்லா விஷயத்தையும் என்கிட்டே சொல்லிட்டா அமுக்கினி மாதிரி அமைதியா இருந்திட்டு. இத்தனை பெரிய வேலை செய்திட்டியே?''

''போங்கம்மா..!''

''அய்யே! அண்ணனுக்கு வெட்கத்தைப் பாரேன்..''

''ஏய்?''

''சரிடா. நல்ல விஷயத்தை ரொம்பவும் தள்ளிப் போட வேண்டாம். அந்தப் பொண்ணு வீட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை வர்றோம்னு தகவல் சொல்லிடு என்ன..?''

''இதோ இப்பவே சொல்லிடறேன்..''

''எப்படி?''

''போனில்தான்..''



''கழுதை.. இந்நேரம் போன் பண்ணா அவ என்ன நினைப்பா?''

''நீங்க வேறம்மா இப்போல்லாம் அண்ணா செல்லை கட்டிகிட்டுதான் தூங்கறான்...''

''இப்பவே தரணி முகத்திலே கல்யாணக் களை வந்திடுச்சு..''

''போங்கண்ணி...''

அந்தக் குடும்பம் இன்பமாய் புன்னகைத்தபடியே புதிய உறவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அந்த புன்னகைக்கு ஏற்படப் போகும் பங்கத்தை உணராமல்!

**வீ**ட்டிற்குள் நுழையும் போதே, சாருவிற்கு யோசனையாய் இருந்தது. தரணியுடனான இன்றைய சந்திப்பில் அவன் திருமணத்திற்கு சம்மதம் கூறியதோடு, ஞாயிற்றுக்கிழமை பெண் பார்க்க வருவதாக வேறு கூறிட, அதை அம்மாவிடம் எப்படி ஆரம்பிப்பது என்ற யோசனையில் வந்தவளை,

பக்கத்து வீட்டு ராதிகாவின் அழுகை கேட்டது. ''என்னம்மா ராதிகா வீட்ல மறுபடியும் பிரச்சனையா?''

''வழக்கம் போல ராதிகாவுடைய புருஷனும், அவ மாமியாரும் சேர்ந்திட்டு ஒரே அடி. பாவம்டி அந்தப் பொண்ணு. இந்த கும்பல்கிட்டே மாட்டிக்கிட்டு ரொம்பவும் கஷ்டப்படறா..'' சூடான காபியை தந்தபடியே சொன்னாள் அம்மா.

''அம்மா.. நான் உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்?''



''என்னடி பீடிகையெல்லாம் பலமா இருக்கு..'' சாமி படத்தில் விளக்கை ஏற்றியபடியே கேட்டாள் அம்மா.

''அம்மா... நான் தரணின்னு ஒருத்தரை நேசிக்கிறேன். அவங்க வீட்டுலேயிருந்து வர்ற ஞாயிற்றுக்கிழமை பெண் பார்க்க வர்றாங்களாம்..''

''என்னடியிது? ஏதோ சினிமாவுக்கு போயிட்டு வர்ற மாதிரி சொல்றே? யாராவது வந்து பெண் கேட்டா உடனே தந்திட முடியுமா? உன் கல்யாண விஷயத்திலே அக்கா, அத்தானை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?''

''அம்மா இப்போ உடனே ஒண்ணும் கல்யாணம் நிச்சய மாகிடப் போறதில்லே. அவங்க வந்து பார்த்திட்டுப் போவாங்க, உனக்கு பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசு'' அவள் முகம் அலம்ப சென்று விட்டாள்.

கஸ்தூரியம்மாவுக்கு என்ன பேசுவது என்றே தெரிய வில்லை. சரி படித்த பெண், புத்திசாலி அவளின் தேர்வு தவறாய் இருக்காது. பார்ப்போம் என்று அவரும் அந்த ஞாயிற்றுக் கிழமைக்காக காத்து இருந்தார்.

6



**அ**ந்த நாளும் வந்தது. கஸ்தூரிதான் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். சாரு அப்படியொன்றும் ஆர்வம் காண்பிக்கவில்லை. வழக்கம் போலவே இருந்தாள். வீட்டை ஒதுங்க வைத்து,



டிபன் தயார் செய்து நிமிர்வதற்குள் கஸ்தூரியம்மாள் துவண்டுதான் போனாள்.

சாரு லைப்ரரிக்கு சென்று விட்டு தாமதமாயித்தான் வந்தாள். ''என்ன சாரு இது? உன்னைப் பெண் பார்க்க வர்றாங்கன்னு சொன்னே. நான்தான் வானத்துக்கும், பூமிக்குமா குதிக்கிறேன். நீ என்னடான்னா ரொம்ப கேஷ்வலா இருக்கியே?''

''நான் எப்பவுமே என் நிலையில் இருந்து மாறவே மாட்டேன்.''

''இப்படி துக்கிரித்தனமா எதுவும் பேசாம இரு. சரி எத்தனை பேர் வருவாங்க?''

''எனக்குத் தெரியாது?''

''உனக்கு என்னதாண்டி தெரியும்! முறைக்காதே. எட்டு பேருக்கு வர்ற மாதிரி டிபன் தயார் பண்ணியிருக்கேன்.

''நீ போய் குளிச்சிட்டு பட்டுப் புடவை கட்டிக்கோ. பூ வாங்கி வைச்சிருக்கேன். அதையும் வைச்சிக்கோ... அப்புறம், பக்கத்து வீட்டு பெரியம்மாவையும், மாடி வீட்டு பாட்டி யையும் வரச் சொல்லி இருக்கேன்.''

''ஏம்மா? எதுக்கு இப்படிக் கூட்டம் கூட்டுறே?''

''அறிவு கெட்ட மாதிரி பேசாதே, சாரு வெளி மனுஷங்க வரும்போது நமக்குன்னு ஒரு நாலு பேர் இருக்க வேண்டாமா? உடனே வெண்மதியையும் கூப்பிட முடியாதே. மசமசன்னு நிக்காம நீ போய் தயாராகிற வழியைப் பாரு!''

அதற்கு மேல் ஏதும் பேசாமல் நகர்ந்தவள், ஆரஞ்சு நிற வேலைப்பாடுகள் கொண்டு இருந்த சந்தனநிற பட்டுப்புடவை கட்டிக் கொண்டு தளர பின்னலிட்டு மல்லிகையை சூடிக் கொண்டாள். லேசான பவுடர் பூச்சு, செல்லில் தரணிக்கு தொடர்பு கொண்டாள்.

''ஏய் செல்லம் என்னடா?''

''என்ன தரணி அஞ்சு மணிக்கு வர்றேன்னு சொன்னே இன்னும் வரலையே?''

''ஆஹா.. என் காதல் தேவ்தையே... அதற்குள் இத்தனை அவசரமா? நேத்து கல்யாணத்திற்கு இஷ்டமே இல்லாத மாதிரி பேசினே?''

''அம்மா என்னை படுத்தறாங்க. என்னாலயும் இந்த காஸ்ட்யூமில் ரொம்ப நேரம் வெயிட் பண்ண முடியாது.''

''அடிப்பாவி! போனை வை. உங்க தெரு முனை அருகில் வந்தாச்சு.'' தரணி லைனைக் கட் பண்ணி விட சாருமதி பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தினாள்.

வந்தவர்களை வரவேற்று ஹாலில் அமர வைத்தனர். ''வணக்கம், எல்லோரும் வாங்க உட்காருங்கோ.''

முன்னேற்பாடாய் விரிக்கப்பட்டு இருந்த கம்பளத்தில் தட்டுகளை வைத்தனர். சிறுவன் அஜய் துறுதுறுவென்று இருந்தான். தரணியின் தந்தை பேச ஆரம்பித்தார். ''வணக்கம்மா நான் சதாசிவம் தரணியுடைய அப்பா, இது என் முதற் பிள்ளை, ரகு அவன் மனைவி நளினி, பேரன் அஜய்,



என் மகள் நித்யா, எங்க வீட்டு சி.எம். தேவி என்று அறிமுகப்படுத்தப்பட்ட அம்மாளைக் கண்டதும், கஸ்தூரி சிறு நெற்றி சுருங்கலுக்குப் பின், ''நீங்க தேவியா?'' சிவதாணு மாமாவுடைய பொண்ணுதானே?'

''ஆமா நீங்க?''

''என்ன தேவி என்னை நினைவு இல்லை, நான்தான் கஸ்தூரி, நாம இரண்டு பேரும் ரெட்டியார்பட்டி பள்ளியில் ஒண்ணா +2 வரை படிச்சோமே நினைவில்லையா?''

''அந்த கஸ்தூரியா நீ என்னடி இது அடையாளமே தெரிய லையே? எத்தனை நாளாச்சு பார்த்து. பெண்களிருவரும் கைகோர்த்து தங்கள் அன்பை பரிமாறிக் கொள்ள தரணியின் வயிற்றில் பாலை வார்த்தது போலிருந்தது.

''உன் மகன்தான் தரணியா?''

''ஆமாம்... நாம பேசிகிட்டா மாதிரியே இப்போ சம்பந்தி ஆகப் போகிறோம்... நாம நிறைய பேச வேண்டி இருக்கு.''

''தேவிம்மா, பழைய தோழிங்க நீங்க பேசினா நேரம் போறதே தெரியாது. ஆனால் தரணி பாவம் இல்லையா?''

''போங்க உங்களுக்கு எப்பவுமே கிண்டல்தான். உன் பொண்ணுதான் எனக்கு மருமகளா?''

''முதல்ல காபி டிபன் சாப்பிடுங்க. நான் போய் சாருவைக் கூட்டிட்டு வந்திடறேன்'' கஸ்தூரி நகரவும்,

''நம்ம வீடுன்னு ஆகிப் போச்சு முதல்ல உன் பொண்ணைக் கூப்பிடு!'' கஸ்தூரிக்கு மனம் முழுக்க நிறைவாய் இருந்தது.



காதல் என்கிறாளே வருபவர்கள் எப்படிப்பட்டவர்களோ என்று அச்சப்பட்டாள். ஆனால், இப்போது அந்தக் கவலை முற்றிலும் அகன்று போய் இருந்தது. மகளைக் கட்டி அணைத்துக் கொண்டார்.

''அய்யோ என் செல்லமே என்னமோ ஏதோன்னு நினைச் சேன். ஆனா, இத்தனை நல்ல இடமா நீ தேர்ந்தெடுப்பேன்னு நான் நினைக்கவே இல்லை.''

''என்னம்மா சொல்றே?''

''தேவி அதான் தரணியோட அம்மா என்னோட நெருங்கிய தோழி. அது மட்டுமில்லை. அந்தக் குடும்பம் மொத்தமுமே ரொம்ப நல்லவங்க மாதிரி தெரியுது. நீ ரொம்ப கொடுத்து வச்சவடீ சாரு..''

ஆசை பொங்க அவளின் மேல் விழிகளைத் திருப்பினான். அழகு சிலையென வந்து நின்ற அவளைக் கண்டதும் இமைக்கவும் மறந்தான் தரணி. அனைவரின் கண்களிலும் திருப்தி வழிந்தது.

''என்னம்மா படிச்சிருக்கே?''

''எம்.காம்.''

''தரணி எல்லா விஷயமும் சொன்னான். ஓப்பனா சொல்லப் போனா இங்கே வர்ற வரைக்கும் பொண்ணு யாரோ? எப்படிப்பட்ட குடும்பமோன்னு பயமிருந்துகிட்டே இருந்தது மனசு. ஆனா, கடைசியிலே என் தோழி கஸ்தூரியோட பொண்ணுன்னு தெரிஞ்சதும் இனி எனக்கு கவலையே இல்லை. இப்போ நீதாம்மா சொல்லணும். எங்களை உனக்குப் பிடிச்சிருக்கான்னு..''



''ம்.. ரொம்பவே. அத்தை எனக்கு சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. அதனால வெளிப்படையாகவே சொல்லிடறேன்.''

''இனிமேயென்னம்மா தயக்கம். அதான் நாமெல்லாம் ஒண்ணுக்குள்ளே ஒண்ணு ஆயிட்டோமே...! உன் மனசில் இருப்பதை சொல்லும்மா...'' தரணியின் தந்தை அனுமதி தரவும், தரணியும், கஸ்தூரியும் சாரு என்ன சொல்லப் போகிறாளோ என்று பயத்துடன் அவளைக் கண்டனர்.

''எனக்கு எல்லோரையும் பிடிச்சிருக்கு! ஆனா நான் இப்போ சொல்றதை நீங்க தவறா எடுத்துக்கக் கூடாது. சில விஷயங் களை முன் கூட்டியே பேசிடறது நல்லது. தேவையில்லாத மனக்கசப்பு வராது. எனக்குன்னு சில கொள்கைகள் இருக்கு. எந்தக் காரணத்தை முன்னிட்டும், அதை விட்டுக் கொடுக்க மாட்டேன்.

''ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் எதுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறாங்க?''

''இரண்டு பேரும் சந்தோஷமா வாழறதுக்கு..''

''அந்த சந்தோஷத்திற்கு சில தடைகள் வந்தா அதை தள்ளி வைக்கிறது தப்பில்லையே? எனக்கு இந்தக் கல்யாணத்திற்கு முழு சம்மதம். ஆனா கல்யாணத்திற்குப் பின் பிறகு கூட்டுக் குடும்பமா வாழ எனக்கு விருப்பமே இல்லை. என்னோட கொள்கைப்படி தனிக்குடித்தனம் பண்றதா இருந்தா இந்த கல்யாணத்திலே எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.''

சாருமதி பேசி முடிக்கும் போது அங்கு பெருத்த அமைதி நிலவியது. யாருமே ஏதும் பேச முடியாத சூழ்நிலை.

"நீ ஒண்ணும் வித்தியாசமா எடுத்துக்காதே. தேவி அவ சின்னப் பொண்ணு. ஏதோ தெரியாம பேசுறா?"

"அம்மா நான் சரியாத்தான் பேசுறேன். நாட்டுலே நாம எத்தனை விஷயங்களைப் பாக்குறோம். என் வாழ்க்கையிலே எந்த விதமான அசம்பாவிதமும் நிகழ்ந்திடக் கூடாதுன்னு நான் முடிவெடுக்கிறதுலே எந்தத் தவறும் இல்லையே?"

"கல்யாணத்துக்கு முன்னாடியே என் பிள்ளையை என்கிட்டேயிருந்து பிரிக்கணும்னு நினைக்கிறியேம்மா? இது நியாயமா?"

"எனக்கு ஒரு விஷயம் புரியலைங்க? இருபது வருஷமா பெத்து வளர்த்த பெத்தவங்களை விட்டுட்டு கல்யாணம் பண்ணின ஒரே காரணத்திற்காக, பெண்கள் வந்திடறோம். இது மட்டும் பெத்தவங்ககிட்டே இருந்து பிள்ளையை பிரிப்பது இல்லையா? பிரசவ வேதனை ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றுதானே..."

"காலங்காலமா நடந்து வர்ற விஷயம்தானே இது?"

"இருக்கலாம். வருங்காலமாவது மாறணும் இல்லையா? பெண்ணுக்குப் பெண்ணே எதிரியான எத்தனையோ விஷயங்கள் நம்ம காதுக்கு எட்டுதே.. என்னோட கொள்கை. இதுதான் நான் கூட்டுக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட முடியாது. முட்டாள்தனமாய் காம்ப்ரமைஸ் பண்ணிகிட்டு, சின்ன சின்ன சந்தோஷத்தைக் கூட விட்டுட்டு என்னால வாழ முடியாது."

ஹாலில் யாரும் பேசவில்லை. "இதுதான் உன் முடிவா?" முதலில் தரணிதான் வாய் திறந்தான்,.



"ஆமாம்."

"அப்போ எனக்கு இந்த கல்யாணமே தேவையில்லை."

"தரணி ப்ளீஸ். நான் உங்க குடும்பத்தை வெறுக்கலே. கல்யாணத்திற்குப் பிறகு தனியா இருப்பது நல்லதுன்னு பீல் பண்றேன்."

"ஸாரி சாருமதி என் குடும்பத்தை விட எனக்கு எதுவுமே முக்கியம் இல்லை. நீ என் கூட வாழணுமின்னா என் வீட்டிற்கு என் மனிதர்கள் கூடதான் இருக்கணும். இதுக்கு சம்மதமின்னா சொல்லு மேற்கொண்டு பேசலாம்."

"தம்பி.."

"இல்லே ஆன்ட்டி நான் இவளை விரும்பினது உண்மை. ஆனா அவ பேசறது நடைமுறைக்கு சாத்தியப்படுமா? என் முடிவை நான் தெளிவா சொல்லிட்டேன். இனி முடிவெடுக்க வேண்டியது அவள்தான்" தரணி வெளியே சென்றிட அவனைத் தொடர்ந்து, மற்றவர்களும் சென்றனர். கஸ்தூரியின் கையைப் பற்றிய தேவி மேற்கொண்டு ஏதும் பேசாமல் போய் விட்டாள்.

## 7



**சா**ப்பிட செய்த பலகாரங்கள் அனைத்தும் மூடியபடியே இருந்தன. கிச்சனில், துணைக்கு வந்த அக்கம் பக்கத்தினர், "இதோபாரு! கஸ்தூரி என்னதான் இருந்தாலும் உன் பெண் ணிற்கு இத்தனைத் திமிர் ஆகாது.



ஆம்பிளை இருந்து வளர்த்திருந்தா ஒழுங்கா இருந்திருக் கும் தானே. படிச்சு சம்பாரிக்கிறவ இல்லையா? அதனாலதான் இத்தனை எடுத்தெறிஞ்சு பேசுறா?"

கஸ்தூரி அதற்குப் பிறகு மகளிடம் எதுவும் பேசவில்லை. பூஜையறையே கதியென்று கிடந்தாள். ஆனால், சாருமதியோ எதுவுமே நடக்காதவள் போல சாதாரணமாக இருந்தாள். உடையெல்லாம் மாற்றிய பிறகு, "அம்மா எனக்கு பசிக்குது சாப்பாடு எடுத்து வைக்கிறியா?"

மெல்ல எழுந்த கஸ்தூரி மகளை ஊன்றி கவனித்தாள். "என்ன பொண்ணுடி நீ. நீயா ஒருத்தனை விரும்புரேன்னு சொன்னே. பொண்ணு பார்க்க வர்றாங்கன்னு தயார் பண்ண சொன்னே? எல்லாத்தையும் செய்திட்டு நீயே உன் தலையிலே மண்ணை வாரிப் போட்டுகிட்டியே?"

"அம்மா?"

"பேசாதடீ! பொண்ணா பொறந்தா பொறுமை வேணும். அப்படியில்லைன்னா அவ பெண் ஜென்மமே இல்லை. உன் உணர்வுகளுக்கு அடுத்தவங்க எப்படி மதிப்பு தரணுமின்னு எதிர்பார்க்குறீயோ அதே மாதிரி அடுத்தவங்க உணர்வுகளை நீயும் புரிஞ்சுக்கவே மறுக்குறே? தேவி எத்தனை நல்லவ தெரியுமா? அவ வீட்டுல வாழ நீ கொடுத்து வச்சிருக்கணும்."

"அம்மா ப்ளீஸ்! எத்தனையோ விஷயங்களைத் தாண்டியும் திருப்தின்னு ஒண்ணு இருக்கு. எல்லாத்தையும் பூட்டிக்கிட்டு வாழ நான் ஒண்ணும் சராசரி பொண்ணு இல்லை. என் வாழ்க்கையை எந்த தடங்கலும் இல்லாம திருப்தியா



வாழணுமின்னு நான் முடிவு பண்ணிட்டேன். தரணி பத்தி எனக்கு நல்லாத் தெரியும். நீ கவலைப்படாம சாப்பாடு போடு."

மகள் அத்துடன் பேச்சை முடித்துவிட, மேற்கொண்டு ஏதும் பேசாமல் சென்று விட்டார் தாய்!

**நா**ட்கள் மௌனமாய் நர்த்தனமாடியபடி விரைந்தன. காலம் தம் கடமையை செவ்வனே செய்து கொண்டு இருந்தன. தரணியும் வழக்கம் போல் ஆபீஸ் சென்று வந்தான். ஆனால் வழக்கமான கலகலப்பு அவனிடம் காணாமல் போய் இருந்தது. எல்லார் முன்னிலையிலும் வலுக்கட்டாயமாக அவன் சிரித்தான்.

தனிமையில் வருந்தினான். இரண்டொரு முறை சாருமதி போன் செய்த போதும் அதை அட்டெண்ட் பண்ணாமல், இருந்து விட்டான். தேவியம்மாவிற்கு மட்டும் மகனின் இந்த மாற்றம் வெகுவாய் உரைத்தது. தாயறியா சூலா?

மதிய நேரம். அடுப்பில் குழம்பு கொதித்துக் கொண்டி ருந்தது. தேவி விருப்பமே இல்லாமல் டி.வி. பார்த்துக் கொண்டே, கார்ரட்டை நறுக்கிக் கொண்டிருக்க, காலிங் பெல் ஒலித்தது.

கதவை திறந்ததும், தன் ஒன்று விட்ட சகோதரி ஜெயாவைக் கண்டதும் அன்போடு தழுவிக் கொண்டாள். "வாங்கக்கா? எப்படி இருக்கீங்க? மஸ்கட்டில் இருந்து இந்தியாவிற்கு எப்போ திரும்பினீர்கள்?"

"இரண்டு நாள் ஆகுது. ரிசட்டில் தங்கி இருக்கோம்."

"என்னக்கா இது? உரிமையா நம்ம வீட்டுல வந்து தங்காம ஒட்டல்ல ஏன் தங்கணும்?"

"இல்லே தேவி நான் தமிழ் நாட்டுலே உள்ள கோவில் களுக்கு போக வந்திருக்கேன். அதனாலதான் வீட்டிலே தங்கலை. இன்னைக்கு நைட் காஞ்சிபுரம் போறேன்."

நளினியும் குளிர்ந்த நீரைக் கொண்டு வந்து தந்தவள், "நல்லா இருக்கீங்களா அத்தை?" என்றாள்.

"நீ எப்படி இருக்கேம்மா?"

"அக்கா, அத்தானும், ராகுலும் கூட வந்திருக்காங்களா?"

ஜெயாவின் கண்களில் கண்ணீர் திரண்டது. "ராகுல் இப்போ உயிரோட இல்லை தேவி!"

இவர்கள் இருவரும் கணிசமாய் அதிர்ந்திருந்தார்கள்.

"என்னக்கா சொல்றீங்க? ராகுலுக்கு என்னாச்சு?"

"ராகுல் ஒரு பொண்ணை மனசார விரும்பினான். ஆனா உங்க அத்தான் அதை ஒப்புக்கலை. அதனால அந்தப் பொண்ணு இறந்திட்டா. கொஞ்ச நாள் பித்து பிடிச்சா மாதிரி இருந்தவன் திடீர்னு அவனும்..." குலுங்கினார் அவர். "பெத்து வளத்தவங்களை மனசால நினைக்காம நேத்து வந்த் காதலால தினம் தினம் என்னை சாகடிச்சிட்டுப் போயிட்டான்."

"கவலைப்படாதீங்க அத்தை. சில இளைஞர்கள் இன்பத்தை சுலபமா ஏத்துக்கிற அளவுக்கு, பிரச்சனைகளை எதிர் கொள்ள பயப்படறாங்க."



அதன் பிறகு ஜெயா பேசிய சில வார்த்தைகள் எதுவுமே தேவியம்மாளின் காதில் விழவில்லை. மனம் முழுக்க ரணமாய் இருந்தது. ராகுலைப் போலவே தரணியும் ஏதாவது தவறான முடிவிற்குப் போய்விட்டால், அதற்காக உயிரோடு என் பிள்ளையை தாரை வார்க்கவா இத்தனை அருமை பெருமையாய் வளர்த்தேன். மனது இரு தரப்பிலும் வாதிட மிகவும் சோர்ந்தார் தேவி.

நளினியுடைய கவலை தோய்ந்த முகத்தினைப் பார்த்து, "நான் கோவிலுக்குப் போயிட்டு வருகிறேன்" என்று கிளம்பினார்.

அர்ச்சனையை முடித்துவிட்டு கிளம்புகையில், கஸ்தூரி யைப் பார்க்க நேரவும், என்ன பேசுவது என்று தெரியவில்லை தேவிக்கு. கஸ்தூரியே வாய் திறந்தாள்.

"நானே உன்னைப் பார்க்க வரணுமின்னு நினைச்சிட்டு இருந்தேன் தேவி. நல்லவேளையா கோயில்லேயே உன்னைப் பார்த்திட்டேன். என்னை மன்னிச்சிடு தேவி."

"ச்சீ! மன்னிப்பெல்லாம் எதற்கு?"

"இல்லே தேவி, சாருவுடைய நடத்தைக்கு நான்தானே மன்னிப்பு கேட்டாகணும். ஆனா சாரு ரொம்பவும் நல்லவ தேவி. அவ பழகின இடம், சந்தித்த சமுதாயம் இது எல்லாமே அவளுக்குள்ளே சில மாறுதல்களை உருவாக்கிடுச்சு. தனக்குத் தானே எதையோ தவறா கற்பனை செய்துகிட்டு, அவளுடைய இந்த செயலிற்குப் பின்னாடி புரிந்து கொள்ளாத தன்மைதான் இருக்கே தவிர, வேற எந்த கெட்ட எண்ணமும் இல்லை."



தேவி ஏதும் பேசவில்லை.

"தேவி ஒரு நல்ல தோழிங்கிற முறையிலே நான் உன்கிட்டே ஒரு யாசகம் கேட்கலாமா?"

"என்ன கஸ்தூரி இது? பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசிகிட்டு.."

"இல்லே தேவி நம்ம பிள்ளைகளோட வாழ்க்கை நல்லபடியா அமையணுமே? சாருவுடைய காதல் உண்மை. தரணியைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்துக்கப் போறதில்லைன்னு. உறுதியா இருக்கா? அதனால எனக்காக நீ கொஞ்சம் விட்டுக் கொடுத்தீன்னா, இது ஒரு வகையில் உனக்கு சுயநலமாக் கூடத் தோணும். ஆனா, நீயே கைவிட்டுட்டா சாருவை என்னால கடைசி வரை மாத்த முடியாமலே போயிடும்."

"எனக்குப் புரியுது கஸ்தூரி, உன் பொண்ணு சொத்து பத்தில பங்கு கேட்டா பரவாயில்லை. அவ என் பிள்ளையையே..!"

"அன்பை பங்கிடுவதில் அர்த்தம் இல்லைன்னு அவ கூடிய விரைவில் புரிஞ்சிப்பா தேவி. உன் குடும்பத்திற்கு வந்திட்டா, அவ மாறுவான்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பதைப் போல" கஸ்தூரியின் பேச்சை சிந்திக்க ஆரம்பித்தாள் தேவி.

சில நாட்களாகவே தரணி இயல்பாய் இல்லை என்பதை அந்தத் தாயுள்ளம் சற்றே உணர்ந்துதான் இருந்தாள். வெளியே சிரித்தாலும், உள்ளே வேதனையைச் சுமந்தபடி வளைய வருவதை பார்த்திருக்கிறாளே. 'என் பிள்ளையின் நலனிற்காக



எத்தனையோ விட்டுக் கொடுத்தேன். இப்போது அவனையே' நெஞ்சம் வலித்தாலும் தரணியின் எதிர்காலம் பெரிதாய் பட்டது. அம்மனின் முன்பு போய் நின்றாள்.

"அம்மா உன் சந்நிதியில் நின்று முடிவு செய்திட்டேன். இது நல்லபடியாக நடக்கணுமின்னு நீதாம்மா அருள் புரியணும்." மனதார அம்மனை வேண்டிக் கொண்டு கஸ்தூரியிடம் திரும்பினாள். "கஸ்தூரி இது உடனே எடுத்த முடிவு இல்லை. நான் உன்னை நம்புறேன். ஏன்னா, நாம் நல்லதே நடக்குமின்னு நம்புவோம்."

"அப்படின்னா?"

"உன் பொண்ணுக்கும், தரணிக்கும் கூடிய விரைவில் கல்யாணம் நடக்கும். கவலைப்படாம இரு. நான் வீட்டுக்குப் போய் கலந்து பேசிட்டு சொல்றேன்."

வீட்டிற்கு வந்து எல்லோரிடமும் தன் முடிவைச் சொன்னபோது தரணி மிகவும் கோபப்பட்டான். "எனக்கு ஏம்மா இத்தனை பெரிய தண்டனை. நம்ம குடும்பத்தை விடவும் வேறெதுவுமே முக்கியம் இல்லை. நான்தான் எதுவுமே வேண்டாம்னு சொன்னேனம்மா.."

"தரணி உன் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு நான் ஒண்ணும் மனசாட்சி இல்லாதவ இல்லப்பா. நல்லா யோசிச்சுதான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். எனக்கு எல்லாத்தையும் விட உன் நிம்மதி முக்கியம்."

"அம்மா..." தரணியின் குரல் தழுதழுத்தது.

"மனசு வெள்ளைத்தாளா இருக்கும் வரையில் எதையும் எழுதலாம். ஆனால, ஏற்கனவே எழுதின எழுத்து மேலே எழுதினா அது கிறுக்கலாகத்தான் போய் முடியும். உன் மனசு அந்தப் பொண்ணை மறக்க முடியாம படற பாடு எனக்குப் புரியுது ராஜா.."

"தேவி நீ நல்லா யோசிச்சுதான் இந்த முடிவை எடுத்து இருக்கியா?"

"ஆமாங்க. என்னோட இந்த முடிவுக்கு நீங்க எல்லோரும் ஒப்புக் கொள்வீங்கன்னு நம்புறேன்.."

"அப்போ என்னை தனியா அனுப்புறதுன்னு முடிவு பண்ணிட்டே இல்லேம்மா.."

"டேய்! ஏன்டா இப்படி பேசுறே? நீ என்னை விட்டுட்டு பிரியறதா நான் நின்னைக்கலையே? தினமும் பாக்காம இருந்தா இந்த அம்மாவை நீ மறந்திடுவியா என்ன?"

"அப்படி அந்த பொண்ணையே கல்யாணம் பண்ணி வைக்கணுமிங்கிற அவசியம் என்ன வந்தது?"

"தரணியோட முழுமையான சந்தோஷம்..."

"அவனே கல்யாணம் வேண்டான்னு சொல்றானே?"

"அது முழு மனசோட இல்லைங்க. பக்கத்திலே இருக்கிறதால மட்டும் அன்பு வளராது. என் மகன் வெளியூரில் இருக்கிறதா நினைச்சிக்கிறேன். இதையெல்லாம் தாண்டி தரணி மேலே எனக்கு முழு நம்பிக்கை இருக்கு. அதனால இந்தக் கல்யாணம் நடக்கும்."



தேவியின் பேச்சிற்கு, மறு பேச்சு பேசி அங்கு பழக்கமில்லாததால் எல்லோருமே அதற்கு ஒப்புக் கொண்டனர். தேவியம்மாள் சொன்னது போலவே திருமணமும் நல்லபடியாய் நடந்தேறியது.

8



முதலிரவு. ஒவ்வொரு தம்பதிகளின் வாழ்விலும் மறக்க முடியாமல் பதிந்து விடும் பரிச்சயமான ஆனந்த இரவு. அடையாறில் ஒரு பிளாட்டை அவர்களின் தனிக் குடித்தனத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பூக்களும், ஊதுபத்திகளும் தத்தம் பங்கிற்கு நறுமணம் வீசிக் கொண்டு இருக்க, அறைக்குள் இருவரும் தனிமையில் மௌனம் அவர்களுக்குத் துணையாய்! தரணி எவ்வித உணர்வையும் காட்டாமல் அமைதியாய் அமர்ந்திருந்தான். சாருவே' பேசத் துவங்கினாள்.

"என்ன தரணி எதுவுமே பேசலை? எம்மேல இன்னும் கோபம் தீரலையா?"

"அதெல்லாம் இல்லையே? நான் நார்மலாத்தான் இருக்கேன்."

"உங்க நிலைமை எனக்குப் புரியுது தரணி. இத்தனை நாளா கூடப் பழகின உறவுகளை பிரிஞ்சி வாழறது எத்தனை கொடுமைன்னு புரியுது. என் நிலைமையில் இருந்து



பார்த்தீங்கன்னா நான் எந்தத் தப்பும் செய்யலைன்னு தெரியும். இளமை ஒரு முறைதான் அதுவும் சில காலம்தான். அனுபவிக்க வேண்டிய வயசிலே எல்லாத்தையும் விட்டுட்டு, முடியாத நேரத்திலே ஏங்கிட்டு திரியக் கூடாது.

"இந்த தனிமை நமக்கு எத்தனை சந்தோஷத்தை தரப் போகுதுன்னு உங்களுக்கே தெரியும். யாருக்காகவும் நம்ம சந்தோஷத்தை விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு நினைச்சேனே தவிர, உங்க வீட்டு ஆளுங்களை நான் எதிரியா நினைக்கலை. இந்தாங்க பால் சாப்பிடுங்க!" அவள் பாலை நீட்ட தரணி வாங்கிப் பருகினான். மனதிற்குள் தேவி சொன்ன வார்த்தைகள் காதில் ஒலித்தது.

"தரணி சாரு ரொம்பவும் நல்ல பொண்ணு. எதையோ நினைச்சு பயந்து இப்படி தவறா நடந்துக்குறா? அதை நல்லவிதமா புரிய வைச்சு கூட்டு குடும்பமின்னா என்னங்கிறதை புரிய வை. உன்னால முடியாதா..?"

"அம்மா... உன்னை விட்டுட்டு...?"

"நான் எப்பவுமே உன்கூடதான் இருப்பேன் கண்ணா. இந்த முடிவை நான் எடுத்ததற்கு காரணமே ஒரு நல்ல பெண்ணோட வாழ்வு பறிபோயிடுமோன்னுதான். அதனால எந்த உறுத்தலும் இல்லாம நீ அவ கூட சந்தோஷமா வாழணும். அம்மாவுடைய ஆசை. செய்வியா?"

"நிச்சயமாம்மா.."

"என்ன தரணி ரொம்பவும் யோசனை?"



"நத்திங்" புன்னகைத்தாள். சகலமும் மறந்து, இரவு நேரம் இனிய கனவுகள் நிறைந்து இனித்தது. ஆனால் மறுநாள் காலை வழக்கம் போல் விடிந்தது. எவ்வித பரபரப்பும் இல்லாமலேயே?

நாட்கள் மாதங்களாய் பறந்தோடின. இரண்டு பேரும் அலுவலகம் சென்றார்கள். வேலை முடித்து இரவில் சில நாட்கள் அவன் மட்டுமாய் பின் அவளுமாய் சேர்ந்து தேவியின் வீட்டுக்கு செல்வதுண்டு. இனிமையாய் பேசினாள். பழகினாள். நித்யாவின் பிறந்த தினத்தை மனதிற்கு கொண்டு வாழ்த்து சொல்லி பரிசு தந்தாள். வீட்டிற்கு வரும் சமயம் மாமாவிற்கு பிடித்த புத்தகம், அத்தைக்கு பிடித்த பாடல்கள், நளினிக்கு சமையல் குறிப்பு என வாங்கி வந்து ஆச்சரியப் படுத்தினாள். ஆனால் எல்லாமே ஒரு எல்லைக்குள்ளேயே!

"ஏன் அத்தை சாருவைப் பார்த்தா ரொம்பவும் நல்ல குணமாத்தான் தோணுது. ஆனா என்னவோ..?"

"விடு நளினி! உன்னைப் போலவே அவளும் மாறுவான்னு நான் நம்பறேன்" தரணியிடம் கூட அந்த சந்தோஷம் தொற்றிக் கொண்டது. அதை மனைவியிடம் தனிமையில் கேட்க,

"நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே தரணி. எனக்கு யார் மேலேயும் எந்த துவேஷமும் இல்லை. நீ ஒரு விஷயத்தை புரிஞ்சுக்கோ. நாம எல்லோரும் ஒரே வீட்லே இருந்தா, பெரியவங்களுக்கு பயந்து பயந்து நாம வாழணும். இப்போ நாமும் நிறைஞ்ச வாழ்வு வாழறோம். அவங்களோடவும் சுமுகமான உறவு இருக்கு. இப்போ புரியுதா. கிட்டப் போனா

முட்டப் பகை..'' என்றவாறே வேலையை கவனிக்கப் போனாள்.

தரணிக்கு சப்பென்று ஆகிப் போனாலும், இதுவரை அவள் மாறியதே பெரிய விஷயம். காலம் அதை நடத்தும் என்ற நம்பிக்கையில் அவனும் உற்சாகமாய் இருந்தான்.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட, சாருமதி அடுத்த மூன்றாவது மாதத்திலேயே அதைப் போட்டு உடைப்பாள் என்று தரணி நினைக்கவே இல்லை.

அன்று காலை வழக்கம் போலவே விடிந்தது. எப்போதும் சுறுசுறுப்பாய் இருப்பவள் அன்று தலையைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து இருந்ததைக் கண்டதும், பதைபதைப்பாய் தரணி அவளருகில் வந்தான்.

''என்னம்மா சாரு? என்ன விஷயம் ஏன் இப்படி இருக்க?''

''தெரியலை தரணி. தலை சுத்துது. வாந்தி வர்ற மாதிரியிருக்கு? ஐ 'பீல் வெரி டயர்ட்..'' சொல்லியவள் மயங்கிச் சரியவும், தரணிக்கு ஒரு விநாடி கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. குளிர்ந்த நீரை முகத்தில் தெளித்து மயக்கம் தெளிவித்தான்.

ஹீனசுரத்தில் முனகினாள். ''டோன்ட் வொர்ரி..'' இரண்டு பேரின் ஆபீஸிற்கும் போன் செய்து விவரத்தைக் கூறினான். சூடான தேநீருடன் மனைவியின் அருகில் வந்தான். ''இந்தா சாரு இதைக் குடி... கொஞ்சம் ரிலீப்பா இருக்கும்.''

''தேங்க்ஸ்..''



''டாக்டர்கிட்டே போகலாம் வா!''

''வேண்டாம். தரணி நேற்று ஆபீஸில் இருந்து வரும் போதே அனிதாகிட்டே டெஸ்ட் பண்ணிகிட்டேன். நீங்க ரிசல்ட் மட்டும் வாங்கிட்டு வந்திடுங்க, நான் ரெஸ்ட் எடுத்துக்கிறேன்.''

தரணி கிளம்பிச் சென்றதும், மெல்ல படுக்கையில் சரிந்தாள். தரணி மகிழ்வின் உச்சியில் இருந்தான். மனம் முழுக்க இன்ப ஊற்று பொங்கியது. ஆண் மகனுக்கு தனக்கு ஒரு வாரிசு உண்டாகப் போகிறது என்று அறிந்தபின் அடையும் மகிழ்விற்கு அளவு இல்லையே!

அதே உற்சாகத்துடன் வந்தவன் மனைவியின் வாயில் இனிப்பைத் திணித்தான். அவள் விழிக்க,

''சாரு நமக்கு... நமக்கு... ஒரு குழந்தை பிறக்கப் போகுது... அனிதா ரிப்போர்ட்ஸ் பார்த்திட்டு கன்பார்ம் பண்ணிட்டா. நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். உடனே அம்மா விற்கும், அத்தைக்கும் போன் பண்ணிட்டேன். எல்லோரும் உன்னைப் பார்க்க ஆவலாய் இருக்காங்க.''

சாருவோ எரிச்சல் பட்டாள். ''ஏன் தரணி நாமயென்ன உலக சாதனையா பண்ணியிருக்கோம். ஏன் கும்பல் சேக்குறீங்க? கல்யாணமாகி இத்தனை சீக்கிரத்திலே.. ச்சீ நான் ஏற்கனவே எச்சரிக்கையா இல்லாமப் போயிட்டேன்..'' தரணி மனைவி யின் பேச்சில் அதிர்ச்சியடைந்தாலும், வாயிலில் குடும்பத்தி னரின் அரவம் கேட்க, ''சாரு ப்ளீஸ்!''



''எல்லோரும் வந்துக்கிட்டு இருக்காங்க.. தயவு செய்து எதையாவது பேசி எல்லோரையும் கஷ்டப்படுத்தாதே..'' வேகமாய் கூறிவிட்டு ஓடினான்.

தேவியம்மாள் அருகில் வந்து மருமகளை உச்சி முகர்ந்து வாஞ்சையாய் தலையை வருடி இனிப்பை ஊட்டினார். தரணியை கைப்பற்றிக் குலுக்கியவள் 'கங்கிராட்ஸ் பெரிய மனுஷனாயிட்டேயடா தம்பி' என்று பாராட்டினாள்.

''என்னம்மா உடம்புக்கு ரொம்பவும் டயர்டா இருக்குதா? தரணி கொஞ்ச நாளைக்கு வீட்டு வேலைக்கு ஒரு ஆளைப் போடுடா. இந்த மாதிரி நேரத்திலே அவளைப் படுத்தாதே! சாரும்மா ஆபீஸுக்கு கூட கொஞ்ச நாளைக்கு?''

''நான் என்ன இப்பவே புள்ளையைப் பெத்துட்டேனா யென்ன? அதெல்லாம் அப்புறமா பார்த்துக்கலாம்..'' இடை வெட்டினாற் போல் அவள் பேசவும், சட்டென முகம் சுருங்கியது அவருக்கு. ''சாரு ஏன் இப்படி எடுத்தெறிஞ்சு பேசறே?'' கஸ்தூரி அதட்ட,

''விடு கஸ்தூரி அவளுக்கு எப்படியிருக்கோ என்னவோ? மசக்கையோட வேதனை நாம அறியாததாயென்ன? அவளை கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்க விடுவோம். வா நாம போகலாம்..'' பெண்கள் இருவரும் பேசியபடியே வீட்டு வேலைகளைக் கவனித்து விட்டு அரை மனதோடு கிளம்பி னார்கள்.

இரவு மெல்ல எட்டிப் பார்த்தது. வந்தவர்களை எல்லாம் அனுப்பிவிட்டு, மனைவியிடம் வந்தான். அவள் எதையோ தீவிரமாய் யோசிப்பது தெரிய கதவைத் தாளிட்டான்.



''தரணி நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்..'' என்றாள்.

''சொல்லு!''

''நமக்கு இப்போ குழந்தை அவசியம் தானா?''

''எதைப் பேசறதா இருந்தாலும் நேரடியாகவே பேசு!''

''கோபப்படாம யோசிங்க தரணி. நமக்கு கல்யாணம் ஆகி பத்து வருஷமா ஆயிடுச்சு. லைப்பிலே அனுபவிக்க வேண்டியது எத்தனையோ இருக்கு. இத்தனை சீக்கிரமா பிள்ளையைப் பெத்துட்டு கஷ்டப்படணுமா? அதனால இப்போ குழந்தை வேண்டாம். அபார்ட் பண்ணிடலாமே!''

''விளையாடாதே சாரு!''

''நான் விளையாடலை. சீரியஸா பேசறேன். அனிதா மூலமா ஏற்பாடு பண்ணிடலாம். நீங்க என்ன சொல்றீங்க?''

''இதை முடிவா சொல்றீயா? அனுமதி கேட்கிறீயா?''

''இரண்டும்தான்.''

''ஒரு பொண்ணா குழந்தை மேலே உனக்கு ஆசை இல்லையா?''

''ஆசையில்லைன்னு யார் சொன்னது. நமக்கென்ன வயசாயிடுச்சா. கொஞ்ச நாள் வாழ்க்கையை சந்தோஷமா வாழ்ந்திட்டு அப்புறம் குழந்தை பெத்துக்கலாமே? இப்போ என்ன அவசரமின்னுதான் கேக்குறேன்..''

''ஆற அமர உனக்குத் தேவைப்படும்போது அது கிடைக்கலைன்னா? குழந்தை பாக்கியம் இல்லாம எத்தனை பேர் தவம் கிடக்கிறாங்க தெரியுமா?''

''பத்தாம் பசலித்தனமா பேசாதீங்க தரணி. நம்ம வாழ்க்கையை நமக்காக மட்டும்தான் வாழணும். இந்த நவீன யுகத்திலே எல்லாத்துக்கும் வழி இருக்கு. எதற்காகவும் ஏங்கிக் கிடக்க தேவையில்லை. இத்தனை சீக்கிரம் வயித்தைத் தள்ளிக்கிட்டு நிக்க நான் தயாரில்லை.''

''எப்பவுமே உன் பிடிவாதம் ஜெயிக்குமின்னு நினைக்காதே சாரு. இந்தக் குழந்தையால நம்ம வீட்டு மனுஷங்க எல்லாத்துக்கும் எத்தனை சந்தோஷம் யோசித்துப் பார். நம்ம கல்யாணத்திலே ஒரு புயலைக் கிளப்பினே. அதுக்கும் ஒப்புக்கிட்டாங்க. ஆனா இப்பவும் இப்படி முரணா நடந்துக்கிட்டாயெப்படி?''

''ஏன் தரணி? இப்போ நாம சந்தோஷமா வாழலையா?''

''எதை சந்தோஷமின்னு சொல்றே? ஒத்தக் காட்டு குரங்குமாதிரி நீயும் நானும் இயந்திரத்தனமா வாழறதுதான் வாழ்க்கையா? சொந்த பந்தத்தோட ஒரு நாளாவது மன நிறைவா நீ வாழ்ந்திருக்கியா? தனக்காக மட்டுமே வாழறது வாழ்க்கையில்லைம்மா? விட்டுக் கொடுத்து வாழ்வதில் இருக்கிற சுகமே தனி!''

''அட்வைஸ் வேண்டாம் தரணி! என் முடிவு இதுதான். நீங்க யோசிங்க தீர்மானமாய்..'' கூறிவிட்டு அவள் படுத்துவிட, சாருவிற்கு ரொம்பவும் இடம் தந்து விட்டாமோயென்று யோசித்தான் தரணி.





9

ஆபீஸ் வேலையில் மனம் ஒட்டாமல் அமர்ந்திருந்தான் தரணி. காலையில் அலுவலகம் கிளம்பும் போதே ஆஸ்பிட்டல் போக அழைத்த சாருவிடம் பேசாமலே கிளம்பி வந்து விட்டான். அவனின் செல்லிற்கு அழைப்பு வர உயிர்ப்பித்தான்.

''தரணி நான் அனிதா!''

''சொல்லு அனிதா..''

''உங்கூட நான் தனியா பேசணும்... டிஸ்பென்ஸரிக்கு வர்றீயா?''

''சாரு வந்து போனாளா?'' எதிர்முனையில் மௌனம் விழ, ''சரி அரை மணியில் வர்றேன்..'' பர்மிஷன் எழுதி தந்துவிட்டு புறப்பட்டான். அனிதா அவனுக்காகவே காத்திருந்தாள். தரணி வாய் பேசாமல் நின்றான்.

''தரணி ப்ளீஸ் என்ன பிரச்சனை உங்களுக்குள்ளே? சாரு பிடிவாதக்காரிதான். ஆனா இத்தனை உக்கிரமா உருவானக் குழந்தையை கலைச்சே ஆகணுமின்னு அவ பேசறதுக்கு..''

தரணி சாருவுக்கும், தனக்கும் இடையே நடந்த வாக்கு வாதத்தை விவரித்தான். ''சாரு அடுத்தவங்க அனுபவத்தை முன் உதாரணமா ஏற்றுக்கிட்டு வாழறா..''

''நீயே சொல்லு அனிதா... கல்யாணத்தப்போ தனிக் குடித்தனம் பண்ணனும்னு பிரச்சனை பண்ணினா. எல்லாத்



தையும் உதறிவிட்டு இவ காதலுக்கு மதிப்பு தந்தாங்க. என் வீட்லே, ஆனா இப்போ குழந்தை உண்டாயிருக்கிறாங்கிற காரணத்தினாலே, எத்தனை சந்தோஷமா இருக்கிறாங்க தெரியுமா?

''ஆனா இப்போ இவ கிளப்பியிருக்கிற பிரச்சனையைப் பார்த்தா என்ன பண்றதுன்னே தெரியலை. கண்ணைக் கட்டி காட்ல விட்டா மாதிரியிருக்கு..''

''நீ அவகிட்டே முடியாதுன்னு கண்டிப்பா சொல்லிட வேண்டியதுதானே தரணி.''

''அவ அனுமதி கேட்கலை. ஆர்டர் போடறா. ஏற்கனவே உடைஞ்சு போன அம்மா இதை எப்படி...?''

'கண்ட்ரோல் யுவர் செல்ப் தரணி. சாருவுடைய உடம்பும் இப்போ அபார்ட்டை ஏத்துக்கிற கண்டிஷனில் இல்லை. அவளை வேற விதமா ஹேண்டில் பண்ணலாம். நான் ஒரு ஐடியா சொல்லட்டுமா, அனிதா சொல்ல உன்னிப்பாய் கேட்ட தரணி ''இது நடக்குமா?'' என்றான்.

''பரீட்சையெழுதாமலே ரிசல்ட்ட எதிர்பார்க்கலாமா? முயற்சி செய்து பார்ப்போம். முடிவுதனை கடவுளிடம் விட்டு விடலாம். நான் இன்னைக்கே வந்து அவகிட்டே பேசறேன்...''

''ஆனா இந்த விஷயம் உங்களுக்குத் தெரிஞ்ச மாதிரி காமிக்க வேண்டாம்...'' தரணி ஒரு புது நம்பிக்கை முளைத்ததைப் போல் மன நிறைவுடன் கிளம்பினான்.

''**வா** அனிதா, என்ன சாப்பிடறே?''



''ஒண்ணும் வேண்டாம் சோபாவில் அமர்ந்தவள் ஐந்து நிமிடங்கள் கழித்து பேச்சை துவங்கினாள். ''சாரு நான் தரணிகிட்டே பேசிட்டேன். அவருக்கு குழந்தை மேலே விருப்பம் இருந்தாலும், உன்னை ஹர்ட் பண்ண விரும்பலை. ஆனா உன் யூட்ரஸ் ரொம்பவும் வீக்கா இருக்கிறதால, குழந்தையை கலைப்பது அத்தனை நல்லதில்லை. பேசாம பெத்துக்கோயேன்..''

''அனிதா நீயாவது என்னைப் புரிஞ்சுக்க மாட்டேன்றியே? வாழ்க்கையை ப்ரீயா வாழணும்தானே குழந்தை வேண்டான்னு சொல்றேன். இது உலக மகா குத்தம் மாதிரி இமிடேட் பண்றது நல்லாயில்லை.''

''சாரு சில விஷயங்கள் நாம எதிர்பார்க்கும்போது கிடைப்பதில்லை. புரிந்து கொள். எனக்கு கல்யாணம் ஆகி ஆறு வருஷம் ஆகுது. எந்தக் குறையும் இல்லை.''

''ஆனா நான் இன்னும் கன்சிவ் ஆகலை, இதுக்கு என்ன காரணமின்னு யோசிச்சியா?''

''இட்ஸ் ஏ ஃபேட்?''

''இதே நிலைமை நாளைக்கு உனக்கும் வந்திட்டா... ஈஸியா கிடைச்சதால இதன் அருமை உனக்குப் புரியலைடி. வேண்டான்னு சொல்ற உனக்கு கொடுத்த கடவுள் தேவைப்படற எனக்குத் தரலை பார்த்தீயா?'' அனிதாவின் குரல் உடைந்தது.

சாரு மௌனமாய் இருந்தாள். அனிதா உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு மீண்டும் பேசினாள். ''எப்படியும்

பார்க்கப் பிடிக்கவில்லை. புத்தகம் வாசிக்கத் தோன்ற வில்லை. தனிமை துடிக்க வைத்தது.

தலைக்கு குளித்து கூந்தலை உலர்த்தியபடியே சோபாவில் அமர்ந்திருந்தாள். வெறிச்சோடிய இடங்கள் தரணியின் நிழலை பிரதிபலித்தன. வயிற்றைப் புரட்டிட, வாஷ் பேஷனை நோக்கி ஓடினாள். கண்கள் சுழன்றபடி இதென்ன மயக்கமா? உடல் விறைக்க சூடாய் ஏதாவது சாப்பிட்டால் நன்றாய் இருக்கும் போல் தோன்ற சமையலறைப் பக்கம் நகர்ந்தவளின், கை கால்கள் தன் கட்டுப்பாட்டை இழந்து, தரையில் தடாலென விழுந்தாள். கண்கள் செருகிட, கைகால் வெட்டி வெட்டி இழுத்தது.

''ஏய் சாரு? என்னடி இப்படி வீட்டை திறந்து போட்டு இருக்கே?'' என்று குரல் தந்தபடியே நுழைந்தவள் தோழியின் நிலை கண்டு ஒரு கணம் மிரண்டே போனாள். பின்னர் ஒரு டாக்டருடைய இயல்பில், முதலுதவிகள் செய்து, அவளை ஆசுவாசப்படுத்திய பின், சூடாய் போன்விட்டா கலந்து பருக வைத்தாள்.

''இப்போ எப்படி இருக்கு சாரு?'' சுழலும் மின் விசிறியில் இதமான காற்றை அனுபவித்தபடியே ''சம்திங் பெட்டர்'' என்றாள்.

''தேவியம்மாவும், கஸ்தூரியும் அரக்க பரக்க ஓடி வந்தனர். ''என்னம்மா? என்னாச்சு...? இப்போ எப்படியிருக்கு சாரு?'' ஆதரவாய் தேவி தலையை வருடி விட,

''சாரு ரொம்பவும் டயர்டா இருக்கா. அவ மனசும், உடம்பும் சோர்ந்து போயிருக்குன்னு சொன்னேன். இந்த மாதிரி



நேரத்திலே நிச்சயமா ஒரு துணை வேணும். இன்னைக்கு ஏதோ எதிர்பாராம நான் வந்தேன். ஆனா தினமும் இப்படியே இருக்குமின்னு எதிர்பார்க்க முடியுமா?''

''உண்மைதான் கஸ்தூரி அனிதா சொல்ற மாதிரி ஏதும் பிரச்னை ஆயிட்டா அதுக்குப் பிறகு தரணியிடம் என்ன சொல்ல முடியும். யோசிச்சுப் பாரு! பேசாம தரணி வர்ற வரைக்கும் நீ சாருவை உன் வீட்டுலே வைச்சுப் பாறேன்'' தேவியம்மாள் கூறியதும், சற்றும் தயக்கமின்றி ''என்னால முடியாது!'' என்று சொன்ன கஸ்தூரியை மூன்று பெண்களுமே திகைப்போடுதான் பார்த்தார்கள்.

தவிப்போடு தாயைப் பார்த்த சாருவை அலட்சியப் படுத்திய கஸ்தூரி, ''என் பெரிய பொண்ணு வெண்மதிக்கு உடம்பு சுகமில்லையாம். அங்கே அவளைக் கவனிக்க யார் இருக்காங்க? ரொம்ப நாளா போகணுமின்னு முயற்சி பண்ணேன். இப்போதான் கூடி வந்திருக்கு.''

''ஏம்மா அக்காதான் உன் பொண்ணா? நான் உன் மக இல்லையா?''

''ஒரு தாயாய் இருந்து உனக்கு செய்ய வேண்டிய அத்தனை கடமைகளையும் நான் செய்திட்டேன்.

''உனக்கு ஒண்ணுன்னா உடனே ஓடிவர புகுந்த வீட்டு உறவுகள் இருக்கு. ஆனா வெண்மதிக்கு! எஞ்சியிருக்கிற கொஞ்ச நாள் மதியோட போய் இருக்கணுன்னா அது தப்பு இல்லையே?''



மருமகளின் வாடி வதங்கிய முகத்தைக் காணவும், இரங்கிய தேவியம்மாள், ''பரவாயில்லை கஸ்தூரி. எம் மருமகளுக்கு என்ன ஆளாயில்லை. நான் வந்து தங்கிட்டுப் போறேன்..''

நன்றியுடன் மாமியாரைப் பார்த்தாள் சாரு. ''வேண்டாத்தே உங்களுக்கு ஏன் வீண் சிரமம். பரவாயில்லை நானே சமாளிச்சுக்கிறேன்.''

''இல்லே சாரு. ஆன்ட்டி சொல்றா மாதிரி யாராவது ஒருத்தர் உன் கூட இருக்கிறதுதான் நல்லது. இதிலேயும் உன் பிடிவாதத்தைக் காமிக்காதேயேன் ப்ளீஸ்..''

''அதுக்கில்லை அனிதா.. அங்கேயும் இங்கேயுமா அத்தை அல்லாடணுமேன்னு..!''

''இதிலென்னம்மா இருக்கு. நான் பார்த்துக்கிறேன்'' சற்றைக்கெல்லாம் வெளியே வந்தவர்கள் ''என்ன கஸ்தூரி? சாரு இப்போ இருக்கிற மன நிலைமையிலே உன் கூட இருந்தா கொஞ்சம் சந்தோஷமா இருப்பாளே?''

''தனிமை தனிமைன்னு அலைஞ்சாளே அவதிப்படட்டும். தவிரவும், இப்போ நான் கூட்டிப் போறதை விட உன் அருகாமை இருந்தா உன்னைப் பற்றி நல்லா புரிந்து கொள்வாள் இல்லையா? சில வாய்ப்புகள் தானா அமையும். சிலதை நாமதான் ஏற்படுத்தித் தரணும். என்னை விடவும் நீ அவளை நல்லா பார்த்துப்பேன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு.''

''கஸ்தூரியின் கைகளைப் பற்றியபடி, உன் மக நிச்சயமா கெட்டவளா இருக்க மாட்டா.. அவ ஒரு குழந்தை. நான் பார்த்துக்கறேன். நீ வெண்மதியைப் போய்ப் பாரு..''



அடுத்து வந்த சில தினங்களில் தேவியம்மாள் சாருவிற்கு உதவுவது வழக்கமாகிப் போனது. அவளை ஒரு துரும்பைக் கூட அசைக்க விடவில்லை. ஆனால் இவளுக்காய் உழைத்த தில் பெரியவள் சற்று வதங்கித்தான் போய் இருந்தாள்.

அதைக் கவனித்து அனிதாவிடம் கூறிய போது, அவளே அதற்கு ஒரு வழிமுறையும் கூறினாள். ''தரணி வரும் வரையில் பேசாமல் நீயேன் தேவி ஆன்ட்டி வீட்டிலேயே தங்கிடக் கூடாது. அவங்களுக்கும் அலைச்சல் குறையும் இல்லையா? இரவு நேரங்களில் உனைத் தனியே விட்டு செல்ல அவர் மிகவும் தயங்குகிறார்.''

அதை சாருவும் அறிவாள். ''ப்ளாஸ்க்கில் பால் இருக்கு சாரு மறந்திடாம குடிச்சிடு. கதவைத் தாழ் போட்டுக்கோ, கொஞ்சமேனும் உடம்பு படுத்தினால் உடனே ஒரு போன் செய்திடு. என்ன நேரமானாலும், தயங்காதே. எனக்கங்கே ஒரு மனதாய் இருக்காது..'' என்று அக்கறையுடன் சொல்லி அவர் செல்லவும் மனம் நெகிழ்ந்து போகும் இளையவளுக்கு.

''நீ தேவி ஆன்ட்டி வீட்டில் தங்குவதில் இன்னொரு சாதகமும் உண்டு. தரணிக்கும் உன் மேல் உள்ள வருத்தம் குறையும் அல்லவா?''

அனிதாவின் பேச்சும் சரியென்றே பட்டது. பெற்ற தாயே தனக்கு உதவாமல் விலகிய வேளையில், சிரமம் பாராமல் சிரத்தையாய் தன்னைக் கவனித்துக் கொள்ளும் தேவிக்கு தன்னால் எந்தக் குறையும் வரக் கூடாது. மிஞ்சிப் போனால் இன்னும் எட்டு மாதங்களுக்குத்தானே. தரணி இல்லாத தனிமை அவளை ரொம்பவே வாட்டி எடுத்தது. அதை

மறைக்க வேணும் இந்த இடமாற்றம் அவசியமென்பதை உணர்ந்தாள்.

அன்றைய நிகழ்விற்குப் பிறகு, தனியாய இருப்பதில் சற்று பயமும் கூடி இருந்தது. எனவே புகுந்த வீட்டிற்கு கிளம்ப முடிவெடுத்து விட்டாள். இந்த முடிவை பெரியவளிடம் கூறியதும் அவளுக்கும் இதில் மிகுந்த சந்தோஷம் இருப்பதையே அது காட்டியது.

புகுந்த வீட்டில் இவளுக்கென்று ஒதுக்கப்பட்ட தனியறையில் சகல வசதிகளும் இருந்தது. அது தரணியுடைய அறை என்பதால் கூடுதல் இன்பம். சாருவின் வரவிற்கு எல்லோருமே விடுமுறையெடுத்து காத்திருந்தது வேறு மனதிற்கு இதமளித்தது. நீண்ட நாள் சுற்றியலைந்த பறவை தன் கூட்டை அடைந்தது போல மனம் மகிழ்ந்தது.

அக்கறையாய் விசாரிக்கவும், அன்புடன் பழகுவதும் அஜய் முதற்கொண்டு இவளோடு சுற்றித் திரிய அந்த அதீத அன்பில் திக்கு முக்காடிப் போனாள். இரண்டொரு நாட்களிலேயே அந்த வீடு பழகிப் போக, இதுவரை இல்லாதிருந்த இன்பம் குடி கொண்டது.

''சாரும்மா தூங்கிட்டியா?'' குரல் கொடுத்தபடி அத்தை நுழைய,

''இல்லை அத்தை, சும்மா படிச்சிட்டிருந்தேன்.''

''புது இடம். தூக்கம் வர கொஞ்ச நாளாகும்! சரி இந்தப் பாலைக் குடி. நல்லாத் தூக்கம் வரும்.''



அதே நேரம் நித்யா கார்ட்லெஸ்ஸோடு அறைக்குள் நுழைந்தாள். ''இந்தாங்க அண்ணி, அண்ணா பேசறான். நீங்க இங்கே இருக்கீங்கன்னு சொன்னதும் நம்பவே இல்லை.'' நித்யாவிடம் இருந்து ஆவலாய் வாங்கியவள், மாமியாரும், மகளும் வெளியே செல்லும் நாகரீகத்தை ரசித்தபடியே பேசினாள்.

''எப்படியிருக்கீங்க, தரணி!''

''நல்லாயிருக்கேன்! பரவாயில்லை என் ஞாபகம் இப்பவாவது வந்ததே!''

''உன் உடம்பு பரவாயில்லையா சாரு? இங்கே டிரைனிங் பீரியடு வரை தங்க ஒரு காட்டேஜுக்கு ஏற்பாடு பண்ணியிருக்காங்க.''

''தரணி நான் இப்போ உங்க வீட்லே உங்க ரூம்லதான் இருக்கேன். இங்கே என்னை நல்லா கவனிச்சிக்கிறாங்க தரணி.''

''என்ன திடீர்னு எங்க வீட்டு பக்கம் காத்து அடிச்சிருக்கு? உன் கொள்கை என்னாச்சு?''

''ஏன் தரணி இப்படி பேசறீங்க? எம்மேல உள்ள கோபம் இன்னும் தீரலையா?''

''நீ நம்ம வீட்டிலேயே இருந்து இருக்கலாம். இன்னும் கொஞ்ச நாளில் குழந்தையைப் பெற்று அனிதா கிட்டே தரப் போற அந்த செயலால் இன்னமும் எல்லோரும் பாதிப்பாங்களே?''



''சாரு ஏதும் பேசவில்லை.''

''என்ன சாரு வாயடைச்சுப் போயிட்டே. உண்மையை சொல்லப் போனா இந்த பிரிவு கூட உன்னால்தான் சாரு. நமக்கே நமக்குன்னு ஒரு புது உறவு அதை அழிக்கணுமின்னு நீ நினைக்கும்போது நான் எத்தனை உடைஞ்சு போய் இருப்பேன். உனக்காக எல்லா உறவுகளையும் விட்டுட்டு வந்த என்னுடைய நியாயமான ஆசையை கூட மறுக்க உனக்கு மனம் எப்படி வந்தது. சாரு. நம் ரத்தம் அன்பின் வெளிப்பாடு ஒரு ஜீவனாய் ஜனிக்கும் அதை வேண்டான்னா... சரி விடு..!''

''தரணி..!:''

''நான் உன்னை கஷ்டப்படுத்தலை இன்னொரு உதவி. வீட்லே யார்கிட்டேயும் எதையும் சொல்லிடாதே... அதை தாங்குகிற சக்தி அவங்களுக்கு இல்லே..'' தரணி போனை வைத்துவிட சாருவின் விழிகள் கசிந்தன. தன்னையும் அறியாமல் வயிற்றைத் தொட்டுப் பார்த்தாள்.

11



**நா**ட்கள் நகர்ந்தோடின. சாருவும் அலுவலகம் போய் விட்டு வந்தபடியே இருந்தாள். வயிறு லேசாய் மேடிட்டு இருந்தது. புடவை கட்டத் துவங்கியிருந்தாள். ரொம்பவும் இறுக்கமாய் உடை அணியாதேம்மா என்று தேவியின் அக்கறையான கவனிப்பில், உடல் சற்று மெருகேறிப் போய் இருந்தது.



''வா சாரு ரொம்ப டயர்டா இருக்கே போலயிருக்கே, காபி குடிக்கிறியா?''

''ப்ளீஸ் அக்கா..'' சோபாவில் அமர்ந்தவளின் முன் மெதுபக்கோடாவும், காபியும் வைத்தாள் நளினி.

''நீங்க மட்டும் எப்படியக்கா இத்தனை நல்லா சமைக்கிறீங்க?''

''பழக்கம்தான். நீ சமைப்பியா சாரு..'' தானும் ஒரு ப்ளேட்டை எடுத்தபடி அருகில் அமர்ந்தாள் நளினி.

''விதவிதமா தெரியலைன்னாலும், ஏதோ சாப்பிடற மாதிரி இருக்கும்.''

''அஜய் எங்கேக்கா?''

''ட்யூஷன் போயிருக்கான்.'' புத்தகங்களோடு உள்ளே நுழைந்த நித்யா ''என்ன இரண்டு பேரும் என்னை விட்டுட்டு அரட்டை அடிச்சிட்டு இருக்கீங்க'' என்றாள்.

''சும்மாத்தான் வா காபி தர்றேன்.'' நளினி உள்ளே நகர, நித்யா சாருவின் தோளில் கைபோட்டபடி அமர்ந்தாள். ''அண்ணி எனக்கொரு டிராயிங் வரைஞ்சு தர்றீங்களா? ப்ராக்டிகல் ரெக்கார்டு ஒர்க் வழக்கமா அண்ணாதான்... உங்களுக்கு நல்லா வரையத் தெரியுன்னு சொல்லியிருக்கான்..''

''கண்டிப்பா தர்றேன்..''

''தேங்க்ஸ்..''

"இந்த வருஷத்தோட படிப்பு முடியப் போகுது. எப்படி மேற்கொண்டு படிக்கப் போறீயா? இல்லே..?"

"எனக்கு கல்யாணம் பண்ணலான்னு கூட்டு சதி பண்றாங்க.."

சாரு சிரித்தபடியே "யாரு சதி பண்றது?"

"அண்ணியும், அம்மாவும்தான். நானும் கொஞ்ச நாள் கழிச்சு பார்க்கச் சொன்னேன். கேட்டாத்தானே, பாவம் என்கிட்டே மாட்டிக்கிட்டு எவன் சாகப் போறானோ?"

"பரவாயில்லையே என் அருமைத் தங்கையின் வாயில் கூட நிறைய உண்மைகள் வருகிறதே" அண்ணன் பேச நித்யா விழிக்க, மற்றவளோ வாய்விட்டு சிரித்தாள்...

"என்னண்ணா செய்யறது? எனக்கும் உன்னை மாதிரி ஆமாம் சாமி போடற புருஷன் வந்தா நல்லாயிருக்கும். பிள்ளைப் பார்க்கும்போது, இதையும் கட்டாயம் கண்டிஷனா சொல்லணும்.."

"உன் வாயைக் குறைக்க முடியாது. வேணுன்னா மாப்பிள்ளை காதை குளறுபடி ஆக்கிடலாம்."

தேவி பூஜை கூடையுடன் நுழைந்தவள் அனைவரின் புன்னகை முகங்களைக் கண்டதும், மனம் முழுக்க நிறைந்தது. தான் வேண்டியது இன்றே நடந்தது போல் தோன்றியது. பிரசாதத்தை எல்லாருக்கும் கொடுத்து விட்டு, "நளினி இன்னைக்கு பௌர்ணமி. சித்ரன்னம் செய்து நிலா வெளிச்சத்தில் நிலாச்சோறு சாப்பிடலாமா?"



இரவு மொட்டைமாடி நிலவொளியில் தேவியம்மாள் உருட்டிப் போட அனைவரும் வட்டமாய் அமர்ந்து உணவருந்தினர். "இப்படி சாப்பிடறது தரணிக்கு ரொம்பவும் பிடிக்கும்."

சாருவுக்கு என்னவோ போல் இருந்தது. தரணியின் அன்றைய விட்டேத்தியான பேச்சிற்குப் பிறகு, அவ்வப்போது அழைப்புகள் வந்தாலும், சாதாரண குசல விசாரிப்புகளோடு நிறுத்திக் கொள்வான். இவளுக்கும் மசக்கையின் ஆரம்ப அறிகுறிகள் எல்லாம் நின்று போய் விட்டன.

கட்டிலில் படுத்திருந்தாள். வயிற்றுக்குள் ஏதோ உருள்வது போல் இருந்தது. விரல் நுனியில் இருந்து உச்சிவரை பரவசம். கண் செருகிட ஒருவித லயிப்போடு அதை அனுபவித்தாள். வயிற்றில் இடதுபுறம் சின்ன அசைவு மயிலிறகு கொண்டு தடவுவது போல் சிலிர்த்தது. அருகில் தேவியம்மாள் அசந்து உறங்கிக் கொண்டிருக்க எழுப்பவும் மனம் வரவில்லை. தரணியிருந்தால்... மனம் ஏங்கியது.

புரண்டு படுத்த தேவி இளையவள் விழித்திருக்கக் கண்டு, "என்னம்மா..? உடம்புக்கு" என்று பதறினாள்.

"வயிற்றிலே..?"

"என்னம்மா?" உண்மையான அன்புடன் அவர் பதறவும்,

"இலேசா அசைவு ஏதோ உருள்றது மாதிரி தெரியுது. அத்தை."

"பயல் இப்பவே உதைக்க ஆரம்பிச்சிட்டானா? இது குழந்தையின் வளர்ச்சி பற்றி தான் பயப்படாதே... வலி



ஏதாவது இருந்தால் மட்டும் என்னிடம் சொல்லும்மா.. படுத்துக் கொள்." இவள் கண் உறங்கவும் தலையை ஆதரவாய் வருடினாள் தேவி.

சில திரைப்படங்களில் கூட கண்டு இருக்கிறாளே? கதாநாயகி கர்ப்பமாய் இருக்கும் போது கதாநாயகன் கைகொண்டு அவள் வயிற்றைத் தொட, அவள் நாண, எல்லாமுமாய் மனதில் தரணியின் நினைப்பையே உண்டாக்கின. ஏதேதோ நினைவுகளோடு உறங்கியும் போனாள்.

நளினி வேலைகள் அனைத்தும் முடித்துவிட்டு, ஓய்ந்து வந்து அமர்ந்தாள். பார்த்துக் கொண்டு இருந்த பைலை மூடி வைத்தபடியே, "என்னக்கா டயர்டா இருக்கீங்க?"

"இல்லையே? காலையில் எழுந்திருந்தேன். சரியா இருக்கு. கொஞ்சம் அசதி. அவ்வளவுதான். இருந்தாலும் நம்ம வீட்டுக்குத்தானே செய்யறேன்னு நினைச்சா எதுவுமே தெரியாது. சாரு உன்கிட்டே பிராங்கா ஒரு கேள்வி கேட்கணும் கேட்கலாமா?"

"சொல்லுங்கக்கா.."

"நீ தப்பா எடுத்துக்க மாட்டியே?"

"ச்சே..!"

"இந்த வீட்டு மனுஷங்க மேலே உனக்கு வெறுப்பு அதனால்தான் நீ தனிக்குடித்தனம் போறேன்னு நினைச்சேன். ஆனா நீ இப்போ ஒவ்வொருத்தர் கிட்டேயும் நடந்துக்கிறதைப் பார்த்தா அப்படித் தெரியலை..



"இத்தனை நாளா பழகுற நீ எங்கூட வாழ மறுத்தது ஏன் சாரு?"

"அக்கா நா எப்பவுமே உங்களை வெறுக்கலை. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையைத்தான் எதிர்க்கிறேன். காதல் திருமணமோ, பெரியவங்க பார்த்து நடத்துற திருமணமோ, சரியா ஒரு மாதம்தான் பிரச்சனையில்லாம இருக்கு. கல்யாணத்தைப் பண்ணி பிள்ளையைக் கண் குளிர பார்க்கிறேன்னு சொல்ற பெத்தவங்க அந்தப் பிள்ளையை கொஞ்சமாவது நிம்மதியா இருக்க விடறாங்களா?"

"இந்தப் பெரியவங்க பிள்ளை சந்தோஷமாயிருக்கணுமின்னு நினைக்கிறாங்க. ஆனா அவன் பொண்டாட்டிக்கிட்டே கொஞ்சம் சிரிச்சு பேசிட்டா போதும். உடனே, பொண்டாட்டி பேச்சை கேக்குறான்னு சொல்லிடறது, எங்க வீட்டுப் பக்கத்துல அனிதான்னு ஒரு பொண்ணு,டெய்லி அவ வீட்ல பிரச்னை தான்.

"நல்லாயிருந்த புருஷன் பொண்டாட்டிக்குள்ளே பெரியவங்க இழுத்து விட்ட சண்டையினாலே பாவம் அவ வாழ்க்கையே கஷ்டப்பட்டு போச்சு. வீட்டுக்கு வர்ற மருமக கிட்டே உண்மையான அன்பை எதிர்பார்க்காம வரும்போதே மனசுக்குள்ளே இவ நம்ம வீட்டை பிரிக்க வந்தவன்னு முத்திரை குத்திடறாங்க. நியாயமான ஆசைகள் உணர்வுகள் கூட நசுக்கப்படுது. எத்தனை பெண்களோட வாழ்க்கை கருகிப் போகுது. கல்யாணம்ங்கிற பேர்ல பேரம் பேசி சக்கையா பிழிஞ்சிட்டு பின்னாடி அன்பை எப்படி எதிர்பார்க்கிறாங்க. மாமியாருன்னு ஆயிட்டா அந்த மாதிரி நினைப்பு வந்திடும்

போலயிருக்கு. தன் பொண்ணுக்கு மருமகன் வேலை செய்யும்போது, சந்தோஷப்பட்ட மனசு.

"மகன் மருமகளுக்கு செய்யும்போது கோபப்படுதே ஏன்? உண்மையான அன்பு கூட நடிப்பா மாறிடுதே?"

"ஒருத்தர் அப்படியிருந்தா எல்லாரையும் அதே மாதிரி நினைக்கக் கூடாது. சாரு ஐந்து விரலும் ஒரேமாதிரியா இருக்கு?"

"இல்லைதான். மனசுல ஒரு முறை ஏற்பட்ட வடு மாறலையே அக்கா."

"சரி மற்றதை விடு சாரு, அடுத்தவங்களுடைய அனுபவத் திலே நாம வாழ்க்கையை அமைச்சிக்கக் கூடாது. நம்ம வீட்டில் உனக்கு ஏதாவது அசௌகரியம் இருக்கா?"

"ச்சீ அப்படியெல்லாம் இல்லைக்கா. கடவுள் புண்ணியத் தில் எனக்கு நல்ல உறவுகள்தான் அமைஞ்சிருக்கு. அந்த உறவுகள் நிலைக்கணுமின்னுதான் நான் ஆசைப்படறேன்." அனிதா வரவும் பேச்சு அத்தோடு நின்றது.

"வா அனிதா..!" ஏனோ அவளின் வருகை சாருவிற்கு பிடிக்காமலே போனது.

"மறந்திட்டேன்" சுரத்தில்லாமல் வந்தது பதில்.

"உனக்கு இஷ்டமில்லேன்னாலும் பிறந்து எனக்கு தரும் வரையிலாவது நீ பிள்ளையை நல்லபடியா சுமந்தே ஆகணும் சாரு..."



இவள் வாய் பேசவில்லை. "அசைவு எல்லாம் நல்லாத் தெரியுதா?"

"ம்..."

தன் கையோடு கொண்டு வந்து இருந்த மிஷினை இயக்கிட பிளக் பாயிண்டைத் தேடி செருகினாள். பின் சாருவை படுக்கச் செய்து மூடிட்ட வயிற்றில் ஜெல்லைத் தடவி கருவியின் மூலம் தேய்த்தாள்.

எதிரே மானிட்டரில் தெளிவற்ற உருவம் பின் தெளிவாய்த் தெரிந்தது.

கண்களுக்கு பழகிய போது, சிறிய உருவம் ஒன்று ஒருக் களித்து கால்களை மடக்கி தலைசாய்த்து அசைந்து பார்க்கப் பார்க்கப் பரசவம் ஓடியது. நெஞ்சம் நெகிழ்ந்தது. உயிராய், உடலாய் அந்த உருவம் இவளை பெரிதும் அலைக்கழித்தது.

"குழந்தையோட வளர்ச்சி எல்லாம் நல்லாயிருக்கு சாரு. நல்ல ஹெல்தியான புட் எடுத்துக்கோ, 8 மாதம் ஆகுது. நீ ஆபீஸ் லீவு போடறது நல்லது."

"இத்தனை சீக்கிரமா?"

"உன் உடம்பு இருக்கிற கண்டிஷனுக்கு நீ பெட் ரெஸ்ட் எடுக்கிறது ரொம்ப நல்லது."

"ஆமா சாரு நானே உன்கிட்டே சொல்லணும்னு இருந்தேன். நல்லவேளை அனிதாவே சொல்லிட்டா. வர்ற மாதம் சாருவுக்கு வளைகாப்பு போடலாம்னு இருக்கேன்."



"ரொம்ப சந்தோஷம் ஆன்டடி. ஏன் சாரு அம்மா எப்போ ஊரிலிருந்து வர்றாங்களாம்.."

"அம்மாவா?"

"ஆமாம்மா... அம்மாவுக்கும், வெண்மதிக்கும் போன் பண்ணி வரச் சொல்லியிருக்கேன்."

"எதுக்கு அத்தை அவங்களை வரச் சொன்னீங்க. அவங்க பாவம் பெரிய பெண்ணை கவனிக்கத்தான் நேரம் சரியா இருக்கும்."

"என்னம்மா இப்படி பேசறே?"

"பின்னேயென்ன அத்தை என்னைப் பற்றிக் கொஞ்சம் கூட கவலைப்படாம போனவங்கதானே. இப்போ நீங்க கூப்பிட்டதும் என்ன அக்கறையோட வந்திடப் போறாங்க."

"அப்படி சொல்லாதேம்மா பெத்தவங்களுக்கு எப்பவுமே பிள்ளைகளிடம் பாரபட்சம் இருக்காது. முதற் பிரசவம் மறுபிறப்பு மாதிரி வயித்துப் பிள்ளைக்காரி எதை நினைச்சும் கவலைப்படக் கூடாது. கூடுமான வரையில் சந்தோஷமா இரு. அதுதான் உனக்கும், குழந்தைக்கும் நல்லது."

"வாவ்... நீங்க கூட டாக்டர் ஆயிட்டீங்க ஆன்ட்டி."

"அனுபவத்தைச் சொல்ல படிப்பு தேவையில்லை அனிதா."

"ஏன் சாரு, தரணி எப்போ ஊரிலிருந்து வர்றாராம்?"

"இந்த மாதம் 20ம் தேதிக்குள் வந்திடுவேன்னார்."



"சரி ஆன்ட்டி அப்ப நான் கிளம்பறேன். அவுட் பேஷண்ட்ஸ் வர்ற நேரம்" அனிதா கிளம்பவும், சாரு ஏதோ யோசனையில் ஆழ்ந்தாள்.

12



"ஹலோ.."

"அனிதா நான் தரணி பேசறேன்.."

"சொல்லு தரணி எப்படியிருக்கே?"

"நான் நல்லாயிருக்கேன், சாரு எப்படி இருக்கா?"

"பைன், அவ போக்கிலே நிறைய மாறுதல்கள் தெரியுது. இத்தனை காலமா உன் பிரிவு, உங்கம்மாவுடைய அரவணைப்பு குடும்ப சூழ்நிலை எல்லாமே ஒரு பிடிப்பை ஏற்படுத்தி இருக்கு. உண்மையைச் சொல்லப் போனா அவ உன்னையும் உறவுகளையும் ரொம்பவே நேசிக்கிறா, இந்தக் குடும்பத்தை விட்டுப் பிரியணும்ங்கிற நினைப்பு அறவே யில்லை."

"குழந்தையைப் பற்றி என்ன சொல்றா?"

"அதிலும் குழப்பம் தெரியுது. முன்னேல்லாம் என் வரவை எதிர்பார்த்தவ, இப்போ என்னைக் கண்டாலே ஒளியறா. ஆக நம்ம திட்டம் ஓரளவுக்கு வெற்றி அடைஞ்சிருக்குன்னு சொல்லலாம். ஏன்னா மனசளவிலே அவ குழந்தை தரணி, இப்போ வயத்திலே தினம் தினம் வளர்ற சிசு, அதோட அசைவு எல்லாமே அவளை குழப்பியிருக்கு.

''இதனை அவ ரசிக்கிறா. அவளுடைய கல் மனசு மெல்ல மெல்ல இளகியிருக்கு. ஒரு இனம் புரியாத அன்பு உருவாகுது. நான் சொன்னா உனக்குப் புரியாது. நீ நேர்ல வா தெரியும். ஆமா சாருவுடைய வளைகாப்பிற்கு வர்றே இல்லை.''

''கண்டிப்பா, எனக்கும் அவளைப் பார்க்கணும் போலி ருக்கு. நான் உனக்குத்தான் தேங்க்ஸ் சொல்லணும் அனிதா, ரொம்பவும் பயந்தேன்.''

''டோன்ட் வொர்ரி தரணி சாருவால இனிமே ப்ராப்ளம் வராது. இந்த நாட்கள் அவளைப் பக்குவப்படுத்தி இருக்கு.''

''அம்மாவிடம் விசாரிச்சேன். அவங்களும் நல்ல விதமாத்தான் சொன்னாங்க. அவ மனசு மாறினா என்னை விடவும் சந்தோஷப்படறவங்க யாருமே இல்லை. அனிதா, சரி வைச்சிடறேன். நேரில் சந்திக்கலாம்.''

**வ**ளைகாப்பிற்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்தேறின. தரணி வருகிறான் என்ற செய்தியே இனித்தது சாருவிற்கு. முகத்தில் பொலிவும் மினுமினுப்பும் கூடியிருந்தது. உப்பிய வயிற்றுக் குள்ளே நானும் ஒரு உயிரை சுமக்கிறேன். தரணி சொன்னது போலவே ரத்தமும் சதையுமாய் ஒரு உயிர். அதை காணும் ஆர்வமும் அப்போதே வழிந்தது.

அம்மாவும், வெண்மதியும் கூட வந்திருந்தனர். எப்போதும் ஒட்டுபவள் இன்று இருவரையும் கண்டு முகம் திருப்பிக் கொண்டாள்.

''நல்லாயிருக்கியா சாரு?''



''எனக்கென்ன குறைச்சல்? என்னை இங்கே மகாராணி மாதிரி தாங்குறாங்க. அத்தை கண்ணுக்குள்ளே வைச்சி பார்த்துக்கிறாங்க.''

''என்ன தேவியிது? இதுதான் நீ பார்த்துக்கிட்டதா? நார்மலாவே சாருவுக்கு கழுத்து எலும்பெல்லாம் தெரியாது. ஆனா இப்போ..'' அம்மா குறை கூறுவது போல் சொல்லிட, தேவியம்மாள் ஒரு நொடி சிரிப்பை மறந்து பின் சகஜமானாள் என்று தோன்றியது சாருவிற்கு. நேரம் கிடைக்கும் சமயம் தாயிடம் இதைக் கேட்டுவிட வேண்டும் என்ற முடிவில் இருந்தாள் சாருமதி.

உணவு முடிந்து அனைவரும் இளைப்பாறிய தருணம், வெண்மதி பேச்சை ஆரம்பித்தாள்.

''அத்தை நித்யாவுடைய படிப்பு முடியப் போகுதாமே, கல்யாண ஏற்பாடு ஏதாவது செய்யற முடிவுலே இருக்கீங்களா?''

''மாப்பிள்ளை பார்த்துக்கிட்டு இருக்கோம். இன்னும் நல்லதா ஏதும் அமையலை.''

''அத்தை என் மச்சினர் விஜயின்னு மாம்பலத்தில் சாப்டு வேர் இன்ஜினியர், நித்யாவுக்கும் நல்ல பொருத்தமாயிருக் கும், நீங்க என்ன சொல்லுறீங்க?''

''போட்டோ ஜாதகமெல்லாம் தாம்மா மதி பார்க்கலாம். வெளியே தர்றது விட ஒண்ணுக்குள்ளேன்னா நீ என் பிள்ளையை நல்ல விதமா பார்த்துக்க மாட்டியா?''



ஆனால் இந்தப் பேச்சைக் கேட்ட சாரு இடைவெட்டினாள். ''ஏங்கா அந்த வீட்ல நீ ஒருத்தி மாட்டிகிட்டு படற அவஸ்தை போதாதா நித்யாவையும் ஏன் இழுக்குறே?''

''என்னடி பேசறே? என் வீட்டு மனுஷங்களுக்கு என்ன குறை சாரு? விஜய் கம்ப்யூட்டர் என்ஜினியர் பார்க்க அழகு, குணமான பையன். நித்யாவுக்கும் ஏக பொருத்தமாய் இருக்குமே!''

''உனக்கும் சேர்த்து இன்னொரு அடிமை தயார் பண்றியா?''

''அத்தைக்கு பணிவிடை செய்யறது அடிமைத்தனம் இல்லைடி சாரு. அது பயம் இல்லை, மரியாதை. வயசாயிடுச்சு. உடம்பிலே ஆயிரத்தெட்டு நோய் நம்ம அம்மாவா இருந்தா செய்ய மாட்டேனா. விவரம் புரியாத வயசிலே எல்லாம் பாரமா சுமையா இருந்தது. ஆனா இப்போ ஒரு தாயா ஆன பிறகு அவங்களோட அருமையும், பயமும் புரியுது.''

''ஆனாலும், இன்னைய தேதி வரையில் அஞ்சுக்கும் பத்துக்கும் நீ அத்தைக் கையை தானே எதிர்பார்க்குறே? இது அடிமைத்தனம் இல்லையா?''

''பெரியவங்களுக்கு எப்பவுமே ஒரு வீம்பு உண்டு. எல்லாம் நம்ம விருப்பப்படிதான் நடக்கணும். நம்ம முடிவுதான் எடுக்கணும் என்று! ஒரு விஷயம் யோசி. கல்யாணமாகி கிட்டத்தட்ட 25 வருஷம் ஒரு வீட்டை நிர்வகிக்கிறவங்க, திடீர்னு ஒரு புது உறவு தனக்கு சமமான அந்தஸ்திலே நுழையும்போது தன்னையும் அறியாமல் பயம் வருது. வரவு செலவு அவங்க கையில் இருந்தா தன்னம்பிக்கை இருக்குன்னு விட்டுட்டேன்.''



''நாலு பேரை அனுசரிச்சு வாழறதுதான் வாழ்க்கை. யாரையும் சாராம வாழவே முடியாது. என் வரையில் நான் நிம்மதியாகவே இருக்கேன். அதை நீயும் விரைவில் உணருவே!''

''ரொம்ப நல்ல உறவுகளை கடவுள் உனக்குத் தந்திருக்கார். அதை உன் அறியாமையில் இழந்திடாதே!'' வெண்மதியின் பேச்சுகளை ஆமோதிப்பது போலவே நித்யாவும் பேசினாள்.

''ஆமா அண்ணி நா போற குடும்பம் நிச்சயமா கூட்டுக் குடும்பமாத்தான் இருக்கணும். அப்பத்தான் லைப் இன்ட்ரஸ்ட் டிங்கா இருக்கும். தனியா உப்பு சப்பில்லாத வாழ்க்கையில் என்ன சந்தோஷம் இருக்கும் சொல்லுங்க..''

''எந்தச் சூழ்நிலையிலும் என்னால வாழ முடியுமின்னு தன்னம்பிக்கையை ஏற்படுத்துமே அதனால எனக்கு கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைதான் வேணும்.'' நித்யாவின் விளையாட்டுப் பேச்சில் இருந்த உண்மை சாருவை உலுக்கியது.

மேற்கொண்டு யோசிக்கத் திராணியின்றி, தரணியின் வரவு தடை போட்டது. கொஞ்ச நேரம் அவனோட பேசிய பிறகு மற்றவர்கள ஒதுங்கிவிட அவன் மனைவியின் அருகில் வந்தான்.

இயல்பிலேயே சாரு அழகுதான் எனினும். தாய்மையின் சோபை அவளை மேலும் அழகுபடுத்தியிருந்தது. சிறு குழந்தை போல் படபடவென இமைகளைக் கொட்டி அவள் பேசியதைக் கேட்டதும் இவன் கோபமெல்லாம் மறைந்தே போனது.

"தரணி என்மேல கோபம்தானே.." கண்களில் கண்ணீரோடு கேட்ட மனைவியை ஆதரவாய் தழுவிக் கொண்டான் தரணி. 'பைத்தியம் ஏன் என்னென்னவோ பேசறே?"

"பின்னே என்மேல உள்ள கோபத்தினாலேதானே இந்த டிரைனிங்.. இந்த மாதிரி சமயத்தில ஒவ்வொரு நொடியும் என் மனசும் உடலும் உங்க அன்பிற்கும், அரவணைப்பிற்கும் எப்படி ஏங்கினேன் தெரியுமா?"

"பழசையெல்லாம் பேச வேண்டாம் சாரு. மனசுக்கு ரொம்பவும் சங்கடமா இருக்கும். சில விஷயங்களை நாம மறக்கிறது நல்லது. ஆமா செக்கப்பிற்கெல்லாம் ஒழுங்கா போறீயா, குழந்தை ஹெல்தியாத்தானே இருக்கு...?"

"ம்.. அப்பப்போ நல்லா அசைவு தெரியுது. ஸாரி தரணி.."

"ஹேய் இதென்ன குழந்தை மாதிரி மன்னிப்பெல்லாம் கேட்டுக்கிட்டு.."

"இல்லை தரணி நான் உங்களை ரொம்பவே கஷ்டப் படுத்திட்டேன். என்னோட சந்தோஷம் மட்டுமே பெரிசா தெரிஞ்ச எனக்கு விட்டுக் கொடுத்து வாழ்வதில்தான் உண்மை யான திருப்தி இருக்குன்னு புரிஞ்சு போச்சு."

"அத்தை எனக்காக உங்களையே விட்டுக் கொடுத்தாங்க. நீங்க நம்ம அன்புக்காக என் தவறுகளையெல்லாமே பொறுத்துக்கிட்டீங்க. இப்போ மனசு ரொம்பவே நிறைஞ்சு போய் இருக்கு தரணி." அவன் மார்பில் சாய்ந்து கொள்ள புன்னகையோடு ஏற்றுக் கொண்டான் தரணி.





13

ஐந்து வகையான பட்சணங்களுடன் இனிப்பு, உடைகள், என மேடையையே அடைத்து இருந்தது சீர்வரிசை தட்டுகள். சிகப்பு குஷன் நாற்காலியில் மஞ்சள் நிற பட்டுடுத்தி அமர்ந்திருந்தாள் சாருமதி. பெயருக்கேற்றாற் போல் முகமும் ஜொலித்தது.

குத்து விளக்குகள் சுடர் விட்டு எரிய, மஞ்சள் சந்தனம், பன்னீர், பூக்கள் கொண்டு நலங்கு வைத்து வளையலிட்டார்கள்.

சடங்கு வெகு விமரிசையாக நடந்து முடிந்தது. "சாருமதி பெரியவங்க கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிடு" என்று ஒரு பெண்மணி சொல்லிட, தரணியுடன் சேர்ந்து நமஸ்கரித் தாள். வெளியாட்கள் எல்லாம் விருந்து முடிந்து கிளம்பிய வேளையில், தேவியிடம் வந்தார் கஸ்தூரி.

"தேவி அப்போ நானும் வீட்டுக்கு கிளம்பறேன். நீயும் நளினியும் வந்து சாருவை வீட்டிலே விட்டுடுங்கோ.."

அம்மாவின் இந்தப் பேச்சைக் கேட்ட சாரு குறுக்கிட்டாள். "இல்லேம்மா நான் எங்கேயும் வரலை. இங்கேயே இருந்திடறேன்.."

"தலைப்பிரசவம் தாய் வீட்டிலேதான் பார்க்கணும். அதுதான் முறை.."

"பரவாயில்லைம்மா.. நீ அக்காவைக் கவனி.. என்னைப் பார்த்துக்க அத்தையும், நளினி அக்காவும் இருக்காங்க."



"தப்பும்மா, அம்மாவை இப்படி எடுத்தெறிஞ்சு பேசக் கூடாது. அவங்களுக்கும் ஆசையிருக்கும் இல்லையா?" தேவி புரிந்து கொண்டு வர,

"நான் கோபமா சொல்லலை அத்தை. இத்தனை நாள் உங்க கூட இருந்திட்டு தனியே போய் இருக்க மனம் வரலை. இங்கே இருந்தா குழந்தை இன்னும் நல்லபடியா பிறக்கும் என்பதுஎன் எண்ணம். அக்காவுக்கும் யார் இருக்கா என்னை தாங்குறா மாதிரி புகுந்த வீடு அவளுக்கு கிடைக்கலையே? அதனால அம்மா அவளுக்கு துணையா இருப்பதுதான் நல்லது."

"உங்களுக்கு கஷ்டமாயிருந்தா நான் போயிடறேன்.."

"ச்சீ... நீயிருப்பது எனக்குக் கஷ்டமாடா... காத்திருக்கிறேன் நான். சரி தரணி சாருவை ரூமிற்குக் கூட்டிட்டுப் போ.."

தேவி மன்னிப்புக் கோரும் பாவனையில் கஸ்தூரியிடம் வந்தாள். "நீ எதுவும் தப்பா நினைக்காதே கஸ்தூரி, அவளுக்கு என்ன பேசறதுன்னே தெரியலை?"

"அவ குணம்தான் தெரியுமே தேவி! அவ இப்படி மாறணுன்னுதானே நான் ஆசைப்பட்டேன். நான் சொன்ன மாதிரி உன் மருமகளை உன் கூடவே சேர்த்திட்டேன் பார்த்தியா? இப்போதான் எனக்கு திருப்தியா இருக்கு. இதே நிறைவோட நான் கிளம்பறேன்." கஸ்தூரி கிளம்பிட, தேவி புது தெம்போடு பூஜையறையில் நுழைந்தாள்.

"அம்மா பிரிஞ்சி போன என் உறவுகளை சேர்த்திட்டே. அதே மாதிரி என் பேரக் குழந்தையையும் நல்லபடியா சேர்த்திடும்மா..." கண்மூடி பிரார்த்தித்தார்.



தன் நெஞ்சின் மீது சாய்ந்து உறங்கும் மனைவியைப் பார்த்தான் தரணி. பூவாய் மலர்ந்த பளிங்கு போன்ற முகம், அமைதியான உறக்கம் போலும். இதழோரம் மெல்லிய புன்னகைக் கீற்று, எத்தனை பிடிவாதம் இவளிற்கு. ஆனால் இப்படி மாறுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

அனிதாவிற்குத் தான் நன்றி சொல்லணும். தரணி எதையோ யோசித்துக் கொண்டு இருக்கும் போதே சாரு திடீரென அலற ஆரம்பித்தாள்.

"இது என் குழந்தை நான் யாரிடமும் தர மாட்டேன்" என்று கத்தினாள்.

"சாரு.. சாரு... என்னம்மா ஆச்சு?" தரணி பதறிப் போய் என்ன ஏதென்று கேட்பதற்குள் விபரீதம் நிகழ்ந்தது. அவளின் கையும், காலும் வெட்டி வெட்டி இழுக்க, கண்கள் நிலைகுத்தி நின்றன. "அம்மா..." என்று அலறினான் தரணி.

அடுத்த அரை மணி நேரத்திற்கெல்லாம் சாரு ஐசியுவில் அனுமதிக்கப்பட்டு இருந்தாள். சிறு குழந்தை போல் அழுது கொண்டிருந்த தரணியை தேற்ற மனமில்லாமல் அனைவரும் சோகத்தில் மூழ்கியிருக்க, அனிதா பரபரப்பாய் இயங்கினாள். "என்னாச்சு தரணி? அவளுக்கு. நான் கடைசியா செக் பண்ணும்போது கூட நார்மலாத்தானே இருந்தா. திடீர்னு இப்போ என்ன?"

"தெரியலை அனிதா. நல்லா தூங்கிட்டு இருந்தா, திடீர்னு இது என் குழந்தை நான் யாரிடமும் தரமாட்டேன்னு ஒரே அழுகை... அப்புறம்..!" அவனால் பேச இயலவில்லை.

''புல்ஷிட், தரணி இப்போ பேச அவகாசம் இல்லை. குழந்தை ரொம்பவும் கிரிட்டிக்கலான பொஷிஷனில் இருக்கு. நார்மல் டெலிவரிக்கு வாய்ப்பே இல்லை. ஆபரேஷன் பண்ணனும். பயப்படாதே தரணி. இது இப்போ சர்வ சாதாரணம். நீயே அழுதா மத்தவங்களுக்கு எல்லாம் யார் ஆறுதல் சொல்றது?''

அனிதா அவன் தோளைத் தட்டி விட்டு ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தாள். கடந்து சென்ற நிமிடங்கள் யாவும் யுகங்களாய் தோன்றி பயத்தின் உச்சியில் இருந்தனர் அனிதா வரும் வரை.

யாரும் ஒருவருக்கொருவர் பேசவில்லை. அனைவரின் முகத்திலும் கவலையின் ரேகைகள். யாருடைய வார்த்தையும் யாரையும் ஆறுதல்படுத்தாது என்பதை உணர்ந்து இருந்தார்கள்.

''கவலைப்படாதீங்க. இரண்டு பேரும் நலம். குழந்தையை கிளீன் பண்ணிட்டு தருவாங்க... தரணி நீ போய் சாருவோட பக்கத்திலேயே இரு. அவளுக்கு மயக்கம் தெளிஞ்சிடும்'' அனிதா சொல்லி விட்டு போக தரணி உள்ளே நுழைந்தான்.

சாருவிடம் மெல்லிய முனகல், இவன் அருகில் அமர்ந்து தலையை வருடினான். அவள் கண்கள் மெல்ல திறந்தன. ''தரணி... தரணி... குழந்தை எங்கே அனிதா கொண்டு போயிட்டாளா? வேண்டாம் தரணி நான் தெரியாம தப்பு பண்ணிட்டேன். எனக்கு நம்ம குழந்தை வேணும். நான் யாருக்கும் தரமாட்டேன்.''

அதே நேரம் அனிதா உள்ளே நுழைந்தாள் கையில் குழந்தையோடு!



''சாரு நீ உன் குழந்தையை யாருக்கும் தர வேண்டாம்... இந்தா முதல்ல பிடி.''

வெள்ளை டவலில் சுற்றியபடி, பூப்போல தந்த குழந்தையை மென்மையாய் வாங்கிக் கொண்டாள். மூடிக்கிடந்த பிஞ்சு விரல்களும் பட்டுக் கன்னங்களும் மெத்தென்ற கன்னமும் கொள்ளையடித்தது.

''குட்டி சாரு! ஆனா உன்னோட பிடிவாதம் இதற்கு வேண்டாம்மா..'' அனிதா சிரித்தபடியே சொல்ல, சாரு பயம் மறந்து சிரித்தாள்.

''பயப்படாதே சாரு. குழந்தையை பிரிப்பது என்னுடைய நோக்கமில்லை. தாய்மையோட பூரணத்தை உனக்கு உணர வைக்கத்தான் இந்த திட்டம். இது தரணிக்கும் தெரியும். குழந்தையை நீ அபார்ட் பண்ணப் போறேன்னு தெரிஞ்சதும் தரணி மட்டுமல்ல நானும் துடிச்சுப் போயிட்டேன்.''

ஆனா அப்போ பேசினாலும் அதைப் புரிஞ்சிக்கக் கூடிய மனநிலையில் நீ இல்லை. பிடிவாதம் உன் கண்ணை மறைச்சிடுச்சு. அதனாலதான் இப்படியொரு முடிவிற்கு வந்தோம்.''

''உன்னை ஏமாத்தணுமின்னு இல்லை. ஒரு குழந்தையை சுமக்கும்போது உன் மனசிலே எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கு. அடுத்தவங்களுடைய உணர்வுகளைப் புரிஞ்சுக்கிற பக்குவம் உனக்கு வந்திருக்கு. அது நல்லதில்லையா?

அதனால இனிமேலும் பிடிவாதத்தை விட்டுட்டு நல்ல பிள்ளையா நடக்கிற வழியப் பாரு. அவள் சிரித்துவிட்டு,



இனிமேலும் உங்க வீட்டு மனுஷங்களை வெளியவே விட்டா என்னை அடி பின்னிடுவாங்க..''

''தரணி, நான் என் தவறையெல்லாம் உணர்ந்திட்டேன். என்னை மன்னிச்சிடுங்க.''

''இனிமே எதையும் பேசாதே சாரு. நம்ம குழந்தையை வளர்ப்பது மட்டும்தான் நம்ம லட்சியம்.'' இருவரும் புன்னகைக்க குழந்தை அவர்களைக் கண் திறந்து பார்த்தது.

அழகிய காதல் கைகூடினாலே இன்பம். அதனால் சில உறவுகளும் சேர்ந்தாலும் கேட்கவா வேண்டும். தரணி, சாருவின் இல்லறம் சிறக்க வாழ்த்துவோம்.

